வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27°c 26°c

பக்கம் 56 ■ சுடர்: 28 ■ கதிர்: 320 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 26, ஞாயிறு 13.10.2013

## புறக்கணித்த எட்டு உறுப்பினர்கள் முள்ளிவாய்க்காலில் பதவியேற்பு

### நாளை காலை 9.30 மணிக்கு நடக்கிறது

யாழ்ப்பாணம், ஒக்.13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் பதவி யேற்பு நிகழ்வில் பங்கேற்காத உறுப்பினர் கள் நாளை திங்கட்கிழமை முள்ளி வாய்க்காலில் பதவியேற்கவுள் ளனர்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபையின் உறுப் பினர்கள் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை வீர சிங்கம் மண்டபத்தில் பதவி யேற்றனர். இந்தப் பதவியேற்பில் 9 மாகா ணசபை உறுப்பினர்கள் பங் கேற்கவில்லை.

யாழ். மாவட்டத்தில் ஈ.பி.ஆர். எல். எவ். சார்பில் போட்டியிட்ட க.சர்வேஸ்வரன், புளொட் சார்பில் போட்டியிட்ட த.சித் தார்த்தன், ரெலோ சார்பில் போட்டியிட்ட க.சிவாஜிலிங்கம், மன்னார் மாவட்டத்தில் ரெலோ சார்பில் போட்டியிட்ட குண சீலன், முல்லைத்தீவு மாவட் டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார் பில் போட்டியிட்ட து.ரவிகரன், அ.சிவமோகன், வவுனியா மாவட்டத்தில் புளொட் சார்பில் போட்டியிட்ட ரி.லிங்கநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் போட்டியிட்ட இந்திரராசா, தியா கராசா ஆகியோரே பதவி யேற்பில் பங்கேற்கவில்லை.

இவர்களில் 8 பேர் நாளை திங் கட்கிழமை முள் ளிவாய்க் கால் கிழக்கு (வட்டுவாகல்) பிரதேசத் தில் காலை 9.30 மணிக்கு சத் தியப்பிரமாணம் செய்யவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.(த-5)

## கொழும்புத்துறையில் விபத்து சம்பவ இடத்தில் ஒருவர் சாவு

### காயமடைந்த இருவர் வைத்தியசாலையில்

கொழும்புத்துறை, ஒக்.13

கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக் கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இருவர் காயம டைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் கொழும் புத்துறை இந்து மகா வித்தியா லயத்துக்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியை சேர்ந்த ஜோசப் பற்மநாதன் (வயது - 59) என்பவர் உயிரிழந்துள் ளார்.

கிருபாகரன் (வயது -22) வீதி யால் நடந்து சென்றவரான விக்கினேஸ்வரி (வயது 55) ஆகியோர் காயமடைந்த நிலை யில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

21


# சீறியது வடக்குக் கடல் ரூ. 21 மில்லியன் நட்டம்

## படகுகள், இயந்திரங்கள், வலைகள் பெரும் நாசம் நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 13

யாழ். மாவட்டத்தின் வடமாராட்சி கிழக்கு முதல் முல்லைத் தீவின் கள்ளப்பாடு, தீர்த்தக் கரை வரையான கடலோரப் பகுதி களில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் திடீர் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. இத னால் கரையோரங்களில் வைக் கப்பட்டிருந்த மீன்பிடி உபகரங் கள் கடலில் அடித்துச்செல்லப் பட்டன.

இந்தக் கொந்தளிப்பால் 21 மில் லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட் டுள்ளது. நூற்றுக் கணக்கான மீனவர்கள் நேரடியாகப் பாதிக் கப்பட்டுள்ளனர் என அண்ண ளவாக மதிப்பிடப்பட்டுள்ளது.



மேலும் படங்கள் 4 ஆம் பக்கத்தில்

நேற்று முன்தினம் மாலையி லிருந்து இலங்கையின் வட கிழக்கு கடல் பகுதி கொந்தளிப் பதாக இருந்துள்ளது. இந்த நிலையில் நேற்று அதிகாலை 12.30 மணிக்கும் 1.30 மணிக் கும் இடைப்பட்ட நேரத்தில் திடீ ரென வடக்குக் கடலில் கொந் தளிப்பு ஏற்பட்டு கடல்நீர் கரை யோரத்துக்குள் 10 மீற்றர் தூரம் வரை உட் புகுந்தது.

இந்த தீடீர் மாற்றத்தினால் கட லோரத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த படகுகள், படகுகளின் இயந்திரங்கள், வலைகள் என் பன கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு மோசமாகச் சேத மடைந்தன.

இவற்றைத் தேடும் நடவடிக் கைகளில் நேற்று முழுவதும் மீனவர்கள் ஈடுபட்டனர்.

இந்த இடரில் யாழ்.மாவட்டத் தின் வடமராட்சி கிழக்குப் பகுதி யில்.மாமுனை முதல் போக் கறுப்பு வரையான பகுதிகள், மற்றும் மணற்காட்டுப் பகுதி யைச் சேர்ந்த மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள னர்.

இந்தப் பகுதியில் 11 படகுகள், 8 இயந்திரங்கள் காணாமற் போயுள்ளன. இவற்றின் பெறு மதி 35 லட்சம் ரூபா என்று தெரி விக்கப்படுகின்றது. அத்துடன் 35 படகுகளும், 30 இயந்திரங் களும் சேதமடைந்துள்ளன. இவற்றின் பெறுமதி 125 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள் ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கள்ளப்பாடு மற்றும் தீர்த்தக் கரை ஆகிய பகுதிகளே கடுமை யான பாதிப்புக்களை எதிர்கொண் டுள்ளன. இங்கு 7 படகுகளும், 5 இயந்திரங்களும் காணாமற்போயுள்ளன. அத்துடன் 5 படகுகளும்,

21

## நவம்பர் முதல் பஸ் கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.13

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகை யில், தனியார் பஸ் கட்டணங் கள் 7 வீதத்தினால் அதிகரிக்கப் பட்டுள்ளன என போக்குவரத் துத்துறை அமைச்சர் சி.பி.ரத் நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக அமைச்சரவை அனு மதியும் கிடைத்துள்ளது என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 200 கிலோ மீற்றருக்கு அதிக தொலைவிற் கான ரயில் போக்கு வரத்துக் கட்டணங் களையும் 80 வீதத்

21

## போராளிகளின் தியாகங்களாலேயே சர்வதேச மயமானது எமது பிரச்சினை

### அதனைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஒக்.13

போராளிகளினதும், மக்களி னதும் தியாகங்களாலேயே எமது பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டு இராஜதந் திரப் போராட்டமாக மாற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் ஆயுதப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்துபவர்கள், தமிழ் மக்களின் விடுதலை யைக் கொச்சைப்படுத்துகிறார் கள் என்றே கருத வேண்டியுள் ளது என நாடாளுமன்ற உறுப் பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். ரில்கோ விடுதியில் நேற்று சனிக்கிழமை காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:

குட்டிமணி அஹிம்சாவாதி யல்ல. அவர் ஒரு ஆயுதப் போராளி. அவரை 1982 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப் போதைய தலைவர் அ.அமிர்த லிங்கம், களமிறக்கியிருந்தார். இதனை இன்றைய தலைவர் களுக்கு நினைவு படுத்த விரும்புகின்றோம்.

தமிழ் மக்களின் விடுதலைக் காகப் போராடிய தேசிய விடு தலை இயக்கங்கள் கூட்டமைப் பினுள் இன்று இருக்கின்றன.

தமிழ் மக்களின் விடுதலைக் காக அவர்கள் ஆயிரக்கணக் கான போராளிகளின் உயிர் களை தியாகம் செய்தார்கள்.

தந்தை செல்வா காலத்திலோ ஏன், பிரபாகரன் உயிருடன் இருந்த காலத்திலோ எம்மைக் கண்டு கொள் ளாத சர்வதேசம்

21



## 25 இல் வடக்கு கன்னி அமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.13

வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு இந்த மாதம் 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பெருவெற்றியீட் டிய தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வடக்கு மாகாண சபையில் ஆட்சியைக் கைப் பற்றியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக க.வி.விக் னேஸ்வரன் தேர்வு செய் யப்பட்டுப் பதவியேற்றத் தைத் தொடர்ந்து நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை மாகாண சபை உறுப்பினர்

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதரவாளர்களை சிறைவைத்து பயணத்தைத் தடுக்க முடியாது

### கூறுகிறார் ரணில்

கொழும்பு.ஒக் 13

ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களை சிறையிலடைத்து எமது பயணத்தை தடுக்கமுடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சித்தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்களில் இரண்டு குழுக்களுக்கிடையே மாத்தறையில் இடம்பெற்ற மோதலையடுத்து கைது செய்யப்பட்டு மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆதரவாளர்களை சந்தித்ததன் பின்னர் அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாத்தறை சிறைச்சாலைக்கு நேற்று சனிக்கிழமை சென்ற ரணில் விக்ரமசிங்க அங்கு 20 நிமிடங்கள் இருந்தார். அவருடன் மாத்தறை நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் பதவியிலிருந்து ரணிலை பதவி விலக்குமாறு கோரி தெவிநுவர விவிலிருந்து கொழும்பை நோக்கிய பாதயாத்திரையின் போது கடந்த சனிக்கிழமை இருதரப்பினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (கு)

## இணைய சுதந்திரம் பற்றி 15 இல் கலந்துரையாடல்

போரின் பின்னரான இலங்கையில் இணையத்தள சுதந்திரம் மற்றும் திறந்தநிலை தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 15ஆம் திகதி 3 மணிக்கு தேசிய நூலக ஆவணமாக்கல் சபை மண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது.

விகல்ப இணையத்தளம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் இணையத்தள ஊடக செயல்பாடு ஆகியன இணைந்து இந்தக் கலந்துரையாடலை நடத்துகின்றன. அத்துடன் திறந்த ரீதியிலான கலந்துரையாடலாக இது இடம்பெறவிருப்ப தாக ஏற்பாட்டு அமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதான பேச்சை கிரவுண்ட் விவ்ஸ் (www.groundviews.org), இணையத்தளத்தின் ஆசிரியர் சஞ்சன ஹத்தொடுவ நிகழ்த்துவதோடு சுதந்திர ஊடக இயக்கத்தின் அழைப்பாளர் சுனில் ஜயசேகர, தெஹானி ஆரியரத்ன, தினிதுஅல்விஸ் மற்றும் அப்துல் ஹலீக் ஆகியோரும் உரையாற்ற விருக்கின்றனர்.

இதன்போது www.imalanka.org (இணையத் தள ஊடக செயல்பாடு) என்ற இணையத்தள அறிமுகமும் இடம்பெறுகிறது. (து-சி)

## நடந்தவை அனைத்தையும் மறந்து சரியான பாதையில் பயணிப்போம்

### புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

நடந்தவைகள் நடந்தவையாகவே இருக்கட்டும். நாங்கள் இந்த மாகாண சபையைச் சரியான பாதையில் கொண்டு செல்வோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினரும் புளொட் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் பதவியேற்பில் பங்கேற்காமைக்கான காரணத்தை விளக்கும் ஊடகவியலாளர் மாநாடு யாழ்.ரில்கோ விடுதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

இதில் கருத்துவெளியிடும்போதே சித்தார்த்தன் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் 5 கட்சிக்கும் சேர்த்தே வாக்களித்தனர். துரதிஷ்டவசமாக அந்த மக்களின் நம்பிக்கையில் சிறுகீறல் விழுந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒரு கூட்டுக் கட்சி.

சகல விடயங்களிலும் கூட்டுப் பொறுப்பாக நடக்க வேண்டும். மக்கள் தனியொரு வேட்பாளருக்கோ, தனியொரு கட்சிக்கோ வாக்களிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களித்துள்ளனர்.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனியாவது ஒற்றுமையான நிலைப்பாடுகளை எடுத்து மாகாண சபையை சரியான பாதையில் கொண்டு செல்வோம்.

நாம் அரசியல் தீர்வை அடைவதற்கு முழுமையாக ஒன்றாகப் பாடுபட வேண்டும் - என்றார்.

ரொலோவின் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்றுவதில் ஒருமித்த கருத்தைப் பெறாமல் தன்னிச்சையான முடிவுகளைத் தமிழரசுக் கட்சி எடுத்தமையாலேயே நாம் பதவியேற்பைப் புறக்கணித்தோம். எங்களுக்குப் பதவிகள் சாதாரணமானவையே.

தேர்தலுக்கு முன்னரும் சரி இப்போதும் சரி நாங்கள் மக்கள் ஒற்றுமையை நிறைவேற்றி செயற்படுவோம். தேர்தல் வெற்றியின் பின்னர் இடம்பெற்ற மாகாண சபை கலந்துரையாடல் கடந்த மாதம் 29ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போதே முதன் முதலில் ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சர் பதவியேற்பது என்ற விடயம் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதனை தமிழரசுக் கட்சியின் மாவை. சேனாதிராசா மற்றும் ஏனைய 3 கட்சிகளும் இணைந்து எதிர்த்தோம். தொடர்ச்சியாக அதன் பின்னர் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களிலும் அதனை எதிர்த்தோம்.

ஆனால் எமது எதிர்ப்புகளை எல்லாம் மீறி ஜனாதிபதி முன்பாகச் சென்று பதவியேற்றார்கள். ஏதோவொரு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் தலைவர்கள் செயற்படுகின்றனர்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுயநிர்ணயம் தொடர்பில் தெரிவித்திருக்கின்றோம். ஒரு சில நாடுகளை திருப்திப்படுத்துவதற்காக இதனைக் கிடப்பில் போட நாம் ஒருபோதும் அனுமதியோம் - என்றார்.

இதன் பின்பு கருத்துத் தெரிவித்து ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலைவர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன்,

தமிழ் மக்களின் ஆணைக்கு நாங்கள் கட்டுப்பட்டவர்கள். தமிழ் மக்களின் விடுதலை முக்கியமானது.

எங்கள் இயக்கங்களுக்கு எதிராகச் சோடிக்கும் பிரசாரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

நாங்கள் தெளிவாகக் கேட்டிருந்தோம். எங்கள் கட்சிக்கு அமைச்சுப் பதவி தரா விட்டாலும் பரவாயில்லை. கட்சிக்குள் குழப்பம் ஏற்படுத்த வேண்டாம் என்று.



தமிழரசுக் கட்சி பெரிய கட்சி. ஆனால் அவர்களிடம் பெருந்தன்மை இல்லை. அமைச்சுப் பதவி கேட்டவர்களுக்கு நாங்கள் அமைச்சுப் பதவி கொடுக்கவில்லை. அமைச்சுப் பதவி கேட்காதவர்களுக்கே அமைச்சுப் பதவி கொடுத்துள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவி தொடர்பில் முடிவெடுக்க சுமந்திரன் யார்? அவர் என்ன கட்சித் தலைவரா? நாங்கள் கட்சித் தலைமை பிழையான வழியில் செல்லக் கூடாதென்பதற்காகவே, எமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தோம். நாம் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே செயற்படுவோம் - என்றார். (து-5)

## தம்பிக்கு அமைச்சுப் பதவி கேட்டது உண்மை தான்

### சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு

"நான் எனது தம்பிக்கு அமைச்சுப் பதவி கேட்டது உண்மை தான். ஆனால் நான் ஏன் அவ்வாறு கேட்டேன் என்பதையும் முதலமைச்சர் சேர்த்துச் சொல்லியிருக்க வேண்டும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

"சுரேஷ் தனது தம்பிக்கு எழுத்து மூலம் அமைச்சுப் பதவி கேட்டிருந்தார். அது வழங்கப்படவில்லை என்ற மனவருத்தத்தில் அவர் பதவியேற்பில் பங்கேற்காமல் விட்டிருக்கலாம்" என்று முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

அது தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதில் அளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மாதம் 21ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வந்திருந்தது. அமைச்சுகள் அறிவிக்கப்படும்வரை தொடர்ச்சியாகப் பல கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். நாம் எமக்கான அமைச்சை முல்லைத்தீவுக்கே கோரியிருந்தோம். அவர்கள் ஒவ்வொரு சாக்குப் போக்குச் சொல்லி இழுத்தடித்தார்கள்.

இவர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொன்றுக்கும் மறுத்து வந்தமையால், இயல்பாகவே எனது தம்பிக்கு அமைச்சுப் பதவி கேட்டேன் - என்றார். (கு-5)



வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ.சரவணபவன் ஆகியோரும் வழிபாடுகளில் கலந்து கொண்டனர். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் இவர்களை வரவேற்றார். (து)

## சந்தேகத்தில் 9 பேர் கைது

வாதுவ சுற்றுலா ஹோட்டல் பிரதம நிறைவேற்று அதிகாரி அனுர லொக்குஹெட்டி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒன்பது பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டாந்தடிகளுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் கடற்கரைப் பக்கத்திலிருந்து வந்த இனந்தெரியாத குழுவினரே அவரைக் கடத்திச் சென்றதாகக் ஹோட்டல் சேவையாளர்கள் தெரிவித்தனர்.

கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட சுற்றுலா ஹோட்டல் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.காயமடைந்த அவர் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(து)



யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பகுதியில் நேற்று டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. வடிகால்கள், பொது நிறுவனங்களின் வளாகங்கள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டன. குருநகர் அர[illegible] நிலையத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மாநகர சபைத் [illegible] உதவியாளர்கள் டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டுள்ளனர். (கு-17)

## கொழும்பில் போராட்டங்களை நடத்த தடை விதிக்கவில்லை

### லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவிப்பு

கொழும்பில் போராட்டங்களை நடாத்த தடை விதிக்கப்படவில்லை என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரில் போராட்டங்களையோ ஆர்ப்பாட்டங்களையோ நடத்தக் கூடாது என பாதுகாப்பு அமைச்சோ அல்லது சட்டம் ஒழுங்கு தொடர்பான அமைச்சோ உத்தரவிடவில்லை.

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்களினது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலேயே ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

மாநாட்டில் பங்கேற்கும் அரச தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு அரசுக்கு காணப்படுகின்றது.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டு சில ஆண்டுகளில் இந்த மாநாட்டை நடாத்த வாய்ப்புக் கிட்டியமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

மாநாடும் அது தொடர்பான நிகழ்வுகளும் ஒரு சில நகரங்களிலேயே நடைபெறவுள்ளன. எனவே பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய நடவடிக்கைகள் எடுக்கப் பட மாட்டாதென லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

பொது நலவாய உச்சிமாநாடு நடைபெறவுள்ள கொழும்பிலும், ஏனைய அமைவிடங் களிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதற்கு தடைவிதிக்கும் பொருட்டு அரசினால் எடுக்கப் படவுள்ள நடவடிக்கையானது மனித உரிமை மீறல்களை மூடி மறைக்கும் முயற்சி என சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ் சாட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கை இராணுவத்தினரே பாலச்சந்திரனை கொன்றனர்

## கூறுகின்றார் பிரிட்டிஷ் ஊடகவியலாளர்

கொழும்பு, ஒக்.13
2009 மே மாதம், போரின் இறுதிக்கட்டத்தில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகனான, 12 வயதான பாலச்சந்திரனை, இலங்கை இராணுவத்தினரே படு கொலை செய்ததாக தி எக்கனோமிஸ்ட் இதழின், தென்னாசியப்பிரிவுக்குப்பொறுப்பான, அடம் றொபேட்ஸ்குற்றம்சாட்டியுள்ளார்.
புதுடில்லியில், நடந்த சர்வதேச ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கில் பாலச்சந்திரன் படுகொலை உள்ளிட்ட இலங்கை இராணுவத் தின் போர்க்குற்றங்கள் குறித்தும் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.
இதன்போதே தி எக்கனோமிஸ்ட் இதழின், தென்னாசியப் பிரிவுக்குப் பொறுப்பர்ன, அடம் றொபேட்ஸ் மேற்கண்டவாறான குற்றச்சாட்டை தெரிவித்தார்.
இதில் கருத்து வெளியிட்ட, உலகெளவில் பிர பலமான, தி எக்கனோமிஸ்ட் இதழின், தென்னாசியப் பிரிவுக்குப் பொறுப்பான, அடம் றொபேட்ஸ் உரையாற்றும் போது,
2009 மே மாதம், போரின் இறுதிக்கட்டத்தில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகனான, 12 வயதான பாலச்சந்திரனை, இலங்கை இராணுவத்தினரே, படுகொலை செய்ததாக குற்றம் சாட்டினார்.
போர்க்குற்றவாளிகளான,

> “
> 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த போதிலும், முரண்பாடுகள் தீரவில்லை

இலங்கைப் படையினர், படுகொலைகளை நிறைவேற்றிய காணொளிக் காட்சிகளை வெளியிடாதிருந்தால், போரின் முடிவில் சிறைபிடிக்கப்பட்டவர் கள், கைகள் பின்புறம் கட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டது, வெளிச்சத்துக்கு வந்திருக்காது என்றும் அடம் றொபேட்ஸ் தெரிவித்துள்ளார்.
புதுடில்லியைத் தளமாகக் கொண்டு செயற்படும், பிரித்தானிய ஊடகவியலாளரான, அடம் றொபேட்ஸ், அண்மையில், இலங்கைக் குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகரர அமைச்சர் சல்மான் குர்ஷித், அழைத்துச் சென்ற இந்திய ஊடகவியலாளர்களுடன் யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.
அவர் அண்மைய வடக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்து, இந்தக் கருத்தரங்கில் குறிப்பிடுகையில், அண்மையில் மாகாணசபைத் தேர்தல் குறித்து செய்தி சேகரிப்பதற்காக சென்றிருந்த போது, யாழ்ப்பாணத்தில் வாழும் சாதாரண தமிழ் மக்களிடம் பேசும் வாய்ப்புக் கிடைத்ததாகவும், அவர்கள் இராணுவப் புல னாய்வுப் பிரிவு குறித்து அச்சத்துடன் வாழ்வதாகவும் தெரிவித்தார்.
இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள மக்களை செவ்வி கண்டதன் அடிப்படையில், 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த போதிலும், முரண்பாடுகள் தீரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
புதுடில்லி ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில், அனைத்துலக செஞ் சிலுவைக் குழு, ஏஜேகே தொடர் பாடல் ஆய்வு நிலையம், அமைதிக்கும், முரண்பாட்டுத் தீர்வுக்குமான நெல்சன் மண்டேலா நிலையம் என்பன இணைந்து ஊடகவியலாளர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கை ஒழுங்குசெய்திருந்தன.
இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, ஈரான், மலேசியா, பங்களாதேஷ், சிங்கப்பூர், ஆப்கானிஸ்தான், இலங்கை, பூட்டான், மாலை தீவு, நேபாளம் ஆகிய 12 நாடுகளின் ஊடகவியலாளர்கள், இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றனர். (த-சி)



யாழ். வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான தேர்த் திருவிழா நேற்றுக்காலை பக்திபூர்வமாக நடைபெற்றது. மாயவன் அடியார்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டு பெருமாளைத் தரிசித்து இன்புற்ற காட்சி. (ஒ-20-17)

## சில்லில் சிக்குண்டு இளைஞன் சாவு

கொழும்பு, ஒக். 13
காலி - கொழும்பு பிரதான வீதியில் ஹீீனு பிட்டிய சந்த பாமுல பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
லொறியின் பின்பக்கத்தில் இருந்துபயணித்த நபர் விழுந்து, லொறியின் பின் சில்லுக் குள் சிக்குண்டு விபத்துக்கு முகங் கொடுத்துள்ளார்.
இதன்போது படுகாயமடைந்த அந்நபர் சிகிச்சைகளுக்காக நாகொட வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றவேளை உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவர் மஹவெல, கஹதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞன் என பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# மஹிந்தவுக்குத் தோல்வி அடுத்த தேர்தலில் உறுதி

கொழும்பு, ஒக்.13
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த தேர்தலில் நிச்சயம் தோல்வியைத் தழுவுவார் என ராஜீவ் காந்தியை தாக்கிய முன்னாள் இலங்கைக் கடற்படைச் சிப்பாய் விஜித ரோஹண விஜிதமுனி தெரிவித்துள்ளார்.
"இந்தியாவில் பிரதமராவதற்கு ராகுல் காந்திக்கு சகல தகுதிகளும் இருக்கின்றன" என் றும் அவர் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் இந்திய ஊடகமொன்று நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை வெளி யிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தாக்கிய இலங்கைச் சிப்பாய் தற்போது ஜோதிடராகவும், இசைக் குறுந்தகடுகள் விற்பனையாளராகவும் தொழில் புரிந்து வருகிறார்.
கொழும்புக்கு அருகில் உள்ள சூப்பர் மார்க்கெட் ஒன்றில் இரண்டு கணினிகளுக்கு முன் அமர்ந்து, சுற்றிலும் இசைத் தட்டுகள் அடுக்கப்பட்டுள்ள நிலையில் தாடியுடன் காணப்படும் அவரைப் பார்ப்பவர்கள் அவர் சில ஆண்டுகளுக்கு முன் ராஜீவைத் தாக்க முற்பட்டார் என்பதை அறிந்தால் நம்ப மாட்டார்கள். தற்போது 46 வயதான விஜித ரோஹண விஜிதமுனி, முன்னாள் கடற்படை சிப்பாய் ஆவார்.
1987ஆம் ஆண்டு முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை - இந்திய உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்காக இலங்கை சென்றிருந்தார். அப்போது, கொழும்பில் அவருக்கு வழங்கப்பட்ட கடற்படை அணி வகுப்பு மரியாதையில் அணி வகுத்து நின்றவர்களில் விஜேமுனி ராஜீவ் காந்தியைத் துப்பாக்கியால் தாக்கினார்.
இதனையடுத்து 6 ஆண்டு கள் சிறைத்தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்ட விஜேமுனி, மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் எனக் கூறி பின்னர் விடுவிக்கப்பட் டார்.
சிறையில் இருந்து விடு தலையான பின்னர் தற்போது ஜோதிடராகவும், சிடி விற்பவராகவும் தொழில் புரிந்து வருகிறார்.
இவரது கடையில் புத்த மதப் பாடல்கள் தொகுப்பும், சிங்களப் படப் பாடல்கள் தொகுப்பும், சில ஹிந்திப் பட பாடல்களும் உள்ளன. ராஜீவைத் தாக்கிய சம்பவம் குறித்து அவரிடம் இந்தியப் பத்திரிகை ஒன்று பேட்டி கண்டது.
ஆனால், அதற்கு வாய் திறக்க மறுத்து விட்ட விஜேமுனி, ராஜபக்ஷ குறித்து மட்டும் ஊடகத்திற்கு ஜோதிடம் கூறச் சம்மதித்தார்.
"அடுத்த தேர்தலில் ராஜபக்ஷ தோல்வியைத் தழுவுவார்" என்று அவர் தெரிவித்தார்.
மேலும், இந்திய அரசியலையும் தான் கவனித்து வருவதாகவும், 2014 ஆம் ஆண்டு தேர்தலில் பாரதீய ஜனதா ஆட்சியைப் பிடிக்கும் எனவும் அவர் ஜோதிடம் தெரிவித்துள்ளார்.
ராகுல் குறித்து கேட்கப் பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த விஜேமுனி, ராகுல் நிச் சயம் பிரதமராவார். ஆனால், இப்போதல்ல, இதற்கும் அடுத்த தேர்தலில் அது சாத்தியம் எனவும் தனது ஜோதிட திறமை மூலம் கணித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசமைப்பை மீறினார் முதல்வர் விக்னேஸ்வரன்

### ஹெல உறுமய குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.13
வடக்கின் முதலமைச்சருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பின் போது இலங்கையின் தேசியக்கொடி வைக்கப்படாமை குறித்து ஜாதிக ஹெல உறு மய கேள்வி எழுப்பியுள்ளது.
இந்த செயலின் மூலம், தாம் இலங்கையின் தேசியக் கொடியை புறக்கணிப்பதாக வடக்கு மாகாணசபை இந்தியாவுக்கு செய்தி ஒன்றை அனுப்பியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.
வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன், இலங்கை ஜனாதிபதியின் முன்னால் சத்தியப் பிரமாணம் செய்தபோது இலங்கையின் அர சமைப்புக்கு எதிராக செயற்படமாட்டேன் என்று உறுதியளித்தார்.
எனினும் அடுத்த சில மணித்தியாலங்களிலேயே அவர் அதனைப் புறக்கணித்துள்ளதாக வர்ணஸ்ரீ குற்றம் சுமத்தியுள் ளார்.
இந்த செயலின் மூலம் இலங்கையில் தனிநாடு ஒன்றை இந்தியாவின் உதவியுடன் அமைப்பதற்கு விக்னேஸ்வரன் வழி கோலியுள்ளதாக வர்ணஸ்ரீ குறிப்பிட்டுள்ளார். (த-சி)

## கைவிடப்பட்ட முதியவர் கைதடி அரச இல்லத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.13
கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு முன்பாக அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த வயோதிபர் ஒருவர் இல்லத்தில் இணைக்கப் பட்டார்.
கிளிநொச்சியைச் சேர்ந்த தோமஸ் சூசை (வயது-85) என்ற வயோதிபர் எவரது பாராமரிப்பும் இன்றி வாழ்ந்து வந்தார்.
மிகவும் நோய்வாய்ப்பட்டு நடக்க முடியாத நிலையில் இருந்த இந்த வயோதிபரை அயலவர்கள் வாகனத்தில் ஏற்றி வந்து கைதடி முதியோர் இல்லத்துக்கு முன்பாக இறக்கி விட்டுச் சென்றுள்ளனர்.
இவரை இல்ல நிர்வாகத்தினர் இல்லத்தில் இணைத்துக் கொண்டதாக இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். (த-17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











வடபகுதியில் கிழக்கு கடலோரத்தில் நேற்று அதிகாலை திடீரென கடற் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதன்போது கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட வள்ளங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டன. இவற்றை தேடி மீட்கும் பணியில் நேற்றுபகல் முழுவதும் மீனவர்கள் ஈடுபட்டனர். இதன் போது முல்லைத்தீவுப் பகுதியில் மீட்கப்பட்ட உபகரணங்களைப் படத்தில் காணலாம்.

(ஐ)

## மரண அறிவித்தல்கள்

### தியாகராஜா நாகரத்தினம்



சுதுமலை தெற்கு தியாகராஜா நாகரத்தினம் கடந்த 09.10.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரவிச்சந்திரன் (மருதங்கேணி), சாந்தா, பாபு, ஜீவயோதி, ஆனந்தராஜா (LIC மானிப்பாய்), சுரேஸ்குமார் (ஆசிரியர், டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, கொழும்பு-07), நந்தினி (ஆசிரியை, இளவாலை, கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத் தாயும் விமலா, பிரபாகரன், சர்மிளா (விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்), நந்தகோபி (நீர்வேலி), நிவேகீதன் (ஆசிரியர், பாலிநகர், ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமியும் மதியரசி, துவாரகன், ஜதீபன், சுபோதனன், கேமசியா, அனுசியா, பிரணவன், துர்கசியா,ஜீவசுதன், மதுவந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (10.10.2013) வியாழக்கிழமை சுதுமலையில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.30 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். **0772415400** (32717-23-14)

தகவல்:
மருமக்கள்.

### திருமதி லோகரூபி சுரேஸ்குமார்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு காரைக்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகரூபி சுரேஸ்குமார் கடந்த (10.10.2013) வியாழக்கிழமை காலமானார்.'

அன்னார் சபாரத்தினம் - சீதாலஷ்மி தம்பதியரின் அன்பு மக ளும் அப்புத்துரை - சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் சுரேஸ்குமாரின் அன்பு மனைவியும் மோகன தாஸ் (மோகன்- புத்தளம்), குகனதாஸ் (கோண்டாவில்), கௌரி (கனடா), கமலதாஸ் ஆகியோரின் சகோதரியும் சிவ குமார் (சுவிஸ்), சுகந்தன் (லண்டன்), அன்புக்கரசி (நோர் வே),நிரஞ்சனா (ஜேர்மனி), காஞ்சனா(கனடா), ஸ்ரீரஜனி (புத்தளம்), காஞ்சனா (கோண்டாவில்), ஸ்ரீகரன் (கனடா), ஆகியோரின் மைத்துனியும், பத்மாவதி, தர்சினி, சூரியகுமார், யோகேஸ்வரன், கலியுகவரதன் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2013) திங்கட்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைக்கால்,
இணுவில் கிழக்கு. (32624-17-14)

தகவல்:
அ. சுரேஷ்குமார் (கணவர்)

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை வீரசிங்கம்



நீர்வேலி தெற்கு, பூதர்மடத்தைப் பிறப்பிட மாகவும் நீர்வேலி மேற்கு மாசிவனை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளியம்மை வீரசிங்கம் நேற்று (12.10.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஜீவரத்தினம் மற்றும் ராஜேஸ்வரி(லண்டன்), ஆனந்தராஜா(கனடா), காலஞ்சென்ற சண்முகேஸ்வரன்(புலிக்குட்டி), விமலாஜினி(மாலா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சண்முகநாதன், ஞானசக்தி, துரைராசா, ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் அவரது நீர்வேலி மேற்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசிவன், நீர்வேலி மேற்கு.

தகவல்:
துரைராசா(மருமகன்)

### யோசேப் பற்மநாதர்



(லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபன இளைப்பாறிய ஊழியர்)

பிரதான வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் பற்மநாதர் (யுவராசா) நேற்று (12.10.2013) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அன்ரனிற்றா வத்சலாவின் (கொழும்புத்துறை, இந்து மகா வித்தியாலய ஆசிரியை) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

8ஏ, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு. (32718-23-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை தளையசிங்கம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கரந்தன். நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தளையசிங்கம் நேற்று (12.10.2013)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், கஜேந்திரன், தர்சினி, நவநீதன், பிரியதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகலா, பத்மநாதன், வசந்தப்பிரியா, ஜெயராசா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், மனோன்மணி மற்றும் அன்னபூரணம் (கனடா), காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, தெய்வேந்திரம் மற்றும் தனலட்சுமி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது உரும்பிராய் கிழக்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 0778645823

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீர் இருந்தும் வாகன வசதி இல்லை

## முல்லை அரச அதிபரிடம் உதவி கோருகிறது புதுக்குடியிருப்பு பிரதேசசபை



வலி.தென்மேற்கு. ஒக்.13
புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய இருபிரதேசங்களிலும் மீளக்குடியேறிய மக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வழங்க வசதி இருந்த போதும் பவுஸர் இல்லாத காரணத்தால் விநியோகத்தை அதிகரிக்கவோ விஸ்தரிக்கவோ முடியாத நிலை புதுக்குடியி ருப்பு பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மீளக்குடியேறிய மக்களின் நலன்கருதி குடிதண்ணீர் ஒழுங்காக விநியோகிக்க வாகன வசதி செய்து தருமாறு முல்லை மாவட்ட அரச அதிபரை பிரதேச சபை கோரியுள்ளது.

ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய இரு பரந்துபட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய புதுக்குடியிருப்புப் பிரதேசசபை இரு பிரதேசங்களிலும் மீளக் குடியேறிய மக்களுக்கு குடிதண்ணீரை வழங்குகிறது.

புதுக்குடியிருப்பிலுள்ள ஆனந்தபுரம், இரணைப்பாலை, மல்லிகைத்தீவு உட்பட பாடசாலை மற்றும் பிரதேச செயலகத்துக்கும் குடிதண்ணீரை வழங்கிவரும் பிரதேச சபை ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கும் அதை வழங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

பிரதேச சபையிலுள்ள 3 தண்ணீர் பவுஸர்கள் புதுக்குடியிருப்பு. ஒலுமடு. முறிகண்டி ஆகிய உப அலுவலகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டு அப்பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வழங்கப்படும் குடிதண்ணீர் மக்களின் தேவைகளை நிறைவு செய்யமுடியாத நிலை உள்ளதால் குடிதண்ணீர் விநியோகத்தை அதிகரிப்பதுடன் வேறு இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனால் பவுஸர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முன்வந்துள்ள பிரதேச சபை மேலதிகமாக ஒரு பவுசரையாவது வழங்குமாறு முல்லை மாவட்ட அரச அதிபரைக் கோரியுள்ளது. (வ-115)

# வாழ்வின் எழுச்சித் திட்ட 5 ஆம் கட்டம் ஆரம்பம்

## வடக்கில் மிகச்சிறப்பாக முன்னெடுப்பு

யாழ்ப்பாணம். ஒக்.13
வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் (திவிநெகும) 5 ஆம் கட்ட செயற்பாடுகள் வடக்கில் சகல இடங்களிலும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றன.

அந்த வகையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கான நிகழ்வுகள் நல்லூர் விதாதா வள நிலையத்தில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு. மரக்கன்றுகளை நட்டதுடன் பயனாளிகளுக்கு தென்னம் கன்றுகளையும் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து நல்லூர் பிரதேச செயலர் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.ரவீந்திரதாஸ், சமுர்த்தி முகாமையாளர் ஆகியோரும் மரங்களையும், பயிர் விதைகளையும் நட்டனர்.

அதைத் தொடர்ந்து பயனாளிகளுக்கு தென்னம்கன்றுகள், முருங்கை மற்றும் விதை பொதிகளும் வழங்கப்பட்டன.

வரணிப் பிரதேசத்திலும் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் வாழ்வின் எழுச்சித்திட்ட 5 ஆம் கட்டச் செயற்பாடுகள் இடம்பெற்றன. மிளகாய், கத்தரி, வெண்டி, பயிற்றை, தக்காளி போன்ற பயிர் விதைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.


மன்னாரில்


நல்லூரில்

இதேவேளை நேற்றுமுன்தினம் வழங்கப்படவிருந்த பழமரக் கன்றுகள் மற்றும் முருங்கைக் கன்றுகள் அங்கு வந்து சேராததால் அவை வேறு தினத்தில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

மன்னாரிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த நிகழ்வு வெகு விமர்சையாக இடம் பெற்றது.

நிகழ்வுக்குபிரதமவிருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய கலந்துகொண்டதுடன்விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் மாவட்ட உதவிச் செயலாளர் என்.பரமதாஸ் உட்பட பல திணைக்கள உயர் அதிகாரிகளும், சர்வமதத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வை முன்னிட்டு மன்னார் செயலக பகுதிக்குள் மரக்கறி விதைகள் நடப்பட்டதோடு தென்னம் கன்றுகளும் அதிகாரிகள் மற்றும் சர்வமதத் தலைவர்களால் நடப்பட்டன.

அங்கு சென்ற அனைவருக்கும் இலவசமாக மரக்கன்றுகள் மாவட்ட அரச அதிபரால் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து மன்னார் செயலக கேட்போர் கூடத்தில் விசேட கூட்டம் இடம் பெற்றது. (வ-7-12-122)



யாழ்.புராதன கோட்டையை சூழவுள்ள பாதுகாப்பு மதில்களின் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. தற்போது கோட்டைக்குப் பின்புறமாக கடற்கரை வீதியில் உள்ள பாதுகாப்பு மதிலின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (வ-17)

### கிளிநொச்சி சுற்றயல் கிராமங்களுக்கு

# போக்குவரத்து வசதி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி, ஒக். 13
கிளிநொச்சி நகரை. அண்டிய உள்ளகக் கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் தாம் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளதாக குறித்த கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி நகரின் சுற்றயல் கிராமங்களான பாரதிபுரம், பொன்னகர், இரணைமடு. திருவையாறு. செல்வாநகர், உதயநகர், ஜெயந்திநகர், உருத்திரபுரம், புதுமுறிப்பு உட்பட கிளிநொச்சி நகரை அண்டிய கிராம மக்களே தாம் போக்குவரத்து வசதிகள் இன்றி அவதிப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

நகரில் இருந்து தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவை கள் நடைபெறுகின்ற போதும் அயல் கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் இன்மையால் தாம் நாளாந் தக் கடமைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

**அயல் கிராம மக்களுக் கான குறுந்தூர போக்குவரத்து சேவையை ஆரம்பித்து மக்களது நெருக்கடிகளைக் குறைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்**

எனவே அயல் கிராம மக்களுக்கான குறுந்தூர போக்குவரத்து சேவையை ஆரம்பித்து மக்களது நெருக்கடிகளைக் குறைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ஜ-18)

# வாடகைக்கு டிராக்டர்

மீசாலை புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலையத்தினர் காலபோக நெற் செய்கைக்கு குறைந்த கட்டணத்தில் டிராக்டர் வாடகைச் சேவையை வழங்கவுள்ளனர்.

இதன் பிரகாரம் ஒரு பரப்பு நெற்காணியில் ரில்லர் உழ வுக்கு பரப்புக்கு 90 ரூபாவும் டிஸ் வெட்ட 120 ரூபாவும் தோட்ட வீலர் உழவுக்கு 120 ரூபாவும் வாடகைக் கட்டணமாக அறவிடப்படுமெனவும்,

மேட்டுக்காணி ரில்லர் உழ வுக்கு பரப்புக்கு 120 ரூபாவும் டிஸ் வெட்டவும் தோட்ட வீலர் உழவுக்கும் தலா 170 ரூபா வீத மும் அறவிடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கமநல சேவைகள் நிலைய எல்லைக் குட்பட்ட நெற்செய்கையாளர்கள் நிலையத்துடன் தொடர்பு கொண்டு டிராக்டரை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# ஈழ விடுதலைப் போருக்கு அத்திபாரம் இட்டவர் எம்.ஜி.ஆர்

## வைகோ கருத்து



சென்னை, ஒக்.13
ஈழ விடுதலைப்போருக்கு அத் திபாரம் அமைத்து கொடுத்தவர் எம்.ஜி.ஆர் என ம.தி. மு.க., பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார். விருதுநகரில் ம.தி.மு.க., சார்பில் நடைபெற்ற லோக்சபா தேர்த லுக்கான செயல்வீரர்கள் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழ விடுதலைப் போருக்கு அத்திபாரம் அமைத்து கொடுத்தவர் எம்.ஜி.ஆர். இவர் ஈழத் தமிழர்களுக்கும் புலிகளுக்கும் உதவியவர். தற்போதைய லோக்சபா தேர்தலில் பலம் வாய்ந்த சக்திகளுடன் மோத உள்ளோம். தேர்தலில் பொலிஸ் பாதுகாப்புடன் பணம் செல வழிக்கப்படும். சாதாரண தொழிலாளி, விவசாயி கொண்டு செல் லும் பணத்தைக் கூட பொலிஸார், தேர்தல் ஆணையகம் நடவடிக்கை எடுக்கச் சொன்னதாகக் கூறி பறித்துக்கொண்டு நீதிமன்றில் ஒப்படைப்பர். புதிய வாக்காளர்களைச் சேர்க்க நட வடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் முற்றும்
Tiles பதிக்கப்பட்ட 5 Rooms, 3 Bathroom
Car Parking உடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
(சி/12748) (45.6.3) தொ.பே.077 951 8477

## வீடு வாடகைக்கு

கோப்பாய் வீதி,
உரும்பிராய் சந்திக்கு அண்மையில் வீடு
வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள்
விரும்பத்தக்கது.
(C 12753) (3.6.4) தொடர்பு:077 915 3536

## காணி விற்பனை

ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கில்
இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்
கிணற்றுப்பங்குடன் கூடிய 2½ பரப்புக்
காணி விற்பனைக்குண்டு. சனி மற்றும்
ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7 மணி
முதல் பார்வையிடலாம். விலை பேசித்
தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 266 3435 (சி/12747) (3.6.4)

## வாடகைக்கு

வெள்ளவத்தை ஸ்ரேசன் றோட். இல 8
இல் அமைந்துள்ள லொட்ஜில்
இணைந்த குளியலறையுடன்
அமைந்த அறைகளும், சாதாரண
அறைகளும், வீடுகளும் நாள், கிழமை
அடிப் படையில் குறைந்த விலையில்
வாடகைக்குண்டு.
(சி/12761) (3.6.4)
தொடர்பு: 011 250 4281, 077 183 2404

## விற்பனைக்கு

Hero Hunk BAE xxxx
4000 km ஓடியது
(32678)(3.6.4) TP:- 0770700072

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு
அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீர
ணம் கொண்ட 5 அறைகள் உள்ள
வீட் டுடன் கூடிய காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400 (32650) (3.6.4)

## வேலையாள்கள் தேவை(பெண்கள்)

கொழும்பில் பெண்மணி ஒருவரின்
தலைமையின் கீழ் வீட்டில் கேக்
தயாரிப்பில் ஈடுபடுவதற்கும் சமையல்
வேலை செய்து கொடுப்பதற்கும் பெண்
பிள்ளைகள் தேவை. வயது 18-50
(32888) (3.6.4) தொடர்பு: 077 756 3627

## நடேஸ்வராலயா நுண்கலைக் கல்லூரி

14.10.2013 திங்கட்கிழமை விஜயதசமி
தினத்தன்று கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், வயலின்,
மிருதங்கம், கீபோட், கிற்றார் ஆகிய பாடங்கள்
வித்தியாரம்பம் செய்து வைக்கப்படும். பிற்பகல்
3 மணி முதல் 6 மணி வரை புதிய
மாணவர்களுக்கு வித்தியாரம்பம்.
நடேஸ்வராலயா நுண்கலைக்கல்லூரி,
278, யாழ்ப்பாணம் வீதி, (விக்ரோரியா மேதர் தேவாலயம் எதிரில்,
மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி அருகில்)
(சி/12749) (3.6.4) மானிப்பாய்-T.P: 077 771 3394

## குறுகிய கால வாடகைக்கு

வெள்ளவத்தை 45, நெல்சன் வீதியில் வெளி
நாட்டிலிருந்து வருபவர்களுக்கும் வெளி மாவட்டங்
களிலிருந்து கொழும்புக்கு வருபவர்களுக்கும்,
திருமண வைபவங்களுக்கும் சகல தளபாடங்
களுடனும் அறை களாகவும், 2,3 அறைகள் கொண்ட
வீடுகளாகவும் வசதிக்கேற்ப மாத, கிழமை, நாள்
வாடகைக்குண்டு. குடும்பமாக வந்து தங்குவதற்
கும் பொருத்தமானது. (A/C, Hot Water உட்பட)
011 250 2412 / 011 236 0544
Hot : 077 303 8063 / 071 805 4332
வாகனத் தரிப்பிட வசதி உண்டு. (சி/12750) (5.6.3)

## மரங்கள் விற்பனைக்கு உண்டு

இல. 868/2, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி யாழ்ப்
பாணத்தில் அமைந்துள்ள புனித திருமுழுக்கு யோவான்
ஆலய வளவில் உள்ள கீழ்க்கண்ட மரங்கள் விற்பனைக்கு
உண்டு. கேள்வி முறையில் விண்ணப்பங்கள்
20.10.2013 இக்கு முன்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

1) வேப்பமரம் ஒன்று 4 அடி சுற்றளவுக்கு மேல்
2) மகோற்கனி ஒன்று 7 அடி சுற்றளவுக்கு மேல்
3) மகோற்கனி ஒன்று 5 அடி சுற்றளவுக்கு மேல்
4) தேக்கு ஒன்று 5 அடி சுற்றளவுக்கு மேல்

தொடர்புகளுக்கு:- க.போ. தனசிங்கம்
பொருளாளர்
(C/12846)(3.6.4) 077 271 9359

## யாழ்ப்பாண நண்பர்களுக்கு ஓர் அழைப்பு....

எமது வாகன விற்பனையுடன் இணையுங்கள்

யப்பான் உற்பத்தி வாகனங்கள்

- டாச், பிரீஸர் ட்ரக், பல்ஸர், கெரியர்கள்.
- ஜீப் மற்றும் புத்தம்புதிய, பாவிக்கப்பட்டவை.
- வேன், இரு தேவை மற்றும் பிரயாணிகளுக்கு.
- சிறி கார்கள்-ஹைபிரிட் பெட்ரோல் இலெக்ட்ரிக்.



வாகன இறக்குமதியில் 20 வருட அனுபவம்
வாகன பரிசோதனை நுகேகொடை
மற்றும் கொஹூவலையில்
அபிவிருத்தியடைந்து வரும் யாழ்ப்பாணக்
குடா நாட்டில் வாகனத் தேவைக்காக
எங்களுடன் இணையுங்கள்
எமது சேவைக்குச் சேருவதற்கு உங்களுக்கும் சந்தர்ப்பம்.
உங்கள் உரிமப் பத்திரங்களுக்கு மலிவாக வாகனங்களை இறக்குமதி செய்து தரலாம்
இல. 598, ஹைலெவல் வீதி, நுகேகொடை. 071 8736459

## வாணி விழா

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய நவராத்திரி விழாவும் ஏடு தொடக்கல் நிகழ்வும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் இடம்பெறும் விழாவில் முப்பெரும் தேவிகளாக காட்சி தரும் சிறுமிகள் முன்னிலையில் ஏடு தொடக்கல் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

★ ★ ★

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் சமேத கண்ணகாம்பிகாஆலய நவராத்திரி விழாவையொட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலயத்தில் இருந்து சுவாமி புறப்பட்டு மாலை 4 மணிக்கு இலுப்பையடி ஞான வைரவர் ஆலயத்தில் மானம்பூ நடைபெறும். அறநெறிப் பாடசாலை மாணவர்களின்பஜனையும் இடம்பெறும். (ஓ)

★ ★ ★

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் விஜயதசமியை முன்னிட்டு மானம்பூ நிகழ்வு நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந-9)

★ ★ ★

பிரதேச வங்கியின் யாழ். கிளையின் ஏற்பாட்டில் நவராத்திரி விழா நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளை முகாமையாளர் எஸ். சிவலோகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-14)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் மகிடாசுர சங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. மாலை 4.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி 5 மணிக்கு மகிடாசுரசங்கார உற்சவம் நடைபெறும். (ஓ)

## புதிய நியமனம்

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் புதிய பொறுப்பதிகாரியாக ஆறுமுகம் காந்தநேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற இவர் இம் மாதஆரம்பத்தில்மானிப்பாய் வைத்தியசாலையில் பதவியேற்றுக் கொண்டார். (ஓ-100)

## விற்பனைக்கு

பூநகரி மண், கண்டா
வளை மண், கண்ட கல், சல்லி வகைகள்,
கிரேசர் டஸ்ட், அரிந்த கொங்கிறீட் கல்
விற்பனைக்குண்டு.
(32687) (3.6.4) தொடர்பு:071 289 0494

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் பொற்பதி வீதியில் பெரிய
Holl, 5 அறைகள், சமையல் அறை,
இணைந்த குளியல் அறை, பிரத்தியேக
குளியலறையுடன் வீடு வாடகைக்குண்டு.
அரச, அரச சார்பற்ற தனியார்
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(சி/12754) (45.6.3) தொ.பே.077 900 7481

## 10ஆவது பிறந்தநாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்




2013.10.13 இன்று பத்தாவது
பிறந்த நாளைக் கொண்டாடும்
மதன்-யாழினி தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
J.C. ஜோன் ஏட்ரியன் (செல்வா)
2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில்
176 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்துள்ளதைப்
பாராட்டி வாழ்த்துவதோடு,
மேலும் கல்வியில் சிறப்புற
இந்த நன்னாளில் வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, தங்கை,
மம்மி, அன்ரா குடும்பத்தினர்,
அத்தை குடும்பத்தினர்,
அமெரிக்காவில் உள்ள அப்பப்பா,
அப்பம்மா, சித்தப்பா குடும்பத்தினர்
28A, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(32685) (7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்.இந்து ஆரம்பப்
பாடசாலையில் கல்வி கற்று
2013 தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சைக்குத் தோற்றி 171 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்த
ஜெயந்தன் – பத்மபிரியா தம்பதிகளின்
புதல்வன்
செல்வன் சஞ்சீவ்சரண்
கல்வியில் மேலும் பல பட்டங்கள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மாமாமார், மாமிமார்
திரு.திருமதி பூ. பத்மலிங்கம் அபிராமி
திரு.திருமதி பூ. பத்மகரன் நிஷாந்தி
திரு.திருமதி பூ.லிங்கநாதன் மாலினி
மச்சான் : ப. ஆதித்தியன்
மச்சாள்மார் : ப.தருணிகா, லி.வைஷாலி
77. விநாயகர் வீதி.
நல்லூர் வடக்கு.
யாழ்ப்பாணம்.
(32677) (7.6.3)

கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு சிறப்பு நாளான விஜயதசமி தினத்தை முன்னிட்டு Spectra Skills நிறுவனத்தில் பின்வரும் கற்கை நெறிகளுக்காக பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு 10% கற்கை நெறிக் கட்டணக் கழிவு (Discount) வழங்கப்படவுள்ளது.

* Banking (CBF, DBF) * CIMA * AAT (Fundation, Intermediate, Final)
* Spoke English * Teching of English to young Learners - (TEYL)

எமது நிறுவனத்தில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை உங்கள் பதிவுகளை இச்சிறந்த நன்னாளில் மேற்கொள்ளுங்கள்.

குறிப்பு : விஜயதசமி தினத்தில் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு "Job Bank" கில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

Spectra Skills
19, Stanley Road, Jaffna. (32674) (7.6.3) T.P : 021 222 1422, 021 222 1423

ஹரே கிருஷ்ணா

## ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
## சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்

(ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு.அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா)

## ரூபா.3,000/-

### ஒரு செங்கல்லுக்காக செலுத்தி

இல. 188, புதுசெட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய திருப்பணிக்கு உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும். மறுபுறத்தில் ஹரே கிருஷ்ண நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உங்கள் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைத்திருக்கும்.




உங்களின் பெயரில் அர்ச்சனையும் செய்யப்படும்.

அத்துடன் உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் பகவானின் பரிபூரண திருவருட் கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

### வங்கி விபரங்கள்

Hatton National Bank, Kotahena
A/C Name: ISKCON
A/C No : 207010000891

Commercial Bank, Kotahena
A/C Name: ISKCON Temple Fund
A/C No. : 1120017042

மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்:
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
171, புதுசெட்டித்தெரு, கொழும்பு-13.
தொலைபேசி: 2433325
பக்ஸ்: 2471282
ஈ-மெயில்: iscon@slt.lk
www.iskcon.lk. (சி/12737)

## வைத்தியம்

சுவாமி ஆயுர்வேத ஆஸ்பத்திரி Home & Hotel Visit வசதி சம்பந்தமான, ஆண்களுக்கான பிரச்சினை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ஒயில் மசாஜ் இந்தியா சிகிச்சை ஸ்பா ஆயுர்வேத மசாஜ் & ஸ்டீம் பாத் அர்சஸ் வியாதிகளுக்கும் இ மௌண்ட் லெவனியா.
பிரியா
0728 138 773
0777 204 921

## விற்பனைக்கு

உடுவில் Love Lane
No 44 (துன்மலை
வீதி) யில் 5 பரப்புக்
காணியும் பெரிய 5
அறைகள் கொண்ட
வீடும் உடன்
விற்பனைக்கு உண்டு
தொடர்பு
[illegible] 974
0773 792 193

## கேரள ஆயுர்வேத மருத்துவம்

### நமது சிகிச்சைகள்

- இருதயவலி
- புற்றுநோய் தனிப்பு
- ஈரல் பிரச்சினைகள்
- மூட்டுவலி
- இடுப்புவலி
- புரோட்ஸ்ரேட் பிரச்சினைகள்
- ஒற்றைத்தலைவலி
- மனஅழுத்தம்
- இருமல்
- சளி
- படுக்கைப்புண்
- நச்சு வைரஸ் பாதிப்பு
- பாலியல்குறைபாடு

Tel : 011 551 7897
011 555 1879
011 555 8442
Fax : 011 551 7756

### சில பிரச்சினைகளைத் தீர்த்திட சிறிய வழிமுறைகள்

கல்லீரல் மருத்துவம்
அதிக மதுபாவனை உடல் நலத்தை கெடுக்கும்
உங்கள் கல்லீரலை
பரிசோதனை செய்தீர்களா?
நோய்க்கான அறிகுறிகளில்
அவதானமாக இருங்கள்.
-கருமைப் படர்வு.
-கால்களில் வீக்கம்.



Free consultation
Daily@ Ceylinco House.
monthly clinics are conducted islandwide.

தயவுசெய்து மருத்துவருடன் கலந்தாலோசியுங்கள்
Hotline : 0777 708 310 / 0777 555 600
0777 708 330 / 0777 708 434

பிறின்ஸ் பார்மசி
462/B, ஆஸ்பத்திரி
வீதி, யாழ்ப்பாணம்.

FAIR PHARMA (PVT) LTD
Kerala Ayurvedic Medicine

11th Floor. Westwing.
69. Janadipathi Mawatha
Colombo1.
E.mail:fairpharmasrilanka@yahoo.com
Website:www.ayurveda.lk. (C/12745)

Approved by Department of Ayurveda, BOI, an ISO : 2008 QMS Certified Company

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆவது நினைவஞ்சலி



செல்வி
## சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா

மலர்வு
22.10.1978

உதிர்வு
13.10.1998

புன்னகை நிலவும் நீயே!
புதுமலர் எழிலும் நீயே!!
பூமியின் மகளும் நீயே!
புண்ணிய நதிகள் நீயே!!

ஆயிரம் மலர்கள் தூவி!
ஆலயம் பலவும் தொழுவோம்!!
ஆயிரம் தவங்கள் நோற்று
அறம்பல நாளும் செய்வோம்!!

தென்றலும் குளிரும் நீயே!
தீங்கனிச் சுவையும் நீயே!!
செந்தமிழ்க் கவிதை நீயே!
தேன்சுவை அமுதும் நீயே!!

காவிய மகளே கேளும்
கண்மலர் சொரிந்தோம் நாளும்!
பூமுகம் நாமும் கண்டால்
புத்தொளிர் பெற்றே வாழ்வோம்!!

இல.419, பிரதான வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (#/12742) (45.6.3)

குடும்பத்தினர்.

# நவாலி ம.வியில் நடந்த நிறுவுநர் தினமும் பரிசில் நாளும்

யாழ்ப்பாணம், ஒக்.13
நவாலி மகா வித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் கடந்த புதன்கிழமை பாடசாலை அதி பர் இரா. வசந்தகுமார் தலைமையில் இடம் பெற்றன.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, முன்னாள் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, சுலோசனா நிதிய பொறுப்பாளர் எஸ்.சந்திரசேகரம் ஆகியோர் பான்ட் வாத்திய இசை சகிதம் அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் நவாலி மகாவித்தியாலயத்தை தோற்றுவித்த சோமசுந்தரப் புலவரின் சிலைக்கு சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா மலர் மாலை அணி வித்து கௌரவம் செய்தார். தம்பையா பண்டிதரின் சிலைக்கு வர்த்தன வங்கி முகாமையாளர் ச.ரவீந்திரா மலர் மாலை அணிவித்து கௌரவம் செய்தார்.

தொடர்ந்து பாடசாலை அதிபர் இரா.வசந்தகுமார் தலைமை யில் நிகழ்வுகள் நடைபெற்றன.

சுலோசனா ஞாபகார்த்த பரிசினை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட செ.சந்திரராஜாவும் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சந்திரசேகரமும் இணைந்து வழங்கினர். (ந-50)

# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15.03.1920

விண்ணில்
20.09.1988



## அமரர் சின்னத்தம்பி சின்னப்பு

ஆண்டு இருபத்தைந்து ஆகிவிட்டாலும்
அன்புருவம் நினைவில் பதிந்தேயுள்ளது
மீண்டும் ஒருமுறை திருமுகம்காண
உள்ளம் கிடந்து பரிதவிக்கின்றது
மாண்டு நீர் போனாலும் மனதிலே
பசுமையாய்க் குடியிருக்கின்றீர்.

பதிவாளர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(32703) (7.6.3)

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர்
திருமதி க.லூசியா கிறேஸ் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி அருட்பிரகாசம் திரேசம்மா
10.10.2013 இறைபதம் அடைந்தார்

இவரின் பிரிவால் துயரடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நல்லூர் சென்பெனடிக்ற்
றோ.க.த.க.வித்தியாலயம்
(32686)(7.6.3)
பாடசாலைச் சமூகம்.

# கண்ணீர் அஞ்சலி



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு காரைக்காலை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி லோகறூபி சுரேஸ்குமார்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Siva-Trading Co.
உரிமையாளரும், ஊழியர்களும்.
கொழும்பு.

(32679)(3.6.4)

# மைற் கற்கள் நடும் பணி ஆரம்பம்

வடமராட்சி, ஒக். 13
பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மைற்கற்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நடப்படுகின்றன.

குறித்த பிரதான வீதி அகலிக்கும்பணிஆரம்பிக்கப்பட்டபோது வீதிக் கரையோரம் நடப்பட்டிருந்த மைற் கற்கள் அப்புறப்படுத்தப்பட்டன. வீதி அகலமாக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ஒரு கிலோ மீற்றர் தூர இடைவெளியில் மைற் கற்கள் நடப்படுகின்றன. (வ-8)

# கட்டாக்காலி கட்டுப்படுத்துக

பெரும்போக நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், வரணி வடக்கு பிரதேசத்தில் கட்டாக்காலி கால் நடைகளைக் கட்டுப்படுத்தி உதவுமாறு வரணி வடக்கு விவசாய சம் மேளனம்கேட்டுள்ளது.

வடமராட்சி, கரம்பைக் குறிச்சி பிரதேசத்திலிருந்து கட்டாக்காலி கால் நடைகள் இந்தப் பிரதேசத்துக்குள் வருவதால் குறித்த பிரதேச கால்நடை உரிமையாளர்கள் தமது கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தி உதவுமாறு குறித்த விவசாய சம் மேளன செயலாளர் க.தியாகராசா பொது அறிவித்தல் விடுத்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் சிறு தானியப் பயிர்ச் செய்கை உற்பத்தியாளர்களின் நலன் கருதி அடுத்த ஆண்டு மே மாதம்வரை கால்நடைகளைக் கட்டுப்படுத்தி உதவுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ந-122)

# மரண அறிவித்தல்கள்



## எட்வேட்ஜோ அந்தோனிப்பிள்ளை

யாழ்ப்பாணம் - சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், தாளையடியை வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட்ஜோ அந்தோனிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (11.10.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (14.10.2013) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தாளையடி புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாளையடி.
(32684) (45.6.3)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## கந்தையா பரஞ்சோதி



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரஞ்சோதி நேற்று (12.10.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ் சென்றவர்களான சோமசுந்தரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், கார்த்திகா, உதயசங்கர், மூகாம்பிகா, சாயிராம் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலமுரளி, ரகுநந்தன் ஆகியோரின் மாமனும், ராகவி, ரகர்ணா, லவின் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் கலாமதி, அன்பரசி, பரணீதரன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் இராசம்மா, சிவம், சோதிமலர், நீதிமலர் காலஞ்சென்ற திருஞானசம்பந்தன் மற்றும் ஸ்ரீபரன், ரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.
(32683)(3.6.4)
தகவல்:
குடும்பத்தினர்.

# 22ஆம் ஆண்டு நினைவஞ்சலி (13.10.2013)

தோற்றம்
17.03.1935

மறைவு
13.10.1991

## திருமதி ஞானம்மா இம்மானுவேல்



எங்கள் அன்பான அம்மாவே
நீங்கள் மறைந்து 22 ஆண்டுகள்
சென்றாலும் எங்கள் உள்ளத்தில்
இருந்து நீங்கள் மறையவில்லையே.

க.நவரத்தினம் (மைத்துனர்)
இல.4, கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(32631) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Wanted (Jaffna)

Production Executive

*Graduate in Microbiology / Fisheries Biology/Food Science

*Be a team Playrer With excellent interpersonal and Communication Skills.

*Experience in Seafood Processing / Crab Processing Factory is an added advantage.

(32571)(4,6,3) **T.P:077 866 6855**

## நிகழ்ச்சி பற்றிய முக்கிய அறிவிப்பு

மாயாஜால விளையாட்டு நிகழ்ச்சி இம்மாதம் 20.10.2013 நடைபெற இருந்த போதிலும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தால் எதிர்வரும் 24.11.2013 யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஊடக அனுசரணை

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு
J.M ADVERTISERS
075 071 0271/072 273 6952

Mega Magic

இதே நிகழ்ச்சி வெகு விரைவில் பருத்தித்துறை பர்வதவர்த்தனி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது

(29802) (7,6,3)

## நீங்களும் அறிவிப்பாளராகலாம்!

சர்வதேச இணைய வானொலி வாரணம்FM இன் ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சி நெறி யாழ்ப்பாணத்தில் அடுத்த பிரிவு ஆரம்பம்!

தமிழில் சிறந்த உச்சரிப்பு, பேச்சாற்றல், இசைத்துறை, எழுதுதிறன், நடிப்பாற்றல், இதர கலைத்துறை ஆர்வலராயின்

**ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சி நெறியில் இணைவதற்கு....**

1. க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தமிழ் விசேடசித்தியுடன் உயர்தரம் பல்கலைக்கழக அனுமதிக்கான பெறுபேறு.
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.

இவற்றுடன் இணைந்த சுயவிபரக்கோவையை 30.10.2013க்கு முன் எமது அலுவலக முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

* சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகமுன்னோடிகளால் விரிவுரைகள்
* ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி, வாரணம் எவ்.எம்.இல் பகுதிநேர ஒலிபரப்பாளர் களப்பயிற்சியும் கல்விச் சுற்றுலாவும்.
* இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
* பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

## வாரணம் FM

Managing Director
Varanam FM
52, Hospital Road, Jaffna.

T.P: 021 221 9822
077 908 6737
E.mail: varanamfm@yahoo.com

(32622) www.varanamfm24.com

# JAFFNA &VAVUNIYA

பல்தேசிய நிறுவனத்துக்கு Education Technologies கீழ்க் காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

★ *sales & Marketing Executives (male/Female)*
★ *Management Marketing Excutives*
★ *Age : 19 - 30 years*
★ *Basic Salary+Travelling+ Commission*
★ *Overseas travels for achievers*
*Given Priority for after A/L's (School Leavers)*

*The candidates from Batticaloa, Trincomale, Kalmunai and Kilinochchi will be Provided Accommodation free*

**No. 100,2nd Floor, Manipay Road, Jaffna.**
**Contact: Manager- Mr.G.Anthany**
**077 356 6835, 021 567 1130** ←*Call For an Interview*
(35648)(5,6,3)

கண்டியில் குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்க வைக்கும் ஒரே பாடநெறி

**02** மாத முழுநேர - வதிவிட / வதிவிடமற்ற

கணினி பயிற்சியுடன் கூடிய **ஆங்கில பாடநெறி**

தினமும் **02** மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி

## ENGLISH +IT & SKILLS TRAINING

IT: MS-OFFICE / HARDWARE / COMP-ACCOUNTING

-WITH GRAMMAR-
| Reading | Writing | Listening | Speaking |

பாடநெறி ஆரம்பம்
31st Batch Oct - 21 | Weekly 06 Days 9:00 to 4:30

பாடநெறி முடிவில் சர்வதேச தரம் வாய்ந்த TOEIC சான்றிதழ் உட்பட 03 Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்

Free Registration for City& Guilds -UK TOEIC. -USA

அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்

மேலதிக விபரங்களுக்கு **0777 222 529**

ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட வசதி

**GOLDEN COLLEGE CITY CAMPUS**
548, Peradeniya Road, Kandy. 0812 20 55 44
City & Guilds TOEIC

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில், சம்பியன்வீதிக்கு அண்மையில் உள்ள பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 078 566 1809 (32063)(5,6,3)

## விற்பனைக்கு/வாடகைக்கு

மானிப்பாய்-கட்டுடை அரசடி வீதியில் அமைந்துள்ள கோழிப்பண்ணை 9பரப்புக் காணியுடன் விற்பனைக்கு/ வாடகைக்கு கொடுக்கப்படும்.

(32647) (4,6,3) தொடர்பு: 077 151 6659

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

புத்தூர்-சுன்னாக றோட் நிலாவரையில் இருந்து மேற்குப் புறமாக ½km தூரத்தில் வீட்டுடன் கூடிய 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.(தேவைக்கு ஏற்ப பிரித்து விற்கப்படும்)

தொடர்பு: 078 914 2770 (32649) (7,6,3)

## விற்பனைக்கு

RB-xxxx இலக்கம், Jhon Deer உழவு இயந்திரம் மற்றும் பெட்டி, ரொட்டபிற்றர் கலப்பை விற்பனைக்குண்டு.

(32676)(4,6,3) தொடர்பு:077 079 9411

## மாபிள் பதித்தல்

அதிக காலம் மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்தவரால் குறுகிய காலத்தில்உங்கள் விருப்பத்திற் கேற்ற வகையில் மிகவும் அழகாகவும், உறுதியாகவும் மாபிள் பதித்துத் தரப்படும்.

(29660) (4,6,3) தொடர்பு: 077 382 4871

(பாபு-பேபஅரசாங்கத்தினால் பாராட்டுப்பெற்றவர்.)

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் A9 பாதைக்கு அருகில் கச்சேரிக்கு முன்பாக உள்ள புகையிரத நிலைய வீதியில் கடை வாட்கைக்கு உண்டு. (32675) (3.4.6)

தொடர்பு:077 633 7307, 077 023 6718

## LANGUAGE SMS SERVICE

SMS மூலம் மிக இலகுவாக, தமிழ் மொழிபெயர்ப்புடன்

**ஆங்கிலம், சிங்களம்**

கற்றுக் கொள்ளுங்கள்.

மும்மொழிகளிலும் தினசரி பாவனையிலுள்ள சொற்கள், வாக்கியங்கள், உரையாடல்கள், பேச்சுவழக்குகள், பழமொழிகள் போன்றவற்றை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ளுங்கள்.

Monthly Rs.30+Tax

**Type REG<space>YES and Send to 77000 - Dialog | 4499 - Etisalat (15 days Free)**

## மணமகள் தேவை

1984 இல் பிறந்த பூராடம் நட்சத்திர யாழ்.இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. (வெளிநாட்டுPR உள்ளவர் விரும்பத்தக்கது.) (32667) (4,6,3)

தொடர்பு: 077 044 6009

## ATS கால்நடை விவசாயப்பண்ணை

கீரிமலை வீதி, பன்னாலையில் இயங்கும் கால்நடை விவசாயப் பண்ணைக்கு கறவைப்பசுக்களைப் பராமரிக்கக்கூடிய பெண்தொழிலாளர்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகளுடன்

தொடர்புகளுக்கு:-

077 899 5431, 0750 434 277

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. (32694)(5,6,3)

தொடர்பு: 077 739 9938

## அலுவலக இணைப்பாளர் தேவை

இலங்கையில் தாதியர் பயிற்சித்துறையில் பிரபல்யமான நிறுவனம் ஒன்றின் யாழ்ப்பாண கிளை அலுவலகத்துக்கு இணைப்பாளர் தேவை (பெண்கள் மட்டும்)

தகைமைகள்:

★ A/L படித்தவராக இருத்தல்
★ சிங்களம் பேசக் கூடியவராகவும்
★ ஆங்கில அறிவுடையவராகவும் இருத்தல்
★ கணக்குத் துறையில் அனுபவமுள்ளவர்/ ஏதாவது ஒரு கணக்கியல் தகைமை

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய வகையில் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பவும்.

[illegible]
இல.85, உள்வட்ட சுற்றுவட்ட வீதி,
இரத்தினபுரி.

## வீடு விற்பனைக்கு

கீரிமலை வீதி பண்டத்தரிப்பில் 2 வீடுகள் கொண்ட (6) ஆறு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 663 6374 (சி/12366)(7.6.3)

## சங்கீத வகுப்பு வித்தியாரம்பம்

ஓய்வு நிலை சங்கீத ஆசிரியை திருமதி யோகராணி செல்வநாயகம் தனது இல்லத்தில் நாளை (14.10.2013) திங்கட்கிழமை மாலை 4மணி தொடக்கம் 5.30 மணி வரையில் வித்தியாரம்பம் செய்யப்படும்.

361,நாவலர் வீதி, நல்லூர்.

(32702)(4,6,3) 077 609 7502

## நிரந்தர வேலைவாய்ப்பு

பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/பிஸ்கட்/கோழிஇறைச்சி/ காமெண்ட்/பால்மா/கிளவுஸ்/தேயிலை/ பொலித்தீன் போன்ற தயாரிப்புகளுக்கு உற்பத்தி உதவியாளர்/லேபல்/பொதியிடல்/தரம் பிரித்தல் பிரிவுக்கு 18-50 வயது ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18000/=, 25000/=, 32000/= வரை உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும். வரும் அன்றே வேலைவாய்ப்பு (நண்பர்கள்/குழுக்கள்/ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு)

தொடர்புகளுக்கு: 077 556 1883, 077 711 7661 (29805) (7.6.3)

## தொழில் வாய்ப்பு

கட்டட நிர்மாணத்துறையில் வெற்றிடங்கள் மேசன்/தச்சர்/ பெயின்டர்/டயில்பாஸ்/கை உதவியாளர் தேவை. தனியார் பாதுகாப்பு (JOS/LSO/SSO/OIC) உத்தியோகத்தர்களும் (ஆண்-பெண்) வாகன சாரதி (மென்/கனரக) சாரதி உதவியாளர்கள் தேவை. சம்பளம் தொழில் அடிப்படையில் 20,000/=, 45,000/= மேல், உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

(29808)(4,6,3) தொடர்பு: 077 556 1883

## நிரந்தர தொழில் வாய்ப்பு

துறைமுகம் (தனியார்) கப்பல் புனர் நிர்மாண வேலைகளான தச்சர்/வெல்டர்/பெயின்டர்/சாதாரண ஊழியர்களும் விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர்/கேட்டறிங்/காகோ /லொன்றி பிரிவுகளில் 18-50 வயது ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 20,000/=,45000/= வரை (தொழில் அடிப்படையில் சம்பளம்) உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

(29806)(4,6,3) தொடர்பு: 077 556 1883

## உங்கள் நிரந்தர வாழ்வினை தீர்மானிக்கும் எங்கள் நிரந்தர வேலை வாய்ப்பு

பிரதான தொழிற்சாலைகளான கோடியல்/ஜேம்/பிஸ்கட்/ கோழிஇறைச்சி/காமென்ட்/பால்மா/PVC/கிளவுஸ் போன்ற வற்றுக்கு உற்பத்தி/லேபல்/பொதியிடல் பிரிவுகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் 18-50 வயதினர் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் சம்பளம் 18000/=, 25000=, 32000/= மேல் வருகை தரும் அன்றே உங்களுக்கு வேலை வாய்ப்பு.

தொடர்பு: 077 850 8118, 077 558 3806 (29807)(4,6,3)

# உங்களுக்கு அவசரபணத்தேவை உள்ளதா?

SINGER FINANCE நாடுங்கள்

உங்கள் வாகனப் புத்தகத்தைக் கொடுத்து உங்கள் பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

| தொடர்புக்கு | | |
|---|---|---|
| | தனு | 077 9 357 124 |
| | மணி | 077 7 131 292 |
| | பிருந்தன் | 078 5 000 917 |

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

(C/12740)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு

## ஏற்படக்கூடிய வயிற்றோட்டமும் அதற்கான பராமரிப்பும்

குழந்தைகளை வைத்திய சிகிச்சைக்காக கொண்டு செல்ல வேண்டிய இரண்டாவது மிகப் பொதுவான பிரச்சினை வயிற்றோட்டமாகும். இது மிகப் பொதுவான பிரச்சினையாகக் காணப்படினும், வசதி வாய்ப்புக்கள் குறைந்த இடங்களில், சிகிச்சை தாமதமானால் சில வேளைகளில் உயிராபத்துக்கூட ஏற்பட்டுவிடக்கூடும். உலகில் ஒவ்வொரு வருடமும் 1.7 பில்லியன் வயிற்றோட்ட நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். ஐந்து வயதுக் குட்பட்ட குழந்தைகளின் போசனைக் குறைபாட்டுக்கு ஒரு பிரதான காரணம் வயிற்றோட்டமாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒரு சாதாரண 3 வயதுக்குட்பட்ட குழந்தைக்கு ஒரு வருடத்தில் 3 தடவையாவது வயிற்றோட்டம் ஏற்படுகிறது. இதனால் குழந்தையின் உடல் வளர்ச்சியும் போசாக்கும் பாதிப்படையலாம்.

ஒரு நாளைக்கு, மூன்று அல்லது அதற்கு மேல் திரவத் தன்மையாக மலம் கழிக்கப்படுமானால் அதை வயிற்றோட்டம் எனலாம். மாறாக தாய்ப்பால் அருந்தும் சுகதேகியான ஒரு குழந்தை இளக்கமாக, பசைத் தன்மையாக அடிக்கடி மலம் கழிக்கலாம். அது வயிற்றோட்டம் அல்ல. அதேபோல், அடிக்கடி சாதாரணமான இறுக்கமுள்ள மலம் கழிக்கும்போது அதை வயிற்றோட்டம் எனக் கூறமுடியாது.

பொதுவாக வயிற்றோட்டத்துக்கு சமிபாட்டுத் தொகுதியில் ஏற்படும் கிருமித் தொற்றே காரணமாகும். பல வகையான வைரசுகள், பக்றீரியாக்கள் மற்றும் ஒட்டுண்ணிகளால் கிருமித் தொற்று ஏற்படலாம். தனிநபர் சுகாதாரத்தை (personnel hygiene) முறையாகக் கடைப்பிடிக்காது விடினும்,தொற்று ஏற்பட்ட உணவையும் பானத்தையும் உட்கொள்ளும்போதும் வயிற்றோட்டம் பரவும்.



வயிற்றோட்டத்தினால் ஒரு குழந்தைக்கு நீரிழப்பு (Dehydration) ஏற்பட்டே உயிராபத்து ஏற்படுகிறது. எனவே நீரிழப்புக்கான அறிகுறிகள் குறித்துப் பெற்றோர்கள் தெரிந்திருக்க வேண்டும்.

1. தாகம் அதிகமாகக் காணப்படும்
2. சலம் வெளியேறுவது குறைவடையலாம்.
3. பிள்ளை சோர்வடைந்தோ அல்லது ஓய்வின்றி அழுதுகொண்டோ காணப்படலாம்.
4. உச்சிக்குழி காணப்படுமாயின் அது உட்குழிவடைந்து பள்ளமாகக் காணப்படலாம்.
5. கண்கள் உட்குழிவடைந்து காணப்படலாம்.
6. கண்கள், வாய், நாக்கு, உதடு என்பவற்றில் நீர்த்தன்மை குறைந்து வறண்டு காணப்படும்.
7. நீரிழப்பு அதிகமாயின், குழந்தை நினைவாற்றலை இழக்கலாம்; கை கால்கள் குளிர்ந்து காணப்படலாம்.

எனவே நீரிழப்புக்கான இத்தகைய அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடிச் சிகிச்சை அவசியமாகும். வயிற்றோட்டத்துக்கான மிக முக்கியமான சிகிச்சை நீரிழப்பை கட்டுப்படுத்துதலாகும். அதற்காக ஜீவனி போன்ற திரவங்களை வைத்திய ஆலோசனைக்கேற்ப அடிக்கடி கொடுக்க வேண்டும். குழந்தை வாந்தி எடுக்குமாயின் 10-15 நிமிடம் பொறுத்திருந்து பின்னர் மீண்டும் சிறிது சிறிதாக தேவையான நீராகாரத்தைக்கொடுக்கலாம்.சில சமயங்களில்நீரிழப்புஅதிகமானால்,குழந்தையின் நாளத்தினூடாகக் கனியுப்பு கலந்த திரவத்தை (I.V.Fluids) கொடுக்க வேண்டி ஏற்படலாம்.

**வயிற்றோட்டத்தின் போது நீராகாரமாக பாவிக்கத் தக்கவை**

- ♦ ஜீவனி
- ♦ அளவான உப்பு கலந்த கஞ்சி
- ♦ யோகட்
- ♦ அளவான உப்பு கலந்த மரக்கறி அல்லது சிக்கன் சூப்
- ♦ இளநீர்
- ♦ அடர்த்தி குறைந்த சீனி சேர்க்காத புதிய பழச்சாறுகள் (எலுமிச்சை, தோடை)

**வயிற்றோட்டத்தின் போது பாவிக்க கூடாதவை**

- ♦ வர்த்தக ரீதியான குளிர்பானங்கள்
- ♦ பைக்கற்றில் அடைத்த அடர்த்திகூடிய பழச்சாறுகள்
- ♦ சீனி கலந்த தேநீர்
- ♦ கோப்பி
- ♦ குளுக்கோசுத் தண்ணீர்

மேலும் சாதாரணமாக குழந்தை உட்கொள்ளும் உணவுகளை இயன்றளவுக்கு கொடுத்தல் வேண்டும்.

நீராகாரத்தைக் கொடுக்கும்போது, குழந்தை வேண்டுமளவுக்கு கொடுக்கலாம். அல்லது சாதாரணமாக அருந்தும் அளவைவிட ஒவ்வொரு முறையும் மலம் கழிக்கும் போதும் பின்வருமாறு மேலதிக நீராகாரம் வழங்குதல் வேண்டும்.

1. இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைக்கு 50-100 ml (காற்பங்கு அரைவாசி பெரிய தேநீர்க் கோப்பை அளவு)
2. இரண்டு வயது -10 வயது வரை : 100-200 ml (அரைவாசி- முழு பெரிய தேநீர்க் கோப்பை அளவு)
3. பெரிய சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் அவர்கள் விரும்பி அளவுக்கு.

**வயிற்றோட்டம் ஏற்படாமல் தடுக்கும் வழிமுறைகள்:**

வயிற்றோட்டம் ஏற்படாது குழந்தைகளைப் பாதுகாப்பதே சிறந்த சிகிச்சையாகும்.

1. இயன்ற வரை தொடர்ந்து தனித் தாய்ப்பாலூட்டலை ஆறு மாதம் வரைக்கும் மேற்கொள்ளல்.
2. சிறந்த முறையில் மேலதிக ஆகாரங்களை ஆறு மாதத்துக்கு மேற்பட்ட குழந்தைக்கு வழங்குதல்.
3. உணவு சமைக்க முன், பரிமாறமுன், உண்ணமுன் கைகளை சவர்க்காரம் கொண்டு கழுவுதல்.
4. கொதித்தாறிய நீரை பருகுதல்.
5. கிணற்று நீரை பயன்படுத் துவதாயின் காலத்துக்கு காலம் கிணற்றை இறைப்பதுடன் குளோரினும் கிணற்று நீருக்குப் போடலாம்.
6. உணவுப் பொருள்களை மூடிவைத்தல்.
7. பழைய உணவுகளை இயன்ற வரை உட்கொள்ளாதிருத்தல்.
8. குழந்தைகளுக்குத் தூய்மையற்ற கடையுணவுகளை வழங்காதிருத்தல்.
9. முறைப்படி தனிநபர் சுகாதாரத்தை அனைவரும் பின்பற்றல்.
10. வயிற்றோட்டம் ஏற்பட்டவர் உரிய சிகிச்சையைப் பெறுவதுடன் அவருடைய பொருள்களை மற்றவர் பயன்படுத்தாதிருத்தல்.
11. சில வைரசு தொற்றுக்களுக்கு தடுப்பூசியும் ஏற்றமுடியும்.


எனவே தடுப்பு முறைகளைக் கைக்கொள்வதன் மூலம் வயிற்றோட்ட நோய் ஏற்படாது பாதுகாக்க முடிவதுடன், வயிற்றோட்டம் ஏற்பட்டால் நீரிழப்புக்கான அறிகுறிகளை கண்டறிந்து நீரிழப்பை நிவர்த்தி செய்வதன் மூலம் வயிற்றோட்டத்தால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்க்க முடியும்.



ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் போசனைக் குறைபாட் டுக்கு ஒரு பிரதான காரணம் வயிற்றோட்டமாகும்.

Dr. ந. ஸ்ரீசரவணபவானந்தன்.
குழந்தை வைத்திய நிபுணர்.
யாழ். போதனா வைத்தியசாலை.

## பாட்டாவுக்கு ஒரு மடல்



அப்பப்பா! நான் உங்களுடைய பேரன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். நான் தொலைதூர தேசத்திலே இருப்பதால் உங்கள்பூட்டனைஉங்களுக்குகாட்டமுடியவில்லையேஎன்றகுற்றஉணர்வு என்றும் என்னுள்ளே இருந்து கொண்டிருக்கிறது. அவனைப் பார்த்திருந்தால் நீங்கள் எவ்வளவு பூரித்திருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். இந்த பரந்த பூமியிலே எங்களை நிலைநிறுத்த நீங்கள் பட்டதுயரங்கள் அப்பப்பா! அண்ட சராசரம் அளவு பரந்து விரிந்திருந்த உங்களது உலகம் கடைசிக்காலங்களில் வீடு என்ற வட்டத்துக்குள் முடங்கிப் போனபோது உங்களுக்கு ஏற்பட்ட உள்ளுணர்வுகளை புரிந்து கொண்டவர்கள் யார்?

அன்று எனது விருப்பங்களை நீங்கள் ஒவ்வொன்றாக கேட்டது ஞாபகம் வருகிறது. கடைசிகாலத்திலே உங்களது விருப்பு வெறுப்புகளை எவர்தான் கேட்டார்கள்? அன்று எனக்கு தும்மல் எடுத் தாலே நீங்கள் பதறிப் போவீர்களே. ஆனால் உங்களது கடைசிக் காலத்திலே உங்களது உடல் உள சுகத்திலே நான் எவ்வளவு அக் கறை கொண்டிருந்தேன் என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்.

அந்த துயரங்கள் தெரியாத வயதிலே நீங்கள் என் வலக்கரம் பற்றி பொடிநடையாய் நடந்த தூரங்கள், பள்ளிக்கூட வாசலிலே என்னைக் கூட்டிச் செல்வதற்காக கறுப்புக் குடையுடன் நீங்கள் காத்திருந்த காட்சிகள், என்னைக் கண்டிக்கும் பெற்றோரிடம் எனக்காக வக்கீலாய் நீங்கள் வாதாடிய வார்த்தைகள் என எத்தனையோ நினைவுகள் நித்தமும் என் நெஞ்சில் நிழலாடும்.

உங்களது கைப்பிடிக்குள் அன்று நான் உணர்ந்த பாதுகாப்பை அதன் பின் என்றுமே உணர்ந்ததில்லை. நீதிக்குப் பெயர் போன உங்களது நேர் கொண்ட பார்வை. செங்கோல் போன்ற உங்களது கைத்தடியைப் பிடித்துக்கொண்டு நடக்கும் நடையில் தான் எத்தனை ராஜகம்பீரம் பிரதி பலிக்கும். போலி கலவாத உங்களது பேச்சு. பெருமை கலவாத உங்கள் போக்கு. ஊரவரையும் உற்றவரையும் நெறிப்படுத்துவதையே மூச்சாகக் கொண்ட உங்கள் வாழ்க்கை முறை. இவை அனைத்தும் பிற்காலத்திலே மறக்கப்பட்டு போனது ஏன்?

இயந்திரமயமாகி உருண்டோடும் இந்த உலக ஓட்டத்திலே உங்களது உள்ளுணர்வுகளைப் புரிந்து கொள்ள யாருக்கு நேரமிருந்தது? உங்களுக்கு உடம்பு முடியாமல் போன பொழுது, நீங்கள் நீங்களாகவே வாழ முடியாமல் தடுத்தது ஏது? கடைசிக்காலத்தில் உங்களது சுதந்திரம் பறிக்கப்பட்டது ஏன்? வயது போனால் பிறர் விதிக்கும் வரைவிலக்கணத்துக்குள் தான் வாழ வேண்டும் என்ற விதியை எழுதியது யார்? சிறுவர்களினதும் பெண்களினதும் உரிமைகள் பற்றிப் பேசத்தான் எத்தனை அமைப்புக்கள்? எத்தனை நிறுவனங்கள்? அவர்களுக்காக குர ல் கொடுக்க எத்தனை மனிதர்கள்? ஆனால் பிரயோசனங்களை பிழிந்தெடுத்த பின் வீசி எறியும் சக்கைகள் போல பரிதவிக்கும் முதியவர்களின் உரிமை காக்க, முதியோர் துஷ்பிரயோகத்தை தடுக்க பலமான அமைப்பொன்று கூட உருவாக்கப்படாமல் போனது ஏன்?

அப்பப்பா! நீங்கள் செய்துமுடிந்தவை எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் செய்ய நினைத்தும் செய்ய முடியாமல் போனவை எவை என்று எனக்குத் தெரியாது. அன்று எனது ஆசைகள் ஒவ்வொன்றையும் கேட்டு நிறை வேற்றிய உனது நிறைவேறாத ஆசைகள் எவை என்று கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூட எனக்கு நேரமில்லாமல் போனது ஏன்?

உங்களது வாழ்வின் இறுதிப் பகுதி உறவுகளின்றி உப்புச்சப்பின்றிப் போனதற்கு யார் காரணம்? உலக சுகாதார மேம்பாட்டுக்காய் எத்தனை முயற்சிகள் நட ந்து கொண்டிருக்கும். இந்த வேளையிலே உங்களது உடல், உள, சமூக நன்னிலையைப் பற்றி சிந்திக்க யாருக்கு நேரமிருந்தது. உங்களது அந்திச் சடங்குகளுக்குக் கூட என்னால் வரமுடியாது போய் விட்ட எனது துரதிஷ்டத்துக்காக எவரை நொந்து கொள்ள முடியும்?அப்பப்பா! கையாலாகாத உங்களது பேரனை வழமைபோல மன்னித்து விடுங்கள்.

இப்படிக்கு
அன்புப் பேரன்.

சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ST & IS SINCE 1892

# ஏலவிற்பனை

**17.10.2013 வியாழக்கிழமை**
**காலை 10.00மணி தொடக்கம்**

LOLC வாகனத் தரிப்பிட நிலையம்.
62/40, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

LANKA ORIX FINANCE (An LOLC Group Company)

LOLC MICRO CREDIT

**மோட்டார் சைக்கிள்**

| | | | |
|---|---|---|---|
| BAJAJ DISCOVER | 125.CC | 2012 | NP BAA XXXX |
| BAJAJ PULSAR | 150.CC | 2011 | NP WU XXXX |
| BAJAJ PULSAR | 150.CC | 2012 | NP XO XXXX |
| BAJAJ PULSAR | 150.CC | 2012 | NP XT XXXX |
| BAJAJ PULSAR | 150.CC | 2012 | NP XW XXXX |
| BAJAJ PULSAR | 150.CC | 2012 | NP XQ XXXX |
| BAJAJ PULSAR | 180.CC | 2012 | NP XK XXXX |
| BAJAJ PULSAR | 180.CC | 2012 | NP XQ XXXX |
| HERO HF DELUXE | 100.CC | 2012 | NP XZ XXXX |
| HERO HONDA CD DELUXE | 100.CC | 2012 | NP XO XXXX |
| HERO HONDA SPLENDOR NXG | 100.CC | 2012 | NP XR XXXX |
| HERO XTREAME | 149.2CC | 2012 | NP BAB XXXX |
| TVS APACHE | 150.CC | 2011 | NP XR XXXX |
| TVS APACHE | 150.CC | 2012 | NP BAB XXXX |
| TVS APACHE | 150.CC | 2012 | NP XS XXXX |
| TVS APACHE | 180.CC | 2012 | NP XS XXXXX |
| TVS APACHI | 150.CC | 2011 | NP XU XXXX |

**முச்சக்கர வண்டிகள்**

| | | | |
|---|---|---|---|
| TVS KING | 200.CC | 2011 | NP YN XXXX |
| BAJAJ AR4S | 173.5.CC | 2010 | NP YB XXXX |
| BAJAJ AR4S | 173.5.CC | 2010 | NP YB XXXX |
| BAJAJ Re205 | 198.75.CC | 2012 | NP AAA XXXX |
| BAJAJ RE205 | 198.75.CC | 2012 | NP AAB XXXX |
| BAJAJ RE205 | 198.75.CC | 2012 | NP YY XXXX |
| BAJAJ RE205 | 198.75.CC | 2012 | NP YY XXXX |
| BAJAJ RE205 | 200.CC | 2012 | NP YZ XXXX |

**வான்**

| | | | |
|---|---|---|---|
| TOYOTA HIACE | 2985.CC | 1998 | NP HE XXXX |
| SUZUKI EVERY | 650.CC | 2007 | NP PE XXXX |

**லொறி**

| | | | |
|---|---|---|---|
| ISUZU | 5785.CC | 1983 | 28-XXXX |

**ரக்ரர்கள்**

| | | | |
|---|---|---|---|
| FARMTRAC FT 60 | 5147.CC | 2011 | NP RD XXXX |
| JOHN DEERE 5047D | 2300.CC | 2011 | NP RC XXXX |
| MAHINDRA 575DI | 2523.CC | 2011 | NP RC XXXX |
| MAHINDRA 575DI | 2523.CC | 2011 | NP RC XXXX |
| MF 240 TRACTOR | 2500CC | 2010 | EP RB XXXX |
| TAFE 45 DI | 2500.CC | 2011 | NP RC XXXX |
| TAFE 45 DI 4 WHEEL | 2500CC | 2011 | NP RC XXXX |
| TAFE 45DI | 2500.CC | 2012 | NP RC XXXX |
| TAFE 45DI | 2250.CC | 2005 | EP RA XXXX |
| TAFE 45DI | 2500.CC | 2010 | NP RB XXXX |
| TAFE 45DI | 2500.CC | 2010 | NP RB XXXX |
| TAFE 45DI | 2500.CC | 2011 | NP RC XXXX |
| TAFE 45DI | 2500.CC | 2011 | NP RC XXXX |

**ரக் வண்டிகள்**

| | | | |
|---|---|---|---|
| MAHENDRA MAXIMO | 909CC | 2012 | NP PT XXXX |
| MAHINDRA MAXIMO | 909.CC | 2011 | NP PS XXXX |
| MAHINDRA MAXXIMO | 909.CC | 2011 | NP PS XXXX |
| MAHINDRA MAXXIMO | 909.CC | 2012 | NP PT XXXX |
| TATA 207 DI EX | 2956.CC | 2011 | NP PR XXXX |
| TATA ACE | 702.CC | 2010 | NP PP XXXX |
| TATA ACE | 702.CC | 2010 | NP PP XXXX |
| TATA ACE | 702.CC | 2011 | NP PQ XXXX |
| TATA ACE | 702.CC | 2011 | NP PQ XXXX |
| TATA ACE | 702.CC | 2011 | NP PQ XXXX |
| TATA ACE | 702.CC | 2011 | NP PQ XXXX |
| TATA ACE | 702.CC | 2012 | NP PT XXXX |
| TATA ACE | 702.CC | 2012 | NP PU XXXX |
| TATA ACE- HT | 702.CC | 2010 | NP PP XXXX |
| TATA LPT 1109 | 3784.CC | 2010 | NP LH XXXX |

**விற்பனை நிபந்தனைகள்:**

ஏலவிற்பனைத் தினத்தில் மீளளிக்கப்பட முடியாத 300 ரூபா பணமும், 5000ரூபா மீளளிக்கப்படக் கூடிய பண தொகையும் ஒருவர் செலுத்தவேண்டும். மேலும் ஏலத்தில் எடுக்கப்படும் தொகையின் 25% அன்றைய தினம் செலுத்தப்படல் வேண்டும்.

**பார்வையிடும் நேரம்: ஒக்ரோபர் 15,16ஆம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை**

# SCHOKMAN & SAMERAWICKREME

One Country. One Auctioneer.
Celebrating 121 Years Of Service Excellence.

**Head Office:**
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593 /Fax: 081 2224371
e-mail:schokmankandy@sltnet.lk

**City Office: & Showroom:**
290, Havelock Road, Colombo 05.
Tel: 011 2502680, 2585408, Fax: 011 2588176
e-mail:schokman@samera1892.com

www.sandslanka.com

(C/12730)(5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினந்தோறும் பிரகாசமானதும், பளபளப்பானதுமான சருமத்துக்கு

சமூகத்தில் வேகமாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உலகிலுள்ள பெண்களை அணி திரட்ட வேண்டும். ஏனெனில் சிந்திக்கும் ஆற்றல், திட்டமிடும் ஆற்றல், செயற்படுத்தும் ஆற்றல் மற்றும் இலக்கை எய்தும் ஆற்றல் என்பன பெண்களிடமே அதிகளவில் காணப்படுகின்றன.

இலங்கையைச் சேர்ந்த பெண்களுக்கு தமது சேவையை வழங்கிவரும் வர்த்தக நாமமாக GLOW திகழ்கிறது. இதே போல, பெண்களின் சிறந்த சிந்தனைகளின் மூலம் உலகில் மாற்றத்தை பெண்களின் வனப்பால் சமூகத்தின் பல்வேறு வகையான புரட்சியை ஏற்படுத்த முடியும். ஏனெனில் பெண் ஒருவர் தனது தோற்றம் குறித்து தைரியமடையும் போது, சமூகத்தில் நம்பிக்கையை வெல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அத்துடன், அவரது ஏற்றுக்கொள்ள வைக்கும் சக்தியும் அதிகரிக்கும்.

பெண் ஒருவர் தனது வாழ்நாளில் ஒரு காலகட்டத்தில் அதிகளவு வேண்டப்படும் நிலையை எய்துவதற்கு பல காரணங்கள் உள்ளதைப் போல, பெண் ஒருவர் GLOW தயாரிப்பின் இணைவை நாட வேண்டிய தேவையும் அதிகளவில் காணப்படுகிறது. இலங்கை




யில் வாழ்க்கைப் பாணி வர்த்தக நாமமாகத் திகழும் இந்தத் தயாரிப்பு, இயற்கை அழகை அது போலவே வழங்குகிறது. GLOW தயாரிப்பில் விசேடமாக அமைந்த SKHN சேர்மானம் அடங்கி யுள்ளது. இது மெகா லைஃவ்சயன்சஸ் (ஆஸ்திரேலியா) லிமிட்டெட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தயாரிப்பாகும். இது இயற்கைத் தாவர பிரித்தெடுப்புகள், மரைன் புரதம் மற்றும் இயற்கை அன்டி ஒக்சிசன்களைக் கொண்டுள்ளது. இவை சருமத்துக்கு அதிகளவு பளபளப்பை வழங்குவதுடன், இயற்கையானதாகவும், பாதுகாப்பானதாகவும், உச்சப் பயனை வழங்கக் கூடியனவாகவும் அமைந்துள்ளன.

உங்கள் சருமத்தை ஈரப்பதமாகவும், அதிகளவு பொலிவுடனும் மற்றும் அதிகளவு பளபளப்பாகவும் பேணுவதற்கு, கிறீன் டீ, திராட்சை விதை மற்றும் எலுமிச்சை பயோஃபளவனொயிட்ஸ் போன்ற வற்றிலிருந்தான சேர்மானங்களை GLOW வழங்குகிறது. அத்துடன் குருதிச் சுற்றோட்டத்தை மேம்படுத்தும் வகையிலும், சருமத்தை தெளிவாகவும், கறைகளிலிருந்து பாதுகாப்பதுடன், அதிகளவு ஈரலிப்பாகவும் பேணுகிறது. அழகிய, சிறந்த தோற்றத் தைக் கொண்ட சருமம் தோற்றப் பெறுமதியை அதிகரிப்பதுடன், சருமத்தை மேலும் வனப்பாகத் தோற்றமளிக்கச் செய்யும்.

GLOW தயாரிப்பில் மற்றுமொரு விசேடமான உள்ளடக்கமாக Pycnogenol எனும் சேர்மானம் காணப்படுகிறது. இது ஃபிரென்ச் மரிடைம் பைன் பார்க் (தாவரவியல் நாமம் : பைனஸ் பினாஸ்ட்டர்) என்ற தாவரத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகிறது. இதிலுள்ள அன்டிஒக்சிசன் மூலம் உங்கள் சருமத்துக்கு பாதிப்புகள் ஏற்படுவதிலிருந்து பாதுகாத்து, தளும்புகள் ஏற்படுவதிலிருந்து விலக்கழித்து, மாறுபட்ட நிற தோற்றங்களிலிருந்தும் பாதுகாப்பளிக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. எனவே சூரிய வெளிச்சத்தில் வெளியே செல்வது பற்றி நீங்கள் இனி அச்சம் கொள்ளத் தேவையில்லை. Pycnogenol , விற்றமின் சி, விற்றமின் ஈ மற்றும் lycopene என்பன தக்காளி சேர்மானத்திலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்றன. இவை GLOW இல் இயற்கையான அன்டிஒக்சிசன் என்பது குறிப்பிடத்தக்கது. இவை சருமத்தின் நிறத்தில் புறக் காரணிகளால் மாற்றங்கள் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கிறது. நாளாந்தம் 02 GLOW கப்சியுல்கள் வீதம் உள்ளெடுப்பதன் மூலம், குறிப்பாக காலை ஆகாரத்துக்கு பின்னர் ஒன்றும், இரவு ஆகாரத்துக்கு பின்னர் ஒன்றுமாக சுமார் 2 முதல் 3 மாத காலப்பகுதிக்கு உள்ளெடுப்பதால் உங்கள் சருமத்தில் ஏற்படும் மாற்றத்தை அனுபவியுங்கள். பரிந்துரைக்கப்படும் அளவை உள்ளெடுப்பதன் மூலமாக சிறந்த பெறுபேறுகளை அவதானிக்க முடியும்.



டனுசி பிரபு என்பவரின் பெயரில் ரூபா 500,000க்கு "ரிக்கிரி" கண்கொன்று திருமதி பிரியா பிரபு என்பவரால் செலான் வங்கியின் சங்கானை கிளையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அவருக்கான பரிசுப் பொருள்களை சங்கானைக் கிளையில் வைத்து யாழ்ப்பாணப் பிரிவு முகாமையாளர் எஸ்.ஞானபண்டிதன், பிரிவு பொறுப்பாளர் பி.பரமேஸ்வன் மற்றும் அடகு பகுதி பொறுப்பாளர் எம்.சஞ்சுதன் ஆகியோர் வழங்கினர். (து)




## மைக்ரோ கார்ஸ் நிறுவனத்துடன் செலான் வங்கி ஒன்றிணைகின்றது

செலான் வங்கியானது அண்மையில் மைக்ரோ கார்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் குத்தகைப் பங்காளராகக் கைகோர்த்துள்ளது. இதன்மூலம் நாடெங்கிலும் இருக்கின்ற அந்நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு மனமகிழ்ச்சியைத் தரும் குத்தகை (லீசிங்) வசதிகள் மற்றும் வங்கியூடான காப்புறுதிச் சேவைகளையும் வழங்குகின்றது. இப்போது முதற்கொண்டு, மைக்ரோ கார்ஸ் வாடிக்கையாளர்கள் அனைவரும் செலான் வங்கியினது குத்தகை வசதிகளை நாடளாவிய ரீதியிலுள்ள வங்கியின் 150 சேவை நிலையங்களுள் ஏதாவது ஒன்றின் ஊடாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

செலான் வங்கியின் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. கபில ஆரியரத்ன கூறுகையில், 'வங்கியியல் துறையில் சிறப்புத்தன்மைமிக்க சேவை வழங்கலின் 25 ஆண்டு நிறைவை இவ்வருடம் நாம் கொண்டாடுகின்ற நிலையில், மைக்ரோ கார்ஸ் நிறுவனத்துடன் கைகோர்ப்பதையிட்டும் அதனது வாடிக்கையாளர்களுக்கு எமது குத்தகைசார் வசதிகள் மற்றும் காப்புறுதி சேவைகள் பலவற்றை வழங்குவதையிட்டும் நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றோம். செலான் வங்கியைச் சேர்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு மிகவுன்னத சௌகரியம் மற்றும் கொடுக்கும் பணத்திற்கு ஏற்ற சிறந்த பெறுமதியை வழங்குவதில் எப்போதுமே முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம். அந்த வகையில் இலங்கை மக்கள் தொடர்பில் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை வெளிக்காட்டும் மற்றுமொரு முன்னெடுப்பாக இது அமைகின்றது' என்றார்.

விவசாய உபகரணங்கள் முதல், மிகவுயர்ந்த அதிசொகுசு வாகனங்கள் மற்றும் SUV ரக வாகனங்கள் வரையான அனைத்து வகையான வாகனங்களையும் செலான் வங்கி குத்தகை வசதிகளின் வகையறாக்கள் உள்ளடக்கியிருக்கும். வங்கியிடமிருந்து கிடைக்கக் கூடியதாகவுள்ள குத்தகை வசதித் தெரிவுகளை, தீர்வைச் சலுகை அனுமதிப்பத்திரம் (Permit) வைத்திருப்போரும், அப் பத்திரம் இல்லாதோரும் கூட பெற்றுப் பயனடைய முடியும்.

செலான் வங்கியினது குத்தகை சேவை வழங்கலின் சிறப்பம்சம் என்னவென்றால், வாடிக்கையாளரின் பண வருவாய்க்கு ஏற்றவாறு வாகனக் குத்தகையின் மீளச் செலுத்தும் திட்டத்தை பிரத்தியேகமானதாக ஆக்கிக்கொள்ள முடியும் என்பதாகும். வாடிக்கையாளருக்கு பாதுகாப்பையும் அதேநேரம் மன அமைதியையும் இது வழங்குகின்றது. நாம் வழங்குகின்ற மிகவும் நெகிழ்ச்சித் தன்மையுள்ள தெரிவாக இது அமைவதுடன், நாடு முழுவதிலும் உள்ள எமது பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் பாராட்டையும் பெற்றுள்ளது' என்று ஆரியரத்ன மேலும் குறிப்பிட்டார். (து)

## விண்டோஸ் 8 டெப்லட் கணினிகளை இலங்கையில்




மெட்ரோபொலிட்டன் கம்பியூட்டர்ஸ் நிறுவனமானது மிக விரைவாக வளர்ச்சியடைந்து செல்லும் இலங்கையின் வாடிக்கையாளர் தளத்தில் புதிய Acer விண்டோஸ் 8 டெப்லட் தொடரிலான - Acer Iconia W3 மற்றும் Acer Aspire P3 ஆகிய கணினிகளை அண்மையில் அறிமுகம் செய்து வைத்துள்ளது.

இலங்கையில் கிடைக்கக் கூடியதாகவுள்ள மிகவும் கட்டுபடியான விண்டோஸ் 8 டெப்லட் கணினியாக திகழும் Acer Iconia W3 ஆனது, மைக்ரோசொப்ட் மற்றும் இன்டெல் நிறுவனங்களின் கூட்டிணைவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 8 அங்குல மான Acer இன் இப்புதிய உற்பத்தி மைக்ரோ சொப்ட் ஒபிஸ், எக்ஸெல் போன்ற மேசைக் (Desktop) கணணிகளில் உள்ள மென்பொருட்களுடன் முழுமையாக ஒத்திசைந்து இயங்கவல்லது என்பது டன், 'விண்டோஸ் ஸ்டோர்' களஞ்சியத்தில் காணப்படுகின்ற 70000 இற்கும் அதிகமான பிரயோக மென்பொருள்களில் எந்தவொரு மென்பொருளோடும் ஒத்திசைவாக செயற்படக் கூடியதுமாகும்.

கடந்த காலங்களில் அறிமுகமான விண்டோஸ் 8 டெப்லட் ரக தனிநபர் கணினிகளைப் போலவே Iconia W3 கணினியும் முழுமையான விண்டோஸ் 8 அனுபவத்தை பாவனையாளருக்கு வழங்கும் முகமாக இன்டெல் அடொம் புரசெசரை அடிப்படையாகக் கொண்டியங்குகின்றது. ஏனைய சிறியரக டெப்லட் கணினிகளைப் போலன்றி, ஒற்றைக் கையினால் பயன்படுத்தக் கூடியவையாகவும் கிட்டத்தட்ட ஒரு ஸ்மார்ட்போன் அல்லது டெப்லட் கையடக்க உபகரணத்தைப் போன்றதாகவும் இது காணப்படுகின்றது.

பிரித்தெடுக்கக்கூடிய விசைப்பலகை இணைப்புக் கருவி (Dock) ஒன்றுடன் தொடர்பை ஏற்படுத்தியும் Iconia W3 இனை பயன்படுத்தலாம். ஆனால் அண்மைக் காலங்களில் வெளியான இணைப்புக் கருவியுடன் இயங்கவல்ல விண்டோஸ் டெப்லட்களைப் போலன்றி, இதனது விசைப்பலகையானது டெப்லட் உபகரணத்தை விடவும் குறிப்பிடத்தக்க அளவு பெரியதாகும். டைப் (தட்டச்சு) செய்வதில் மேலும் அதிகமான சௌகரியத்தை வழங்குவதே இதன் நோக்கமாகவுள்ளது. இணைப்புக் கருவிக்கான விசைப்பலகையின் உள்ளே டெப்லட்: இற்கான [illegible]மையானது பயன்படுத்[illegible] அதனைப் பாதுகாப்பாக வைத்திருக்க வசதியளிக்கின்றது.

மாற்றியமைக்கக் கூடிய புதிய Acer Aspire P3




Ultrabook ஆனது, மிகவும் சக்திவாய்ந்த டெப்லெட் கணினியாக திகழ்கின்ற அதேநேரம், பல்செயலாற்றல் கொண்ட உபகரணம் ஒன்றிலிருந்து ஒருவர் எதிர்பார்க்கின்ற அனைத்துச் சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதில் உள்ளடங்கியிருக்கின்ற Acer Aspire P3 Ultra book கணினி Intel Core" i5 processor ஒரே நேரத்தில் பல்வேறுபட்ட சிக்கலான பணியிலக்குகளை கையாள்வதற்கான சக்தியை இக் கணினிக்கு வழங்குகின்றது. அதுமட்டுமன்றி விண்டோஸ் 8 Snap split திரையின் மூலம் இது மேலும் பல சாத்தியக்கூறுகளை கொண்டு வருகின்றது. அதாவது, நபரொருவர் பிரயோக மென்பொருட்களுக்காக காத்துக் கொண்டிருக்காமல் ஒன்றிலிருந்து- மற்றொன்றுக்கு மாறிக் கொள்வதற்கு இது இடமளிக்கின்றது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மக்களின் சேவகர்கள் என்பதனை மறக்க முயன்றால் கேடுகள் பெருகும்...!

வரலாற்றில் நாம் இப்போது திருப்புமுனையான தருணத்தில் இருக்கிறோம். அதனை உணர்ந்து எங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகளை மறந்து செயற்பட வேண்டும்.

நாம் எப்போதுமே விட்டுக்கொடுக்க முடியாத இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று சுயநிர்ணய உரிமை; மற்றையது தேசியம். மக்களின் ஆணை அது என்பதனை நீங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் மறந்து விடாதீர்கள்.

வரலாற்றில் நாங்கள் பல பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறோம். தோல்விகளையும் எதிர் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் வீழ்ந்து விடவில்லை. எப்போதும் எழுந்துதான் நிற்போம் என்று மக்கள் தீர்ப்புத் தந்திருக்கிறார்கள்.

புதிதாக உதித்துள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களின் பதவி ஏற்பு வைபவத்தில் ஆசியுரை வழங்கிய மதத் தலைவர்களில் ஒருவரான தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா மேற்கண்டவாறு அர்த்தமுள்ள கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் பதவி ஏற்பில் கலந்து கொண்ட ஏனைய மதத் தலைவர்களும், மக்கள் ஆணையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பையும் கடமையையும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு மிகக் காத்திரமாகவும் காட்டமாகவும் எடுத்துரைத்து உள்ளனர்.

அதேவகையில், மௌலவி மஹ்மூத் சலாகி எடுத்துரைத்த கருத்தும் ஊன்றிக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்: நீங்கள் யாரும் தலைவர்கள் அல்லர்; மக்களின் சேவகர்கள். இதனை நீங்கள் மனதில் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள். தலைமைக்குக் கட்டுப்பட்டு நடவுங்கள்.

இன்று எவ்வாறு ஒற்றுமையாக இருக்கிறீர்களோ, பதவிக் காலம் முடியும் வரையும் அவ்வாறே செயற்பட வேண்டும்- என்ற அவரது புத்திமதி காலத்தின் கட்டாய தேவையாகிறது.

வெள்ளியன்று நடைபெற்ற மாகாணசபை உறுப்பினர்களின் பதவி ஏற்பில் ஒன்பது பேர் பங்குபற்றமாட்டார்கள் என்பதனை அறிந்து கொண்டு தான் மதத் தலைவர்களின் மேற்கண்ட கருத்துக்கள் வெளிப்பட்டன என்றும் கொள்ளலாம் அல்லவா....?

கொள்கை வேறுபாடுகள், கருத்து வேறுபாடுகள் எந்த விடயத்திலும் விவகாரத்திலும் உண்டாகுவது வழமையே; இயல்பும்கூட-ஆனால் வடக்கு மாகாண சபையின் பிறப்பின்போது புறக்கணிப்பும், உள்வீட்டுச் சண்டையும் பெரும் அபசகுணங்கள் ஆகிவிட்டன; வெட்கத்திலும் வெட்கம்! இவர்களையா எமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தோம்?

தமிழ் மக்களின் அரசியல் வாழ்வியல் உரிமைகளுக்கு பலன் கருதாது, சுய நலன் கருதாது இவர்களா உழைக்கப் போகிறார்கள் என்ற விரக்தியோடும் விசனத்தோடும் வாக்காளர்கள்-எங்கள் சொந்த மண்ணின் மக்கள்-சலித்துக் கொள்ளும் நிலையை உற்பவித்து விட்டார்கள் மாகாண சபைக்குத் தெரிவான உறுப்பினர்கள் சிலர்.

வாக்காளர் பெருமக்கள் தமது மன எழுச்சி மூலம் வெளியிட்ட அபிலாசைகளையும், அவை நாடிய எதிர்பார்ப்பு களையும் தத்தமது கட்சிகளினதும் தங்களினதும் சுயநலன்களுக்குள் புதைத்துவிட உறுப்பினர்களுக்கு முன்னவர்கள் எந்த வகை அதிகாரத்தையும் வழங்க வில்லை என்பதனைச் சம்பந்தப்பட்டவர்களால் பகுத்து உணர முடியாமல் போனமை கவலைக்கும் அனுதாபத் துக்கும் உரியதாகும்.

வடமாகாண சபைக்கான அமைச்சர்களை நியமிப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளிடையே உண்டான இழுபறியும் முரண்டுபிடிப்பும் அரச தரப்புக்கு பெரும் சாதக நிலையைத் தோற்றுவிக்க உதவும் என்பதனை சம்பந்தப்பட்டவர்களால் பகுத்து உணர முடியாமற் போய்விட்டதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் தேர்தல் கால ஒற்றுமையை மெச்சியே வடக்கு மக்கள் தமது வாக்குகளைக் கொட்டிக் குவித்தார்கள். அதனை மிகக் குறுகிய காலத்தில் அரசியல் தலைவர்கள் மறந்து போனதை "தமிழ்ச் சாதி" செய்த பாவம் என்று தட்டிக் கழித்துவிட முடியாது.

முதற்கோணின் முற்றும் கோணும் என்ற நிலையை நீக்குவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவமும் அங்கத்துவக் கட்சிகளும் மக்கள் நலனை மட்டுமே முதன்மையும் முதலும் ஆக்கிச் செயற்பட வேண்டும். அரசியல் கட்சிகள் மக்களுக்காவே அன்றி, கட்சிகளுக்காக மக்கள் சாய்ந்தாடுவார்கள் என்று எதிர்பார்த்தால், அது தோல்வியிலேயே தேறும். மக்களுக்காக அரசியல் நடத்துவதற்கு முனையும் எல்லோரும் இதனை தத்தமது அடிமனங்களில் நிறுத்துவது எப்போது.....?

# போர் உலகைப் படுத்தும் பாடு

உ.வீரா

நாகரிக உலகம் போரை விரும்புவது இல்லை. காரணம், இரண்டு உலகப போர்களைச் சந்தித்து, அதனால் ஏற்பட்ட இழப்புகளைப் பார்த்தும், அனுபவித்தும் அச்சமடைந்திருக்கிறது. இனிமேல் போர் வருமானால் அது அணு ஆயுதப் போராக மாறி உலகமே அழிந்துவிடும்.

அறிவியல் வளர்ச்சியால் உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்டது. பரந்துபட்ட உலகம் மிகவும் சிறியதாகக் குறுகிவிட்டது. ஆனால் மனிதனின் மனமும் அதைப்போலக் குறுகிவிட்டதே! இதனால் புதிது புதிதாகப் பிரச்னைகளும் முளைத்துக்கொண்டு இருக்கின்றன. ஆசைகளும், சுயநலமும் அவனைப் பிடித்து ஆட்டுகின்றன. இது தனிமனி தருக்கு மட்டுமல்ல, ஆளுகின்ற அரசுகளுக்கும் பொருந்தும். உலகம் சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்துவிட்டது. ஆனால் போரும், பூசலும் குறையவில்லை; மாறாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. பயங்கரவாதம்' என்ற பெயரால் கலகங்களும், குழப்பங்களும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. வன்முறை இல்லாத இடம் இன்று எங்காவது உண்டா?

அடுத்தடுத்த நாடுகளுக்குள் ஆயிரம் பிரச்சினைகள். எல்லை தாண்டிய பயங்கரவாதம், எல்லை தாண்டாத தீவிரவாதம் அன்றாடம் வெடித்துக் கொண்டிருக்கின்றன. தத்தம் நாட்டு மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முடியாத அரசுகள் எல்லை கடந்த பயங்கரவாதங்களைக் கட்டவிழ்த்து விடுகின்றன.

சிரியாவில் இரண்டரை ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரு தரப்புகளுக்கும் இடையே நடந்து கொண்டிருக்கும் போரில் இதுவரை ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் கொல்லப்பட் டுள்ளனர். 20 லட்சம் பேர் வரை அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 21 அன்று மேற்கொள்ளப்பட்ட ரசாயனக் குண்டுத் தாக்குதலில் ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் நச்சு வாயுவை சிரிய ராணுவம் வீசியதா அல்லது அது கிளர்ச்சியாளர்களால் வீசப்பட்டதா என்பது பற்றி இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டனர். எனினும் ரசாயன குண்டுகள் வீசப்பட்டதை ஐ.நா. விசாரணைக் குழு உறுதி செய்தது.

அமெரிக்காவின் போர் எச்சரிக்கையைத் தொடர்ந்து சிரிய அதிபர் பஷார் அல் அஸத் ரசாயன ஆயுதங்களை அழிக்க ஒப்புக் கொண்டார். சிரியாவில் உள்ள ரசாயன ஆயுதங்களை அழிக்க ஓர் ஆண்டு காலம் எடுக்கும் என்றும், அதற்கு 100 கோடி டொலர் செலவாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆப்பிரிக்க நாடான கென்யாவின் தலைநகரான நைரோபியின் வெஸ்ட் கேட்' வணிக வளாகத்தை முற்றுகையிட்ட பயங்கரவாதிகள் அங்கிருந்தவர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டனர். அந்நாட்டுப் பாதுகாப்புப் படையினர் அவ்வணிக வளாகத்தை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்ற சோமாலியா பயங்கரவாத அமைப்பான ஷெபாப், பணயக்கைதிகள் கொல்லப்படுவார்கள் என எச்சரித்தது. இதுவரை 68 பேர் சாவடைந்துள்ளனர் என்றும், 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

சோமாலியா நாட்டில் ஆப்பிரிக்க யூனியன் படைகளுக்கும், இஸ்லாமிய ஆயுததாரிகளுக்கும் இடையே நடந்து வரும் போரில் கென்யா தலையிட்டதற்கு பழிவாங்கவே தாம் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக ஷெபாப் அமைப்பு கூறியுள்ளது. இது செப்டம்பர் 21 அன்று நிகழ்ந்தது.



பாகிஸ்தான் பெஷாவர் நகரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் நிகழ்ந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 81 பேர் உயிரிழந்துள்ளனர். 176 பேர் காயமடைந்துள்ளனர். செப்டம்பர் 22 ஞாயிறு பிரார்த்தனை நடந்தபோது இது நிகழ்ந்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு தெரிக்-இ-தலிபான் என்ற அமைப்பின் ஜாண்டுல்லா குழு பொறுப்பேற்றுள்ளது. ஆயுததாரிகளுக்கு எந்த மதமும் கிடையாது என்றும், அவர்கள் குறிவைப்பது அப்பாவிப் பொதுமக்கள் என்றும், அவர்கள் எல்லா மதத்தினருக்கும் எதிராகவே செயல்பட்டு வருகிறார்கள் என்றும், இது இஸ்லாத்துக்கு எதிரானது என்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உலகில் ஆங்காங்கு போர்களும், கலவரங்களும், நாளும் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் பெரும் பாலும் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொது மக்கள் தான். இந்த மோதல்களுக்கும், தாக்குதல்களுக்கும் கூறப்படும் காரணங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. ஓர் உயிரைக் கொல்ல எவருக்கும் உரிமை கிடையாது.

அரசுகளும் காலத்துக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். மனித உரிமைகளை மதிக்க வேண்டும். உரிமையும், நீதியும் கேட்கும் மக்களை எதிரிகளாக நோக்கும் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். போராடும் மக்களின் நியாயங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் ஈழத்தமிழர்கள் நடத்திய உரிமைப் போராட்டத்தை உள்நாட்டுப் போராக மாற்றியது அந்நாட்டின் சர்வாதிகார அரசு. ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்ததும். இனப்படுகொலை நடத்தி லட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்தார். இன்றுவரை அவர்களை அகதிகளாகவே நடத்திக் கொண்டிருக்கிறார். போர் முடிந்து 4 ஆண்டுகளாகியும் அமைதி திரும்பவில்லை.

25 ஆண்டுகளுக்குப் பிறகு அண்மையில் இலங்கையில் வடக்கு மாகாணத் தேர்தல் இடம்பெற்று, தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றி பெற்றுள்ளது. எனினும் மாநில அரசுக்கு எவ்வித அதிகாரமும் இல்லாத நிலையில் ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பு கானல் நீராகவே தொடர்கிறது.

பூமியில் இன்னும் எத்தனை ஆண்டுகள் வரை உயிரினங்கள் வாழலாம் என்பது பற்றி புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. லண்டனில் உள்ள கிழக்கு ஆங்கிலியா சுற்றுப்புறச் சூழல் அறிவியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி ஆண்ட்ரூ ரஷ்பி பூமியின் சூழல் பற்றி ஆய்வு நடத்தி வருகிறார்.

அவரது குழுவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பூமியில் மனிதன் இன்னமும் எத்தனை ஆண்டுகள் வாழலாம் என்பது பற்றி ஆய்வு நடத்தியுள்ளார்கள். இந்த ஆய்வில் மனிதன் 175 கோடி முதல் 375 கோடி ஆண்டுகள் வரை வாழலாம் என்பது தெரியவந்துள்ளது. பூமியானது 75 வீத வாழ்க்கையை முடித்துக் கொண்டுள்ளது என்றும், பூமிக்கு இன்னும் 25 வீத ஆயுள்தான் உள்ளது என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. நம்மைத் தாங்கும் பூமியை நாம் அழிக்கப் பார்ப்பது நன்றி கொன்ற செயல் அல்லவா!

சொற்ப காலமே வாழும் அற்ப மனிதனால் எல்லாவற்றையும் அளந்தறிய முடிகிறது. ஆனால் அவனது ஆயுளை அவனால் கணித்தறிய முடியாதபோது, அடுத்தவரின் ஆயுளை முடிக்கும் போர் எதற்காக? பயங்கரவாதம் எதற்காக? சிந்திக்க வேண்டாமா?

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் மன்னர்களின் ஆட்சியில் போரே முதலிடத்தில் இருந்ததைக் காணலாம். இவ்வாறு மன்னர்கள் போர் செய்த வரலாறே தேசத்தின் வரலாறாக வரையப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் அதுவே வீரவரலாறாகப் பேசப்பட்டது. அதுவே ஆட்சியின் பெருமையாகவும், சாதனையாகவும் மதிக்கப்பட்டது.

மனித வரலாறு என்பதே மன்னர்களின் வரலாறாக இருந்தது. மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் தங்களது வீர தீர பராக்கிரமங்களைப் பறைசாற்றுவதற்காக நாட்டையே பலியிட்டனர். தமது பேரரசை விரிவுபடுத்திக்கொண்டே போயினர்.

இன்று அந்தப் பேரரசர்களும் இல்லை; அவர்கள் கட்டி எழுப்பிய கோட்டைகளும் இல்லை. எல்லாம் மண் மேடுகளாகவே போய்விட்டன. காலம் நமக்குப் பாடம் கற்பிக்கிறது. நாம்தான் அந்தப் பாடத்தை மறந்து விடுகிறோம்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் அடுத்தடுத்து இரண்டு அணுகுண்டுகள் வீசப்பட்டன. அச்சு நாடு என்று கருதப்பட்ட ஜப்பான் நாட்டின் நகரங்களான ஹிரோஷிமாவும், நாகசாகியும் இந்த அவலத்தை அனுபவித்தன. உலகம் மறக்க முடியாத சோகம் அது.

ஆயிரம் சூரியன்கள் வெடித்துச் சிதறியது போல நீல வெளிச்சம் எங்கும் எகிறிப் பாய்ந்தது. அந்த அழிவில் சிக்கியவர்கள் அடுத்த நொடியே ஆவியாகிப் போனார்கள். மற்ற மனிதரும், விலங்குகளும், பறவைகளும் வெப்பத்தில் பொசுங்கிச் சாம்பலானார்கள். அப்படிக் கரைந்து போகாதவர்கள் தொடர்ந்து நரக வேதனையை அனுபவித்தார்கள்.

'அணுவின் தந்தை' என்று அழைக்கப்படும் அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் இதனை அறிந்தபோது அதிர்ச்சியடைந்தார். முன்னர் ஒரு சமயம் அவர் வீட்டுக்கு வந்த ஒருவர், அவருடைய சமன்பாட்டின் அடிப்படையில் அணுகுண்டு தயாரிக்க முடியும் என்று கூறியபோது, கோபமுற்ற ஐன்ஸ்டீன் அவரை அடிக்காத குறையாக வீட்டை விட்டே வெளியேற்றினார். இதனால் அவர் உலக அமைதியை எவ்வளவு நேசித்தார் என்ற உண்மை புலனாகும். போர் எப்போதும் தேவையில்லை. போர் அநாவசியமானது. நல்லவர் பலரது உயிரைக் காவு கொள்ளும் போர் அநாகரிகத்தின் வடிவமாகும். நல்லியல்புகள் பல கொண்ட மனிதத் தன்மைக்கு மாறானது போர்.

மனிதனை மனிதனாக வாழவிடாது மிருக இயல்புகளுக்கு ஆளாக்கும் போர் இன்றி வாழ்வதே அறிவுடைய செயலாகும். இப்போது நம்முன் இருக்கும் கேள்வி இதுதான்: உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது? அழிவை நோக்கியா? அமைதியை நோக்கியா? விடைதான் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுமையாகப் பூர்த்தியானது பேராற்றுப் பால வேலைகள்

முத்துஐயன்கட்டு வீதியில் உள்ள பேராற்றுப் பாலம் முழுமையாக புனரமைக்கப்பட்டு மக்களின் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.
முத்து ஐயன்கட்டு இடது கரைக்குச் செல்லும் வீதியின் குறுக்காக ஓடுகின்ற பேராற்றின் பாலத்தில் மழைக் காலங்களில் வெள்ளநீர் மூடிப் பாய்வதால் அடிக்கடி போக்குவரத்து துண்டிக்கப்பட்டு மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். தற்போது இந்தப் பாலத்தை நீர்ப்பாசன திணைக்களம் பொறுப்பேற்று புனரமைத்து முடிந்துள்ளதால் மக்கள் இலகுவான முறையில் பயணிப்பதைக் காணமுடிகின்றது. (க-500)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கண்காட்சியும் புத்தக விற்பனையும்

நெளுக்குளம், ஒக். 13
வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியாவில் கல்விக் கண்காட்சியும், புத்தக விற்பனையும் இடம்பெறவுள்ளன.
நாளை திங்கட்கிழமை தொடக்கம் 18 ஆம் திகதி வரை வவுனியா நகர சபையின் பழைய மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இவை இடம் பெறவுள்ளன.
இதன் ஆரம்ப நிகழ்வில் வவுனியா பிரதேச செயலர் க.உதயராஜா பிரதம விருந்தினராகவும், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி கு.சிதம்பரநாதன், நிதி நிர்வாகப் பொறுப்பதிகாரி க.சுவர்ணராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.
கௌரவ விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.மாணிக்கவாசகம், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான அ.அப்துல் நஸார் மற்றும் எஸ்.புஞ்சிபண்டார ஆகியோர் கலந்து கொள்வர். இங்கு விற்பனை செய்யப்படும் புத்தகங்களுக்கு 10 வீதம் தொடக்கம் 40 வீதம் வரையில் விலைக் கழிவு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

### சுயதொழிலுக்கென வங்கிகளால் வழங்கப்பட்ட

# கடன்களைச் செலுத்த முடியாது தவிக்கும் முன்னாள் போராளிகள்


■ வவுனியா புனர்வாழ்வு அதிகாரசபை அதிகாரி தெரிவிப்பு

தம்மால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்கான நிலுவைகளை வங்கிகளுக்குச் செலுத்த முடியாத நிலையில் முன்னாள் போராளிகள் சிரமப்படுவதாக புனர்வாழ்வு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட அதிகாரியான எஸ்.பி.செல்வராசா தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
முன்னாள் போராளிகளிடையே சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக வங்கிகளின் மூலம் அவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா தொடக்கம் 5 லட்சம் ரூபா வரையிலான கடன்களைப் பெற்றுக் கொடுத்தோம். ஆனால் இந்தக் கடன்களைப் பெற்றுக் கொண்ட பலர் அதனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர். வருமானம் இல்லாமை, விவசாயத்தில் ஏற்பட்ட நட்டம் உட்படப் பல்வேறு காரணங்களால் இவர்கள் தாம் வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்குத் தவறியுள்ளனர்.
மேலும் 500 க்கும் மேற்பட்டவர்களுக்கு சுயதொழில் கடன்களை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம். ஆனால் வங்கிகள் கடன் வழங்குவதற்குப் பின்னடிக்கின்றன. ஏற்கனவே கடன் பெற்றவர்கள் தவணைக் கட்டுப் பணங்களை ஒழுங்காகச் செலுத்தாத நிலையில் எவ்வாறு புதிய கடன்களை வழங்குவது என வங்கிகள் கேள்வி எழுப்பியுள்ளன.
இதனால் கடன்களைச் செலுத்த வேண்டிய கால எல்லையை நீடிப்புச் செய்து வருகின்றோம். இதனால் தவணைக் கட்டணங்கள் குறைவடையும்.
மேலும் கடன்களை மீளப் பெறுவது தொடர்பாகப் பல கட்டங்களாகக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்துள்ளோம்- என்றார்.
இது தொடர்பாகப் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரான சதீஸ்குமாரிடம் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு முயன்ற போதிலும் அது கைகூடவில்லை.
ஆனால் புனர்வாழ்வு அதிகாரசபையின் கடன் பகுதிக்கான பிரதிப் பணிப்பாளர் விஜேபாலாவிடம் தொடர்பு கொண்டு இது குறித்துக் கேட்ட போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ஒழுங்காகச் செலுத்தப்படுகின்றன. ஆனால் வன்னி மாவட்டங்களில் பல்வேறு காரணங்களால் அவைசெலுத்தப்படுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன- என்றார். (க-402)

> 500 க்கும் மேற் பட்டவர்களுக்கு சுயதொழில் கடன்களை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம். ஆனால் வங்கிகள் கடன்களை வழங்குவதற்கு பின்னடிக்கின்றன. ஏற்கனவே கடன் பெற்றவர்கள் தவணைக் கட்டுப் பணங்களை ஒழுங்காக செலுத்தாத நிலையில் எவ்வாறு புதிய கடன்களை வழங்குவது என வங்கிகள் கேள்வி எழுப்பியுள்ளன.

## வரலாற்றுச் சின்னங்களின் அழிப்பை ஒத்ததே பிரபாவின் இல்லத் தகர்ப்பு

வன்னி மக்கள் தெரிவிப்பு




முல்லைத்தீவு, ஒக். 13
வன்னிப் பிரதேசத்தில் பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் அழித்தொழிக்கப்பட்டு வருவதன் ஓர் அங்கமாகவே புலிகளின் தலைவர் பிரபாகரனின் வாழ்விடமும் அழிக்கப்பட்டுள்ளது என்று வன்னி மக்கள் கூறுகின்றனர்.
வன்னிப் பிரதேசத்தில் பண்டைய தமிழ் மன்னர்கள் வாழ்ந்ததைக் குறிக்கும் வகையில் தட்டையர் மலையிலே பல வரலாற்றுச் சின்னங்கள் காணப்பட்டன. ஆனால் அவை யாவும் தகர்க்கப்பட்டுள்ளன.
மேலும் அடுக்குக்கல்லு என அழைக்கப்பட்ட ஆற்று மறிப்பு இருந்த இடமும் முற்றாக மறைந்துவிட்டது. பண்டார வன்னியனின் உருவச்சிலை, திருவள்ளுவர்சிலை என்பன கற்சிலை மடுவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் நிறுவப்பட்டன. அவைகளும் இருந்த இடம் தெரியாது இடித்து அழிக்கப்பட்டுவிட்டன. இவைதவிர குருக்களூர், ஆனைவிழுந்தான், ஐயன் பெருமாள் பணிக்கர்குளம், கற்குளம், குருந்தூர் மலை போன்ற இடங்களும் மறைந்துவிட்டன. தற்போது உள்ள எமது சிறார்களுக்கு இவை குறித்து அறிவதற்கு வாய்ப்பில்லாது போய்விட்டது. இதன் ஓர் அங்கமாகவே தலைவர் பிரபாகரனின் வாழ்விடமும் அழித்தொழிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# வேலை வாய்ப்புப் பணியகத்தின் செயற்பாடுகள் மன்னாரிலும்

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பணிகள் மன்னார் மாவட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சின்கீழ் இயங்கும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் நாடளாவிய ரீதியில் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலமாகத் தனது வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.
இதன் பிரகாரம் இந்தத் திணைக்களத்தின் பணிகள் மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் பயிற்சிகள், சுயதொழில் நாடுவோருக்கான சுயதொழில் ஊக்குவித்தல் பயிற்சிகள் என்பனவும் இங்கு வழங்கப்படுகின்றன.
மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சி நெறிகளில் பாடசாலை மாணவாகள், பாடசாலையை விட்டு விலகியோர், சுயதொழிலை ஆரம்பிக்க விரும்புவோர், தற்போது மேற்கொள்ளும் தொழிலை மேன்மேலும் விருத்தி செய்ய விரும்புவோர், தனியார்துறையில் வேலைசெய்ய விரும்புவோர் ஆகியோர் இதில் பங்கு பற்றிப் பயன் பெறலாம்.
மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சிநெறிகள் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் மனிதவள அபிவிருத்தி உதவியாளாகள், தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.
மேலும் இந்த அலுவலர்களை மாவட்ட, பிரதேச செயலகங்களில் சந்தித்து ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
இவர்களை வார நாள்களில் திங்கள், புதன் ஆகிய தினங்களில் மாவட்ட, பிரதேச செயலகக் காரியாலயங்களில் சந்தித்து மேற்குறிப்பிடப்பட்ட ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றைப் பெற்றுப் பயன்பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

> இந்தத் திணைக்களத்தின் பணிகள் மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## பாவனைக்கு உதவாத வன்னிவிளாங்குளம் வீதி



துணுக்காய், ஒக். 13
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வன்னி விளாங்குளத்திலிருந்து அம்பாள்புரம், கொல்லவிளான் குளம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரதான வீதி மோசமான நிலையில் காணப்படுவதால் இந்த வீதியில் பயணிப்பவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.
முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ்வரும் இந்த வீதியூடாக ஏராளமான மக்கள் பிரயாணம் மேற்கொண்டு வருகின்றனர். இதன் நீளம் சுமார் 24 கிலோ மீற்றர் ஆகும். மழை காலத்தில் இந்த வீதியில் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. போருக்கு முன்னர் இருந்ததை விட தற்போது இந்த வீதி மோசமாகச் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.
எனவே மழை காலத்துக்கு முன்னர் இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)

## குறுகலான வீதியால் இடர்கள்


முல்லைத்தீவு, ஒக். 13
ஒட்டுசுட்டானிலிருந்து முத்தையன்கட்டு பிரதான வாய்க்காலுக்குஅருகில் செல்லும் வீதி குறுகலாக இருப்பதால் வாகனங்களை ஒட்டிச் செல்வதில் வாகனச் சாரதிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.
இந்த வீதி, கற்சிலை மடுவிலிருந்து முல்லைத்தீவு பிரதான வீதியைச் சென்றடையும் குறுகலான வீதியாகும். இந்த வீதி தற்போது கொங்கிறீற் இடப்பட்டுப் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும், வாகனங்கள் ஒன்றை மற்றொன்று விலத்திச் செல்ல முடியாத நிலையில் குறுகலாக உள்ளது. இதனால் வாகனச் சாரதிகள் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இந்த வீதியின் இருமருங்கும் மண் இடப்பட்டு வாகனங்கள் ஒன்றையொன்று விலத்தக் கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இல்லாவிட்டால் ஒருவழிப் பாதையாகப் பிரகடனப்படுத்தி அறிவித்தல் பலகை போடப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## முதியோர் சிறுவர் தின விழா

வவுனியா, ஒக். 13
வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர், முதியோர் தின விழா இடம்பெற்றுள்ளது.
[illegible] இந்த நிகழ்வின்போது பிரதேசத்தில் உள்ள முதியோர்களும், சிறுவர்களும் கௌரவிக்கப்பட்டதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன.
குறிப்பாக முதியோர்களுக்கு நினைவுப் பரிசில் வழங்கப்பட்டதுடன் சிறுவர்களுக்[illegible] போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (க-42l)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேறாங்கண்டல் முருகன் ஆலயத்துக்கு இந்து கலாசார அமைச்சினால் நிதியுதவி



துணுக்காய், ஒக். 13
தேறாங்கண்டல் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அதிசய முருகன் ஆலயத்துக்கு மூலஸ்தானக் கட்டடம் அமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சின் நிதியுதவி கிடைத்துள்ளது.
இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தை அமைக்கும் வேலைகள் நிதிப்பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தற்போது அதற்குரிய நிதியாக 2 லட்சம் ரூபா கிடைக்கப்பெற்றதாக ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர். ஆலயத்தின் கட்டட வேலைகளுக்கு மேலும் நிதியுதவி தேவையுள்ளதாகவும், உதவ விரும்புவோர் ஆலய தர்மகர்த்தாவிடம் உதவிகளை வழங்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தேவையான நிதி கிடைக்கும் பட்சத்தில் அடுத்த வருடத்துக்குள் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியுமென ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர். (க-415)



அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் சர்வதேச முதியோர் தின விழா, சங்கத் தலைவர் எஸ்.பி.பத்மநாதன் தலைமையில் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முன்றிலில் இடம்பெற்றது. அரியாலைப் பகுதியைச் சேர்ந்த எழுபது வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் த.கனகராஜாவும் சிறப்பு விருந்தினராக அரியாலை கிழக்கு கிராம அலுவலர் சி.திருக்கேதீஸ்வரனும் கலந்து கொண்டனர். (ஒ-86)



யாழ்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் இடம்பெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் பாடசாலை சிறார்களின் அபிநயப் பாடல் இடம்பெற்ற காட்சி. (ஒ-17)



மக்கள் நலன் பேணும் அமைப் பினால் கோண் டாவில் சி.சி.த.க. பாடசாலையில் நடத்தப்பட்ட 'கல்விக்கான உதவித் திட்டம்' நிகழ்வில் 15 மாணவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகளையும், 40 மாணவர்களுக்கு கல்வி உபகரணங் களையும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் வழங்கினார். நிகழ்வில் சிறப்பு விருந்தினரான, நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் உரையாற்றிய வேளையில்....... (ஒ)



அண்மையில் இடம்பெற்ற வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகத்தின் சிறுவர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா பிரதேச செயலர் கா.உதய ராஜா, சிறப்பு விருந்தினர்களான சிறுவர் நன் னடத்தை உத்தியோகத்தர் தி.மனோகராஜா, வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத் தர் இ.நித்தியானந்தன், ஆசியுரை வழங்கிய சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் ஆகியோரை இல்ல நிர்வாகி அருட்பணிச் செல்வி கு.ஜெயராணி வரவேற் கின்றார். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-402)



கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் வரு டாந்த உற்சவத்தின் போது விநாயகர் தீர்த்த மாடிய பின்னர் ஆலயத்துக்கு எழுந்தருளுகின் றார். (க-500)



வட்டுக்கோட்டை ஒற்றைக்கால் வைரவர் பாலர் பாடசாலை மாணவர்களின் ஆசிரியர் தின விழா நிகழ்ச்சியின்போது... (ஒ)



துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் அமைந்துள்ள அதிசயமுருகன் ஆலய வீதியில் நவராத்திரி விழாவை முன்னிட்டு சிரமதானப் பணிகள் இடம்பெற்றன. (க-415)

# கைதடி இல்ல முதியவர்கள் முதுமையை மறந்த நிலையில்...



கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற்ற முதியோர் வார நிகழ்வின் மூன்றாம் நாளில் முதியவர்களுக்கு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வாளியிலுள்ள மணலை போத்தலில் நிரப்பி விட்டு வெற்றி இலக்கை நோக்கி ஓடும் காட்சி. (ஒ-51)



மணல் நிரப்பும் போட்டியில் ஆண் முதியவர்களும். (ஒ-51)



பலூன் உடைத்தல் போட்டியில் மூதாட்டிகள். (ஒ-51)



முட்டியுடைத்தல் போட்டியில் முதியவர்கள் பங்கேற்பதையும் இந்த நிகழ்வைப் பார்வையிட வருகை தந்த கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவ மாணவிகளும் இல்லப் பணியாளர்களும் (ஒ-51)



யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை மாணவி ஒருவர் முதியவர்கள் மத்தியில் பாடல் பாடி அவர்களை மகிழ்வித்த வேளையில்... (ஒ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கன் மிஷனில் ஆசிரியர் தினவிழா

தென்மராட்சி, ஒக்.13

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் வித்தியாலய ஆசிரிய தின விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறும்.

விழாவில் இரு தடவைகள் நல்லாசிரியர்களுக்கான "பிரதீபா பிரபா" விருது பெற்ற வித்தி யாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் மற்றும் ஆசிரியர்களை பாட சாலை சமூகத்தினர் கௌரவிக்கவுள்ளனர்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென் மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார். (ந-9)

# கண்ணீர் அஞ்சலி



Dr.குகனின் பாசமிகு தந்தையும்
Dr.கிறிஸ்ரினின் பாசமிகு மாமனாரும் ஆகிய

## Dr.V.சற்குணநாயகம்

(ஓய்வு பெற்ற மனநோய் வைத்திய நிபுணர், அங்கொடை)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

மடத்தடி,
கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை.

பெறாமகள் திரு.திருமதி சக்திக்குமரன்.

(32615)(3.6.4)

# மரண அறிவித்தல்

## திருமதி சொருபராணி கனகரத்தினம்



யாழ். கடைச்சாமி வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ் நாவலர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சொருபராணி கனகரத்தினம் (09.10.2013) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் இராசையா கனகரத்தினம் (Rtd. CHIEF INSPECTOR CEYLON RAILWAY-லண்டன்) அவர்களின் பாசமிகு மனைவியும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் (உரிமையாளர்-வைத்தியலிங்கம் மரக்காலை) -மணியம்மா தம்பதியரின் அன்பு மகளும், பெரியவிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா-அன்னபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நரேஸ் (லண்டன்), நரேந்திரா (லண்டன்), உமா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருநிலைநாயகி (லண்டன்), K.V. மகேந்திரன் (சட்டத்தரணி), விமலநாயகி (லண்டன்), தவராணி, கமலராணி, இந்திராணி, K.V.சுசீந்திரன், K.V.இரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஷாமினி (லண்டன்), நித்தியா(லண்டன்), திலீபன் (லண்டன்) ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும் ஆர்த்தி, அக்ஷயன், அஷானி, அனுர்யன், அனுக்சிகா, திலக்ஷ்னி, பிரகாஷ்னி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 11 மணிவரை (லண்டன் நேரம்) Tm united KNK stadium Bishopsford Road, Morden Surrey Sm46BF இல் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் பிற்பகல் 12.30 முதல் 1.10 வரை Mortlake crematorium, Kew meadow path, Richmond, Surrey T W9 4EN இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
இ.கனகரத்தினம் 00447404240182 க.நரேஸ் 00447710278839 க.நரேந்திரா 00447990535846
தி.உமா 00447424917929

110, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

"நல்ல போராட்டத்தைப் போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன்
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"-
II தீமோத்தேயு 4-7



மண்ணில்
07.11.1994

விண்ணில்
13.10.2013

அமரர்
## விஜயச்சந்திரன் டினேஷ்

(சென்.ஜோன்ஸ் கல்லூரி
2013 வர்த்தகப் பிரிவு மாணவன்)

*எம் செல்ல மகன் டினே*

எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு விரைவில் சென்றாலும்
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எம் செல்ல மகனை மறப்பேனோ?
பெற்றோரிற்கு ஒரு மகனாய்ப் பிறந்து 18 ஆண்டுகள்
எம்முடன் உன் மழலை மொழிகள் பேசி
இன்புற்ற நாள்களை மறக்க முடியவில்லை ஐயா!
எம் உள்ளும் உன் நினைவால் ஒவ்வொரு நிமிடமும் துடிக்குதையா
பாராட்டுச் செய்தி போட நினைத்த பெற்றோர் உள்ளம்
உன் நினைவு நாளைப் போட வைத்ததேன்? இம் மண்ணில் உன்னைப் பிரிந்தாலும்
விண்ணில் உன்னைக் காண்போம் என்ற நம்பிக்கையில்
மிகுதி நாள்களைக் கழிப்போம். நீங்காத நினைவாய் என்றும் எம்
உள்ளத்தில் உள்ளாய் மகனே.

38/46, சிவன் புதுவீதி,
மணல்தறை லேன், கந்தர்மடம்.

என்றும் உன் நினைவுகளுடன்
பெற்றோர்.

(32644) (5.6.3)

# கண்ணீர்விழிகளுடன் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தியாகராஜா சுரேந்திரன் (சுரேன்)
(ஆசிரியர் - ஹைலண்ட்ஸ் கல்லூரி, ஹற்றன்)

பிறப்பு
13.12.1967

இறப்பு
08.10.2008

திதி: நவமி 13.10.2013


எமது அன்புச்செல்வமகன் சுரேன் எம்மைப்பிரிந்து
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்துவிட்டன.
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எமது உயிர்
இருக்கும்வரை உம்மை மறவோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்- 077 704 3727
இல.28,2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(32410) (45.6.3)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா கந்தையா



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தையா 08.10.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா சுகிர்தராணி (சுகிர்தம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா - விசாலட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதி - தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், முத்தையா, அமிர்தலிங்கம், அன்னம்மா ஆகியோரின் சகோதரரும், சந்திரராசா (பிரான்ஸ்), சிவராசா, சந்திரகுமார் (பிரான்ஸ்), சறோஜினி (லண்டன்), சாந்தினி (கொழும்பு), சுதாஜினி (ஆசிரியை - வட்டு. யாழ். மத்திய கல்லூரி), மாலதி (பகரீன்), துஷ்யந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பெர்னான்டோ பிரான்சிஸ் (லண்டன்), பத்மராசா, இராஜவடிவேலு, ஞானரூபன் (பகரீன்), யதீஸ் (பிரான்ஸ்), மோகனா, மகேஸ்வரி, வரிதா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சுகந்தி, சுமித்திரா, கஜன், காயத்திரி, சுரேன், சொபி, நேசநாத், யூலியன், விதுஷன், பிறிஸ்சில்லா, ஜெசிக்கா, பிரசாந்த், டக்சிகா, கிரிசாந்த், எஸ்தர், எபினேசர், மதுரமி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுகிர்தராணி (சுகிர்தம் - மனைவி),
077 665 1733
ரூபன் (மருமகன்)
077 577 6443

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

(32652) (45.6.3)

## சின்னத்தம்பி அப்புலிங்கம்



ஆனந்தா வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அப்புலிங்கம் 09.10.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை(இளைப்பாறிய ஆசிரியர்)-தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், இராசம்மா, மனோன்மணி மற்றும் கனகம்மா, சுந்தரலிங்கம் (டோகா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனஞ்செயன்(பின்லாந்து), தக்ஷினி (மானிப்பாய் ப.ப.நோ.கூ.சங்கம்),தர்மினி (பிரான்ஸ்), முகுந்தன் (DFCC வர்த்தன வங்கி சாரதி)ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுனிதா (பின்லாந்து),ஆனந்தறூபன்(தர்மரூபன் பல்பொருள் வாணிபம்), கருணசேகரம்(பிரான்ஸ்), செல்வரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும், கபில்தேவ், றம்மியா, பிரவின் (பின்லாந்து),நிதுஷன்(பின்லாந்து)ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.10.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(32636)(5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்**: எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். அரச அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**இடபம்**: பிள்ளைகளின் வருங்காலம் குறித்துச் சிந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளைப் போராடி முடிப்பீர்கள்.

**மிதுனம்**: குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. தாய்வழியில் ஒத்துழைப்பார்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் நிதானித்துச் செயற்படப் பாருங்கள்.

**கடகம்** : சிக்கனமாக செலவழித்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். அரச காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும்.

**சிங்கம்**: வியாபாரத்தில் சுமுகமான லாபம் உண்டு .முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**கன்னி**: மனதில் பட்டதைப் பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆடம்பரச்செலவுகளைக் குறைப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய பொருள்களை புது யுக்தியால் விற்றுத்தீர்ப்பீர்கள்.

**நாளை**

புரட்டாதி-28 ஞாயிற்றுக்கிழமை 14.10.2013
திதி: தசமி பி.ப.12.01 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ.05.06 வரை
சுபநேரம்: 12.02 - 01.32 வரை
இராகுகாலம்: 07.32 - 09.02 வரை

**துலாம்**: குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். பிள்ளைகளின் உடல் நிலை சீராக இருக்கும். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்**:பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவீர்கள். பணவரவு திருப்தி தரும். உடல் நிலை சீராகும். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

**தனுசு**: எதையும் திட்டமிட்டுச் செய்யுங் கள். முன்கோபத்தைக் குறையுங்கள். பண விடயத்தில் கறாராக இருங்கள். வியாபாரத்தில் வர வேண்டிய பணத்தைப் போராடிப் பெறுவீர்கள்-. உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள்.

**மகரம்**: பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக பணம் வாங்க வேண்டி வரும். சொந்த - பந்தங்களுடன் வீண் விவாதங்கள் வந்துப் போகும். திடீர் நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வர வேண்டாம்.

**கும்பம்**: உங்களது குறிக்கோளை எட்டிப் பிடிக்க முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் அடிமனதில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துக் கொள்வீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்புக் கிட்டும்.

**மீனம்**: அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | 3 | 9 | | 5 | 7 |
| 6 | 2 | | | 8 | | | 1 | |
| | | | | | | | 2 | |
| | 3 | | 5 | 4 | | 8 | 9 | 6 |
| | | 6 | 7 | | 2 | 1 | | |
| 4 | 9 | 1 | | 6 | 8 | | 7 | |
| | 4 | | | | | | | |
| | 1 | | | 7 | | | 6 | 4 |
| 7 | 6 | | 1 | 2 | | | 8 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 8 | 5 | 9 | 6 | 7 | 1 | 4 |
| 1 | 6 | 4 | 7 | 2 | 8 | 9 | 3 | 5 |
| 9 | 5 | 7 | 1 | 3 | 4 | 2 | 6 | 8 |
| 7 | 4 | 9 | 6 | 1 | 5 | 8 | 2 | 3 |
| 8 | 3 | 5 | 2 | 7 | 9 | 6 | 4 | 1 |
| 6 | 1 | 2 | 8 | 4 | 3 | 5 | 7 | 9 |
| 4 | 7 | 3 | 9 | 5 | 2 | 1 | 8 | 6 |
| 5 | 8 | 1 | 3 | 6 | 7 | 4 | 9 | 2 |
| 2 | 9 | 6 | 4 | 8 | 1 | 3 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## விஜயதசமி அன்று வித்தியாரம்பம்

BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

10 வருடங்களில் 7500 ற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்றுள்ளார்கள். 90 % மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

கற்பித்தல் முறை:
- ★ சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி, English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graducation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம் 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| யாழ்ப்பாணம் | நீர்வேலி |
|---|---|
| மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (ஓட்டுமடம் சந்தி அருகாமை) | 1வது மைல் கல் இராச வீதி |
| **கோப்பாய்** | **சாவகச்சேரி** |
| பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை |
| **மானிப்பாய் 1** | **அச்சுவேலி** |
| 252, ஆனைக்கோட்டை யாழ் வீதி | ஆதார வைத்தியசாலை அருகாமை |
| **மானிப்பாய் 2** | **சங்கானை** |
| சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி) |
| **கன்னாகம்** | **வடமராட்சி** |
| Dr. சபாரத்தினம் வீதி கன்னாகம் | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி |

வழமை போன்று இவ் வருடமும் [2013] 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது பாலர் பாடசாலைகளில் பயின்ற பழைய மாணவர்களை கௌரவிக்க இருப்பதால், பெற்றோர் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்**

- Certificate in English — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
- Diploma in English — G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
- ESOL A1, A2 — Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
- IELTS — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்
- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

British Business College — Where Students Come First

**BRITISH BUSINESS COLLEGE**
64, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:021 222 4060, 021 222 5796, 077 6646357, 077 362 7055

British Council இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies- Sri Lanka. Reg. No: P 9718



### விற்பனைக்கு

1½ வயதுள்ள அல்ஷேசன் பெண் நாய், ஒரு ஆண் குட்டி விற்பனைக்கு உண்டு. (GERMAN SHEPERD)
தொடர்பு: ரேர் ஒழுங்கை, அராலி வடக்கு.
தொ.பே.: 021 205 1514/078 301 4280 (32387)(5.6.3)

### வீடு வாடகைக்கு

யாழ் மாநகர எல்லைக்கு உட்பட்ட சிறிய வீடு மூன்று பேர் அடங்கிய குடும்பத்திற்கு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 968 8145

### காணி விற்பனை

யாழ். இந்துக் கல்லூரி, இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் உள்ள இல.30, கனகசபை அவனியுவில் அமைந்துள்ள வீட்டுக் காணி 1½ பரப்பு விற்பனைக்கு உள்ளது. கஸ்தூரியார் வீதியிலிருந்து 50m அருகில் உள்ளது.
(32604) (4,6,3) தொடர்பு: 077 615 2287

### வீடு விற்பனைக்கு

குளப்பிட்டி வீதியில், ஆனைக்கோட்டை, ஆலடி வைரவர் கோயிலடி அருகில் ஒழுங்கையுடன் கூடிய இரண்டு பரப்புக்காணியில் 4 அறைகள், ஹோல், குசினி, கிணற்றுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
(32659) (5.6.3) தொடர்பு: 077 494 5825

### மாடிக் கட்டடம் வாடகைக்கு

இல.275, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப் பாணத்தில் ஒவ்வொன்றும் 1800 சதுர அடி உள்ள மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. தனி மாடியாகவோ அல்லது முழுக் கட்டடமாகவோ (5400 சதுர அடி) பெற்றுக் கொள்ள முடியும்.
(32807)(5.6.3) தொடர்பு: 071 278 9227

### காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, அராலி தெற்கில் பின்வரும் காணிகள் விற்பனைக்குள்ளன.
1. அராலித்துறையில், தெல்லிப்பழை அராலி வீதிக்கு அருகில் 40 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பிரித்துக் கொடுக்கப்படும்.
2. அராலி தெற்கில் நன்னீர் கிணற்றுடன் தோட்டக் காணி 12¾ பரப்பு விற்பனைக்கு உண்டு. புளியமரம் ஒன்றும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 616 4191 /077 419 7258 (32654) (5.6.3)

### காணி விற்பனைக்கு

தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் யாழ்.காரைநகர் வீதி,சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியில் 32 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 731 6139 (32471)(3.5.6)

### வீடுவாடகைக்குத் தேவை

யாழ்.நகரில் இருந்து 2km சுற்றுவட்டாரத்தில் குறைந்த பட்சம் மூன்று படுக்கையறைகளுடன் கூடிய அனைத்து வசதிகளும் (வாகனத் தரிப்பிடம்) வீடு வாடகைக்குத் தேவை. (32618)(5.6.3)
தொடர்பு: 077 710 1001

### வீடு வாடகைக்கு

2 படுக்கையறை, 1 வரவேற்பறை, 1 சமையலறை, 2 குளியலறையுடன் கூடிய வீடு (மேல்) வாடகைக்குண்டு.
286, பலாலி வீதி, கந்தர்மடம்.
தொடர்பு: 077 301 3236 (32858)(5.6.3)

### லொறி விற்பனைக்கு/ வாடகைக்கு

GOLD COMET, 1612,LN xxxx, கெண்ரெய்னர் பெட்டி பொருத்தப்பட்ட புத்தம் புதிய லொறி உடன் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 955 4595 (29803)(5.6.3)

### வேலை வாய்ப்பு

விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (ஆண்/பெண்) தேவை.
தொடர்பு: 077 406 7739 (32834) (5.6.3)

### குறைந்த செலவில் இணையத்தள வடிவமைப்பு

பாடசாலைகள், வியாபார நிலையங்கள், ஆலயங்கள் மற்றும் உங்களுக்குத் தேவையான இணையத்தளங்களை தரமாகவும் மிகக் குறைந்த செலவிலும் பெற்றுக் கொள்ள நாடுங்கள். (32835) (7.6.3)
Innovative Designers:
077 339 4457 web.www.idjaffna.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
12.01.1943

விண்ணில்
12.09.2013



திருமதி
**மலரகிதம்மாள் இராஜலிங்கம்**

வடமராட்சி கரணவாய் மத்தியைப் (நவிண்டில்) பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மலரகிதம்மாள் இராஜலிங்கம் கடந்த (12.09.2013) அன்று சிவபதமடைந்த வேளை அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்தியை அனுப்பியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் பல்வேறு உதவியை புரிந்தவர்களுக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றிகளைச் சமர்ப்பிப்பதுடன், நாளை (14.10.2013) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரன கிரியைகளிலும் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

மலர்வாசா,
கரணவாய் மத்தி.
021 2264185

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/12841)(10,14)

# K.C.C.C அன்னை கண்ணீர் வடிக்கின்றாள்



கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் ஆயுட்கால உறுப்பினர்களும், விளையாட்டு வீரர்களுமான
நந்தகோபன், நந்தகுமாரன்,
நந்ததயாளன் ஆகியோரின் பாசமிகு தந்தை
**மயிலு நாகரத்தினம்**
(இளைப்பாறிய முதல்தர எழுதுவினைஞர்)
அவர்கள் லண்டனில் சிவபதமடைந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்புதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்
விளையாட்டுக்கழகமும்,
கொக்குவில்.

(32680)(3.6.4)

# கொக்குவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துவின்
புகழ் பூத்த அதிபர் உயர்திரு.
நாகலிங்கம் அவர்களின் அன்பு
மகனும் பழைய மாணவ சங்கத் தலைவி
திருமதி நித்தியலட்சுமி
குணபாலசிங்கம் அவர்களின் அன்புச்
சகோதரனும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து முதன் முதலாக மருத்துவபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கல்லூரியின் புகழ் பூத்த மைந்தனுமான வைத்திய கலாநிதி
**நாகலிங்கம் யோகநாதன்**
அவர்களின் திடீர் மறைவினால் தவிக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கிருபாகர சிவசுப்பிரமணியனைப் பணிக்கின்றோம்.

(32681)(3.6.4)
பழைய மாணவர் சங்கம்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

# நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு | 7ஆம் ஆண்டு



அமரர்
**முருகேசு செல்லையா**



திருமதி
**துரையம்மா செல்லையா**

10.01.1935 தோற்றம் 04.08.1940
23.10.2012 மறைவு 14.09.2006

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தே மிளிர்ந்தோரே
கூரறிவு கொண்டோராய் எமையென்றும் வளர்த்தவரே
பாரினிலே பண்புயர் தெய்வங்களாய் திகழ்ந்தோரே
பல்லாண்டு சென்றிடினும் மறவோமே உம்மை.

வளாக வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் நீ[illegible]
குடும்பத்தினர்.

(32690) (7.6.3)

## பொதுநலவாயத்திலிருந்து இலங்கையைநீக்குக

சென்னை, ஒக்.13
இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய மாநாட் டில் இந்தியா கலந்து கொள் எக்கூடாது என தமிழக வாழ் வுரிமைக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவுநர் தலைவர் வேல்முருகன் கடலூரில் நேற்றுமுன் தினம் செய்தியாளர்களிடம் பேசியபோது,

"பொதுநலவாய அமைப்புஉருவான போது ஆண், பெண் ரீதியாகவும் இனம், மொழி, மதரீதியாகவும் சொந்த நாட்டு மக்களை வேறுபடுத்திப் பார்க் கும் நாட்டை அந்த கூட்ட மைப்பில் இருந்து நீக்க வேண்டும் என விதி ஏற்படுத்தப்பட் டது.

ஆனால் இலங்கையை ஆளும் மஹிந்த அரசு லட்சக்கணக் கான தமிழர்களை படுகொலை செய்துள்ளது.

விதிகளுக்கு முரணாக மத இன ரீதியாக வேறுபடுத்தி சித்திர வதை செய்து கொலை செய்தது.

எனவே இலங்கை யில் நடை பெற உள்ள பொது நலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள் ளக் கூடாது என தமிழக வாழ்வுரிமை கட்சி வலியுறுத்துகிறது.

மனித உரிமைகளை மீறிய இலங்கையை பொதுநலவாய கூட்டமைப்பில் இருந்து நீக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளில் இந்தியா ஈடு படவேண்டும்.

அதனை வலியுறுத்தி சென்னை சேப்பாக்கத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 3 மணி அளவில் பல்லாயிரக் கணக் கான பொது மக்களைத் திரட்டி தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் ஆர்ப் பாட்டம் நடத்தப்படும்" என்று தெரிவித்தார்.

(வ)

## மருந்து உற்பத்தியில் வெளிநாட்டவர் நாட்டம்

கொழும்பு, ஒக்.13
இலங்கையில் மேல்நாட்டு மருந்து வகைகள் பலவற்றை உற்பத்தி செய்யக் குருநாகல், கிரியல்ல தொழில்பேட்டைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருகை தந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் உற்பத்தி செய்யப் பட்டுவரும் மேல்நாட்டு மருந்து வகைகளின் எண்ணிக்கையை அதி கரிக்க, ஜெய்க்கா நிறுவனத்தின் உதவியுடன் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் செயற்றிட்டம் செயற்படுத்தப்பட வுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ளும்போது சர்வதேச உற்பத்தியாளர்கள் போன்றே உள்ளூர் உற்பத்தியாளர்களும் கேள்விக் கோரல்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(ச-22)

# கண்ணீர் அஞ்சலி



எமது நெருங்கிய நண்பர் இ. கனகரத்தினம்
அவர்களின் பாசமிகு மனைவி
**திருமதி சொருபராணி**
அவர்கள் லண்டனில் இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (C/12837)(3.6.4)

மு.சிவகுமாரன் குடும்பத்தினர்,
பகவான் மருந்தகம்.

# கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
முன்னாள் உபஅதிபர்
திருமதி விஜயலக்சுமி நாகரத்தினத்தின்
அன்புக் கணவரும்
நந்தகோபன், ராதை, நந்தகுமாரன்,
நந்ததயாளன் ஆகியோரின்
அன்புத் தந்தையுமான
**மயிலு நாகரத்தினம்**
(இளைப்பாறிய முதல்தர எழுதுவினைஞர்)
அவர்கள்லண்டனில் சிவபதமடைந்துவிட்டார். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய கிருபாகர சிவசுப்பிரமணியனின் பாதார விந்தங்களைப் பணிகின்றோம்.

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில்
கல்வி பயின்ற மாணவர்கள்,
ஆசிரிய நண்பர்கள், கொக்குவில் சமூகம்.

(32632)
(7.6.3)

# மரண அறிவித்தல்



**நாகர் சின்னையா**

உடுவிலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் சின்னையா கடந்த 09.10.2013 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர்-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கறுவல் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் சுந்தரராஜன் (லண்டன்), சகுந்தலாதேவி (ஜேர்மனி), பத்மராஜன் (ஜேர்மனி), பத்மாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, மகேஸ், தறுமு, மகேந்திரம் மற்றும் துரை (இந்தியா) சின்னராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரேமரஞ்சினி (லண்டன்), சௌந்தராஜன் (ஜேர்மனி), கலைச்செல்வி (ஜேர்மனி), பிறேமதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமனும் பிரவீன் (லண்டன்), கஜீனா (லண்டன்), துவர்மன் (ஜேர்மனி), சூர்யா (ஜேர்மனி), கவிசன் (ஜேர்மனி), பிரியந்தன் (ஜேர்மனி), கயலினி (ஜேர்மனி), கவுலிகா (ஜேர்மனி), பிறேம்கஜன், சிந்திக்கா, கர்ஷன், தனுஸ்ரிகன், பிறிட்னி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனக் கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (32668-23-14)

தகவல்:
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



**சின்னத்துரை ஞானேந்திரன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஞானேந்திரன் நேற்று (12.10.2013) சனிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் ஞானேந்திரன் பாலரதிக்கா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலாயுதம் - பரமேஸ்வரியின் அன்பு மருமகனும், வசந்தமலரின் அன்புச் சகோதரனும், ஆதவன் (ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி), அமுதா, அகிலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம், வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சினி (ஆசிரியர், கிளி/பளை மத்திய கல்லூரி), அர்ச்சுணராஜன் (பொறியியலாளர் -டுபாய்), ஜனார்த்தனி (முகாமைத்துவ உதவியாளர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனும், அபினாஷ், அஸ்மிதா, அக்ஷன நிவேதன், அபிரதன், அஜய் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஆலங்கட்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகாத்மா வீதி,
[illegible] வெட்டி.
தொ.பே.021 321 9559

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாரில் உடனடி வேலைவாய்ப்பு

| வேலைவாய்ப்பு | எண்ணிக்கை | சம்பளம் ( QR ) |
|---|---|---|
| மேசன் | 06 | 1000 - 1500 + OT |
| பெயின்டர் - PAINTER | 06 | 1000 - 1800 + OT |
| குளாய் பொருத்துனர்- PLUMBER | 06 | 1000 - 1800 + OT |
| A/C TECHNICIAN | 10 | 1000 - 1800 + OT |
| மின் உபகரண திருத்துநர் Appliance Electrician | 06 | 1000 - 1800 + OT |
| ELECTRICIAN | 10 | 1000 - 1800 + OT |
| கை உதவியாளர் | 10 | 700 |

**Terms & Conditions:**

1QR= Rs.36/-
AL/2453/Advt:/04/13

- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் இலவசம்
- ஒப்பந்த காலம் 2 வருடம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 48 மணித்தியாலம் வேலை
- உணவுக்காக 200 கட்டார் றியால் வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்து நாடுதிரும்பும்போது விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை கட்டார் சட்டத்திற்கு உட்பட்டது.

பாஸ்போட், 8 பாஸ்போட் அளவு போட்டோக்கள் மற்றும் சான்றிதழ்களுடன் உடன் நேரே வரவும்.

தொடர்புகளுக்கு: அரசாங்க அனுமதிக்கட்டணம் ரூபா. 28,152.00 மட்டும் அறவிடப்படும்.

(C/12763)

**0770112626, 0770112633, 0770112629**

## JRD International (Pvt ) Ltd

**No:72, Kirulapana Avenue, Kirulapana, Colombo -05.**


# அண்ணன், தம்பிக்கு மரண தண்டனை

கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள இருவருக்கு மொனராகலை மேல் நீதிமன்றம் மரண தண் டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களுக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1997ஆம் ஆண்டு ஆயித்தியமலை பகுதியில் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடையதாக இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# மரண அறிவித்தல்



## தம்பிநாயகம் அரியநாயகம் - ERNEST

( நவாலி ) Charted Civil Engineer

நவாலியைப் பிறப்பிடமாகவும். கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தம்பிநாயகம் அரியநாயகம் (ஏணஸ்ட்) அவர்கள் 12.10.2013 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல் : குடும்பத்தினர் – 011 2365930, 0776571736 (சி/12759)




# எனக்கு பல்கலைக்கழகம் போக முடியாமல் போனாலும்...

என்ட அர்ப்பணிப்பும்
முயற்சியினாலும் இப்ப
என்னால மாசம் 50,000/- ரூபா
சம்பாதிக்க முடியுது.
காரணம் நிதித் துறையில எனக்கு
கிடைச்ச வேலையினால...

- கவர்ச்சிகரமான மாதாந்த வருமானம்
- திறமையின் அடிப்படையில் பதவி உயர்வு மற்றும் மேலதிக அனுகூலங்கள்
- உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகள்/வெளிநாட்டு சுற்றுலா
- நிறுவனத்தால் வழங்கப்படும் ஏனைய சலுகைகள்
- இலவச பயிற்சி பாடத்திட்டம்

**தகைமைகள்:**

- ஆண் அல்லது பெண் 20 - 45 வயதிட்குட்பட்டவராகவும், நட்புறவுடன் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- க.பொ.த உ/தரத்தில் 3 பாடங்களுக்கு சித்தி இருத்தல் வேண்டும். அல்லது
- க.பொ.த சா/தரத்தில் சித்தி பெற்றிருப்பதுடன், 1 வருட தொழில் அனுபவமும் காணப்படல் வேண்டும்.

இப்பதவிக்கான வெற்றிடங்கள் வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலேயே காணப்படுகின்றன.

இலங்கையின் முன்னணி நிறுவனத்துடன் இணைந்துகொள்வதற்கு உங்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு.

உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
மனிதவள முகாமையாளர்,
இல. 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.
ஈ-மெயில்: financialjobs2014@gmail.com

(சி/12750)(10,14)

PHOENIX O&M


# மரண அறிவித்தல்

## டாக்டர் க. அழகானந்தசுந்தரம்



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்ட்ரியலை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் க. அழகானந்தசுந்தரம் நேற்று (12.10.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வித்துவான் வ.மு. கனகசுந்தரம்- சிவகாமசுந்தரி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம்- சிவகாமிப்பிள்ளை (இளையாச்சி) ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் குகானந்தசுந்தரம் (முன்னாள் வீரகேசரி, தினகரன், தமிழ்நாதம் உத்தியோகத்தர்), சதானந்தசுந்தரம் (லண்டன்- நிதி முகாமையாளர்), யோகானந்தசுந்தரம் (Marine officer), டாக்டர் ஜெகானந்தசுந்தரம், மாலினி (கனடா), ஜெயந்தினி (கனடா), நளாயினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராதேவி (ஹ‌ஒணுப்பிட்டி) பாமினி (லண்டன்), சுஜாத்தா (கொட்டாவ), இனோக்கா (ஹ‌ஒணுப்பிட்டி) தேவபாலன் (கனடா), தேவேந்திரன் (கனடா), லோகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்க ளான திரிபுரசுந்தரி, சிவானந்தசுந்தரம், கமலசுந்தரி அழகானந்தசுந்தரி மற்றும் தெய்வசுந்தரி, முத்துசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோகுலானந்த சுந்தரம், வைஷாலி, ஆர்த்தி, அருஷாண் சுந்தரம், ஷமல்க்க, கவிதா, அபிநயா, கௌசிகன், சகுந்தலன், மதுரா, நிஷாயினி, ஹரி, சர்கரன் ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்றவர்களான தில்லைநாயகி அருளையா, செல்வநாயகி, சாம்பசிவம் மற்றும் நடேசன் சிவகாமசுந்தரி, பஞ்சலிங்கம், நடேசன், முருகமூர்த்தி, மயிலேறும் பெருமாள், தவமணி தேவி வரதராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குகானந்தசுந்தரம் (அப்பர்) 071 789 6569
யோகானந்தசுந்தரம் (குஞ்சு) 077 787 7762
ஜெகானந்தசுந்தரம் (வண்ணம்) 077 343 6703

(சி/12760) (10,14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகங்களில் சிறுவர் பிரிவை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

சிறுவர் நூலகங்களில் சிறுவர்களுக்கான பிரிவை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிறுவர்கள் மத்தியில் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதுடன், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக அந்தச் சபையின் தலைவர் பேராசிரியர் சோமரத்ன பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக நூலகங்களில் சிறுவர் பிரிவுகளை சிறந்த முறையில் நிர்வகிப்பது தொடர்பாக நூலகர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான செயலமர்வுகள் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 24ஆம், 25 ஆம் திகதிகளில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கமைய நூலகங்களை தரப்படுத்தல், தரமுயர்த்தல், நூலக ஆளணிகளை நிர்ணயம் செய்தல், நூலகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நூலக முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளும் சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


**காணி விற்பனைக்கு**

34/1, மின்சார நிலைய வீதி, சுன்னாகம். (சமுர்த்தி வங்கி அருகில்) நி.ப. 02, குழி 4.18 காணி விற்பனைக்கு உண்டு.
0779494599- 0786229340

**ஓகன் விற்பனைக்கு C**

KORK TRITON ஓகன், INDIAN BOX கிற்றார், கிற்றார் ரியூனர், YAMAHA P.S.R. 700 ஓகன் என்பன விற்பனைக்குண்டு.'
0776980573

**வேலையாள்கள் தேவை**

எமது மின் ஒட்டுத் தொழிலகத்துக்கு கேற் கிறில், சுருக்குக் கேற், சில்வர் பிற்றிங் வேலைகள் தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.
நிமல் வெல்டிங் சொப்
ஏ-9 வீதி, ஐயா கடையடி, சாவகச்சேரி.
0772792811 - 021 490 3188

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான வாகன, மோட்டார் சைக்கிள் உடைந்த பிளாஸ்ரிக்கும் உத்தரவாதத்துடன் ஒட்டித் தரப்படும்.
தொடர்பு: 021 222 8680, 077 592 5088
Prop. T.தவராசா
டயானா பிளாஸ்ரிக், இல.6, சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**விஜயதசமி ஓகன் வகுப்பு**

புதிய ஓகன் இசை வகுப்புக்கள் விஜயதசமி (திங்கள்) மாலை 4 மணியிலிருந்து 6 மணிவரை அனுமதியை பெற்றுக் கொண்டு கலந்து கொள்ளவும்.
ஆசிரியர்- ஸ்ரீகுகன்
0776980573

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

**வங்கியில் பணவைப்பு**

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு
**Saving Book - FD - Statement**
For: Student | Business | Migration | PR | Visit Family | Dependant | Refused | Visas
**077 4789289**
விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்
No.52, Davidson Road, Colombo -04.
நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துவிட்டு வரவும்.

**வாகனம் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள 53xxxx தொடரிலக்கமுடைய Hiace வாகனம், 1988 Model, A/C, 2L எஞ்சின், வெள்ளை நிறம் 3வது Owner விற்பனைக்குண்டு.
0771317347

**வீடு, வளவு விற்பனைக்கு**

வடமராட்சி போதரமடம் துன்னாலை வடக்கு கரவெட்டி. இறையில் "முத்தானவயல்" நெற்பரப்பு 3, குழி 1.5 விஸ்தீரணமுடைய வீடு, வளவு கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
0776176887

**U.S.A., U.K. Wedding Service (அரச பதிவுகளுக்கு உட்பட்டது) VE/ND/33 (சர்வதேசம்)**

உள்நாட்டு, வெளிநாட்டு PR உள்ள PR இல்லாத மணமக்களை உங்கள் விருப்பப்படியும், சாஸ்திர கணிப்பின் படியும் நேரில் அல்லது எமது e-mail மூலமும் U.S.A U.K wedding@gmail.com பதிவு செய்யலாம். அரச, அரசசார்பற்ற, சாதாரணமான சகல இன, மத, சமூகத்தினரும் எம்மிடம் தொடர்பு கொள்ளலாம்.
International Head office London - 00447965028396
SriLanka Mobile Service - 0771479416

**காணி விற்பனைக்கு**

காரைநகர், ஆலடியில் நல்ல சூழ்நிலையுடன், பல வகையான பிரயோசனங்களுடன் 9 பரப்புக் காணியில் சகல வசதிகளுமுள்ள 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0777 884913

**மலேசியாவில் வீட்டுப் பணிப்பெண்களுக்கான வெற்றிடம்**

கட்டணம் அறவிடப்படாத வேலை வாய்ப்பு அரியதொரு சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்!
அளவு - 50 சம்பளம் 850 RM (1RM = ரூபா 41/=) + மேலதிக நேரக் கொடுப்பனவு

சேவை ஒப்பந்தம்
- சேவைக் காலம் 2 வருடம்
- உணவு, தங்குமிடம், வைத்திய வசதி மற்றும் போவதற்கும், வருவதற்குமான விமான டிக்கட்
- மற்றைய சட்ட திட்டங்கள் மலேசிய தொழிலாளர் சட்ட திட்டத்துக்கு அமைவானதாகும்.

தயங்காமல் உடனடியாக அழைக்கவும்
ஜான்சி என்ரபிரைஸஸ்
இல. 13 1/1, ஹட்சன் வீதி, கொள்ளுப்பிட்டி, (கொழும்பு - 03)
075 553 7752/077 902 4046/011 233 3236
L.L.No: 2799

**இசை வகுப்புக்கள் ஆரம்பம்**

ஓர்கன், வயலின், ஹார்மோனியம் வாய்ப்பாட்டு, மெலோடிக்கா.
இல.30, கிருஸ்ணபிள்ளை ஒழுங்கை, ஈச்சமோட்டை,
ஆரம்பம்: 14.10.2013 - பிற்பகல் 4 மணி

**வீடு வாடகைக்குண்டு**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 731 1683, 077 602 8670

**ஊர் கெப்சின் கோல் ரக்சி (CALL TAXI)**

ஊர் கெப்சின் கோல் ரக்சி (Call Taxi)
1 கி.மீற்றருக்கு 50/= வீதம் நீங்கள் விரும்பிய இடத் திற்கு குளிரூட்டப்பட்ட வாகனத்தில் சொகுசாக பயணிக்கலாம். அழையுங்கள். 021 567 7567/077 676 2929 அழைத்த 10 நிமிடங்களில் உங்கள் வீடு தேடி வரும் நண்பன்.
அத்துடன்
முச்சக்கரவண்டிகளுக்கான மீற்றர் விசேட விலையில் (RS.7500/=) பொருத்தித் தரப்படும்.
தொடர்பு: 021 567 7567, 077 676 2929
OOR CABS SERVICE
(32689) (3.6.4) 320, MAIN STREET, JAFFNA.

**க.பொ.த (சா/த) இல் விசேட சித்தி பெற துடிக்கும் மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி!**

உங்கள் பரீட்சை வெற்றிக்கு உறுதுணையாக -நேரடியாக வழிகாட்டும் மாதிரி வினாத்தாள்களைத் தாங்கிய பரீட்சைக் கையேடான "வெற்றிப்படி"யின் இதுவரை வெளிவந்த 1 தொடக்கம் 16 வரையான கையேடுகளை வீட்டில் இருந்தே, மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளஓர் அரிய வாய்ப்பு.

குறிப்பு:
1. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வினைத் திறன் மிக்க ஆசிரியர்களின் வேறுபட்ட சிந்தனைகளினால் உருவான சகல பாடங்களுக்குமான பல வினாத்தாள் தொகுப்பை இக் கையேட்டில் மட்டுமே பயிற்சி செய்யமுடியும்.
2. கடினமான சில கற்றல் பகுதிகளை இலகுவில் விளங்க - ஞாபகப்படுத்தி கொள்ள வழிக்காட்டும் ஒரே கையேடு இதுவே.
3. 1-16 வரையில் வந்த வெளியீடுகளைத் தனித்தனியே பெறத் தவறியவர்கள் இதனை ஒரு தொகுதியாக எடுத்துக் கற்கும் போது மிக விரைவாக எதிர்பார்க்கை வினாத்தாள்களைப் பயிற்சி செய்யமுடியும்.
4. இக்கையேட்டின் முகப்புப் பக்கமானது கற்கத் தூண்டும் நுட்பங்கள், வெற்றிபெற்றவர்களின்அனுபவ பகிர்வு என்பவற்றைத் தாங்கி வெளிவருகின்றது.
5. 480/= பெறுமதியான 16 கையேட்டையும் இச் செயற்திட்டத்தின் ஊடாக 300/= க்குப் பெற்றுக் கொள்ள முடியும். அஞ்சல் கட்டணமாக 50/= அறவிடப்படும்.
6. விரும்பும் மாணவர்கள், இப் பணத்தை (350/=) Land mark Enterprises - என்ற பெயருடைய 126-1-001-0-3452799 என்ற கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கி கிளையில் வைப்பிட்டு வைப்புத் துண்டையும் உங்கள் பெயர், தொலைபேசி இல., முகவரியையும் குறிப்பிட்டு கணக்காளர், 85,ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கிராண்ட்பாஸ் கொழும்பு -14 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் உங்கள் வீட்டிற்கு ஒரு வாரத்திற்குள் இக்கையேட்டுத் தொகுதி வந்து சேரும்.
7. உங்கள் தபாலில் இடது பக்க மேல் மூலையில் " வெற்றிப்படி வினாத்தாள் தொகுதி " என எழுதி அனுப்ப மறக்காதீர்கள்.

இச் சலுகை 30/10/2013 வரை மட்டுமே.
உங்கள் பரீட்சை வெற்றிக்கான உங்கள் கையேட்டுத் தொகுதியை பெற இன்றே மேற்படி முகவரிக்கு அஞ்சலிடுங்கள்.
8. நேரடியாக பெற்றுக் கொள்ள விரும்பும் யாழ் மாணவர்கள். யாழ் உதயன் அலுவலகத்திலும் வன்னி மாவட்ட மாணவர்கள் கிளிநொச்சி உதயன் அலுவலகத்திலும் 300/= க்கு பெற்றுக் கொள்ளலாம்.



மேலதிக தொடர்புகளுக்கு
0714273035 / 0718400624

**BANK BALANCE** (3 Months valid) (6 Months valid) (9 Months valid)
**STUDENT BANK LOAN**
**Tourist-Visit-Student VISAS**
**UK- USA- CANADA**
**AUSTRALIA- EUROPE**
**City Air Travels**
**Registered Company**
163/7, Galle Road, Wellawatte, Colombo-06.
(opposite HNB Bank)
Tel: 0114 282 747 Hot Line- 0771615010

**கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரரின் தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

புதிய வரவுகள்...
- சல்வார் - 1200/- தொடக்கம்
- கொட்டன் சாறி - 450/- தொடக்கம்
- ஆண்களுக்கான சேட் - 390/- தொடக்கம்
- பெண்களுக்கான ரொப் - 400/- தொடக்கம்

இன்னும் பலவிதமான ஆடைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள...
114, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(32693-23-14) 0212219393


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவித வேறுபாடுகளுமின்றி பிள்ளைகளைப் பாராட்ட வேண்டும்

## பந்துல குணவர்தன கோரிக்கை



பிள்ளைகளை சித்தியடைந்தவர்கள். சித்தியடையாதவர்கள் என வகைப்படுத்தி மகிழ்ச்சியடையாது அவர்களைப் பாராட்ட வேண்டும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.
யுனேஸ்கோ அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓவியப் போட்டியில் வெற்றியீட்டிய இலங்கை மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதற்காக இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் தொபிஹினோ ஹோபோவும் கலந்து கொண்டிருந்தார்.
அவர் மெலும் கருத்துத் தெரிவிக்கையில்;
கடந்த காலப் பகுதியில் புலமைப்பரிசில் பரீட்சையில் இலங்கையிலுள்ள 70 வீத மாணவர்கள் சித்தி பெற்றனர். சிலர் இவர்களை சித்தியடையாதவர்கள் என வகைப்படுத்துமாறு கூறினார்கள். வெட்டுப்புள்ளி இல்லாத மாண வர்கள் சித்தியடையாதவர்கள் என பெற்றோரும் ஏற்றுக் கொண்டனர். அதனால் தாயொருவர் 120 புள்ளிகளைப் பெற்ற பிள்ளையை வீட்டில் இருந்து வெளியேற்றினார். மற்றுமொரு தந்தை இரும்புக் கம்பியொன்றை சூடாக்கி பிள்ளையின் முகத்தில் மற்றும் காலில் வைத்துள்ளார். பரீட்சையில் 70 வீதமானவர்கள் சித்தியடைந்துள்ள இந்த நாட்டில். அவர்கள் சித்தியடையவில்லை என வகைப்படுத்தி. பிள்ளைகள் வேதனைப்படுவதை பார்த்து மகிழ்ச்சியடையும் சிலர் இந்த நாட்டிலுள்ளனர். அதனால் இவ்வாறான தொரு நிலையின் கீழ் பிள்ளைகளை பாராட்ட வேண்டும். எமது நாட்டிலுள்ள அனைத்து மாணவர்களும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே.-என்றார்.

# மட்டக்களப்பில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் கருத்தரிப்பு அதிகரிப்பு

இலங்கையில் 18 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளைகள் கர்ப்பம் தரிக்கும் வீதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வருவதாக ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.
இது நாட்டின் அபிவிருத்தியின் போது சுகாதாரம் மிக்க பிரஜைகளை உருவாக்குவதில் எதிர்கால பரம்பரைக்கு சவாலாக அமையும் என அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.
குடும்ப சுகாதார வாரியமும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சும் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டிருந்தன.
தேசிய ரீதியாக 18 வயதுக்கும் குறைவான பெண் பிள்ளைகளின் கர்ப்பம் தரித்தல் 6.5 வீதம் என கூறப்பட்டுள்ளது.
ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 11.2 வீதம் என அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 வயதுக்கும் குறைவான பெண்களின் கர்ப்பம் தரித்தல் வீதம் அதிகரிப்புக்கு பல காரணங்கள் இருந்தாலும் இள வயது திருமணமே பிரதான காரணம் என்று மாவட்ட தாய் சேய் நல மருத்துவ அதி காரி டாக்டர் இ. சிறிநாத் கூறினார்.
கல்வியிலும் பொருளாதாரத்திலும் காணப்படும் பின்னடைவே இதற்கு காரணமாக அமைகின்றது என்றும் அவர் தெரிவிக்கின்றார்.
மாவட்டத்தின் தற்போதைய எண்ணிக் கையை போர்க் காலத்துடன் ஒப்பிடும் போது தற்போதுள்ள வீதம் குறைவாகவே கருத முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

> குடும்ப சுகாதார வாரியமும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சும் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டிருந்தன.

# சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு செல்லவிருந்த எட்டுப் பேர் கைது

சட்டவிரோதமாக வெளிநாடுகளில் தொழிலுக்கு செல்லவிருந்த எட்டுப் பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
தொழில் அனுமதிப்பத்திரம் அல்லது சேவை ஒப்பந்தம் இல்லாமையால் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொதுமுகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.
செல்லுபடியாகும் தொழில் விசா மற்றும் தொழில் உடன் படிக்கை இல்லாமல் வெளிநாடுகளில் தொழிலுக்கு செல்ல வேண்டாம் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
இந்த ஆவணங்கள் இல்லாமல் வெளிநாடுகளில் தொழிலுக்கு செல்ல முயற்சிப்பவர்கள் கட்டாயமாக விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு. விசாரணை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார் கள் என பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.
இத்தகைய நபர்களை தடுப்பதற்காக நேற்றுமுன்தினம் முதல் விசேட திட்ட மொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

# அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த தீர்மானம்

நாட்டில் உற்பத்தி மற்றும் சேவை நிறு வனங்களில் அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அரச கரும மொழிகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
இதன் கீழ் வணிக சபை உட்பட உற்பத்தித் துறை சங்கங்களை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக குறிப்பிட்டார்.
அனைத்து உற்பத்திப் பொருட்களிலும் அவை தொடர்பிலான தகவல்களை அரச மொழிக் கொள்கைக்கமைய பிரசுரிக்கச் செய்வதே இந்த திட்டத்தின் நோக்கம் என அவர் தெரிவித்தார்.
இது தொடர்பாக ஆணைக்குழுவின் தலை வர் கருத்துத் தெரிவிக்கையில்:-
எதிர்வரும் நவம்பர் முதல் வாரமளவில் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவும். மும் மொழிக் கொள்கைக்கான ஜனாதிபதி செயலணியும் இணைந்து போதிய விளக்கங்களை அளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது

A New Way For Starting Your Child's Education
LITTLE CHUTTYS' MONTESSORI
A home away from home
புதிய ஆண்டுக்கான அனுமதிகள்
13-10-2013 முதல் ஆரம்பம்
வயது - 3முதல்
Medium of instruction - English & Tamil
Completely managed under the montesson concept along with
Educational videoes
Annual concert
sports meet etc... etc...
Totally different place for your chutty's placement
இன்று (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை வித்தியாரம்ப நிகழ்வு (ஏடு தொடக்கல்) மு.ப. 10 மணி முதல் பாடசாலையில் இடம்பெறும்.
#5, Brodie front lane, Kandy road, Ariyalai.
0718262603
0779208116

பொதுக்கூட்டம்
அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் 27.10.2013 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
ஆலய பரிபாலன சபை
(c 12850.14.17)

நவ மகாஜன சிற்பி
அமரர் அதிபர்
தெ.து.ஜயரத்தினம்
அவர்களின்
நூறாவது பிறந்த தின விழா
15 - 10 - 2013
இடம்:- பாவலர் துரையப்பாபிள்ளை கேட்போர் கூடம்
யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை



கல்விக் கண்காட்சி
நூற்றாண்டு பிறந்த தின விழாவில் கல்விக் கண்காட்சி ஒக்ரோபர் 15, 16, 17 ஆகிய மூன்று தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.
தற்கால நவீன விஞ்ஞான தொழில்நுட்ப கணித அறிவை மையப்படுத்தி கண்காட்சி காட்சிப்படுத்தப்படவுள்ளது. அத்துடன் சமயம், மொழி, கலை, கலாசார, சமூகவியல், மனையியல் துறைகளில் தற்காலத்தில் பின்பற்ற வேண்டிய விடயங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளது. தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையுள்ள பாடத்திட்ட விடயமும் மகிழ்ச்சியாக வாழக் கற்றல் விடயமும் கண்காட்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதலால் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெரிதும் பயன்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(சி12847-23-14)
நூறாவது பிறந்த தின விழாச்சபையினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

மீண்டும்
மெகா சேல்
தீபாவளிப் பண்டிகையை
முன்னிட்டு
பெண்களுக்கான புதியவகை ஆடைகள், சாறி, சல்வார் என்பன அதிரடி மலிவு விலையில்.
எமது வாடிக்கையாளர்களுக்கு மீண்டும் ஒரு அரியசந்தர்ப்பம்
15.10.2013 முதல்
01.11.2013 வரை
இல. 281, மணிக்கூட்டு வீதி,
(ஞானம்ஸ் ஹொட்டல் அருகில்)
யாழ்ப்பாணம்.
(c12851.14.17)



வீடு வாடகைக்குண்டு
யாழ் நகரில் வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு:-077 5573677

DINESH CONTRACTOR
தினேஸ் ஒப்பந்தகாரர்
Tiles & Granites works, Painting Intro lego, Super Finishing, Nosing work.
மாபிள்கள், கிரனைற் வேலைகள், வர்ணம் தீட்டல் திறம்பட செய்து கொடுக்கப்படும்.
0773623645 - 0778701200

மருந்து விற்பனையாளர் தேவை
யாழ். நகரை அண்டிய மருந்தகத்துக்கு மருந்து விற்பனையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. சம்பளத்துடன் விற்பனைக்கு ஏற்ற ஊக்குவிப்புத்தொகையும் வழங்கப்படும்.
தொடர்பு:- 075 8370524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போரில் மக்கள் பாதுகாப்பு திட்டத்தை நிராகரித்தது இலங்கை

## ஐ.நா. பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.13

இறுதிக்கட்ட போரின் போது, பொதுமக்கள் பாதுகாப்பு குறித்து ஐ.நா. முன்வைத்த யோசனைகளை இலங்கை அரசு முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

இன்னர் சிற்றி பிரஸ் ஊடகத்திற்கு அளித்த செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




" இறுதிக் கட்டப் போர் இடம் பெற்ற காலத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்களை அறிமுகம் செய்வது குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது. எனினும், இலங்கை அரசு அந்த யோசனையை முழுமையாக நடைமுறைப் படுத்தவில்லை.

பொதுமக்களின் பாது காப்பை உறுதிப் படுத்த வேண்டும் என்ற முனைப்பில் ஐ.நா. செயற்பட்டு வந்தது. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வலயங்களை அறிவிக்குமாறு வலியுறுத்தினோம்.

போரை நிறுத்துமாறும், பாதுகாப்பு வலயங்களை உருவாக்குமாறும் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை இலங்கை அரசு உரியமுறையில் நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளது." என்றும் ஐ.நா. செயலாளரின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# ரணில்- சஜித்- கரு இவ்வாரம் சந்திப்பு



கொழும்பு, ஒக். 13

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான தலைமைத்துவ சபையை உருவாக்கவும், கட்சி உட்பூசல்களுக்குத் தீர்வு காண்பதற்கும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதித் தலைவர்களான கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாஸ ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான முக்கிய சந்திப்பொன்று கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் இவ்வாரம் இடம்பெறவுள்ளது.

மேற்படி மூவருக்குமிடையிலான சந்திப்பை வெகுவிரைவில் நடத்துவதற்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர் என அறிய முடிகின்றது.

தங்களுக்கிடையில் இடம்பெறும் கருத்து முரண்பாடுகள் தொடர்பில் மேற்படி மூவரும் இந்தச் சந்திப்பின்போது விரிவாக கலந்துரையாடவுள்ளனர். அத்துடன், அவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

மேலும், 7பேர் கொண்ட தலைமைத்துவ சபையை உருவாக்குவது குறித்தும், அதில் அங்கத்துவம் வகிக்கப் பொருத்தமானவர்கள் யாவர் என்பது குறித்தும் இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடவுள்ளனர். பிரதிநிதிகளின் பெயர் களையும் பரிந்துரைப்பர் என ஐ.தே.க. தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும், கடந்த வாரம் இடம்பெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இது குறித்து ஆராயப்பட்டபோது சந்திப்புக்கான திகதி தீர்மானிக்கப்படவில்லை. இருப்பினும் இவ் வாரத்தில் சந்திப்பை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

அதேவேளை சரிவுப் பாதையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் ஐ.தே.கவைக் கட்டியெழுப்பவேண்டிய கட்சித் தலைவரும், கரு, சஜித் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்திப்பை வெகுவிரைவில் நடத்தாமை குறித்து கட்சி உறுப்பினர்கள் அதிருப்திடைந்துள்ளனர். இதனால் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சந்திப்பை வெகுவிரைவில் நடத்துவதற்கான காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

# திகா., பிரபா, ராதா, அருந்திக்க, சொய்ஸா, சுதர்ஷினி ஆகியோருக்கும் பிரதியமைச்சு

கொழும்பு, ஒக். 13

பாரியதோர் அமைச்சர்கள் பட்டாளத்தைக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மேலும் சில எம்.பிக்களுக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி பிரதியமைச்சுப் பதவிகளை வழங்கவுள்ளது.

இந்த நியமனத்தின்போது, தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் திகாம்பரம் .. ஜனநாய மக்கள் கர்ங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன் .. மலையக மக்கள் முன் னணியின் தலைவர் இராதா கிருஷ்ணன் ஆகியோருக்கான பதவிகள் உறுதி யாகியுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கு பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என முன்கூட்டியே தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் அந்தத் தொகை தற்போது மூன்றாக உயர்ந்துள்ளது. தமது கட்சி உறுப்பினர்கள் மூவருக்கு பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என மு.கா. தலைவர் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே அரச தலைமை இந்த முடிவை எடுத்துள்ளது என தெரியவருகின்றது.

கிழக்கு மாகாண சபையின் ஆட்சி உள்ளிட்ட முக்கிய சில காரணங்களைக் கருத்திற் கொண்டே அரச உயர்பீடம் மு.கா. தலைமையின் கோரிக்கைக்கு பச்சைக்கொடி காட்டியுள்ளது .

வெளிநாடு சென்றுள்ள மு.கா. தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் 16 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். எனவே, 17 ஆம் திகதி புதிய பிரதியமைச்சு நியமனங்கள் வழங்கப்படலாம் என உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், 16 ஆம் திகதி முஸ்லிம் பெருநாள் என்பதாலும் 18 ஆம் திகதி போயாதினம் என்பதாலும் சிலவேளை, புதிய நியமனங்கள் வழங்கும் திகதி ஒக்டோபர் நான்காம் வாரத்துக்கு மாற்றப்படலாம் என்றும் அரச தரப்பில் பேசப்படுகின்றது.

அதேவேளை, உத்தேச பிரதியமைச்சுப் பட்டியலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஸா, புத்தளம் மாவட்ட அருந்திக்க பெர்ணான்டோ, சுதர்ஷின் பெர்ணான்டோ புள்ளே ஆகியோரின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன என அறியமுடிகின்றது. எனினும், இது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியாக வில்லை.

கடந்த வியாழக்கிழமை ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இதன் இரண்டாம் கட்டமாகவே அடுத்த வாரம் மேலும் சிலருக்கு பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப் படவுள்ளன.

# இறுதிப்போரில் ஐ.நாவின் தோல்வி உள்ளக அறிக்கை நேற்று வெளியீடு

## ஆறு பரிந்துரைகளும் முன்வைப்பு

கொழும்பு, ஒக். 13

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போது ஐ.நா.வின் செயற்பாடுகள் தோல்வியுற்றது குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் உள்ளக விசாரணை அறிக்கையின் தொடர் அறிக்கை நேற்று வெளியாகியுள்ளது.

இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கான பொறிமுறையை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ- மூன் மேற்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அமைப்பு தன்னை வலுப்படுத்திக் கொள்வதற்கு முன்னெடுக்கவேண்டிய ஆறுபரிந்துரைகள் இந்த அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளன. அவையாவன.

1: ஐக்கிய நாடுகளின் அனைத்து அதிகாரிகளின் சாதாரண வாழ்க்கை வட்டத்தில் மனித உரிமைகளும் உள்ளடக்கப்பட வேண்டும்.

2: 99 ஆம் இயல்பு சரத்து ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில், ஐக்கிய நாடுகளின் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பொறுப்புக்களை முறையாக மேற்கொள்ள வலியுறுத்தல்.

3: மக்கள் நெருக்கடியான நிலையை எதிர்கொள்ளும் போது, ஐக்கிய நாடுகள் சபை அரசியல், மனித உரிமைகள், மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி இயலுமைகளை உறுதியான நிலையில் அதிகரித்துக் கொள்வதற்கான வேலைத் திட்டம்ஒன்றைகொண்டிருத்தல்.

4: ஐக்கிய நாடுகளின் தலைமையகத்துக்கும், உறுப்பு நாடுகள் மற்றும் உறுப்பு நாடுகளில் தொழிற்படும் ஐக்கிய நாடுகள் சபையின் குழுக்களுக்கும் இடையில் அடிமட்டத்தில் இருந்து சிறந்த அணுகுமுறையை ஏற்படுத்திக் கொள்வதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்படல். இதன் மூலம் அனர்த்த நிலைமைகளை முன்கூட்டியே சமாளிக்க முடியும்.

5: அதிக மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்ற பகுதிகளில், அவற்றைத் தடுத்து அப்பகுதிகளைப் பாதுகாப்பதற்கான முன்னெடுப்பில் துரித முன்னேற்றத்தை காண் பதற்கான வேலைத்திட்டம். இதற்கு அதிக செயற்பாட்டு இயலுமை அவசியப்படுவதுடன், மனித உரிமைகள் ஆணையகத்தின் ஒத்துழைப்பும் அவசியப்படுகிறது.

6: உண்மையான தகவல்களை மிக விரைவாக பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்தல். இதன் மூலம் முன்கூட்டியே எச்சரிக்கைகளை வழங்குவதுடன், ஐக்கிய நாடுகளால் முற்கூட்டியே செயற்பாட்டினையும் முன்னெடுக்க முடியும்.

# வன்புணர்வுக்கு உள்ளான சிறுமியை வெளியேற்றிய பாடசாலை நிர்வாகம்

கொழும்பு, ஒக்.13

மாத்தறை மாவட்டத்தில் கடந்த ஆண்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளான சிறுமி பாதுகாப்புக் காரணங்களுக்காக சேர்க்கப்பட்ட வெளிமாவட்ட பாடசாலையிலிருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளார்.

பாடசாலை நிர்வாகத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாகவே இந்த முடிவினை எடுக்கத் தாம் தள்ளப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் கூறியுள்ளார்.

தற்போது 15 வயதாகும் இந்தச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில், ஆளும் அரச தரப்பின் உள்ளூராட்சி மன்றத் தலைவர் மீது வழக்கு விசாரணை நடந்து வருகின்றது.

குறித்த உள்ளூராட்சி மன்றத் தலைவர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தென்னிலங்கையில் மாத்தறை. அக்கு ரஸ்ஸ பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமியின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு குடும்பத்தினர் அவரை வெளிமாவட்டப் பாடசாலை ஒன்றில் சேர்த்தனர்.

ஆனால், தற்போது அந்தச் சிறுமியை பாடசாலையிலிருந்து வெளியேற்றியுள்ள பாடசாலை அதிபர் தமக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத் தல்கள் வருவதாகக் கூறியுள்ளார்.

அதனால் மற்றப் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

அதனால் பாடசாலை படிப்பு பாதிக்கப்பட்டுள்ள சிறுமியின் பெற்றோர் நாட்டின் உச்ச நீதிமன்றத்திடம் நீதிகேட்டு வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மீண்டும் அதே பாடசாலையில் சேர்த் துக்கொள்ள வேண்டும் அல் லது பதிலுக்கு வேறு பாடசாலையிடம் வழங்கப்பட வேண்டும் என்றும் நட்ட ஈடும் வேண்டும் என்றும் வழக்கில் பெற்றோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அரசியலின் பிடியில் சிக்கி அப்பாவிகளான தாம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக சிறுமியின் தந்தை தெரிவித்தார்.

இலங்கையில் கடந்த ஆண்டில் மட்டும் சிறார்களுக்கு எதிராக சுமார் 3500 பாலியல் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன என நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால், மிகச் சொற்பமானவர்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளுக்கு எதிராகவே பெரும் பாலான பாலியல் வல்லுறவு மற்றும் வன் முறைக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

அவர்களில் குறைந்தது இரண்டு உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மீது வழக்கு விசாரணை நடந்துவருகிறது.

இந்தச் செய்திகளை வெளியிட முயன்ற ஊடகவியலாளர்கள் சிலர் அச்சுறுத்தல் காரணமாக சொந்த இருப்பிடங்களை விட்டே வெளியேற நேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கொழும்புத்துறை

எதிர் எதிரே மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதிக் கொண்டதில் இந்த விபத்து ஏற் பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு வந்த யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-17)

### சீறியது

11 இயந்திரங்களும் சேதமடைந்துள்ளன. இவற்றின் மொத்தப் பெறுமதி 50 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள் ளது.

இந்தப் கடல் சீற்றத்துக்கும் தமிழ் நாட்டின் கரையோரத்தை தாக்கிய பைலின் புயலுக்கும் எந்தவித தொடர்புமில்லை என்று இடர்முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. அத்துடன் இது பருவகால மாற்றத்தினால் ஏற்பட்ட உயரலை (High Tide Waves)என்றும் அது கூறியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மக்களுடன் கலந்துரையாடினார். (து-5)

### போராளிகளின்

இன்று லட்சோபலட்சம் போராளிகளும் மக்களும் மடிந்த பின்னர்தான் கண்டுகொண் [illegible]

[illegible] மேடைக்கு மேடை முழங்கிய இராஜதந்திரப் போராட்டத்தின் காரணகர்த்தாக்கள் அவர்களே.

தேர்தலின் போது பிரபாகரன் மாவீரன் என்று சொன்னவர்கள் இன்று தமது தேர்தல் பேச்சுக்கும் தற்போதைய பேச்சுக்கும் இடையே இடைவெளியை தோற்றுவித்துள்ளனர் - என்றார். (து-5)

### 25 இல் வடக்கு

[illegible]. வடக்கு [illegible] அமர்வுகளைக் கைதடியிலுள்ள மாகாண சபை கட்டடத் திலேயே நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் எதிர்வரும் 17 ஆம் திகதியளவில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன் பின்னர் 25 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு அங்கு இடம் பெறவுள்ளது. முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலேயே இந்தக் கன்னி அமர்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-5)

### நவம்பர்

தால் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனஎன ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. ரயில் கட்டண குளறுபடிகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் கட்டண அதிகரிப்பு மேற் கொள்ளப்படவுள்ளது. அத்துடன், கட்டண அதிகரிப்பை அமுல்படுத்துவதற்கான திகதி இது வரை தீர்மானிக்கப்பட வில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13/10/2013

# மைலோ வர்ண விருது அருணோதய வீரர்களுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.13
2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர்களுக்கான மைலோ வர்ண விருதுக்கு அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.



பா.லவணன்

நெஸ்ட்லே லங்கா லிமிட்டட் நிறுவனத்தின் அனுசரணையுடன் கல்வி அமைச்சும் இலங்கைப் பாடசாலைகள் விளையாட்டுத்துறைப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த 20 ஆவது மைலோ பாடசாலைகள் வர்ண விருது விழா கடந்த மாதம் 27 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றது.
வடமாகாணத்தின் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த அ.பவித்திரா (கோலூன்றிப் பாய்தல்), பா.லவணன் (கோலூன்றிப் பாய்தல்), யாழ். இந்துக் கல் லூரியைச் சேர்ந்த ஆர்.செந்தூரன் (உயரம் பாய்தல்) உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.நிமலேந்திரா (குண்டு எறிதல்) ஆகிய நால்வரே மைலோ வர்ண விருதுகளை வென்ற யாழ். மாணவர்களாவர்.
அ.பவித்திரா, பா.லவணன் ஆகிய இருவரும் கடந்த வருடம் சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ஆசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றியமைக்காக இந்த மைலோ வர்ண விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.




அ. பவித்திரா

இவர்கள் இருவரும் அகில இலங்கைப் பாடசாலைகள் விளையாட்டு, கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட சேர் ஜோன்டார்பட் மெய்வன்மைப் போட்டிகள் மற்றும் கனிஷ்ட தேசிய மெய்வன்மைப் போட்டிகள் ஆகியவற்றில் பங்கேற்று பதக்கங்களை வென்று சாதனை படைத்தவர்கள் ஆவர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஊரெழுறோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் மோதும். (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.13
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட் டித் தொடரில் இன்று ஞாயிற் றுக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வரு மாறு:
**பி.ப. 3.30 மணி**
ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் நவசக்தி விளையாட்டுக்கழகம்.
**மாலை 4.30 மணி**
கருணாகரன் விளையாட்டுக் கழகம் எதிர் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம். (த-23)

## யுத், விண்மீன் அணிகள் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம்.ஒக்.13
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் நட்சத்திர அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகம், விண்மீன் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.
உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணிக்கும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
திருக்குமரன் விளையாட்டுக் கழக அணிக்கும் விண்மீன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வென்றது நீக்கிலஸ்

யாழ்ப்பாணம்.ஒக்.13
யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப் படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.



நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## பற்றிக்ஸ், யாழ். மத்தி அணிகளுக்கு கிண்ணம்

யாழ்ப்பாணம். ஒக்.13
யாழ் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயது, 16 வயது பிரிவு அணிகளுக்கான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.
இதில் 14 வயதுப் பிரிவு அணிக்கான இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், 16 வயதுப் பிரிவு அணிக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியும் வெற்றி பெற்று சம்பியனானது.
14 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இரு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
ஆட்டம் வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது.
இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலய அணியை எதிர்த்து குருநகர் சென். ஜேம்ஸ் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

*குருநகர் சென். ஜேம்ஸ் வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.*

குருநகர் சென்.ஜேம்ஸ் வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.
16 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலய அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் யாழ். மத்திய கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் குருநகர் சென்.ஜேம்ஸ் வித்தியாலய அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.



குருநகர் சென். ஜேம்ஸ் வித்தியாலய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)

## கராத்தே போட்டிக்கு ஜப்பான் பயணம்

யாழ்ப்பாணம், ஒக்.13
யுனிவேர்சல் சோட்டோக்கான் கராத்தே யூனியன் ஜப்பான் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள 15 ஆவது சர்வதேச கராத்தே சுற்றுப் போட்டி மற்றும் பயிற்சி செயலமர்வுகளில் கலந்துகொள்ள கராத்தே பிரதம பயிற்றுநரான சென் செய். அன்ரோடினேஸ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜப்பான் பயணமாகியுள்ளார். அன்ரோடினேஸ் இந்தியா, மலேசியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் கராத்தே சுற்றுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-23)

## மன்னாருக்கு வெள்ளிப் பதக்கம்



யாழ்ப்பாணம், ஒக்.13
கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டத் தடகளப் போட்டியில் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் வவுனியா நானாட்டான் மகாவித்தியாலய மாணவன் அன்ரூ டிலக்சன் 1.98 மீற்றர் தூரத்தை தாண்டி இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை பெற்றுள்ளார். (த-23)

## பூப்பந்தாட்ட பயிற்றுநர் வவுனியாவில் நியமனம்



வவுனியா, ஒக்.13
வவுனியா மாவட்டப் பூப்பந்தாட்ட பயிற்றுநராகத் தவராசா கமலன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
இவருக்கான நியமனக் கடிதம் கடந்த வாரம் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாண விளையாட்டு உத்தியோத்தர்களுக்கான கலந்துரையாடலின் போது வழங்கப்பட்டது.
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் நியமனக் கடிதத்தை வழங்கினார். (த-23)

## மானிப்பாய் இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 13
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜனன் சிற்பி தெ.து.ஜெயரத்தினத்தின் 100 ஆவது ஆண்டை நினைவு கூரும் முகமாகப் பாடசாலைகளுக்கு இடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது
நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஊர் காவற்துறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

*இதில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.*



மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ் மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது.
இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 3:2என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகக் கிண்ண உதைபந்து: தகுதி பெற்றது பெல்ஜியம்




அடுத்த ஆண்டு பிரேசிலில் நடக்கவுள்ள உலகக் கிண்ண உதைபந்துத் தொடருக்கு பெல்ஜியம் அணி தகுதி பெற்றுள்ளது.

20ஆவது உலகக் கிண்ண உதைபந்துத் தொடர் அடுத்த ஆண்டு ஜூன் 12ஆம் திகதி முதல் ஜூலை 13ஆம் திகதி வரை பிரேசிலில் இடம்பெறவுள்ளது.

மொத்தம் 32 அணிகள் பங்கேற்கவுள்ள இந்தத் தொடருக்கான தகுதி சுற்றுப் போட்டிகள் ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆபிரிக்கா உட்பட 6 பிரிவுகளாக நடக்கின்றன.

ஐரோப்பிய கண்டத்துக்கான தகுதிச் சுற்றில் ஸ்பெயின், ஜேர்மனி உட்பட 53 அணிகள் 9 பிரிவுகளாகப் பங்கேற்கின்றன.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தை பிடிக்கும் அணிகளுடன், சிறந்த இரண்டாவது இடத்தை பிடிக்கும் நான்கு அணிகளை சேர்த்து 13 அணிகள் பிரதான சுற்றுக்கு தகுதி பெறும்.

ஏ பிரிவில் நடந்த லீக் போட்டியில் பெல்ஜியம், குரோஷியா அணிகள் மோதின. அபாரமாக ஆடிய பெல்ஜியம் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பெல்ஜியம் சார்பில் ரோமிலு லுகாகு இரண்டு கோல் அடித்தார்.

இதுவரை விளையாடிய 9 போட்டியில் 8 வெற்றி, ஒரு சமநிலை உட்பட 25 புள்ளிகளுடன் ஏ பிரிவில் இருந்து பிர தான சுற்றுக்கு தகுதி பெற்றது.

இதுவரை இத்தாலி(பி பிரிவு), ஜேர்மனி(சி), நெதர்லாந்து(டி), சுவிட்சர்லாந்து (இ) அணிகள் உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளன. (த)

# இலங்கைக் கிரிக்கெட் சபையின் பதினொருவர் அணிக்கு வெற்றி

இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் உள்ளூர் முக்கோண முதற்தரத் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணி வெற்றி பெற்றுள்ளது. இலங்கை கிரிக்கெட் அபிவிருத்தி அணிக்கெதிரான இப் போட்டியில் இலங்கை கிரிக்கெட் சபைபதினொருவர்அணிஓர்இனிங்ஸ் மற்றும் 108 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பி.சரவணமுத்து (ஓவல்) மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணியின் கௌஷால் சில்வாவின் 125 ஓட்டங்கள், குமார் சங்கக்காரவின் 107 ஓட்டங்கள், பிரசன்ன ஜெயவர்த்தனவின் ஆட்டமிழக்காத 105 ஓட்டங்கள், நுவான் குலசேகரவின் 75 ஓட்டங்கள், மஹேல ஜெயவர்தனவின் 54 ஓட்டங்களின் துணையோடு அவ்வணிசகலவிக்கெட்டுக்களை இழந்து 575 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இலங்கை கிரிக்கெட் அபிவிருத்தி அணி சார்பாக ஷமிண்ட எரங்க 4 விக்கெட்டுக்களையும், மலிந்த புஷ்பகுமார 2 விக்கெட்டுக்களையும்,விஷ்வாபெர்னான்டோ, லஹிரு கமகே, சச்சித்திர சேரசிங்க, ஷெஹான் ஜெயசூரிய ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் அபிவிருத்தி அணி சார்பாக குசால் ஜனித் பெரேரா 142 பந்துகளில் அதிரடியாக 150 ஓட்டங்களைக்குவித்தார். ஷெஹான் ஜெயசூரிய 56 ஓட்டங்களையும், நிரோஷன் டிக்வெல்ல 42 ஓட்டங்களையும் பெற்ற போதிலும், அவ்வணி 299 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணி சார்பாக சச்சித்திர சேனநாயக்க 3 விக்கெட்டுக்களையும், நுவான் குலசேகர, சுரங்க லக்மால், அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், திஸர பெரேரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

'பலோ ஒன்' முறையில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் அபிவிருத்தி அணி, 168 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும்இழந்து ஒரு இனிங்ஸ் மற்றும் 108 ஓட்டங்களால் இப் போட்டியில் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை கிரிக்கெட் அபிவிருத்தி அணி சார்பாக சச்சித்திர சேரசிங்க 62 ஓட்டங்களையும், மலிந்த புஷ்பகுமார 22 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் 20 ஓட்டங்களுக்கு அதிகமாகப் பெற்றுக் கொள்ளவில்லை.

பந்துவீச்சில் இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணி சார்பாக சச்சித்திர சேனநாயக்க 4 விக்கெட்டுக்களையும், திஸர பெரேரா 3 விக்கெட்டுக்களையும், அஜந்த மெண்டிஸ் 2 விக்கெட்டுக்களையும், சுரங்க லக்மால் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (த)




# யுவராஜ்சிங்கின் அர்ப்பணிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 20/20 போட்டியில் தனது அதிரடியான ஆட்டத்தை சச்சினுக்கு அர்ப்பணிப்பதாக யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், நான் அதிரடியாக விளையாடியது மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால் அதே நேரம் சச்சின் ஓய்வு அறிவிப்பு எனக்கு மோசமான நாளாகவும் இருக்கிறது.

இந்த அதிரடியான ஆட்டத்தை சச்சினுக்கும், எனக்காகத் தினமும் பிரார்த்தனை செய்யும் எனது தாய்க்கும் அர்ப்பணிக்கிறேன்.

சச்சின் ஓய்வு பெறுவதைப் பார்க்க விரும்பவில்லை, அவரது கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உடைமாற்றும் அறையிலிருந்து போக விடமாட்டேன்.

அவருடன் பல ஆண்டுகள் விளையாடியது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார். (த)

# தென்னாபிரிக்க அணியில் அம்லா, ஸ்ரெய்ன் தெரிவு

பாகிஸ்தானுக்கு எதிரான 20/20 தொடரில் விளையாட தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா மற்றும் ஸ்ரெய்ன் தெரிவு செய்யப்பட்டனர்.



பாகிஸ்தான்- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான இரண்டு டெஸ்ட், ஐந்து ஒருநாள் மற்றும் இரண்டு சர்வதேச 20/20 போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சில் வருகிற நவம்பர் 13 ஆம்,15 ஆம் திகதிகளில் நடக்கிறது.

இதில் போட்டியிடும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடருக்கான தென்னாபிரிக்க அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் இரண்டு சர்வதேச 20/20 போட்டிகளுக்கான 15 பேர் கொண்ட அணியை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்தது.




இதில் தொடக்க வீரர் ஹசிம் அம்லா, வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த ஜூலை மாதம் இலங்கைக்கு எதிரான தொடரில் விளை யாடிய பெகர்டியன், ரோரி கிளைன் வெல்ட் ஆகியோருக்கு இடம் கிடைக்கவில்லை. இதேபோல சகலதுறை வீரர் கிறிஸ் மோரிசும் தெரிவு செய்யப் படவில்லை அணி விவரம்: டுபிளசி (அணித்தலைவர்), ஹசிம் அம்லா, ஹென்ரி டேவிட்ஸ், குயின்டன் டி காக், டிவில்லியர்ஸ், டுமினி, இம்ரான் தாகிர், ரியான் மெக்லாரன், டேவிட் மில்லர், மோர்னி மோர்கல், பார்னல், பங்கிசோ, ஸ்ரெய்ன், டிசாட்சொபே, டேவிட் வெய்ஸ்.(த)




# யாரும் இணையில்லை

இந்திய கிரிக்கட் அணியின் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு நிகராக உலகில் எந்தவொரு கிரிக்கட் வீரரையும் ஒப்பிட முடியாது என்று பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் சஹிட் அப்ரிடி தெரிவித்துள்ளார். சச்சின் தமது ஒய்வை அறி வித்துள்ள நிலையில் அப்ரிடி இந்த கருத்தை வெளியிட் டுள்ளார்.

தாம் டெண்டுல்கருக்கு எதிராக அதிக கிரிக்கட் போட்டிகளில் விளையாடி இருப்பதாகவும், கிரிக்கட்டைத் தாண்டி சச்சின் ஒரு சிறந்த மனிதர் என்றும் அப்ரிடி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சச்சின் டெண்டுல்கர் கிரிக்கட் நோக்கிய மக்களின் படை எடுப்பை எப்போதும் அதிகரிக்கக் கூடியவர்.

கிரிக்கட்டின் இறுதிக் காலம் வரையில் அவரது பெயர் பேசப்படும் என்றும் அப்ரிடி குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஊடகங்கள் சச்சினுக்கு புகழாரம்

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் 'சுப்பர் ஹீரோ' என்று இங்கிலாந்து ஊடகங்கள் புகழாரம் சூட்டியுள்ளன. தனது 200ஆவது டெஸ்டுடன் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

இதையடுத்து உல கம் முழுவதிலுமிருந்து அவருக்கு பாராட்டுக்கள் குவியத்தொடங்கியுள்ளன. இங்கிலாந்திலுள்ள ஊடகங்கள் சச்சினுக்கு புகழாரம் சூட்டியுள்ளன. சச்சின் டெண்டுல்கர் 'சுப்பர் ஹீரோ' என்றும், உதைபந்து ஜாம்பவான் பீலே, டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் ஆகியோரைப் போன்றவர் சச்சின் என்றும் புகழாரம் சூட்டியுள்ளன. 'தி ரைம்ஸ்' இதழில் இங்கிலாந்து அணியின் முன்னாள்தலைவர் மைக் ஆதர்டன் எழுதியுள்ளதாவது: நமது காலத்தில் வாழும் 'சுப்பர் ஹீரோ' சச்சின். பெரும்பாலான கிரிக்கெட் சாதனைகளை தன்னகத்தே வைத்திருப்பவர் அவர். இந்தியாவில் அவரை கிரிக்கெட் கடவுளாக ரசிகர்கள் பார்க்கிறார்கள் என்று புகழாரம் சூட்டியுள்ளார் ஆதர்டன்.

டொன் பிரட்மன் டெஸ்ட் கிரிக்கெட்டில் சராசரியாக 99.94 ஓட்டங்கள் குவித்துள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டின் ஒரு இன்னிங்ஸில் அதிகபட்ச ஓட்டங்கள் குவித்து 2 முறை உலக சாதனையை முறியடித்தவர் பிரையன் லாரா. இவையெல்லாம் சிறப்பான சாதனைகள். அதைப்போலவே சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 100 சதம் அடித்துள்ள சச்சினின் சாதனை ஒப்பிடமுடியாதது. 200 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவது என்பதுநினைத்துப் பார்க்க முடியாதது. தெய்வத் தன்மை வாய்ந்தது. உதைபந்து ஜாம்பவான் பீலேவின் 1,281 சர்வதேச கோல்கள், டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரரின் 17 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள், ஸ்டீவ் ரெட்கிரேவ்வின் 5 ஒலிம்பிக் தங்கப் பதக்கங்கள் ஆகியவற்றுக்கு நிகரானது சச்சினின் சாதனை என்றுமிரர் இதழில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது. இதைப் போலவே பிரிட்டனிலிருந்து வெளியாகும் கார்டியன், ஸ்கைஸ்போர்ட்ஸ், தி இன்டிபென்டன்ட் ஆகிய இதழ்களும் சச்சினுக்கு புகழாரம் சூட்டியுள் சிட்னி மோர்னிங் ஹெரால்ட், ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் டெய்லி டெலி கிராப் உள்ளிட்ட பத்திரிகைகளும் சச்சினின் ஓய்வு முடி வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளன. (த)

**COOL KINGDOM ENGINEERING**

உங்கள் அனைத்து வகையான குளிர்சாதனப் பெட்டிகள் (Refrigerator)மற்றும் குளிரூட்டிகள் (Air Conditioner) வாகன குளிரூட்டிகள் வகைகள் (Auto AC) போன்றவைகள் பழு தடைந்தால் உத்தரவாதத்துடன் திருத்தித் தருவதும் அல்லது புதி தாக வேண்டுமானால் உங்கள் வீட்டிற்கே வந்து தரக்கூடிய வகை யில் வாகன வசதிகளும் உண்டு.

**COOL KINGDOM ENGINEERING**
முகவரி: 84/A, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு 077 9877309 அழையுங்கள்

**ஜேர்மன் செப்பேர்**
நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. கோண்டாவிலில் T.P 0755113457

**German Institute**
German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன்நடைபெறுகின்றது.
தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவும்.
10 palaly Road Jaffna ஆரியகுளத்துக்கு அருகில் T.P 0771604823

**திருத்துநர் தேவை**
யாழ். நகரில் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு Mobile திருத்துநர் உடன் தேவை. (Mobile Repair)
தொடர்பு:-0775463167

**காணி விற்பனைக்கு**
10/1, நக்கா வீதியில் சுற்று மதிலுடன் கூடிய 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:-0726649214

விஜயதசமியை முன்னிட்டு
**LMC யின் விசேட கற்கைநெறிகள் ஆரம்பம்**



British கல்வித்தரத்திலான கற்கை நெறிகளை யாழில் வழங்கும் ஒரே ஸ்தாபனம்
14/10–21/10வரை இணையும் மாணவர்கள் எமது கற்கைநெறிகளை 50% கட்டணச்சலுகையுடன் கற்கமுடியும்.
இச்சலுகையைப்பெற்று அனைத்து மாணவர்களும் பயன்பெற வேண்டுகின்றோம்.

| INTERNATIONAL COURSES | | ENGLISH COURSES | |
|---|---|---|---|
| IELTS: | 11500/= | DIP. IN ENGLISH | 5500/= |
| CITY & GUILDS: A1 | 9500/= | DIP. IN SPOKEN ENGLISH | 3500/= |
| B1 | 10500/= | | |

**INFORMATION TECHNOLOGY COURSES**

| | | | |
|---|---|---|---|
| DIP. IN COMPUTER STUDIES: | 3000/= | CER. IN JAVA: | 4000/= |
| DIP. IN WEB DESIGN: | 3000/= | CER. IN VB.NET: | 4000/= |
| DIP. IN GRAPHIC DESIGN: | 4000/= | CER.IN C#: | 4000/= |
| | | CER.IN ASP.NET: | 5000/= |

இக்கற்கைநெறிச்சலுகையானது மேற்குறிப்பிட்ட வாரம் மட்டுமே வழங்கப்படும்

LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna, Sri Lanka
Contact No: 0212227230 | 0217538395
Web: www.lmcjaffna.edu.lk

விஜயதசமியை முன்னிட்டு புதிய பிரிவு ஆரம்பம்



கணனி மற்றும் ஆங்கில கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவு ஆரம்பம்
14.10.2013 காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4922 741
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2631

**Programming Classes**
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
- C,C++
- Visual c sharp
- Sql Server
- VB.Net
- Java

SofTech
With Project Level Guidance
அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
மேலதிக விபரங்களுக்கு:
306,கண்டி வீதி,புங்கன்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.
021-221-1220, 0779122997.

**புலமை கல்வி நிறுவனம்**
சோதி வேம்படி லேன், மானிப்பாய்
தரம்- 4, தரம்- 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்.
ஆசிரியர்: க. கலாமோகன் B.A, Dip.in Teach
காலம்: 14.10.2013
தரம்- 4 (தற்போது 3) மாலை- 4.00 பிரிவு I
தரம் -5 (தற்போது 4) மாலை- 5.00 பிரிவு II
இயக்குநர்கள்

யாழ் மண்ணில்
**விஜயதசமி அன்று**
புதிய பிரிவு விரிவுரைகள் யாவும் ஆரம்பம்
**சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்**

**BTEC HND in...**
- Computing & Systems Development
- Quantity Surveying
- Civil Engineering
- Business Management
- Biomedical Science
- Law
- Psychology

Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)



விசேட 30% கட்டணக் கழிவைப் பெற்றுக் கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna.
0777 102 131 / 077 311 4105
Email : info@bcas.lk
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar
www.bcas.lk

**விஜயதசமியை முன்னிட்டு....**
விசேட சலுகைகள்
இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து Pendrive ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்



புதிய பிரிவுகள்
14th October @ 10 : 00am
ESOFT Diplomas have an International Recognation

| | | |
|---|---|---|
| DiTEC | Diploma in Information Technology — International + ESOFT Certificates | 4 Months |
| DiWE | Diploma in Web Engineering — International + ESOFT Certificates | 6 Months |
| DiSE | Diploma in Software Engineering — International + ESOFT Certificates | 6 Months |
| DiBM | Diploma in Business Management — International + ESOFT Certificates | 4 Months |
| DiCA | Diploma in Computerized Accounting — International + ESOFT Certificates | 4 Months |
| DiE | Diploma in English (Grammar \| Spoken \| Comprehension) — International + ESOFT Certificates | 4 Months |

edexcel Assured
Dual Certificates
Offer Of vijayadasamy 30% DISCOUNT
for ESOFT Students

Register with ESOFT After A/Levels ......




Get Rewarded by Introducing your Friends to the Diplomas
SMS மேலதிக விபரங்களுக்கு to 077 990 56 11
<Fullname> space <Diplomas> spece <Address>

ESOFT Shaping Lives, Creating Futures.
**ESOFT METRO CAMPUS - JAFFNA**
No 137, K K S Road, Jaffna | Tel:021 222 4142
HOTLINE : 077 309 9 308

| Nelliady | Kilinochchi | Jaffna 2nd Branch |
|---|---|---|
| 151, Jaffna Rd | 01, Kanagapuram Rd, | 17/1 Brown Rd, Jaffna |
| 021 226 4440 | 021 228 5444 | 021 750 1120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கூட்டமைப்பை கடவுள்தான் காக்க வேண்டும்

பக்கம் 28



பக்கம் 4

போராட்டம்

facebook

பக்கம் 24

விட்டுப்போன தனித்துவங்கள்



பக்கம் 21

இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா?

பக்கம் 6

# சூரியகாந்தி

உதயன் 13.10.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னும் ஏன் வஞ்சிக்கிறாய் கடல் தாயே!

விகேஸம்

நள்ளிரவு 12 மணி இருள் சூழ்ந்திருந்த கடற்கரை பேர் இரைச்சலோடு பொங்கி எழுந்தது. கடற்கரை கிராமங்கள் அந்த நடு நசியில் உறங்கியிருந்ததால் எதையுமே அறிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தத் தருணம் பார்த்து கடல் சீற்றம் கொண்டு களவாடிச் சென்றிருக்கிறது. பல மீனவக் குடும்பங்களின் சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டுள்ளன இந்த வஞ்சிப்பில்.

"பைலின்" புயலின் விளைவாகத் தான் இருக்க வேண்டும் இந்த இடர். இந்த புயல் காற்றானது யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கே 1100 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டு இந்தியாவுக்கு கிழக்காக நகரத் தொடங்கியது. ஆனாலும் இதனால் இலங்கைக்கு எந்த ஆபத்தும் ஏற்படாதென வானிலை அவதான நிலையம் தெரிவித்திருந்தது.

புயல் கடக்கும் நேரத்தில் யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கில் இருந்து முல்லைத்தீவு வரையான கரையோரத்தில் கடல் கொந்தளிப்பு அதிகமாக இருந்தது.


அதிகாலையில் தொழிலுக்கு செல்வதற்கு சென்றவர்களே கடல் கொந்தளிப்பை அவதானித்தனர். அது மட்டுமல்லாது தங்களது உடமைகள் கடலோடு அடிபட்டு விட்டதையும் கண்டனர்.

கடந்த 2004ஆம் ஆண்டு நடைபெற்ற சுனாமி பேரிடரின் பின்னர் கரையோர மக்கள் தங்களுக்கு வாழ்வளிக்கும் கடல் தாயுடன் கோபமாக இருக்கின்றனர். உடமைகளுக்கு அப்பால் உயிர்களை எல்லாம் ஒரு அதிகாலைப் பொழுதில் அழித்துவிட்ட கொடுமைக் காரியாக கடல் தாய் மாறுவதற்கு நாம் என்ன துரோகம் செய்தோம் என்பதே அவர்களது கோபத்துக்கான காரணமாக இருக்க வேண்டும்.

ஆனாலும் காலம் எமக்கு தந்த பரிசு அது என்பது அவர்களது எதிர்கால மீண்டெழுகைக்கு காரணமாகியது. தொடர்ந்து போர்ச் சூழல் அந்த மக்களை நிலை குலையச் செய்ய, 2009 இற்குப் பின்னர் படிப்படியாக மீள் குடியேறி தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் அந்த மக்கள் தற்போது தான் மெல்ல மெல்ல ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இழந்த எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் உதவி அமைப்புக்களின் அனுசரணையுடன் ஒரு படகுடனாவது கடலோடும் அவர்களது முயற்சி வீட்டில் அடுப்பு புகையும் அளவுக்கு மாற்றப்பட்டிருந்தது.

இப்படியான சிறு முயற்சி அந்தக் கடற்கரை ஓரங்களில் மீளவும் ஒரு உயிர் ஓட்டத்தை ஆரம்பித்தது. ஆனாலும் நேற்று நள்ளிரவு "பைலின்" புயல் தாக்கத்தால் கடல் தாய் சீற்றம் கொண்டு பாவப்பட்ட மக்களின் ஆரம்பகைத் தடங்களை அழித்து சென்றிருக்கிறாள்.



வடமராட்சி கிழக்கின் மணற்காடு, வண்ணான் குளம், கட்டைக்காடு, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, தாளையடி, முல்லைத்தீவில் செம்மலை, தீர்த்தக்கேணி உள்ளிட்ட கரையோர மக்களின் வாழ்வாதார உபகரணங்கள் கடல் கொந்தளிப்பில் அள்ளிச் செல்லப்பட்டன.

பெரியளவில் வெளித் தெரியாத இடராக இது அமைந்திருக்கிறது. ஆனால் கரையோர மக்கள் ஒவ்வொருவரினதும் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் கடலில் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன.

எந்த பாவமும் செய்யாத அந்த மக்கள் அதிகாலையில் தொழில் செய்ய முடியாமல் அந்தரிக்க விடப்பட்டுள்ளனர். அவர்களின் அழுகை 'கடல்தாயே நாம் உனக்கு என்ன துரோகம் செய்தோம் ஏன் இன்னும் எங்களை வஞ்சிக்கிறாய்' என்ற வாறு நீழ்கிறது.

*



# தி.மு.க. - காங்கிரஸ் உறவில் முள்ளாய் உறுத்தும் ஈழம்

ஈழத் தமிழர்களது பிரச்சினையால் தனது நீண்ட நாள் சகாவான காங்கிரஸ் கட்சியுடன் பிணக்குப்பட்டது திமுக. அமைச்சரவையில் இருந் தும்கூட விலகியது. ஆனால் இப்போது பிணக்குகள் நீங்கி, காங்கிரஸுடன் திமுக நெருங்கி வருவது போன்ற ஒரு சூழல் நிலவி வரும் வேளையில், அதைச் சற்றே அசைத்துப் பார்க்கும் வகையில், இரு கட்சிகளுக்கும் இடையே 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தால் மீண்டும் பிணக்கு தலைதூக்கியுள்ளது.

இலங்கைத் தமிழர் விவகாரம் காரணமாக, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைச் சரவையில் இருந்து திமுக விலகியது. அப்போது, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா – திமுக தலைவர் கருணாநிதி இருவருக்குமிடையே இருந்து வந்த ஒருவித புரிதலையும் மீறி, இரு கட்சிகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இருப்பினும், கடந்த நாடாளுமன்ற மேல்சபை தேர்தலில் கனிமொழி தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள காங்கிரஸ் கட்சி கடைசி நிமிடத்தில் கை கொடுத்ததன் மூலம் மீண்டும் இரு கட்சிகள் இடையேயும் மீண்டும் நட்புத் துளிர்த்தது.

இந்த நிலையில், 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக, பிரதமர் மன்மோகன்சிங், நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோருக்கு நற்சான்று அளிக்கும் வகையிலும், திமுகவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவை மட்டும் குற்றஞ்சாட்டி, காங்கிரஸ் மூத்த தலைவர் பி.சி.சாக்கோ தலைமையிலான நாடாளுமன்ற கூட்டுக் குழு (ஜேபிசி) தயாரித்துள்ள அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, திமுக, அதிமுக உள்ளிட்ட 6 கட்சிகள் மறுப்பு அறிக்கையை வியாழக்கிழமை அளித்துள்ளன.

இருப்பினும், திட்டமிட்டபடி ஒக்டோபர் மூன்றாம் வாரத்தில் ஜேபிசி அறிக்கை மக்களவைத் தலைவரிடம் கையளிக்கப்படும் என்று சாக்கோ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளமை திமுகவினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இடைத் தேர்தலும், அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தலும் நெருங்கி வரும் வேளையில் இப்பிரச்சினை மீண்டும் விஸ்வரூபமெடுத்திருப்ப[illegible] கட்சிகளிடையே விரிசலை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் [illegible] உள்ள மூத்த தலைவர்கள் அதை மறுத்துள்ளனர்.



எஸ்.சசிதரன்

இலங்கை பிரச்சினை காரணமாகவே நாங்கள் மத்திய அரசில் இருந்து வெளியேறினோம். 2ஜி விவகாரத்தால் எங்களது அரசியல் உறவு பாதிக்காது என்றே நினைக்கிறோம் என்று கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். மத்திய கூட்டணியில் திமுக தற்போது அங்கம் வகிக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் (கொமன்வெல்த்) மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டை வைத்தே எங்களது அடுத்த கட்ட முடிவை எடுப்போம் என்று உறுதிபடக் கூறினார் அவர். எனவே, நவம்பர் மாதம் 15 முதல் 17 வரை நடக்கும் அந்த மாநாடுதான், தமிழகத்தின் அரசியல் கூட்டணியை நிர்ணயிக்கப்போகும் சக்தியாக இருக்கும் என்று கருதலாம். அது ஏற்காடு இடைத்தேர்தலுக்கு முன்பு நடைபெற இருப்பதால், அந்தத் தேர்தலுக்கான கூட்டணி அமைப்பதிலும் இலங்கைப் பிரச்சினை முக்கிய பங்கு வகிக்கும் என்பது நிதர்சனமானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடரொளி
உதயன் 13 10 2013 ஞாயிற்றுக்கிழமை




ஜெரா

# பேஸ்புக் போராட்டம்

ஆ..... மாடியில இருந்து குதிச்சி செத்து நாசமா போ..."

மடிக்கணினிக்குமுன்னாலஇருந்து ஆழமாக பேஸ்புக் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தவன் எழும்பி ஓடிப்போய் 2ஆவது மாடியில இருந்து கீழே குதிக்கிறான். அந்த விடுதியெங்கும் பரபரப்பு பரவுகிறது. அனைவரும் அவசரமாகின்றனர். அவசர வாகனம் ஆஸ்பத்திரியிலிருந்து வந்து அவனுடலை அள்ளிப் போகிறது.

அவனின் தற்கொலைக்கான காரணத் தேடலை நண்பர், போராசிரியர் குழாம்கள் தீவிரப்படுத்துகின்றன. கூகிள், ஜீ-மெயில், யாகூ என எதிலும் அதற்கான தேடல் முடிவு வெற்றியளிக்கவில்லை. அறை நண்பன் அவனின் போனை கவனித்தான். 97 மிஸ்ட் கோல்!. 43 எஸ்எம்எஸ்!. அவனின் பார்வைபடாமல் இருந்திருக்கின்றது. அல்லது அத்தனை அழைப்புகளுக்கும், குறுந் தகவல்களுக்கும் பதிலளிக்காமல் பேஸ்புக்கில் போராடிக் கொண்டிருந்திருக்கின்றான். குறுந்தகவல்களின் உள்ளே சென்ற நண்பர்கள் உசாராகின்றனர்.

"ஏய்... ஆன்சர் பண்ணுடா...", "அவசரமா ஒரு விசயம் கதைக்கவேணும்...", "உடன எடு..." "ப்ளீஸ்..." என்ற குறுஞ் தகவல்களே திரும்ப திரும்ப அனுப்பப்பட்டிருப்பதை நண்பர்கள் கண்டுபிடிக்கின்றனர்.

பேஸ்புக் போராளியான இன்னொரு நண்பனின் மூளை தீவிரமாகத் தொழிற்படுகிறது. தற்கொலை செய்து கொண்டவனின் பேஸ்புக் அரட்டைகளை ஆராயத் தொடங்குகிறான். அவனின் பகிர்வுகளைப் பரிசோதிக்கிறான். அதில் ஒரு தமிழ் இணையத் தளத்திலிருந்து பகிரப்பட்ட வீடியோ ஒன்றின் இணைப்பு இருக்கின்றது. அந்த வீடியோவில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின், நேர்காணல் காண்ப்படுகின்றது. கூட்டணியினர் பிரதேச சபை தேர்தலுக்கும் விடுதலை, தனித் தமிழீழம், சுயநிர்ணய உரிமைகளை முன்வைத்தே பரப்புரை செய்வர் என்று அதில் சொல்லப்படுகிறது. அதற்கும் கீழே போகிறான், முடிசூட்டப்பட்ட வடமாகாண சபை முதலமைச்சரின் படமும், அதற்கு அவன் எழுதிய எதிர்க் கருத்தும் காணப்படுகிறது. அந்த கருத்துக்கு 110 லைக்ஸ், 86 பகிர்வுகள் 242 கருத்துக்கள் இடப்பட்டிருக்கின்றன. அவனின் ஆதரவாளர்களும், எதிரானவர்களும் கண்மூடித்தனமான கருத்துத் தாக்குதலை அவன் தற்கொலைக்கு சற்றுமுன் வரை நடத்தியிருக்கின்றனர். ஆங்காங்கே கருத்துப் புகை தெரிகிறது.

இன்னும் கீழே போகிறான் அந்த பேஸ்புக் போராளி. அங்கே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் முடிசூடப்பட்ட நிலையில் இருக்கும் படமும் அதற்கு அவன் எழுதிய காரமான இரட்டைவரி வசனமும் காணப்படுகின்றது. அதற்கும் பலமான எதிர்- புதிர் கருத்துக்கள் இடப்பட்டிருக்கின்றன. அதற்கு கீழே கூட்டமைப்பினரின் தேர்தல் பரப்புரை அறிக்கைகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் சிங்கக் கொடி பிடித்த படம் போன்றவற்றுக்கான இணைப்புகள் இருக்கின்றன. இது இப்படித்தான் போகும் என்பதைப் புரிந்துகொண்டவர் போல் அந்தப் புலனாய்வை நிறுத்தும்படி அவனிடம் கேட்டுக்கொள்கிறார் பேராசிரியர்.

அவனின் தற்கொலைக்கான காரணத்தையும் அந்தப் பேராசிரியர் அறிவிக்கின்றார். அவரின் அறிக்கை:

*தீவிரமான தமிழ் தேசிய பற்றாளனாக இருந்த இந்த மாணவன், சமூக வலைத்தளங்களில் தனது கருத்தை வெளிப்படையாக பதிவு செய்து வந்திருக்கின்றார். கூட்டமைப்பின் அரசியல் போக்கு குறித்தும் காரசாரமான விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றார். அதனால் பேஸ்புக் களத்தில் பல முனை தாக்குதலை எதிர்கொண்டிருக்கின்றார். தரையிறக்கம், ஊடறுப்பு, பொக்ஸ்அடிஎனசகல வழி முறைகளையும் பின்பற்றி முறியடிப்பு சமர்களை நடத்தி சமர்க்கள நாயகனாக மாறியிருக்கின்றார். அவருக்கு விழுந்திருக்கும் லைக்குகளில் 99 வீதமானவை பெண்களுடையவையாகவே இருக்கின்றன. இது அவர் பேஸ்புக் சமர்க்கள நாயகனாக இருந்திருக்கின்றார் என்பதைக் காட்டுகின்றது. இதனை வைத்துப் பார்க்கும் போது, கூட்டமைப்பின் இந்த அரசியல் போக்கும், அண்மையில் ஏற்பட்டிருந்த ஆசனப் போரும் குறித்த மாணவனின் மனநிலையை மோசமாக பாதித்திருக்கின்றது. அதனால் ஏற்பட்ட மன எழுச்சியினால் பேஸ்புக்கில் இருந்து எழுந்து ஓடிப்போய் மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்....*

மூச்சு வாங்கியது பேராசிரியருக்கு.

உடனடியாக பேஸ்புக் போராளியான மாணவன் குறுக்கிட்டான். "சேர்..! அவனின் காதலியான வள்ளியம்மையிட்டயிருந்து வந்த மெசேஜ் ஒண்டு சட் பொக்ஸ்ல கிடக்கு. அதில அவ இப்பிடி சொல்லியிருக்கிறா..."

"எப்பிடி?"

"ஆ..! மாடியில இருந்து குதிச்சி செத்து நாசமா போ..." என்று.

"எனவே அந்த 97 மிஸ்ட் கோல், 43 எஸ்எம் எஸ்களுக்குரியவள் வள்ளியம்மையாகத்தான் இருக்கும். உடனடியாக அவருக்கு அழைப்பெடுங்கள். சம்பவ இடத்துக்கு வரச் சொல்லுங்கள்." பேராசிரியர் மாணவர்களுக்கு உத்தர விட்டுக்கொண்டே வேகமாக நடந்து படியிறங்குகின்றார். கீழே வள்ளியம்மை நண்பிகள் புடைசூழ, கையை வைத்து வாயை மூடியபடி நிற்கிறாள். கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுக்கின்றது. திமிறித் திமிறி அழுகிறாள். அவளின் மனம் வெடி[illegible] எதிரொலிக்கின்றது. பேராசிரியர் விசாரிக்கத் தொடங்குகின்றார்.

"சேர்..! அவனின் காதலியான வள்ளியம்மையிட்டயிருந்து வந்த மெசேஜ் ஒண்டு சட் பொக்ஸ்ல கிடக்கு. அதில அவ இப்பிடி சொல்லியிருக்கிறா..." "எப்பிடி?" "ஆ..! மாடியில இருந்து குதிச்சி செத்து நாசமா போ..." என்று.

"இல்ல சேர்! அவனும் நானும் கம்பசுக்கு வந்து செக்கன்ட் இயர் படிக்கிறதில இருந்து லவ் பண்றம். கொஞ்ச நாள் சந்தோசமாயிருந்தம். அதுக்குப் பிறகு அவனுக்கு என்ன நடந்ததோ தெரியேல்ல. எப்ப எடுத்தாலும் அரசியல் பற்றியே பேசத் தொடங்கீற்றான். சில நேரங்களில் உணர்ச்சிவசப்பட்டு பேசினான். தலைவர்மார் சிங்கக் கொடி பிடிச்ச நேரமெல்லாம் பைத்தியம் பிடிச்சமாதிரி இருந்தான். 3 நாள் கதைக்கவேயில்ல. நான் 3 நாள் சாப்பிடவேயில்ல. எந்த நேரத்தில் போன் பண்ணினாலும் எனக்கு தெரியாத அரசியலையே பேசினான், எனக்கே வெறுத்துட்டுது சேர். ஒரே வகுப்பு தான் சேர் 2 பேரும். வகுப்பிலகூட இந்த அரசியல்பேசி எல்லாரோடையும் சண்டை. பிரசன்டேசனுக்கு விட்டால் 2 வரி தான் பாடம் பற்றி கதைக்கிறான். பிறகு அவை இந்தியாவின் கைப்பிள்ளைகள் என்டு திட்டுறான், எல்லா பிள்ளையளும் என்னைப் பாத்துச் சிரிக்குதுகள். அதுக்குப் பிறகு அவனோட அடிக்கடி சண்டதான் வரும். சாப்பிட்டியா, அந்த நோட்ஸ் எல்லாம் எழுதி வை, அவசரமா ரியுட் எழுதி தா, 10 ரூபாய்க்கு ரீலோட் போட்டுவிடு என்டத கேட்க மட்டும்தான் அழைப்பு எடுப்பான். ஆனா முதல் அப்பிடியில்ல. உருகி உருகி பேசுவான் சேர்..." உருகி ஊற்றினாள் வள்ளியம்மை.

"சரி பிள்ளை! இன்டைக்கு ஏன் அவனச் சாகச் சொன்னனீ?"

"...இன்டைக்கு என்ர பிறந்த நாள் சேர். போன வருசம்நடுச்சாமம்12மணிக்குவாழ்த்துச்சொன்னவன். இந்த வருசம் மறந்தே போயிற்றான். இன்டைக்கு முழுதும் கோல் பண்ணினன். மெசேஜ் போட்டன். எதுக்குமே பதில் இல்ல. பேஸ்புக்ல ஒரு தொகை மெசேஜ் போட்டன். அதுக்குப் பதில் இல்லை. அவை முடிசூடினது பிழையென்டு வாதாடிக் கொண்டிருந்தான். எல்லாம் முடிய எனக்கு 'ஹாய்' எண்டொரு மெசேஜ் போட்டான். அப்பத்தான் எனக்கு [illegible] தேவையில்ல மாடியில இருந்து குதிச்சி செத்து நாசமா போ என்டு பேசீற்றன் சேர்..." ஓவென்று அழுதாள் வள்ளியம்மை.

எல்லோரும் மருத்துவமனைக்கு பயணமாகிறார்கள். லேசான மழையில் சீனாக்காரன் அமைத்த வீதியில் கார் பயணிப்பது, பறப்பதை போல இருக்கிறது. அவன் உடல்முழு தும் கட்டுத் துணிகளால் கட்டப்பட்டிருக்கிறான். அவனுக்கு உயிர் இருப்பதை ஐ.சி.யு தாதியர்களின் அவசர ஓட்டம் காட்டுகிறது. எல்லோரும் அவன் மீள் வருகைக்காக பிரார்த்திக்கின்றனர். நல்ல நண்பன் வேண்டுமென்று இந்த சாவும் நினைக்கின்றதா? என்ற பாடலை எல்லோரும் மனதுக்குள் முணுமுணுத்தபடி அந்த விறாந்தையெங்கும் உலாவுகின்றனர். அதற்குள் 2 நாள்கள் கடந்துவிடுகின்றன. அவனும் துயிலெழும்புகிறான். அவனை அவளும், அவளை அவனும் உணர்வுத் ததும்ப பார்த்து அழுகின்றனர். எழுந்திருக்க முயற்சிக்கின்றான். வள்ளியம்மை உடனடியாக காட்போட் மட்டையில் தயாரிக்கப்பட்ட பதாகையை அவனை நோக்கி நீட்டுகிறாள். அதில் கீழ் வரும் 4 கட்டளைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

1. எந்தக் காரணத்தை கொண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பையோ, அவர்களின் அரசியலையோ விமர்சிக்கக்கூடாது.
2. அதைப் பற்றி போனில் வள்ளியம்மையுடன், இதர நண்பர்களுடன் அலட்டக் கூடாது.
3. பேஸ்புக்கில் கூட்டமைப்பு பற்றியோ, விக்கினேஸ்வரன் பற்றியோ, அமைச்சர்கள் பற்றியோ, அவர்களின் வேலைத்திட்டங்கள் பற்றியோ எதுவும் எழுதக் கூடாது. யாரும் எழுதினாலும் கருத்திடக் கூடாது.
4. இனி வரும் காலங்களில் பேஸ்புக்கில் பூ படங்கள், நடிகர்களின் படங்கள், நட்பு வசனங்கள் மட்டுமே பகிர வேண்டும்.

இந்த கட்டளைக்கு ஓம் என்று சத்தியம் பண்ணினால்தான் நான் இனி கதைப்பன் இல்லாட்டி என்னை மறந்துடு முருகா என்கிறாள் வள்ளி. வள்ளியின் தலையில் முருகன் ஓங்கியடித்துச் சத்தியம் செய்யவும், கற்பித்துக் கொண்டிருந்த பேராசிரியர் கீழே விழுந்த சோக் பீஸை எடுக்க குனியவும் எடுத்த நேரம் சரியாக இருக்கின்றது. அவரின் மொட்டைத்தலையில் நங்கென்று இறங்குகிறது முருகனின் சத்தியம். "கெட் அவுட் ஐசே..! ஒரு புரொபசர் வகுப்பெடுத்துக் கொண்டிருக்கிறன். எதையும் கவனிக்காம நித்திரை கொள்றியா...? கெட் அவுட் ஐசே..!"

"ஓ! இன்டைக்கும் கனவா..?"

வகுப்பை விட்டு வெளியேறுகிறான் முருகன். இவன் அவமானப்பட்டதைப் பார்த்து குப்பென்று சிரிக்கிறது வகுப்பறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதற்குத் தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா?

செந்தூரி

அதிகாரத் தரப்புக்களை- அதிகார மையப்படுத் தலை- ஆதுரமாக நேசிக்கின்ற பேரினவாதிகளை அதிர்ச்சியூட்டும் அந்தச் சம்பவத்தை 1987 ஜுலை மாதம் 29 ஆம் திகதி இந்தியா உருட்டி - மிரட்டி நடத்தி வைத்தது. ஜே.ஆர். ஜெயவர்த்தனவும், ராஜீவ்காந்தியும் அருகருகே இருந்து கையொப்பமிட்ட அந்த உடன்படிக்கைதான், இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு இடமளித்தது. மாகாண சபைகள் எனப்படுகின்ற அதிகாரப் பகிர்ந்தளிப்புக்கு காரணமான சட்டத்திருத்தத்தின் மூலமான வடமாகாண சபைக்குரிய தேர்தலே 26 வருடங்கள் கழித்து கடந்த 21 ஆம் திகதி எங்களின் விரல்களில் மைபூசியது. அடுத்தடுத்த வாரங்களில் வடமாகாண சபையின் வெற்றிக் கூட்டமைப்பு எந்தச் சங்கடமுமின்றி வாக்காளர் பெருமக்களின் முகங்களில் கரியள்ளிப் பூசியது.

ஆயுத நெருக்குவாரங்கள்- கழிவெண்ணெய் அபிஷேகங்கள்- கொலை முயற்சித் தாக்குதல்கள் என எண்ணற்ற வழிகளிலான அனுதாப வாக்குத் தேடல் வேட்டையை கூட்டமைப்புக்காக, அரச ஆசீர்வாத தரப்புக்களே நிகழ்த்தி முடித்து அரசியல் அனுபவப் பழங்களே எதிர்பார்த்திராத 30:08 என்ற வெற்றியைச் சத்தியமாக்கின. "உதயனுக்கு அடிப்பாங்கள் என்று தான் எண்ணியிருந்தோம்- அழகிய ராட்சதர்கள் உதயனையே அடிச்சிட்டாங்களே" முகநூலில் யதார்த்தத்தில் நனைத்தெடுத்த நகைச்சுவையை பிழிந்து காயப்போட்டிருந்தார் நண்பர் ஒருவர். முதலமைச்சர் வேட்பாளரென யாரையும் அறிவிக்க இயலாத உள் குத்தல்களால் பெருமளவிலான இரத்தப் போக்கினை சந்தித்த வடமாகாணத்தின் பிரதான எதிர்க்கட்சி, "எவர் எதிர்க்கட்சித் தலைவர்?" என்ற ஒற்றைச் சண்டையை மட்டும் தொடர, "முதலமைச்சர் தவிர எஞ்சிய நான்கு அமைச்சர்களும் யார்?" என்கின்ற பந்து வடமாகாணத்தின் எல்லா மூலைகளிலும் உதைபடும் அவலக் குரல் உலகத்தின் மூலை, முடுக்குகளுக்கும் கேட்கத் தொடங்கி, இவ் வாக்கியம் முடிக்கப்படும் வரை இருபது இரவு பகல்கள் படபடெவன கடந்து போயின. "மாவீரன் தொடங்கி மாவீரர் கல்லறை" வரை இலகுவாக மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் வசனங்களை தேடியெடுத்து வாக்கு வேட்டையாடிய இந்நாள் மீட்பர்களின், இணக்க அரசியலின் தொழுதுண்டு பழுதின்றி வாழும் திறம். 'சத்தியப்பிரமாணம்' என்ற 'பூமராங்' கினால் சரமாரியாக தாக்கப்பட்டு வாக்காளர்களின் வாயிலிருந்து, "சீ" என்ற சலிப்பினையே உமிழச் செய்தது.

மூடிய கதவினுள் நரைத்த முடிகள் என்னென்ன பேசினார்கள் என்பதை எதிர்வு கூறக் கூடிய சுலபமான அனுமானத்தினுள் வடமாகாணத்து மக்களை தள்ளிவிட்டு 'இவர்களையா இப்படி நம்பினோம்?' என்ற நம்பிக்கையீனத்தின் தற்கொலைப் பள்ளத்தாக்கில் தம் விம்பங்களை சிதறி உடைக்குமளவுக்கு வெள்ளையும் சொள்ளையுமாக எம் கன்னங்களை தடவி வாக்குக் கேட்டு வெற்றி பெற்றவர்களை வெறித்தனமாக விரட்டுவது யாது? முடிவெடுக்க முடியாத வெறுமைக் குள்ளும், விமர்சனக் கரும்புள்ளி களுக்கும் மறைந்து நின்று வாக்கு வாதப்படும் இவர்களில் ஒற்றுமைக் குளத்தின் துளிர்ந்துள்ள மாகாண அமைச்சுக்கள் என்ற குடம் மண்ணா? பொன்னா? இந்தப் பாலகுமாரர்கள் யாவரும் ஆசைப்படுவது எதற்காக? என்பதை கொஞ்சம் தெரிந்துதான் கொள்வோம்; அடுத்த நான்காண்டுகள் கழித்தாவது நாக்கைப் பிடுங்கிக் கொள்கின்றளவு நான்கு கேள்வி கேட்பதற்காக.

## மாகாண சபைகளின் அதிகாரங்கள்


அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் 4 பொது வகைகளுக்குள் தொகுதிப்படுத்தப்படு கின்றன. சட்டமும் ஒழுங்கும் காணியும் காணியமர்வும் விவசாயமும் கைத்தொழிலும் கல்வியும் கலாசாரமும் என்பவையே அவையாகும். ஆனால் அவசர அவசரமாக வெளியிடப்பட்ட மத்திய மாகாண சபை தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பொன்றினால் வலியுறுத்தப்பட்டதன் படி காணியதிகாரமும் பொலிஸ் அதிகாரமும் பியூஸ் பிடுங்கப்பட்டதனால் சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணியும் காணியமர்வும் தொடர்பிலான அதிகார இழுபறிகள் எமது எதிர்கால நாட்காட்டிகளில் நிச்சயம் இடம்பெற்று, பொழுதுபோக்குக்கு பெரிதும் உதவும். அதிகார வலுவுள்ள மேற்படி இரண்டு அமைச்சுக்களை கெட்டித்தனமாக உருவிக்கொண்டு அடிப்படைத் தேவைகள் எனும் வகுதிக்குள் சுகாதாரமும் வைத்தியத்துறையும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி எனும் மேலதிக துறைகளும் சேர்க்கப்பட்ட ஐந்து வகை அமைச்சர்கள் அதிகாரிகள் மட்டத்திலான செயலாளர்களினால் இன்றை வரைக்கும் வடமாகாண சபையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக பிரதம செயலாளரினால் ஆளப்படும் திணைக்களங்களும் திறைசேரிகளும் ஆளுநரினால் நேரடியாக கண்காணிக்கப்படும் ஆளுநரின் செயலகத்துக்குட்பட்ட ஆணைக்குழுக்களும் தனியானவை. ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோர் ஏனைய எல்லா அமைச்சர்களையும் நேர்கோட்டு கட்டுப்பாட்டதிகாரத்தினால் ஆளும் அதிகாரமுடையவர்கள். வடமாகாணத்தின் பெரும்பாலான தீர்மானங்கள் தலையெழுத்துக்கள், ஏ-9 வீதி அரியாலையில் இருக்கும் ஆளுநர் செயலத்தினாலும் ஆடியபாதம் வீதியில் மருத்துவ பீடத்துக்கு சற்று முன்னே இருக்கும் பிரதம செயலகத்தினாலும் திருத்தி எழுதப்படுகின்றன. ஆன் நடமாடுவது கூடத் தெரியாமல் அமைதியாக இருக்கும் இந்த அடக்க ஆலயங்களில்தான், மாகாண சபையைப் பிணித்துள்ள வீரபத்திர வைரவர்களின் ஆண்- பெண் உக்கிர தேவர்கள் சுழல் கதிரைகளிலும் குளிர்பதனக் கறுப்பு அறைகளிலும் வீற்றிருந்து ஆணைகளால் வீசி விளையாடுகின்றனர்.

மாகாண சபைகளின் அதிகார ஒழுங்குப் பாய்ச்சலானது ஆளுநர் மாகாண சபை. முதலமைச்சர், நான்கு அமைச்சர்கள், பொதுச் சேவை ஆணைக்குழு, பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணத் திணைக்களத் தலைவர்கள் என்று கீழ் நிலையில் சுத்திகரிப்புத் தொழிலாளி- காவலாளி வரை செல்கின்றது. தேர்தலொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகள் எப்போதும் நியமன அதிகாரிகளை விட ஆட்சிப் பதவி நிலையில் உயர்ந்தவர்கள் என்பதை இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் இடித்துரைத்தாலும் மாகாண சபை விடயங்களில் மக்கள் பிரதிநிதிகளால் கூட்டிணைக்கப்பட்ட மாகாண சபையானது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆளுநருக்கு கீழ் பாய்ச்சல் தரத்தில் வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இது நிறைவேற்று அதிகாரம் என்ற மகாவலுவின் அதிகார முரண்களில் ஒன்று. தற்போது அமைச்சர்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடத்தில் அமைச்சுக்களின் செயலாளர்களினால் நிர்வகிக்கப்படும் ஐந்து அமைச்சுக்கள் வட மாகாணத்தில் இயங்கி வருகின்றன.

1. விவசாய- காணி, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சு
2. கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு.
3. சுகாதார சுதேசிய வைத்தியத் துறை அமைச்சு.
4. உட்கட்டமைப்பு அமைச்சு.
5. உள்ளூராட்சி நிவாரண - புனர்வாழ்வு, கூட்டுறவு கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூக சேவைகள், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு அமைச்சு.

மாகாண சபைகள் வெள்ளை யானைக்கு நிகரானவையென்று ஆளுமி னத்தின் அறப்படித்த அரசியல் வாதிகள் ஒப்பமிடுகின்றபோதும், வடக்கு- கிழக்கு மக்களை விட மேலான அதிகார செறிவிழப்பின் நன்மைகளை சிங்கள மக்களும் சிங்கள அரசியல்வாதிகளும் அனு பவித்துத் திளைத்துக் கிடக்கின்றனர். மத்திய அரசை- குறிப்பாக நிறைவேற்றதிகாரத்தின் குரக்கன் நிறச் சால்வையை- குளிர்விப்பதற்காக மாகாண அமைப்பு முறையை கடுமையாக விமர்சித்து கருத்து வெளியிடுகின்றவர்களாக இருக்கின்றபோதும் மாகாண முதலமைச்சர் பதவிக்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து இக்கரைக்கு தாவிப் பிடிக்கும் சமயோசிதம் நிறையவே கொட்டிக் கிடக்கின்றது. கட்டுப்பட்ட அதிகாரமட்டமாக கட்டுப்படுத்தப்பட்ட நிதிப் பாரம்பரியமுடையதாக பொறுப்புக் கூறலின் இருபக்க நெருக்குவாரம் இருந்ததாக காட்டப்படுகின்ற மாகாண சபைக் கட்டமைப்பிலும் கண்ணைக் கவரும் சொர்க்கத் தீவுகளுக்கு நிகரான அதிகாரங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனால் மத்தியை விட தாழ்வாக ஒவ்வொரு அமைச்சுக்களும் தமக்குக் கீழான திணைக்களங்களின் மீது நிறைவேற்றதிகாரத்துக்கு நிகரான செல்வாக்கு அதிகாரமுடையவையாக, அரசியமைப்பினால் நிறுவப்பட்டவையும் சர்வாதிகார முகாமைத்துவத்தினால் இறுக்கப்பட்டவையுமாக பன்முக அங்குசங்களைத் தம்வசம் வைத்துள்ளன.

திணைக்களங்களின் மேற்பார்வையும் ஆலோசனை வழிகாட்டலும் திணைக்களங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்களின் நிறுவன அபிவிருத்தியை நெறிப்படுத்துதல் திணைக்களங்களுக்கான நிதித் திட்டமிடல் மற்றும் நிதி வழங்கல், நிதிசார் செயற்பாடுகளின் கண்காணிப்பும் ஆலோசனை வழிகாட்டலும் திணைக்களங்களினூடாக தொண்டு நிறுவனங்களின் வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்தல், அனுமதிக்கப்பட்ட ஆளணிக் கோப்புகளுக்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள், தொழில்சார் வாண்மைத்துவ பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல்- திட்டமிடல் - நிதி வழங்கல், அமைச்சுக்களின் சார்பிலான பொதுத் தலைப்பிலான கண்காட்சிகள்-

(மறுபக்கம் பார்க்க)

ஆளுநர்– ஆளுநர் செயலகம்
- பிராந்திய ஆணையாளர் அலுவலகம்

பிரதம செயலாளர்– பிரதம செயலகம்– வடமாகாணம்
- மாகாணத் திறைசேரி
- மாகாண திட்டமிடல் செயலகம்
- விசேட செயற்றிட்டங்கள்
- முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களம்
- மாகாண கணக்காய்வுத் திணைக்களம்
- உட்கட்டமைப்பு அபிவிருத்திச் சட்டப்பிரிவு
- மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

செயலாளர்– விவசாய – காணி – கால்நடை– நீர்ப்பாசன கடற்றொ ழில் அமைச்சு
- விவசாயத் திணைக்களம்
- கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம்
- நீர்ப்பாசனத் திணைக்களம்
- காணி நிர்வாகத் திணைக்களம்

செயலாளர் – கல்வி – பண்பாட்டலுவல்கள்– விளையாட்டுத்துறை அமைச்சு
- மாகாணக் கல்வித்திணைக்களம்
- பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
- விளையாட்டுத்துறைத் திணைக்களம்

செயலாளர்– சுகாதார– சுதேச வைத்தியத்துறை
- சுகாதார சேவைகள் திணைக்களம்
- சுதேச வைத்தியத்துறை திணைக்களம்

செயலாளர்– உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீள்நிர்மாண அமைச்சு
- வீதி அபிவிருத்தித் திணைக்களம்
- கட்டடங்கள் திணைக்களம்

செயலாளர் – உள்ளூராட்சி, நிவாரண புனர்வாழ்வு, கூட்டுறவு கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூக சேவைகள், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு
- உள்ளூராட்சித் திணைக்களம்
- கிராம அபிவிருத்தித் திணைக்களம்
- கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
- தொழிற்துறைத் திணைக்களம்
- சமூகசேவைகள் திணைக்களம்
- நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களம்

(வடமாகாணத்தின் 5 அமைச்சர்களும் திணைக்களங்களும்)

DPMC galaxy of stars

NO.1 ஆனதற்கு

அனைத்துத் தரங்களின் அனைத்துக் காரணங்கள்

BAJAJ மோட்டார் சைக்கிள்கள்



சிறந்த வியாபார நாமம்
சிறந்த விலைகள்
சிறந்த தரம்
சிறந்த சேவை
சிறந்த சிக்கனம்
சிறந்த வலையமைப்பு
சிறந்த ஓட்டோமோட்டிவ் கம்பனி

pulsar Discover PLATINA BOXER CT100

ஒப்பற்ற விற்பனையின் பின் சேவைக்கும், நிதி வசதிகளுக்கும், காப்புறுதி மற்றும் பலதரப்பட்ட ஏனைய சேவைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் எம்மிடம் வாருங்கள்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம் PB270
த.பெ இல. 1909, 75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு ... www.dpmco.com
தொலைபேசி: 011-4700600 தொலைநகல்: 011-4700677

RAVI BARNES | NDN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்களை ஒருங்கிணைத்தல், நடத்துதல் தேசிய, மாகாண ரீதியான நிறுவனங்களுக்கிடையே தொடர்புடைமையை ஏற்படுத்தி மாகாண ரீதியான பங்குபற்றலை மேம்படுத்துதல் அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், தொழில் முயற்சிக் கடன்கள், முயற்சியாண்மை ஊக்குவிப்புக்கள்- உபகரணங்கள் வழங்கல், பல்வேறு நிதி வழங்கும் முகவர்களுக்கு அபிவிருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் போன்ற பொதுப் பரப்பில் சகல அமைச்சுக்களிடமும் காணப்படும் அதிகாரங்களில் முக்கியமானவையாகும். சகல நிர்வாகச் செயற்பாடுகளிலும் உள்ளீடு செய்யப்படுகின்ற பௌதீகவளம், மனித வளம், நிதி வளம் ஆகிய மூன்றையும் சுலப அளவீடு செய்யும் பெறுமானக் கோலான நிதி வளத்தின் மீது அதீத அக்கறை கொண்டவையாகவே சமகால மாகாணத் திணைக்களங்களும் அமைச்சுக்களும் தமக்கான பாரம்பரியத்தை வரிந்து கொண்டுள்ளன. 'ஆதலினால் அமைச்சைக் கேட்பீர்' என்று தம்மளவில் செவிமடுக்கப்பட்ட அசரீரிகளுக்கு இணங்க மக்களின் பெறுமதியான உணர்வெழுச்சியின் பால் தூண்டப்பட்டு அறுவடை செய்யப்பட்ட மாகாண சபைப் பிரதிநிதித்துவத்தை அதிகாரத்தை நோக்கி நகர்த்தும் 'அற்ப ஆசை' வெட்கமறியாமல் பெரும்பாலான மாகாண சபை உறுப்பினர்களின் மத்திம புத்திக்குள் புகுந்து விளையாடுகின்றது- விளையாடியது.

**கதிரை தா! இன்றேல் கழட்டிவிடு!**

அமைச்சுப் பதவிகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படுபவர்கள் கூர்மையான தகுதியடிப்படையிலேயே நியமிக்கப்படுவார்கள் என்றிருந்த 21 ஆம், 22 ஆம் திகதிய எதிர்பார்ப்புக்கள் யாவும் அடுத்தடுத்தநாள்களில் மூடிய கூட்டங்களினால் பொய்யாக்கப்பட்டன. தேர்தலில் மக்களினால் நிராகரிக்கப்பட்ட அதாவது வாக்கெடுப்பில் தன்னையும் நிறுத்தி தோல்வி கண்ட நபரொருவரை மேலதிக (போனஸ்) ஆசனத்தக்கு அமர்த்த முடியும் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெகுஜன விரோத முடிவை எடுக்கும் துர்ப்பாக்கியத்துக்குள் நழுவி விழுந்த பின்னரும் அமைச்சர்களின் தகுதி நிர்வாகத் திறன், அனுபவம், பொது வாழ்க்கையின் தூய்மை, பணிநேர்மை என்பனவற்றுக்கான தகுந்த தெரிவை எதிர்பார்த்த வடமாகாணத்து வாக்காளர்கள் நிச்சயமாக பன்னாடையில் வடிகட்டிய பேயர்கள் தானே? கட்சிப்பிரதிநிதித்துவம் மாவட்ட வாரிதெரிவு என்று வடமாகாண அமைச்சுத் தெரிவுகள்- இம்சை அரசனின் "கருத்துக்களை கச்சிதமாக கவ்வுகிறீர் போங்கள்". (க.க.க.போ) மங்குனி அமைச்சர்களாக மட்டுப்படுத்தப்படவே நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் - இழுபறிகள் இதனால்தான் என்றும் வெளியாகும் ஊகங்கள், அமைச்சரவை பதவியேற்கும் வரை சிறகு கட்டி உலாவும். முதலமைச்சரையும் சேர்த்து ஐந்து அமைச்சுக்கள் மட்டுமே மாகாண சபையில் இருக்க முடியும் எனும் நிலையில் தற்போதுள்ள அமைச்சுக்களில் ஒன்றை முதலமைச்சர் தன் வசப்படுத்தவே வேண்டும். அதிலும் ஆள்பரப்பும். நிர்வாக எல்லைகளும் கூடிய இறங்குவரிசையில் கல்வி அமைச்சு, உள்ளூராட்சி அமைச்சு, சுகாதார அமைச்சு ஆகிய மூன்றையும் தனித்தனியாக அமைச்சர்களிடம் ஒப்படைப்பதே தலையணையும் தேவையற்ற தாக்கத்தை தரும். எஞ்சியுள்ள உட்கட்டமைப்பு மற்றும் விவசாய காணி நீர்ப்பாசனம் ஏதாவது ஒன்றை முதல்வர் தன்னிடம் வைத்தாக வேண்டும்.

மாகாண சபை உறுப்பினர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு சுமார் 27 ஆயிரத்தைத் தாண்டிய தொகையிலும், மாகாண அமைச்சர்களுக்கு 41 ஆயிரத்தை அண்மித்தும் முதலமைச்சர் 64 ஆயிரத்து சொச்சத்தினையும் சட்டபூர்வமாக பெற்றுக் கொள்ளவிருக்கின்றனர். தவிர அமைச்சர்கள் - முதலமைச்சருக்கான வாகனங்கள், தனிப்பட்ட செயலாளர், உத்தியோக வாசஸ்தலம், இதர படிகள் உட்பட போகங்களின் சீர்வரிசை தனியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சர் அலுவலகத்துக்கான பணிகளுக்காக சாதாரண முகாமைத்துவ உதவியாளரிலிருந்து ஓட்டுநர், அலுவலகப் பணியாளர் வரை 20 இற்கு மேற்பட்டவர்களை சேவையில் அமர்த்தவும், ஒவ்வொரு அமைச்சுப் பணிகளுக்காக மேற்கூறிய வகையினரில் 10 இற்கு மேற்படாதவர்களை சேவையில் அமர்த்தவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. குறித்த பதவியணிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் ஏற்கனவே மாகாண சபையிலுள்ள சமபதவிகளிலுள்ளோர் பெற்றுக் கொள்கின்ற சம்பளப் படி நிலைகளை பெற்றுக் கொள்ளும் தகுதியுடையவர்களாகின்றனர். ஏற்கனவே வடமாகாண அமைச்சு செயலகங்களில் அமைச்சர் பெருமக்கள் அமருகின்ற

# இதற்குத் தானே....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கதிரை தொடங்கி ஒதுக்கிய வாகனங்கள் வரை ஏற்பாடுகள் ஆரம்பமாகிவிட்ட நிலையில் இன்றுவரை ஏக போகம் அனுபவித்து வந்த அமைச்சுச் செயலாளர்களுக்கு 'காற்றுக் குறைக்கும்' கவனிப்புக்களும் சமகாலத்தில் தொடங்கப்பட்டுவிட்டன. இருந்த வாகனங்கள் பிடுங்கப்பட்டதற்காக அறை ஒதுக்கி அழுது தீர்க்கும் திணைக்களத் தலைவர்கள் இந்த வகையறாக்களுக்குள் வரவில்லை. அது தனி வலி!

என்னதான் சுவையான உணவை இரண்டு கைகளிலும் கொடுத்தாலும் ஆடையை நழுவவிட்டு கையிரண்டாலும் திண்பண்டம் வாங்கிச் சுவைக்கும் பச்சைக் குழந்தைகள் கூட இல்லாத இதே மண்ணில் வடித்துத் தீர்ந்த சொற்ப அதிகாரங்களுக்காகப் பசுத்தோலை கழற்றி வீசிவிட்டுப் பல்லிளித்த "பதவிப் புலால் மீதான விருப்பத்தைக் கண்டு மொத்தத் தமிழ்த் தேசியமும் அதிர்ந்து கிடக்கின்றது. வார்த்தை விளையாட்டு அரசியல்வாதிகளின் கூடப் பிறந்த கொடுப்புப் பற்களில் ஒன்றேயாயினும், தங்களால் அடகு வைக்கப்பட்ட பொருள், மதிப்புக் கூறிட இயலாத தியாகங்களினால் ஏற்றி வைக்கப்பட்ட இன விடுதலையின் உயிர்திரி என்பதை நினைக்கையில் ஒவ்வொரு தமிழனும் மயிர்க்கணுக்களினால் கூசிப் போகின்றான். அபிவிருத்தியும் பதவிகளும்தான் தேவையென்று இதே மக்கள் ஒரு கணமேனும் எண்ணியிருந்தால் கூட இன்றைக்கு வாதாடுவதற்கும் மனுவெழுதிப் போடுவதற்கும் நாக்குகள் கூட எஞ்சியிருக்காது இவர்கள் எவரிடமும். 'மறதி' வேட்பாளர்களின் பலம் 'மறவாமை' தான் வாக்காளரின் பலம், அடுத்த தேர்தல் வரை!!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபையில் இந்தியத் தலையீடுகள்

தி.ராஜ்

வடக்கு மக்கள் வாக்களிப்பதற்கு பூசிய மையின் ஈரம் காய்வதற்குள்ளேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் விருப்புகளுக்கு மாறாகச் செயற்படத் தொடங்கியிருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் முணுமுணுப்புக்களும் ஆரம்பித்துவிட்டன.

பிராந்திய வல்லரசான இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்குகின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் தொடர்ச்சியாக தெரிவிக்கப்படுகின்றன.

அமைச்சர்கள் தெரிவால் கூட்டணிக்குள்ளும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இப்படி ஆரம்பம் முதலே சர்ச்சைகளுக்குக் குறைவில்லாமல் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது வடக்கு மாகாண சபை.


நல்லிணக்கம்தான் முக்கியம்: கொழும்பில் குர்ஷித்துடன் சம்பந்தர்

### பின்னணி

வடமாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டதும், முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பிலான சர்ச்சை கூட்டமைப்புக்குள் உருவெடுத்தது. கூட்டமைப்பிற்குள் உள்ள பெரும் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா முதலமைச்சராகப் போட்டியிட முன்வந்த நிலையில் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கினார். இந்த இழுபறி சில நாள்கள் தொடர்ந்த பின்னர் ஏகமனதாகக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் தெரிவானார்.


நீங்கள் இல்லையேல் நான் இல்லை: குர்ஷித்துடன் விக்கி

இதற்கிடையில் மஹிந்த ராஜபக்ஷவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தனியே சென்று சந்தித்தார். மறுபுறம் முதலமைச்சர் வேட்பாளர் போட்டியில் நின்று கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு அழைத்துப் பேசப்பட்டிருந்தார்.

இதன் பின்னர் முதலமைச்சர் போட்டியிலிருந்து விலகுகிறார் என்று மாவை சேனாதிராசா அறிவித்தார்.

இவ்வாறு முதலமைச்சர் நியமனத்தில் தொடங்கிய சர்ச்சை, யார் முன் பாக முதலமைச்சர் பதவியேற்பது என் பது வரையில் நீடித்திருந்தது. ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ முன்பாக முதலமைச்சர் பதவியேற்றதைத் தொடர்ந்து அது முடிவுக்கு வந்தது.

கூட்டமைப்புக்குள் இருந்த ஏனைய கட்சித் தலைவர்கள், ஜனாதிபதி முன் பதவியேற்பதற்கான முடிவை எதிர்த்தனர். இந்த முடிவை சம்பந்தன் அறிவிப்பதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இவ்வாறு "ஜனாதிபதி முன்பாகப் பதவியேற்றால் என்ன என்று சம்பந்தன் கேட்கிறார்" என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கேட்டபோது ஏனைய தலைவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். பதவியேற்பு ஜனாதிபதி முன்பாகத்தான் நடைபெறும் என்று சம்பந்தன் அறிவித்த கூட்டத்தில்கூட அதேயளவு எதிர்ப்பு இருந்தது.

நல்லிணக்க நடவடிக்கையாகத்தான் இதனைச் செய்வதற்குக் கூட்டமைப்பு முன்வந்துள்ளது என்று சம்பந்தன் தெரிவித்தபோது. இலங்கை அரசுகள் ஒருபோதும் தமிழர்களுடன் நல்லிணக்கத்தைக் கடைப்பிடிக்கப் போவதில்லை என்றும் அப்படியொரு நோக்கம் அவர்களுக்குப் போரின்போதும் சரி போருக்குப் பின்னரும் சரி இல்லை என்றும் பங்காளிக் கட்சித் தலைவர் ஒருவர் ஆணித்தரமாகக் கூறியிருந்தார்.

எனினும் எதிர்ப்புகள் கருத்து முரண்பாடுகளுக்குப் பின்னர், தலைவர் சம்பந்தனின் முடிவை ஏனைய கட்சித் தலைவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். கூட்டமைப்பின் இந்த முடிவு பெரும்பாலான வடக்கு மக்களுக்கும் புலம்பெயர் வாழ் மக்களுக்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. போர்க் குற்றங்களுக்கு நீதியான சர்வதேச விசாரணை ஒன்றைக் கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதேபோர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஒருவரின் முன்பாகப் பதவியேற்பது முரண்பாடானதாகப் பலருக்கும் பட்டது. ஆனால் அதனைக் கூட்டமைப்புத் தலைவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை; உதாசீனம் செய்து விட்டார்கள். நல்லிணக்க நடவடிக்கையாகவே, ஜனாதிபதி முன் பதவியேற்கும் முடிவு எடுக்கப்பட்டது என்று விடுக்கப்பட்ட ஓர் அறிக் கையுடன் கூட்டமைப்பு இந்த விவகாரத்தை முடித்துக் கொண்டது.

### இந்தியாவின் பங்கு

கூட்டமைப்பின் இத்தகைய முடிவுகளுக்குப் பின்னால் பிராந்திய வல்லரசான இந்தியாவின் செல்வாக்கு அதீதமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்களும் பலமாக முன்வைக்கப்படுகின்றன. முதலமைச்சர் வேட்பாளர் போட்டியிலிருந்து மாவை சேனாதி ராசாவை விலகச் செய்தது முதல் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் இந்தியாவின் செல்வாக்கு அதீதமாக இருந்தது என்றே சொல்லப்படுகின் றது.

இந்தியாவின் தலையீட்டை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் இந்த வாரம் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருந்தார். யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தைச் சந்தித்த பின்னர் இந்தியப் பத்திரிகையாளர்களிடம் பேசினார் முதலமைச்சர்.

*தேர்தலை நடத்தமாட்டோம். 13ஆவது சட்டத்திருத்தத்தை நீக்குவோம் என்று சிறிலங்கா அரசு கூறிக்கொண்டிருந்த நிலையில், இந்தியாவினால்தான் என்னால் முதல்வராகப் பதவிக்கு வர முடிந்துள்ளது. ஏனெனில் இந்தியா கொடுத்த அழுத்தங்களினால்தான், வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டது.*

*இந்தியா என்னை நேரடியாகப் பதவிக்குக் கொண்டு வரவில்லை. ஆனால், 25 ஆண்டுகளுக்குப் பின்னர், வடக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்துவதில் இந்தியா பங்காற்றியது.*

*அதனால்தான் தேர்தல் நடந்தது. அதில் வெற்றி பெற்று, என்னால் முதல்வராக x ½| ›m |* என்றார் அவர்.

விக்னேஸ்வரனின் இந்தக் கருத்து, அவரையும் கூட்டமைப்பையும் விமர்சிப்பவர்களுக்கு அவல் கிடைத்த மாதிரியாக மாறிவிட்டது. வடமாகாண சபையில் இந்தியாவின் தலையீடு இதிலிருந்தே தெரிகின்றது என்று அவர் கூறியிருந்தார்.

அடுத்த ஆண்டு நடக்க இருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலின்போது ஈழத் தமிழர் விவகாரத்தால் தனக்குப் பாதகம் ஏற்படாத வகையில் காய்களை நகர்த்துவதற்கு வடக்கு மாகாண சபையை காங்கிரஸ் அரசு பயன்படுத்துகிறது என்கிறார்கள்.

**அடுத்த ஆண்டு இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கையில் ஈழத் தமிழர் விவகாரத்தால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க காய் நகர்த்துகிறது இந்திய அரசு.**

2009ஆம் ஆண்டு நடந்த இந்தியப் பொதுத் தேர்தலின்போது தமிழகத்தில் காங்கிரஸுக்கு எதிரான அலை பெரு நெருப்பாக எரிந்தது. இலங்கையில் போர் தீவிரம் பெற்றிருந்ததே அதற்குக் காரணம். வாக்களிப்பு நடக்கும் நாள்களில் போரை இலங்கை அரசு நிறுத்தி வைக்க வேண்டியளவிற்கு இந்தப் பிரச்சினை புதுடில்லிக்கு அழுத்தம் கொடுப்பதாக இருந்தது. அந்தத் தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி பலத்த அடி வாங்கியது. காங்கிரஸ் போட்டியிட்ட இடங்களில் எல்லாம் ஈழ ஆதரவுக் கட்சிகளும் இயக்கங்களும் காங்கிரஸை எதிர்த்துக் கடுமையான பரப்புரை செய்தன. அடுத்த தேர்தலிலிலும் அதுபோன்ற ஒரு நிலை ஏற்படுவதை காங்கிரஸ் அரசு விரும்பவில்லை. எனவேதான் தேர்தல் நெருங்குவதற்கு முன்னதாக வடக்குமாகாண சபைத் தேர்தலை நடத்தவைத்து அதில் தனக்கு இயைந்து போகக்கூடிய நிர்வாகம் ஒன்றை இருத்துவது இந்தியாவின் தேவையாக இருந்தது என்று கூட்டமைப்பை விமர்சிப்பவர்கள் கூறுகின்றார்கள்.

இத்தகைய விமர்சனங்கள் எல்லாவற்றையும் கடந்துதான் வடக்கு மாகாண சபை முன்னோக்கி நகர வேண்டியதாக இருக்கிறது. அதற்கு முன்பாக உள்ள சவால் நிர்வாக ரீதியானது மட்டுமல்ல அரசியல் ரீதியானதும்கூட.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி ஏற்பும் வகிப்பும்



சந்திரசேகர ஆஷாத்

வடமாகாண சபையின் முதலமைச்சருக்கான சத்தியப் பிரமாண நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றுவிட்டது. ஒரு நல்லிணக்க சமிக்ஞையாகவே முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் ஜனாதிபதி சார்பில் அப்படியானதொரு நல்லிணக்கம் எதுவும் வெளியிடப்பட்டதாக எவ்விததகவலும் இல்லை. குறிப்பாக மத்திய அரசுக்கும் வடமாகாண சபைக்கும் எதிர்காலத்தில் நிலவ வேண்டிய உறவுகள் தொடர்பாகவோ அவற்றைக் கையாள்வது தொடர்பாகவோ கூட எதுவுமே தெரிவிக்கவில்லை.

இந்தப் பதவிப் பிரமாணம் தொடர்பாக ஏற்கனவே பல்வேறு விதமான கருத்துகள் வெளியிடப்பட்டு பெரும் சர்ச்சைகள் நிலவின. ஏற்கனவே விக்னேஸ்வரன் கூட முதலமைச்சருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநரிடம் பெறச் சென்றபோது அவர் வெளியிட்ட சில கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. தன்னிடமோ ஜனாதிபதியிடமோ பதவிப் பிரமாணம் பெறாமல் நியமனக் கடிதத்தை வழங்க முடியாது என ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி மறுத்தபோது விக்னேஸ்வரன் சில சட்ட விளக்கங்களை அவருக்குக் கொடுத்திருந்தார். அதன் பின்பு சத்தியப்பிரமாணம் செய்யாமலே முதலமைச்சருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட பலரும் முதலமைச்சர் ஜனாதிபதி முன்போ ஆளுநர் முன்போ சத்தியப்பிரமாணம் செய்யமாட்டார்கள் என உறுதியாகத் தெரிவித்து வந்தனர். தமிழ் மக்களும் அதை விரும்பினர். பெரும் இனப்படுகொலையை நடத்தி எமது ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்தது மட்டுமன்றி தொடர்ந்து இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன் வடக்கின் முதலமைச்சராக ஒரு இலட்சத்துக்கு அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று மக்களின் பேராதரவைப் பெற்ற விக்கினேஸ்வரன் பதவிப் பிரமாணம் செய்வதை எமது மக்கள் விரும்பவில்லை. அதற்கான சட்ட வழிமுறைகளும் இருந்த காரணத்தால் அந்த நோக்கம் மேலும் உறுதியாகியது.

பெரும்பான்மையானோரின் கருத்துக்கள் இப்படியிருந்தபோதும் மாற்றுக் கருத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கத்தான் செய்தது. இப்படியான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதியுடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டார். அடுத்த நாள் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் பெரும்பான்மையோரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது சம்பந்தன் ஜனாதிபதி முன்பே சத்தியப்பிரமாணம் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

எல்லாவிதமான எதிர்ப்புகளும் புறந்தள்ளப்பட்டன. சில சிரேஷ்ட உறுப்பினர்கள் கூட்டத்தை விட்டே வெளியேறினர். எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ – சம்பந்தன் எடுத்த முடிவு கடந்த ஏழாம் திகதி அரங்கேற்றப்பட்டு பதவியேற்பும் நிறைவேற்றம் அடைந்தது.

ஒரு பதவியேற்பின் போது சத்தியப் பிரமாணம் செய்வது ஒரு சம்பவம்.

> **பெரும் இனப்படு கொலையை நடத்தி எமது ஆயுதப் போராட்டத் தைத் தோற்கடித்தது மட்டுமன்றி தொடர்ந்து இன ஒடுக்கு முறை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன் வடக்கின் முதலமைச்சராக ஒரு இலட்சத்துக்கு அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று மக்களின் பேராதரவைப் பெற்ற விக்கி னேஸ்வரன் பதவிப் பிரமா ணம் செய்வதை எமது மக்கள் விரும்பவில்லை.**

எவர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தாலும் சொல்லப்படுவது ஒரே வார்த்தைகள்தான். எனவே மேலோட்டமாகப் பார்க்கும்போது அது பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்திவிடும் எனச் சொல்லிவிட முடியாது.

ஆனால் இம்முடிவு தொடர்பாக ஜீரணிக்க முடியாத இரு முக்கிய விடயங்கள் உள்ளன. இப்படியான நிலை தொடருமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தைத் தக்க வைக்க முடியுமா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகிறது.

இம்முடிவு எடுக்கப்படும் போது பெரும்பான்மையோரின் கருத்துக்களோ, மக்களின் விருப்பமோ கருத்தில் எடுக்கப்படவில்லை. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகின்றது. குறிப்பாகச் சில சிரேஷ்ட உறுப்பினர்களின் கருத்துக்கள் கூட அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன. இது எதிர்காலத்தில் வடமாகாண சபையின் தலைமை தான்தோன்றித்தனமான போக்கைக் கடைப்பிடிக்கப் போகிறதா என்ற கேள்வியை எழுப்புகிறது. வேட்பாளர் தெரிவு, அமைச்சர்கள் நியமனம் போன்றவற்றில் முடிவு எடுக்க முடியாமல் இழுபறிப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்பிரச்சினையில் மட்டும் எப்படித் திடீர் முடிவை எடுத்தது. இப்படியான போக்கு எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மத்தியில் சர்ச்சைகளை ஏற்படுத்துவதுடன் தலைமை தனிமைப்படுத்தப்பட்டு புறமொதுக்கப்படும் நிலையையும் ஏற்படுத்தலாம். தமிழ் மக்கள் ஐக்கியத்துடன் ஒரே கருத்துடன் நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பிரமாண்டமான வெற்றியை வழங்கியமைக்காக தன்னின மக்களுக்குச் செலுத்தும் நன்றிக் கடன் இதுவாக இருக்க முடியுமா?

அடுத்து சத்தியப்பிரமாணம் ஜனாதிபதியின் முன்னிலையில் மேற்கொள்ளப்படுவதற்கு சொல்லப்பட்ட இரு காரணங்கள்.

ஒன்று நல்லெண்ண நடவடிக்கை. இரண்டாவது வெளிநாட்டுத் தூதர்கள் கேட்டுக் கொண்டமை. அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே ஒரு நல்லிணக்கம் உருவாவதை எவருமே மறுக்கப் போவதில்லை. ஆனால் அது எப்படியான நல்லிணக்கமாக இருக்க வேண்டும் என்பதே இன்று எழும் கேள்வி.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருவித நல்லிணக்கத்தைப் பேணி வருகிறார் அது அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் ஒடுக்கு முறைகளை [illegible] தற்குமான நல்லிணக்கம். வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் அவரின் நல்லிணக்கத்தைப் பூரணமாகவே நிராகரித்து விட்டனர்.

நல்லிணக்க சமிக்ஞை என்பது இரு தரப்பிலிருந்தும் வர வேண்டும். பதவியேற்றபின் பின்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முதலமைச்சர் அரசுடன் ஒத்து ழைத்து எமது மக்களின் பிரச் சினைகளை அணுகத் தயார் என்று தெரிவித்த பின்பும் கூட ஜனாதிபதி அதற்கான ஆக்கபூர்வ மான பதில் எதனையும் வழங்க வில்லை.

மாறாக ஜனாதிபதி இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றமே சிறந்த இடம் எனவும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் எடுக்கப்படும் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வே ஒரே வழி எனவும் பழைய பல்லவியையே திரும்பவும் பாடியுள்ளார். இதுவே இப்போதைக்கு ஜனாதிபதி காட்டிய நல்லிணக்க சமிக்ஞையாகும். எனவே இப்படியான நிலையில் இந்தச் சத்தியப்பிரமாணம் எப்படி ஒரு நல்லிணக்கத்துக்கான ஆரம்பமாக இருக்க முடியும்?

அடுத்தது வெளிநாட்டுத் தூதர்கள் கேட்டுக் கொண்டமைக்காகவே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

இது நிச்சயமாகத் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத பெரும் ஆபத்தான கருத்தாகும். இது தமிழ் மக்களின் சுயத்தையே கேள்விக்குள்ளாக்கும் கருத்தாகும். கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஒரு தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களின் முன் வைக்கப்பட்டது. அதை ஏற்றுக் கொண்டே மிகப் பெரும்பான்மை வாக்குகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கினர். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வழி நடத்த வேண்டியது அந்தத் தேர்தல் விஞ்ஞாபனமேயொழிய வெளிநாட்டுத் தூதுவர்களல்ல.

அதற்காக வெளிநாடுகளை நிராகரிக்கும்படி நாம் கோர வில்லை. அவர்களின் ஒத்துழைப் பின்றி நாம் எதுவும் செய்துவிட முடியும் என நம்பவும் இல்லை.

எம்மிடம் நியாயம் உண்டு. தர்மம் உண்டு [illegible] அநீதிகளை அனைவருமே ஏற்றுக் கொள்கின்றனர். எனவே எமது நிலைப்பாட்டை அவர்களுக்கு நாம் தெளிவுபடுத்த வேண்டும். அவர்கள் எமக்காகக் கொடுத்து வரும் குரலை மேலும் வலுப் படுத்த வேண்டும். அவர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக அவர்கள் எமக்கு ஆதரவு வழங்க நிலவும் சாதகமான நிலைமைகளைப் பலவீனப்படுத்திவிடக் கூடாது.

எனவே வெளிநாட்டுத் தூதர்கள் கேட்டுக் கொண்டார்கள் எனக் கூறிக் கொண்டு வெளிநாடுகள் இலங்கை அரசுக்குக் கொடுக்கும் அழுத்தங்களை நீர்த்துப் போக வைக்கும் காரியங்களில் நாம் இறங்கிவிட முடியாது.

எனவே ஜனாதிபதியின் முன்பு பதவியேற்பின் போது சத்தியப் பிரமாணம் செய்வதில் உள்ள சரி, பிழைகளை விட அந்த முடிவு எடுக்கப்பட்ட முறையும் அதற்காகக் கூறப்பட்ட காரணங்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. இதே விதமான தடம்புரளல்களோடுதான் முதலமைச்சரின் பதவி வகிப்பும் தொடரப் போகிறதோ என்ற அச்சத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கு அழுத்தங்கள் விடுக்கப்படும்போது பேச்சுக்களை ஆரம்பித்தோ நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்தோ பிரதம நீதியரசரை நீக்கியோ ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தோ அவற்றைத் நீர்த்துப் போக வைப்பதில் வல்லவர். அதே அடிப்படையிலேயே வடமாகாண சபைத் தேர்தலை நடத்தியுள்ளார். அவர் தனது தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிரான அழுத்தங்களிலிருந்து தப்ப வடமாகாண சபையின் தலைமையைப் பயன்படுத்த முனைவார் என்பதில் சந்தேகமில்லை.

இப்படியான சூழலில் வடமாகாண சபை தமிழ்மக்களுக்கு சாதகமாகச் செயற்படுவது கடினமாகவே இருக்கும். எனவே முதலமைச்சர் தனது பதவி வகிப்பை உறுதியுடனும் நிதானத்துடனும் கையாளவேண்டும்.

ஆனால் பதவியேற்பு தொடர்பாக முடிவு எடுக்கப்பட்ட விதமும் அதற்குக் கூறப்பட்ட காரணங்களும் நம்பிக்கையூட்டும் விதத்தில் இல்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

எனவே முதலமைச்சர் தனது பதவி, சட்டஅறிவு, நிர்வாகத் திறன் என்பதை சோரம்போக விடாமல் மிகவும் எச்சரிக்கையுடனும் தீர்க்க தரிசனத்துடனும் மேற்கொள்ள வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஆணையாகும். ஒன்றுபட்ட இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பர்வலாக்கம் என்ற இலக்கை நோக்கி உறுதியாக அவரின் பதவி வகிப்பு நகர வேண்டும் என்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண், குடும்பம், குழந்தைகள்

## பிரச்சினைகள் குறித்த சில அவதானங்கள்

காலத்தோடு ஒத்து இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே மாறிக் கொண்டிருக்கிறது. நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ எமது சூழலும் மாறுகிறது. இந்த மாற்றங்களுக்கேற்ப யாவுமே தம்மை இசைவாக்கிக் கொள்கின்றன. மரம், செடி, கொடியில் இருந்து நுளம்பு கூட இதற்கு விதி விலக்கல்ல. அப்படி இருக்கும் போது பெண்கள் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்?

பெண்களைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளாக வீடு, குடும்பம் சார்ந்த உழைப்பில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சமுதாய மாற்றங்களுடன் கால ஓட்டத்தில் அதற்கப்பாலும் பெண்ணின் உழைப்பு தேவைப்பட்டது. புராதன கம்யூனிஸ சமுதாயத்தில் இருந்து நிலப்பிரபுத்துவ அமைப்பு மாறிய போதும் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்களது வாழ்க்கை முறையிலும் அது மாற்றங்களை ஏற்படுத்தியது.

பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபட்ட போதும் குடும்பம் சார்ந்த உழைப்பையும் அவளே செய்ய வேண்டிய நிலை இருந்தது. வேலைகள் சமனாகப் பங்கிடப்படாமல் இரட்டைச் சுமையுள் அவள் அழுந்தினாள். அவளது சமூக உற்பத்திக்கான உழைப்பு இரண்டாம் தரமானதாகவே கருதப்பட்டது. மீண்டும் குடும்பத்துக்கான அவளது உழைப்பே வலியுறுத்தப்பட்டது. விரும்பவும் பட்டது. இவ்விரட்டிப்பு வேலைப் பளுவில் இருந்து பெண் விடுபட முனையும்போது அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக் கும் போது குடும்பத்துக்கு வெளியே உலகைக் காணவிளையும் போது மீண்டும் மீண்டும் அடக்கு முறைக்குள் பெண்ணைத் தள்ளு வதற்கான எதிர்ப்புக் குரல்கள் உயர்வாக ஒலிப்பது இயல்பானதுதான். ஏனெனில், மாற்றங் கள் ஏற்றுக்கொள்ள முடியாத வசதி களை அனுபவிக்க விரும்பும் அனை வருமே பெண் விடுதலை பெறுவதை விரும்பமாட்டார்கள். பெரும்பாலான மக்கள் மத்தியில் பெண் வேலைக்குப் போவதால்தான் குடும்ப உறவு சீரழிகிறது. பிள் ளைகள் சீரழிந்து போகின்றனர். போதைவஸ்து பாவிக்கின்றனர். தீய பழக்க வழக்கங்களால் அழிந்து போகின்றனர். அவர்களுக்கு அன்பு கிடைப்பதில்லை. குடும்ப உறவு அழிகிறது. சமுதாயம் நலிந்து போகிறது என்ற கருத்துக்கள் பரவலாக மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. பெரும்பாலான மக்கள் உண்மையைத் தரிசிக்க மறுக்கின்றனர். அவர்களது கூற்றுக்களில் உண்மை இல்லாமல் இல்லை. பிரச்சினைகள் எம்முன் உள்ளன.

ஆனால், இவர்கள் பெண்களுக்கு முன்வைக்கும் தீர்வுகள் தான் இன்றைய காலத் தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. பரிசீலிக்கப்பட வேண்டியவை.

பல ஆண்டுகளாக குடும்பம் சார்ந்த வேலைகளையே தனது கடமைகளாகச் செய்து வந்த பெண், சம அந்தஸ்துடன் குடும்பத்துக்கு அப்பால் உள்ள உலகத்தின் உள்ளும் தனது பங்களிப்பை செய்ய விழையும் போது குடும்பம் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. காலம் காலமாக பெண்களது கைகளில் இருந்த சமையலறை, குடும்பம் என்பன மற்றவர்களுக்கும் பங்கிடப்படும்போது அவ்வேலைகளில் குறைபாடும், நேர்த்தி யின்மையும் ஏற்படுவது தவிர்க்க முடியாது. அதுவே நிரந்தரமானதல்ல. அதற்கான தீர்வு கள் வைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் போது பிரச்சினைகளும் மறைந்து போகும்.

இப்பிரச்சினை ஒரு சமுதாயப் பிரச்சினை. தனிப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் பிரச்சினையாக கருத முடியாது. குடும்ப அமைப்புகளை பேணுவதற்கு பெண்களை மீண்டும் வீட்டில் மட்டும் உழைப்பை வழங்குவதற்காக அதாவது தனது குடும்பத்தைக் காக்கும் பணி பெண்ணினது அதற்காக அவள் வீட்டுக்குள் போயிருந்து வேலையைக் கவனிப்பதுதான் வழி என்ற கருத்தை ஒருபோதும் ஏற்க முடியாது. உதாரணமாக தற்காலக் குழந்தைகள் பால் குடித்து வளர்வதில்லை. தாய்மார் வேலைக்குப் போவதால் பால் கொடுப்பதில்லை. இதனால் பிள்ளைகள் நலிந்து போகின்றன. எனவே, பெண்கள் வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்து பிள்ளை வளர்க்க வேண்டும் என்று கூறுவது தவறு. பிள்ளைக்கு தாய்ப்பால் கொடுக்க முடியவில்லையென்றால் அது ஒரு தனிப் பெண்ணின் பிரச்சினை அல்ல. சமுதாயத்தின் பிரச்சினை. இதற்கான தீர்வை பரந்த மனத்துடன் ஆராய்ந்து தீர்வுகாண வேண்டும். பால் ஒரு பிள்ளைக்கு எவ்வளவு காலம் கொடுப்பது சிறந்தது என்பது அறியப்பட்டு அந்நாள்களை தாய்மாருக்கு விடுமுறையாக வழங்க வேண்டும். நோர்வே, கனடா, டென்மார்க், சுவீடன் போன்ற நாடுகளில் பாலூட்டும் தாய்மார்களுக்கு, பாலூட்டும் நேரங்கள் என குறுகிய நேர விடுமுறைகள் அமுலில் உள்ளன.

இப்பிரச்சினைக்கு மாற்றுத் திட்டங்களைப் பற்றி நாமும் யோசிப்பது அவசியம். பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு அதற்கான தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும். அதை விடுத்து கேலியாகவும் கிண்டலாகவும் குடும்பத்தைச் சீரழிக்கும் பாவிகளாகப் பெண் சித்திரிக்கப்படுவது ஆணாதிக்கச் சிந்தனை முறையின் மேலாட்சியைக் காட்டுகிறது.

இன்றைய காலம் குடும்ப அமைப்பையே கேள்விக்குள்ளாக்குகிறது. கணவன், மனைவி, குழந்தைகள் என்ற குடும்ப அலகே பெண் களின் அடிமைத்தனத்துக்கும் அடக்குமுறைக் கும் காரணம் என்று தீவிரப் பெண்ணிய வாதிகள் கருதுகின்றனர். சமுதாய உற்பத்தி முறைமை அதன் உறவுகள், கலாசார விழுமியங்கள். என்பவற்றிற்கேற்ப குடும்ப அமைப்பு காலத்துக்கு காலம் மாறி வந்துள் ளது. எமது இன்றைய சமூக முறைமை ஐம்பது அறுபதுகளில் இருந்ததைவிடவும் எவ்வளவோ மாறிவிட்டது. பெண்கள் சமுதாய வேலைகளில் பங்களிப்பதால் குடும்பம் சிதைவுறுவதாக கூறுவதானது மிகவும் தவறான கருத்தியல்பு ஆகும். குடும்பம் பற்றிய கோட்பாடுகள் முன்னைய சமூக வாழ்வு முறைக்கேற்ப இயல்பாக்கம் அடைந்ததாக இருப்பதால் இன்றைய வாழ்வு முறைக்கேற்ப அவை தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

தகவமைத்துக் கொள்ளும் வரையான காலத்தில் குடும்பம் சீரழிந்ததாகப்படுகிறது. இவை சிதைவுகளல்ல. மாறாக அமைப்பு புதிய நிலைக்கு ஏற்ப மாற்றுருப் பெறும் போக்கில் ஏற்படும் உடைவுகள் அல்ல, வளர்ச்சிகள் என்றே கொள்ளப்பட வேண்டும். அப்போது தான் வளர்ச்சியைக்கூட ஒரு பயன் விளைவுள்ள வளர்ச்சியாக மாற்றுவதில் எமது பங்களிப்பை வழங்க முடியும். இன்றைய குடும்ப அமைப்பின் போக்கை விமர்சித்து, பல்வேறு கருத்துக்கள் உருவாகி வருகின்றன. குடும்பம் இன்றைய ஜனநாயக சமூக அமைப்பினுள் உள்ள ஒரு வடிவம் என்பதால் குடும்பத்தில் கணவன், மனைவி குழந்தைகளுக்கிடையிலான உறவினையும் ஒரு ஜனநாயகப் பிரச்சினையாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்று மாக்ஸியப் பெண்ணிலை வாதிகள் ஒரு பிரிவினர் கருதுகின்றனர். இன்னொரு சாரார் குடும்பம் என்னும் வழமையான முறைகளை மீறி, ஆணும் பெண்ணும் தம்மால் சேர்ந்து வாழ முடியும் என்று விரும்பும்போது எத்தகைய சம்பிரதாய பூர்வமான திருமண முறைகளு மற்ற புரிந்துணர்வு, சமத்துவம் என்ற அடிப்படையில் சேர்ந்து வாழல் என்ற முறைமையினை மாற்றக் கருதுகின்றனர். எவ்வாறாயினும் சமூகத்தில் பெண்களின் சம உரிமை, சம அந்தஸ்து என்ற விடயங்கள் அக்கறை இன்றி பெண்ணிலைவாதம் பற்றித் திறந்த மனதுடன் ஆராய யார் மறுத்தாலும் குடும்பம் பற்றிய கேள்விகள் எழுதப்பட்டுத்தான் வருகின்றன.

காலச் சக்கரம் தனது பாதையில் நகர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அதைத் தடுப்பது என்பது சூரியனை கைகளால் மறைக்க நினைப்பது போலத்தான்!. எனவே இவ்வாறான மாற்று அமைப்புகள் அல்லது மாற்று வழிமுறைகள் பற்றிய கணிப்பீட்டை நிதானமாக உருவாக்கிக் கொள்ளவேண்டும். ஆகவே, சமுதாயம் தொடர்பான புதிய சிந்தனைகளுக்கு வழிகோலும், வாழ்வுக்கும் அர்த்தம் சேர்ப்பதாக அமையும்.

# மூன்றாவது குளம் எதற்கு?



ஊரில் மற்றவர்களின் வீட்டை விடவும் நவீன வசதிகள் கொண்ட புதியதொரு வீட்டைக் கட்ட வேண்டும் என்ற விருப்பம் ஜம்புலிங்கத்துக்கு எழுந்தது. தன்னிடமுள்ள பணத்தையெல்லாம் கொட்டி மிகப் பெரிய வீட்டை கட்டிமுடித்தார். ஊரில் உள்ளவர்கள் எல்லாம் வியக்க வேண்டும் என்பதற்காக தடல்புடலாக புதுமனைப் புகுவிழாவை நடத்தினார். விழாவுக்கு வந்தவர்கள் விருந்து முடிந்ததும் வீட்டைச் சுற்றிப் பார்க்க கிளம்பினர். அவர்கள் எல்லோரும் ஒரு விசயத்தை பார்த்து ஆச்சரியப்பட்டனர். ஜம்புலிங்கத்தின் வீட்டிலிருந்த மூன்று நீச்சல் குளங்களைப் பார்த்துத் தான். வழக்கமாக ஒரு சொகுசு வீட்டில் ஒரு நீச்சல் குளம் தான் கட்டுவார்கள் அதனையும் மீறி ஏன் மூன்று குளங்களைக் கட்டினார்கள் என்று அவர்களுக்கு ஒரே குழப்பம். தங்கள் குழப்பத்தை நேரடியாவே ஜம்புலிங்கத்திடம் கேட்டும் விட்டார்கள். அதற்கு ஜம்புலிங்கம் பொறுமையாக பதில் சொன்னார். முதலாவது நீச்சல் குளத்தைக் காட்டி,

" இது குளிர் நீரில் நீந்த விரும்புவோருக்கு கட்டியது." என்றார். அடுத்த குளத்தைக் காட்டி " எல்லோருக்கும் எப்போதும் குளிர் நீரில் நீந்துவது பிடிக்காது அதனால் வெந்நீரில் நீந்துவோருக்காக இரண்டாவது குளத்தைக் கட்டினேன்." என்றார். " அப்படியானால் நீரேயற்ற இந்த மூன்றாவது குளம் எதற்கு?" என்று வந்தவர்கள் கேட்டனர். அதற்கு ஜம்புலிங்கம் இப்படிச் சொன்னார்.

" இந்த உலகில் பிறந்த எல்லோருக்குமே நீந்தத் தெரியும் என்று [illegible] தெரியாதவர்களுக்குத் [illegible] தண்ணீர் இல்லாமல் கட்டினேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமாவுக்கு வயது 100



அசை போட
ஒரு விடயம் 95

தமிழ் சினிமாவின் 100 ஆவது ஆண்டு விழாவை தமிழ் நாட்டில் சினிமாத் துறையினர் கொண்டாடத் தொடங்கியிருக்கிறார்கள். ஆரம்பகால படங்கள், நடிகர் நடிகைகள், சினிமா கதைகள், கவிதைகள், இசைப் பாடல்கள் எல்லாம் இப்பொழுது மீள் இறக்கம் செய்யப்பட்டு திரை அரங்குகளிலும், தொலைக் காட்சிகளிலும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

தமிழ் சினிமாவின் ஆரம்பம் பேசாத படங்கள் தாம். அந்தப் படங்களை மட்டுமல்ல பிற்காலத்தில் பேசும் படங்கள் வந்த பிறகும் கூட அவைகளில் காணப்பட்ட தெய்வீக பாத்திரங்களை அந்தக் காலத்து மக்கள் உண்மையானவை என்று கருதி ஒரே படத்தை பல தடவைகள் பார்த்தவர்களும் அந்தப் படங்களில் வந்த தெய்வங்களை கும்பிட்டு வணங்கியவர்களும் கூட உண்டு.

அண்மையில் ஒரு நண்பரைச் சந்தித்தபோது பழைய சினிமாப் படங்கள் அவைகளில் நடித்தவர்கள் பற்றியெல்லாம் உரையாட நேர்ந்தது. பேசாத படங்களில் இருந்து இன்று வெளிவந்து கொண்டிருக்கும் நவீன தொழில்நுட்பங்களுடனான படங்கள் வரை பார்த்து இரசித்து அவை பற்றிய சில பல அபிப்பிராயங்களையும் வெளியிடக் கூடியவரான அவர் தாம் பார்த்த பழைய படங்கள் மற்றும் அது தொடர்பான வேறு விடயங்கள் பற்றி எல்லாம் தன் போக்கில் கூறிய பலவற்றை இங்கு அவர் கூறியபடியே தொகுத்து தருகிறேன்.

நான் மிக சிறுவனாக இருந்தபோது எங்கள் ஊருக்கு கொட்டகை சினிமா தியேட்டர்கள் தான் வருடத்துக்கு இரு தடவைகள் வரும். குறிப்பிட்ட ஓர் இடத்தில்மெழுகுசீலையால் ஆன பெரிய கூடாரங்கள் அமைத்து படம் காட்டுவார்கள்.



தியேட்டருக்கான எல்லா பிரிவுகளும் தனித்தனியாக உடனுக்குடன் நிர்மாணிக்கும் விதத்தில் கொண்டு வந்திருப்பார்கள். பெரிய கொட்டகை போடுவதற்கென்று ஒரு பிரிவினர். அவர்கள் கொட்டகைக்கான கூரை, பார்ப்பவர்கள் இருப்பதற்கான அமைப்புகள், படம் காட்டப்படுவதற்கான வெண்திரை அனைத்தையும் கவனித்துக் கொள்வார்கள்.

படம் ஓடிக்கொண்டிருக்கும் போதும், மற்ற வேளைகளில் பாட்டுகள் போடுவதற்குமான ஒலிபரப்புப் பெட்டி திரைக்குப் பின்பக்கமாக அமைத்திருப்பார்கள். படத்தில் வரும் பாத்திரங்கள் பேசும் போது அவர்களின் வாயசைப்புக்கு ஏற்றாற் போல் ஒலிபெருக்கியில் வார்த்தைகள் வருவதால் சனங்கள் அந்தப் பாத்திரங்கள் உண்மையாகவே பேசுவதாக எண்ணி ஆச்சரியத்தில் மூழ்கிப் போவார்கள்.

படத்தைப் பார்க்க மக்கள் அமர்வதற்கான பெரிய கூடாரத்தை அமைக்க ஒரு குழுவினர் செயற்படுவது போலவே ஏனைய பகுதிகளையும் அமைப்பதில் அது அதற்குரிய குழுக்கள் செயற்படுவார்கள். திரையில் படத்தை காட்டுவதற்கான பிரிவு அல்லது அறை கொட்டகையின் இன்னொரு பகுதியில் வெண்திரைக்கு நேர் எதிரில் அமைக்கப்படும். அந்த அறைக்கான பலகைகள், கதவுகள், ஜன்னல்கள் யாவும் 'றெடிமேட்' ஆக கொண்டு வந்திருப்பார்கள். படம் காட்டுவதற்கான கருவிகள் (Projectors) இந்த அறையில் இருந்தே செயற்படும். அதேபோல் படம் காட்டுவதற்கும் வேறு இன்னோரன்ன தேவைகளுக்குமான மின்சார பிறப்பாக்கி இயந்திரம் வேறோர் பகுதியினரால் அமைக்கப்படும். இவை தவிர கூடாரத்தைச் சுற்றி வேலி அமைத்தல் டிக்கெட்டுகள் வழங்குவதற்கான சிறு கொட்டில்களை நிறுவுதல் போன்ற வேலைகளும் ஏக காலத்தில் இடம்பெறும். நான் சிறுவனாக இருந்த படியால் பாடசாலை போகாத நேரங்களில் ஏனைய சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டு இந்த வேலைகள் நடைபெறுவதை அவதானிப்பதுண்டு. இவ்வாறு கூடாரங்கள் அமைத்து ஆங்காங்கே படம் காட்டும் பணியில் இம்பீரியல் டாக்கீஸ் என்ற நிறுவனமே ஈடுபடுவதைக் காணக்கூடியதாகவிருந்தது.

முதன் முதலில் நான் படம் பார்த்தது இம்மாதிரி கொட் டகை ஒன்றில்தான். வளர்ந்தவர்களுக்கு கலரி என்றால் 35 சதமும் சிறுவர்களுக்கு 25 சதமும் அப்போது வசூலிக்கப்பட்டதாக ஞாபகம். 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு இலவசம். நான் அவ்வாறு மூத்தவர்களுடன் சேர்ந்து கொண்டுபோய் இலவசமாக பல தடவைகள் படம் பார்த்ததுண்டு. முக்கியமான ஒரு படத்தைப் பார்க்க வேண்டும் என்று தோன்றினால் டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே செல்பவர்களில் எவராவது தெரிந்தவர்களாய் இருந்தால் அவர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு உள்ளே போய் விடுவேன். வளர்ந்த பிறகு அந்தவித சலுகை அனுமதிக்கப்படவில்லை.

கூடாரங்களினுள்ளே கலரிக்கான ஆசனம் வெறும் பலகைகளை வாங்குகள் போல் இடைவெளி விட்டு அமைத்திருப்பார்கள். இந்தப் பகுதி திரையை அண்டிய முன் பகுதியில் இருக்கும். 2 ஆம் பகுதி சிறு மரக் கதிரைகள். அவைகளுக்கான கட்டணம் அதிகம். அதைவிட முதல் வகுப்புகளுக்கு பெரிய மரத்திலான நாற்காலிகள் போடப்பட்டிருக்கும். பணம் படைத்தவர்களும் பெரிய உத்தியோகம் பார்ப்பவர்களும் மட்டுமே இந்த முதலாம் வகுப்புக்கு டிக்கெட் எடுப்பார்கள். அதிலும் மிக முக்கிய மனிதர்களுக்கென்று தனியாக ஆசனங்கள் போட்டிருப்பார்கள்.

படம் காட்டப்படுவதற்கு முன்னர் அன்றைய தினம் காலையில் இருந்தே பல இடங்களிலும் மாட்டு வண்டில்களில் பட அலங்காரங்களுடன் சென்று படத்தைப் பற்றி பரப்புரை நடத்தப்படும். அதற்கென மேளம் மற்றும் தாளக் கருவிகளுடன் இசை முழங்கிக் கொண்டு போவார்கள். படத்தைப் பற்றிய துண்டுப் பிரசுரங்களையும் வீசுவார்கள்.



இவ்வாறான கொட்டகை யொன்றில் நான் பார்த்த முதல் படம் எனக்கு நினைவில்லை. ஆனால் அந்தக் காலத்தில் வெளிவந்த படங் களையும் பல தடவைகளிலும்

## இளைஞர்களின் சினிமா பைத்தியம்

சினிமாவைப் பற்றி இன்றைய இளைஞர்கள் கூடிநின்று அரட்டை அடிப்பது போல் அந்தக் காலத்திலும் இளைஞர் கள் அரட்டை அடிப்பதுண்டு. இளைஞர்களுக்கு சினிமா பைத்தியம் என்பது ஒரு குறிப்பிட்ட வயதில் கட்டாயம் (பெரும்பாலும்) வந்தே போகின்றது.

அந்தக் காலத்தில் எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த பெரும் பாலான படங்களையும் நான் பார்த்ததுண்டு. அசோக் குமார், சிவகவி, ஹரிதாஸ், சத்தியசீலன், அமரகவி போன் றவை இதில் அடங்கும். பி.யு. சின்னப்பா நடித்து வெளிவந்த உத்தமபுத்திரன், தயாளன், அரிச்சந்திரா, கிருஷ்ணபக்தி போன்றவற்றையும் பார்த்துள்ளேன்.

அசோக்குமார் படத்தில் பாகவதர் பாடியிருந்த "உன்னைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ" என்ற பாடல் மிகப் பிரசித்தம். அந்தப் படத்தில் அசோகனாக கே.கே.பெருமாள் என்பவரும், அவருடன் பிரபல நடிகை கண்ணாம்பாவும் அரசன் அரசியாக நடித்திருந்தார்கள். புத்தபெருமானாக ரஞ்சன் நடித்திருந்ததாக ஞாபகம். அரச குமாரனாக வரும் பாகவதரின் மெய் பாதுகாவலராக எம்.ஜி.ஆர். நடித்திருந்தார்.

பிற்காலத்தில் சிவகவி படத்தில் "வள்ளலைப் பாடும் வாயால் ஆறு தலைப் பிள்ளையைப் பாடுவேனோ" என்று எம்.கே.டி. பாகவதர் பாடி வெளிவந்த பாட்டுக்கு ஏகப்பட்ட கிராக்கி இருந்தது. அது போலவே ஹரிதாஸ் படத்தில் அன்னையும் தந்தையும் தானே, மற்றும் கிருஷ்ணா முகுந்தா முராரே என்ற பாடல். அந்தக் காலத்தில் கிராம போன் பெட்டிகள் மிகக் குறைவு. எங்காவது தேநீர்க் கடைகளில் அல்லது பெரிய வர்த்தக ஸ்தாபனங்களில் இந்தப் பாடல்கள் கிராமபோன் தட்டுகளில் பாட வைப்பார்கள். கிராமபோன் பாடல்களும் குறைவு. சிங்களப் பாடல்கள் கிராம போன் தட்டுகளில் அதிகமாக வராத காலம் என்பதால் சிங்களக் கடைகளிலும் கூட சிங்களப் பாடல்களுடன் இந்த தமிழ்ப் பாடல் களையும் பாட வைப்பார்கள்.



பி.யு.சின்னப்பா நடித்து வெளிவந்திருந்த தயாளன் படத்தில் ஒரு கட்டத்தில் பல்வேறு வாத்தியங்களை வாசித்துக் கொண்டு ஒரே மேடையில் பல உருவங்களில் சின்னப்பா பாடுவதாக ஒரு காட்சியுண்டு. நமக்கினி பயமேது என்ற பாடலை அவரே பாடுவார்.

அதேவித்மான ஒரு காட்சி பிற்காலத்தில் சிவாஜிகணேசன் நடித்து வெளிவந்திருந்த திருவிளையாடல் படத்தில் ரி.எம்.சௌந்தரராஜன் பாடி வெளி வந்திருந்தது. "பாட்டும் நானே பாவமும் நானே" என்பது அந்தப் பாடல்.

**படம் காட்டப்படுவதற்கு முன்னர் அன்றைய தினம் காலையில் இருந்தே பல இடங்களிலும் மாட்டு வண்டில்களில் பட அலங்காரங்களுடன் சென்று படத்தைப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவந்தத்தின் பிரயோகம்

அவர்களெல்லாம் என்னிடம் வந்த புது நோயாளிகள். என்னிடம் இருந்ததெல்லாம் ஆல்சன் என்ற பெயர் மட்டுமே.

"தயவுசெய்து எவ்வளவு விரைவாக வரமுடியுமோ அவ்வளவு விரைவாக வரவும். என் மகள் மிகவும் நோயுற்றிருக்கிறாள்."

நான் சென்றடைந்தபோது சந்திக்கையில் மிக கலவரமாக நேர்த்தியாய் மன்னிப்பேங்குவதாய் காணப்பட்ட தாய், "நீங்கள்தான் டொக்டரா?" என்று மட்டும் கேட்டுவிட்டு உள்ளே விட்டாள். "எங்களை மன்னிக்கவேண்டும். அவளை சமையலறையில் இருக்க வைத்திருக்கிறோம். அங்கே கதகதப்பாக இருக்கிறது. சில சமயங்களில் இங்கே ஈரமாக இருக்கிறது" என்று பின்னாலிருந்து சொன்னாள்.

முழுமையாக உடுத்தப்பட்டிருந்த குழந்தை சமையல் மேசை அருகே தன் தந்தையின் மடியில் அமர்ந்திருந்தது. அவர் எழுந்திருக்க முயன்றபோது, சிரமப்பட வேண்டாம் என்று கையமர்த்திவிட்டு என்னுடைய மேல் கோட்டை கழற்றிவிட்டு எல்லாம் எப்படி இருக்கிறது' என்று கவனிக்க ஆரம்பித்தேன். அவர்கள் பதற்றமாக என்னையே யோசனையுடன் பார்த்தபடி இருப்பதைக் கவனித்தேன். பெரும்பாலும் இத்தகைய ஆட்கள் தாங்கள் என்ன சொல்லவேண்டுமோ அதற்கு அதிகமாக ஏதும் சொல்லுவதில்லை. சொல்லவேண்டியதெல்லாம் நான்தான் சொல்லவேண்டும். அதற்குத்தான் அவர்கள் என்னிடம் மூன்று டாலர்கள் செலவழிக்கிறார்கள்.

உறைந்த நேரான பார்வையுடன் வேறெந்தவித முகபாவமும் அற்று அக்குழந்தை என்னைத் தின்பதுபோல பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அசைவற்று உள்முக அமைதியாய் வழக்கத்திற்கு மாறான சின்னஞ்சிறு வசீகரமாக இளம் கிடாரியைப் போன்ற உறுதியான தோற்றத்தில் காணப்பட்டாள். ஆனால் அவள் முகம் செம்மையோடி இருந்தது. வேகமாக மூச்சுவிட்டபடி இருந்தாள். அவளுக்கு உக்கிரமான காய்ச்சல் இருப்பதை உணர்ந்தேன். புசுபுசுத்த அற்புதமான செம்பொன்னிற கேசம். விளம்பர ஏடுகளிலும் ஞாயிற்றுக்கிழமை நாளேடுகளின் சிறப்பு புகைப்பட பகுதிகளிலும் வரும் குழந்தைகளில் ஒன்றைப் போன்று.

அவளுக்கு மூன்று நாள்களாக காய்ச்சல் இருக்கிறது. எதனால் வருகிறது என்று தெரியவில்லை என்று தந்தை ஆரம்பித்தார். "பொதுவாக எல்லோரும் கொடுப்பதைப் போல என் மனைவியும் ஏதேதோ கொடுத்துப் பார்த்தாள். ஆனால் ஏதும் சரியாகவில்லை. ஏதோ வியாதி இருக்கிறது. நீங்கள் நன்றாக பார்த்துவிட்டு என்னவென்று சொல்லுவீர்கள் என்று உங்களை அழைத்து வந்தோம்."

எப்போதும் மருத்துவர்கள் செய்வதைப் போன்றே பரிசோதனையின் துவக்கப் புள்ளியாய் ஏதோ செய்தேன்.

"அவளுக்கு தொண்டையில் வலி இருக்கிறதா?"

"இல்லை இல்லை. தொண்டை ஏதும் வலிக்கவில்லை" என்கிறாள் என்று இருவரும் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

"தொண்டை வலிக்கிறதா?" என்று குழந்தையை பார்த்து தாய் கேட்டாள். அவள் முகபாவத்தில் எந்த மாற்றமும் இல்லை. தன் பார்வையை என் முகத்திலிருந்து அகற்றவும் இல்லை.

"நீங்கள் பார்த்தீர்களா?"

"பார்க்க முயன்றேன். ஆனால் என்னால் பார்க்க முடியவில்லை" என்றாள் தாய்

"பொதுவாக நடப்பது போல, பள்ளிக் கூடத்தில் நிறைய பேருக்கு தொண்டை அழற்சி நோய் இருந்தது. அந்தச் சமயத்தில்தான் இவள் அங்கு போய்க்கொண்டிருந்தாள். நாங்கள் யாரும் அதைப்பற்றி இதுவரை பேசவில்லை என்றாலும் அதுவாகத்தான் இருக்குமென்று நினைத்துக் கொண்டிருந்தோம்."

"சரி! தொண்டை எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்" என்று ஒரு மருத்துவனுக்கே உரிய தொழிற்கலைப் புன்னகையுடன் குழந்தையின் பெயரைக் கேட்டுவிட்டு "மதில்டா..வாயைத் திற.. தொண்டை எப்படி இருக்கிறது பார்க்க லாம்" என்றேன். ஏதும் பலனில்லை.





"பொதுவாக நடப்பது போல, பள்ளிக் கூடத்தில் நிறைய பேருக்கு தொண்டை அழற்சி நோய் இருந்தது. அந்தச் சமயத் தில்தான் இவள் அங்கு போய்க்கொண்டி ருந்தாள். நாங்கள் யாரும் அதைப்பற்றி இதுவரை பேசவில்லை என்றாலும் அதுவாகத்தான் இருக்குமென்று நினைத் துக் கொண்டிருந்தோம்.

"எங்கே ஆ காட்டு.. நன்றாக வாயை திறந்து காட்டு பாக்கலாம்" என்று தாஜா செய்தேன். "இதோ பார்!" என்று என் இரு கைகளையும் அகல விரித்து காட்டி கைகளில் ஒன்றும் இல்லை. வாயை திற. பார்க்கிறேன் என்றேன். "எவ்வளவு நல்லவர் பார். உன்னிடம் எவ்வளவு அன்பாக இருக்கிறார் பார்த்தாயா! அவர் என்ன சொல்றாரோ அதைச் செய். உன்னை ஒன்றும் செய்துவிடமாட்டார்" என்றாள் தாய்

நான் எரிச்சலில் பல்லைக் கடித்துக்கொண்டேன். ஒன்றும் செய்துவிட மாட்டார் என்று மட்டும் சொல்லாமல் இருந்திருந்தால் நான் ஏதாவது செய்திருப்பேன். ஆனால் அவசரப்படகூடாது நிதானமிழக்க கூடாது என்று மெதுவாகவும் மென்மையாகவும் பேசியபடி மறுபடி குழந்தையை அணுகினேன்

என்னுடைய நாற்காலியை சற்றே அருகில் நகர்த்தியபோது திடீரென்று சீறும் பூனையைப் போல அனிச்சையாக கை விரல்களை நகம் போல விரித்தபடி என் கண்களைக் குறிவைத்து வீசி ஏறக்குறைய தொட்டுவிட்டாள். என் கண்ணாடி எகிறிப்போய் சில அடிகளுக்கு அப்பால் சமயலறை தரைமேல் உடையாமல் விழுந்தது.

தாயும் தந்தையும் ஒரு கணம் தர்ம சங்கடத்திலும் மன்னிப்பேங்கும் பாவத்திலும் விக்கித்துப் போய் நின்றார்கள். "என்ன மோசமான பெண் நீ?" என்ற தாய், கைகளைப் பிடித்து அவளைக் குலுக்கியபடி சொன்னாள். 'நீ என்ன செய்துவிட்டாய் பார்த்தாயா! எவ்வளவு நல்ல மனிதர்!'

நான் இடைமறித்து "கடவுள் புண்ணியம்.. என்னை நல்லவன் என்று அவளிடம் சொல்லாதே. அவளுக்கு தொண்டை அழற்சி நோய் இருந்து அதனால் அவள் இறந்து விடக் கூடுமே என்பதற்காக அவள் தொண்டையை பரிசோதிக்கவே வந்திருக்கிறேன். ஆனால் அவளுக்கு அதைப்பற்றி ஒன்றும் கவலை இல்லை."

"இங்கே பார்! உன் [illegible] பார்க்கவேண்டும். [illegible] கொள்ளக்கூடிய அளவு வளர்ந்த பெண் நீ. இப்போது நீயே திறக்கிறாயா அல்லது நாங்கள் திறக்கட்டுமா?" என்று அக்குழந்தையிடம் சொன்னேன்

எந்தவோர் அசைவும் இல்லை. அவளுடைய முக பாவனைகூட மாறவில்லை. அவளுடய மூச்சு மட்டும் வேகவேகமாக வந்து கொண்டிருந்தது. பிறகு போராட்டம் ஆரம்பித்தது. நான் அதை செய்தாகவேண்டி இருந்தது. அவளுடய பாதுகாப்பிற்காக தொண்டை பரிசோதனை செய்யவேண்டி இருந்தது. ஆனால் அது உங்கள் பாடு என்று பெற்றோர்களிடம் முதலிலேயே சொல்லிவிட்டேன். அபாயம் என்ன என்பதை விவரித்துவிட்டு. அவர்கள் பொறுப்பேற்காத வரை நான் தொண்டைப் பரிசோதனைக்கு கட்டாயபடுத்தமாட்டேன் என்று சொல்லி விட்டேன். மருத்துவர் சொன்னபடி செய்யாவிட்டால் ஆஸ்பத்திருக்கு போக வேண்டிவரும் என்று தாய் மிகக்கண்டிப்பாக அவளிடம் சொன்னாள். "ஆமாம்! ஆமாம்!" என்று எனக்குள் முறுவலித்தபடி சொன்னேன். இந்த சண்டிக் குழந்தை மேல் பிரியப்பட ஆரம்பித்துவிட பெற்றோர்கள் வெறுப்பேற்றுபவர்களாக தோன்றினார்கள்.

தொடர்ந்த போராட்டத்தில் அவர்கள் மிக கொடுமையான வர்களாக, நொறுங்கிப்போன வர்களாக ஒய்ந்துபோக, அவள் என்னைக் குறித்த பேரச்சத்தில் பித்தேறிய கோபத்தின் உச்சத்தை அடைந்திருந்தாள்.

தந்தை தன்னால் முடிந்த அளவு முயன்றார். அவர் பெரியவராக இருந்தாலும் அவள் அவருடைய மகள் என்பதும் அவளுடைய நடத்தை உண்டாக்கிய அவமானமும், அவளை துன்புறுத்தி விடுவோமோ என்ற அச்சமும் நான் வெற்றி பெற்று விடநேர்ந்த முக்கியமான தருணத்தில் அவளை நெகிழவிட்டு விடச் செய்ததில், அவரைக் கொன்று விடலாமென்றிருந்தது.

அவளுக்கு தொண்டை அழற்சி நோய் இருக்குமோ என்ற அவருடைய திகில் என்னை மென்மேலும் பணியைத் தொடரச் சொன்னாலும் அவர் கிட்டத்தட்ட மூர்ச்சையாகி விடும் [illegible] அவருடைய மனைவி [illegible]னால் முன்னும் பின்னு மாய் அலைந்துகொண்டு அச்சத்தின் துயரத் தில் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

அவளை உங்கள் மடி மீது வைத்துக்கொண்டு மணிக்கட்டுகளை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று கட்டளை இட்டேன். ஆனால் அவர் அப்படி செய்த உடனே அவள் வீறிட்டாள். "வேண்டாம் வலிக்கிறது. கையை விடுங்கள். விடுங்கள் என்கிறேனே!" என்று உச்சக் குரலில் கீச்சிட்டு பயங்கரமாக வெறிபிடித்தவளாய் கத்தினாள். "வேண்டாம். வேண்டாம். என்னை சாகடிக்கிறீர்கள்!"

"அவள் இதைத் தாங்குவாள் என்று நினைக்கிறீர்களா டொக்டர்?" என்று தாய் கேட்டாள்

"நீ வெளியே போ!" என்ற கணவன் அவள் டிப்தீரியாவில் சாக விரும்புகிறாயா என்றான் மனைவியிடம்.

"வா! வந்து இப்போது பிடித்துக் கொள் அவளை" என்றேன்.

பிறகு என் இடது கையால் குழந்தையின் தலையை இறுகப் பற்றி, நாக்கை அழுத்தும் சிறிய மரக்கரண்டியை அவள் பற்களுக்கு இடையில் செலுத்தினேன். அவள் பற்களைக் கடித்துக்கொண்டபடி தீர்மானமாய் போராடினாள். ஆனால் இப்போது நானும் ஒரு குழந்தையிடம் சினம் கொண்டவனாக மாறினேன். என்னை மட்டுப் படுத்திக்கொள்ள முயன்றேன்: முடியவில்லை. ஒரு பரிசோதனைக்குத் தொண்டையை எப்படி திறந்து பார்ப்பது என்பது எனக்கு தெரியும். என் ஆகச்சிறந்த பணியை நான் செய்தேன்.

ஒருவழியாய் மரக்கரண்டியை கடைசி பற்களுக்கு அப்பால் செலுத்தி வாய்க்குழியை அடைந்தபோது, ஒரு கணம் வாயைத் திறந்தவள் என்னவென்று பார்ப்பதற்குள் மறுபடி சட்டென மூடிக்கொண்டு தன் கடைவாய்ப் பற்களுக்கிடையே அம்மரத் தகட்டை இறுக்கி, நான் மீட்பதற்குள் அதைப் பிளந்து விட்டிருந்தாள்.

"உனக்கு வெட்கமாக இல்லையா? ஒரு டாக்டரிடம் இப்படி நடந்து கொள்ள உனக்கு வெட்கமாக இல்லையா?" என்று தாய் கத்தினாள்.

வழவழப்பான கைப்பிடி உள்ள தேக்கரண்டி போல் ஏதாவது இருந்தால் கொண்டு வாருங்கள் என்று தாயிடம் கேட்டேன். நாங்கள் இதிலேயே ஈடுபட்டிருந்தோம். குழந்தையின் வாய் ரத்தம் கசிய ஆரம்பித்திருந்தது. நாக்கு வெட்டுப்பட்டு வெறிபிடித்தவளாய் கீச்சிட்டுக் கத்திக் கொண்டிருந்தாள். ஒருவேளை நான் அப்படியே நிறுத்திவிட்டு ஒரு மணி நேரமோ அல்லது அதற்கு மேலோ நேரம் கழித்து வந்திருக்கவேண்டும். அது நிச்சயமாக நல்லதாக இருந்திருக்கும். சந்தேகமே இல்லை. ஆனால் இது போன்ற நேரங்களில் கவனக் குறைவால் படுக்கையில் இறந்து கிடந்த ஓரிரு குழந்தைகளை பார்த்திருக்கிறேன். இப்போது பரிசோதிக்கவிட்டால் பிறகு எப்போதுமே முடியாது என்று உணர்ந்ததால் விடாமல் தொடர்ந்தேன். ஆனால் இதில் மோசமான விஷயம் என்னவென்றால் நானும் சற்று நியாயம் மீறி போய்விட்டிருந்தேன். என்னுடைய ஆத்திரத்தில் அக்குழந்தையை பிளந்து போட்டுவிட்டு குதூகலித்திருப்பேன். அவளை அப்படி தாக்குவது என்பதொரு சுகம். என் முகம் அதில் கனன்றுகொண்டிருந்தது.

தரித்திரம் பிடித்த இந்த சனியன் அவளுடய அசட்டுத்தனத்தில் இருந்து காப்பற்றப் படவேண்டும் என்றுதான் இம்மாதிரியான சமயங்களில் ஒருவர் தங்களுக்கே சொல்லிக் கொள்ளவார்கள். மற்றவர்கள் அவளிடமிருந்து காப்பற்றப் படவேண்டும். இது ஒரு சமூக தேவை. இவை எல்லாமே நிஜம்தான். ஆனால் கண்மண் தெரியாத ஆத்திரம், பெரியவர்களின் அவமான உணர்ச்சி, முரட்டுத்தனத்திற்கு பழகிய ஏக்கம் இதெல்லாம் இயங்கு காரணிகள். இறுதி வரை போகவேண்டியதாகிறது. நியாமான காரணமற்ற என் இறுதித்தாக்குதலில் அக் குழந்தையின் கழுத்தையும் தாடையையும் என் வலுவை பிரயோகித்து அடக்கி வழிக்கு கொண்டுவந்தேன்.

கடினமான வெள்ளி தேக்கரண்டியை அவளது பற்களுக்குப் பின்னால் செலுத்தி அவள் ஒங்காளிக்கும்வரை தொண்டையில் அழுத்தினேன். ஆ! அது அங்கே இருக்கிறது. படலங்களால் மூடப்பட்ட இரு உள்நாக்குகள். அவ ளுடைய ரகசியத்தை நான் அறிந்துவிடாம லிருக்க அவள் தீரமாக போராடினாள். இது மாதிரியான ஒரு விளைவிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக குறைந்த பட்சம் மூன்று நாள்களாக தொண்டை ரணத்தை மறைத்துக்கொண்டு தன் பெற்றோர்களிடம் பொய் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறாள்.


இப்போது அவள் நிஜமாகவே ஆத்திரமாக இருந்தாள். இதுவரை தற்காப்பாகவே இருந்தாள். ஆனால் இப்போது தாக்கினாள். தன் தந்தையின் மடியிலிருந்து இறங்கி என் மீது பாய முயன்ற போது தோல்வியின் கண்ணீர் அவள் பார் வையை மறைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை

அழகிய பாண்டியன்




அடுத்தபடியாக, இனி எந்த மென்பொருளைத் தயாரிக்கலாம்? என்று பில்கேட்ஸ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட போதுதான் அவரது நினைவில் உடனே பளிச்சிட்டது ஸ்ப்ரெட் ஷீட். இதுவும் இருவகை உபயோகத்துக்கான ஒரு மென்பொருள்தான். எப்படி வேர்ட் புரொஸசர் (word Processor) பயன்பட்டதோ அப்படியே இந்த ஸ்ப்ரெட் ஷீட் (Spread Sheet) மென்பொருள் கணக்கு வழக்குகள் பார்ப்பதற்குப் பயன்பட்டது.

ஊழியர்களின் சம்பளக் கணக்கு முதல், நிறுவனத்தின் உற்பத்திக் கணக்கு வரையில் பிழையில்லாமல் விரைவாகச் செய்து முடிப்பதற்கு உதவக் கூடிய மென்பொருளே இந்த ஸ்ப்ரெட் ஷீட் (Spread Sheet).

ஒவ்வொரு அலுவலகத்துக்கும் நிறுவனத்துக்கும் இது முக்கியம் என் பதை உணர்ந்த பில்கேட்ஸ் ஸ்ப்ரெட் ஷீட் (Spread Sheet) வகை மென்பொருளைத் தயாரிக்க முடிவு செய்தார்.

இதேவகை மென்பொருளை ஏற்கனவே 'லோட்டஸ்' நிறுவனம் 'லோட்டஸ் 1-2-3' என்ற பெயரில் வெளியிட்டு மாபெரும் வெற்றியை பெற்றிருந்தது. ஸ்ப்ரெட் ஷீட் (Spread Sheet) மென்பொருள் துறையில் முடிசூடா மன்னனாக விளங்கியது லோட்டஸ்.

இதற்கடுத்து வேறு இரு நிறுவ ! ! ¡ ˄ அடுத்தடுத்த இடங்களில் இருந்தன. 'லோட்டஸ் 1-2-3' மென்பொருளின் விற்பனையால் லோட்டஸ் நிறுவனம் கோடிக் கணக்கில் டொலர்களை அள்ளிக் குவித்துக் கொண்டிருப்பதைக் கண்ட பில்கேட்ஸால் சும்மா இருக்க முடியவில்லை.

இதை மிஞ்சும் வகையில் ஒரு ஸ்ப்ரெட் ஷீட் (Spread Sheet) மென்பொருளைத் தயாரித்துவிட்டால், லோட்டஸ் நிறுவனத்துக்குச் சென்று கொண்டிருக்கும் கோடிகள் எல்லாம் மைக்ரோசொஃப்டுக்குத் திரும்பிவிடும் என்று நினைத்தபோதே "உடனே செயலில் இறங்கு" என்று பில்கேட்ஸின் மூளை கட்டளையிட்டது.


மைக்ரோசொப்ட் தயாரித்த ஸ்ப்ரெட் ḷ ៖ (Spread Sheet) இற்கு மைக்ரோசொப்ட் எக்ஸெல் என்று பெரியிடப்பட்டது. லோட்டஸ் 1-2-3 இல் இருந்ததைக் காட்டிலும் கூடுதலான வசதிகள் இதில் சேர்க்கப்பட்டு 1985 இல் மைக்ரோசொஃப்ட் எக்ஸெல் வெளியான போது முதலில் பெரிய வெற்றியைப் பெற முடியாமல் தடுமாறினாலும் இறுதியிலும் மாபெரும் வெற்றியை எட்டியது.

1990 களின் கடைசியில் லோட்டஸ் 1-2-3 இரண்டாம் இடத்துக்குச் செல்ல, மைக்ரோசொஃப்ட் எக்ஸெல் முதலிடத்துக்கு முன்னேறியது.

இந்த வெற்றிக்குப் பிறகே சாப்ட்வேர் துறையில் மைக்ரோ சொஃப்ட் நிறுவனம் சூப்பர் ஸ்டார் அந்தஸ்தை அடைந்தது. லோட்டஸ் நிறுவனத்தை வீழ்த்திய மைக்ரோசாஃப்டை அமெரிக்க மக்கள் அதிசயமாகவும் வியப்பாகவும் பார்க்கத் தொடங்கினர்.

ஆரம்பத்தில் லோட்டஸ் 1-2-3 இற்குப் போட்டியாக ஸ்ப்ரெட் ஷீட் (Spread Sheet) தயாரிக்க பில்கேட்ஸ் இறங்கியபோது மைக்ரோசொஃப்டின் முன்னணித் தலைவர்களே அதனை விரும்பவில்லை. காரணம், லோட்டஸின் பிரமாண்டம் அப்படி.

பில்கேட்ஸைப் பொறுத்தவரை 'பிரமாண்டம் என்பது நிறுவனத்தின் பெயரில் இல்லை; அது உற்பத்தி செய்கின்ற பொருளின் தரத்தில் இருக்கிறது என்று நினைப்பவர். தான் நினைத்தபடியே தரமான தயாரிப்பின் மூலம் மென்பொருள் கோட்டையைப் பிடித்து மகாராஜாவானார் பில்கேட்ஸ்.




# பாரதி எனும் விசித்திரன்

எஸ்.ராமகிருஷ்ணன்

பாரதி! தமிழுக்கு தீயாய் வேலை செய்யக் கற் றுக்கொடுத்த உண்மைத் தமிழன். தன் எழுத்துக்களால் தமிழர்களிடம் சுதந்திர வேட்கை நெருப்பைப் பற்றியெரிய வைத்தவன். அதுவரை இருந்த தமிழ் நடைக்கே புதிய பாதை போட்டுக் கொடுத்தவன். சமூகத்தின் எல்லாக் கட்டுக்களையும் உடைத்தெறிந்து கொண்டு உண்மையான சுதந்திரத்தை வேண்டி நின்ற உத்தம ஆத்மா அவன்.

பாரதி பற்றி நிறையப் படித்திருக்கிறோம்; கேட்டிருக்கிறோம். ஆனால் பார்க்க பழகக் கொடுத்து வைத்தவர் தமிழகத்தின் நெல்லை மாவட்டத்தின் விக்கிரமசிங்கபுரத்து சன்னதித் தெருவில் வசித்த கல்யாண சுந்தரம். இன்று அவர் இல்லை. ஆனால் இலக்கிய இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் நான் அவரைச் சந்தித்த போது, பழைய வீடொன்றில் உள்ளே மர நாற்காலியில் அமர்ந்தபடி தன் நினைவுகளின் நதியில் நீந்திக் கொண்டிருந்தார் கல்யாண சுந்தரம். வயது 92. முதுமையின் அசதியான உடல் என்றாலும் பேச்சு உடையவில்லை. ஞாபகம் சீராகப் பாய்கிறது. பாரதியாரோடு பழகிய தன் சிறுவயதுக் காலத்தை நினைவுபடுத்திப் பேசிக் கொண்டேயிருக்கிறார். கேட்பதற்கு மிகுந்த உற்சாகத்தோடும், ஈர்ப்போடும் இருக்கிறது.

இனி அவரே பேசுவார்...

1919ஆம் ஆண்டு பாரதியார் கடையத்துக்கு வந்தார். அப்போ நான் சின்னப் பையன். புதுசா எது வந்தாலும் வேடிக்கை பாக் கிற மாதிரிதான் பாரதியாரைப் பார்க்கப் போனேன். அவர் மனைவி செல்லம்மா வீடு அக்ரஹாரத்தில் இருந்தது. அவர் மனைவியோட சகோதரர் அப்பாத்துரை தான் பாரதியாரை கவனிச்சுக்கிட்டு இருந்தார்.



ரொம்ப மிடுக்கான ஆளு. குரல் கம்பீரமா இருக்கும். தெருவிலே பட்டாளத்துக்காரர் மாதிரி நடந்து போவாரு. சாயங்காலமாச்சுன்னா கல்யாணியம்மன் கோயிலுக்குப் போவாரு. அவருக்கு அக்ரஹாரத்தில மதிப்பே இல்லை. யாரோடயும் சேரவும் மாட்டாரு. அவங்களும் இவரை ரொம்பத் தாழ்வாத்தான் நடத்தினாங்க.

ஒரு நாள் ஊருக்கு வெளியில ஒரு கழுதை குட்டியோடு படுத்துக் கிடந்தது. கழுதைக் குட்டிகிட்டே போய் பாரதி உட்கார்ந்துகிட்டு அதைத் தடவித் தடவி விட்டுக்கிட்டு, கொஞ்சிகிட்டே இருந்தாரு. சின்னப் பிள்ளைகளுக்குத் தர்ற மாதிரி முத்தமெல்லாம் குடுத்தாரு. பார்க்கிறவங்க இந்த ஆளுக்குப் புத்தி கெட்டு போச்சுன்னு சொல்லிகிட்டு இருந்தாங்க. பாரதி அதைப் பத்தியெல்லாம் கவலைப்படலை.

அப்ப நான் பள்ளிக்கூடத்தில படிச்சுக்கிட்டு இருக்கேன். பத்து, பனிரெண்டு வயசு இருக்கும். பாரதியாரோட மகள் சகுந்தலா நான் படிச்ச ஸ்கூல்ல சின்ன வகுப்பிலே படிச்சுக்கிட்டு இருந்தா. நான் பாரதியாரைப் பார்க்கப் போனா வீட்டில திட்டு வாங்க. யாருக்கும் தெரியாம தான் போயி பார்ப்பேன். என் வயசு பையன்க நாலஞ்சு பேர் தினம் போயி அவரைப் பாத்துப் பேசுவோம். அவரு எங்களைக் கூட்டிக்கிட்டு ஊரை விட்டு வெளியே வந்து ஏதாவது இடத்தில உட்கார்ந்துகிட்டு பேசிகிட்டு இருப்பாரு. அக்ரஹாரத்தில இருந்த ஆட்கள் அவரைக் கண்டா முகத்தைத் திருப்பிக்கிடுவாங்க. அப்பாத்துரை மட்டும் தான் அத்திம்பேர்னோ, ஓய்! பாரதின்னோ கூப்பிட்டுப் பேசுவார்.



லஹரி வஸ்துகள் உபயோகிக்கிற பழக்கம் இருந்துச்சு. அதைப் புகைக்க ஏற்பாடு பண்றதுக்கு ஆறுமுகம்னு ஒருத்தன் இருந்தான். புகைகுழல் ஏற்பாடு பண்ண வீட்டுக் கிணற்றில இருக்கும் கயிற்று நுனியை வெட்டி எடுத்துக்கிடுவாரு. அது சன்னமா இருக்கும். அதை மெல்லுசாப் பொசுக்கி அதை ஈரத்துணியிலே சுத்தி ஏற்பாடு செய்வாங்க. அவர் கண்ணு அப்போ துடிச்சுக்கிட்டேயிருக்கும்.

எப்பவாவது அவர் கவிதைகளைப் பாடுவாரு. எழுதி வச்சதப் பாடுறாரா, இல்லை இப்போ தான் புனைந்து பாடுறாரான்னு தெரியாது. ஆனா எதிரே இருக்க ஆள் மயங்குகிற மாதிரி பாடுவாரு.

ஸ்வதந்திர கீதங்கள், பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு இது போன்ற புஸ்தகங்களை எல்லாம் நாலணா, எட்டணாவிற்கு விற்பாரு. நாங்க வாங்கிப் படிப்போம்.

ஒரு ஆறு மாசமா பாரதியைத் தினம் பார்ப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். "தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலைநிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.



# மனித குலமும் தமிழ்த் தேசியமும்...



(கடந்த வாரத் தொடர்ச்சி)

கி.பி. 14 ஆம் நூற்றாண்டு வரை தமிழகம் வடநாட்டுப் பேரரசு எதற்கும் உட்படாமல் தனித்தே திகழ்ந்தது. அசோகர் பேரரசு முதல் அக்பர் பேரரசு வரை அவர்களின் ஆளுகைக்குட்படாத ஒரு நாடாகத் தமிழகம் விளங்கிற்று. ஆனால் அந்நியரின் வாள்முனைக்கு அடிமைப்படாத தமிழகம் வடமொழிப் பண்பாட்டுக்கு அடிமைப்பட்டது. சமஸ்கிருதம் பேசிய பார்ப்பனர் தங்களின் உடல் வலிமையால் தமிழகத்தை வெல்லவில்லை. மாறாகப் பண்பாட்டுப் படையெடுப்பு நடத்தி நமது மொழியையும் இனத்தையும் நாட்டையும் சீரழிக்க முயன்றனர். அவர்களின் இந்த முயற்சியைத் தொல்காப்பியர் காலம் முதல் தமிழர்கள் எதிர்த்துப் போராடி வந்திருக்கின்றனர்.

தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்கணக்குநூல்கள் முதலியன தொகுக்கப்பட்டதற்கு அடிப்படையே தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் அழியாது பாதுகாக்க வேண்டும் என்கிற தமிழ்த் தேசிய உணர்வு தான் காரணமாகும். பழந்தமிழ் நூல்கள் இவ்வாறு தொகுக்கப் படாமல் போயிருந்தால் நமது இலக்கியங்கள் முற்றாக அழிந்து போயிருக்கும் என்பதில் ஐயமில்லை. இலக்கியங்கள் அழிந்திருப்பின் மொழி அழிந்திருக்கும். தமிழ் இனத்தின் தனித்தன்மை அழிந்திருக்கும். நல்லவேளையாக வட மொழியின் பண்பாட்டுப் படையெடுப்பிலிருந்து சில சேதாரங்



களுடன் நாம் தப்பினோம்.

தமிழர்களின் சேர நாடாக விளங்கிய இன்றைய கேரளத்தில் ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பு நடந்த போது அதை எதிர்க்கும் திறனின்றிச் சேர நாட்டுத் தமிழர் முற்றிலுமாகச் சீரழிந்தனர்.

மொழி திரிந்தது பண்பாடு கெட்டது. இது குறித்து மலையாள இலக்கிய அறி ஞரான எலம்குளம் குஞ்சன் பிள்ளை பின்வருமாறு கூறியுள்ளார்.

"சதுர்வர்ண தர்மத்தின் (சாதிமுறை) அடித்தளம் என்பது சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. கி.பி. 7 மற்றும் 8 ஆம் நூற்றாண்டுகளில் துளு நாட்டின் வழியாகப் பார்ப்பனர்கள் கேரள நாட்டில் புகுந்தார்கள். அங்கு நிலவிய புத்த மதத்தை அடியோடு அழித்துவிட்

சாதிய முறைகளை திணிப்பதற்காகவே புத்த மதத்தை ஒழிப்பதில் பிரபாகரனும், ஆதிசங்கரரும் தீவிரமாக ஈடுபட்டனர். கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் மற்றொரு ஆரியப் பெருங்கூட்டம் கேரள நாட்டில் புகுந்தது. 8 முதல் 11 ஆம் நூற்றாண்டுக்குள் கேரள நாடு முழுவதையும் சாதிய முறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டனர்.

இந்தக் காலகட்டத்தில் பொது ஒழுக்கங்கள் பற்றிய விதிகளைப் பார்ப்பனப் புரோகிதர்கள் வகுத்தார்கள். கோயில்களில் கடவுளுக்குத் தொண்டு செய்ய அழகான பெண்கள் அர்ப்பணிக்கப்பட வேண்டும். இத்தகைய பெண்கள் சமுதாயத்துக்குச் சொந்தமானவர்கள் என்னும் விதியையும் அவர்கள் வகுத்தார்கள்.

கேரளத்தில் நம்பூதிரிப் பார்ப்பனர்களின் பொதுச் சொத்தாகக் கருதப்பட்ட பெண்கள் சமுதாயத்தில் மதிப்புக்குரியவர்களாகக் கருதப்பட்டார்கள்.

பார்ப்பனர்களுக்கு முன்பாகத் தங்களின் மார்பகங்களை மறைத்துக் கொள்ளும் பெண்கள் ஒழுக்கங் கெட்டவர்களாகக் கருதப்பட்டனர். அத்தகைய பெண்கள் மரண தண்டனைக்கு உரியவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

மேல் சாதியைச் சேர்ந்த ஆண்களின் விருப்பத்துக்கு இணங்காத பெண்கள் ஒழுக்கம் கெட்டவர்களாகக் கருதப்பட்டு உடனடியாக மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

நாயர்கள் மற்றும் இதர கீழ் சாதியினர் பார்ப்பனர்களை மிக உயர்வாக மதித்தனர். புனித இனத்தில் புனிதமானவர்கள் என்றும் கருதி அவர்களை பூதேவர்கள் எனக் கூறி வணங்கினார்கள்.

கேரளத்தில் பார்ப்பனப் பண்பாட்டுப் படையெடுப்பு முழுமையான வெற்றியடைந்ததைப் போலத் தமிழ் நாட்டில் அடையவில்லை.

வட மொழிக் கலாசாரத்தின் விளைவாக மணிப் பிரவாள நடை, சாதியப் பிரிவுகள், தீண்டாமை போன்ற வேண்டாதவை தமிழ் நாட்டில் புகுந்து மொழி, சமுதாயச் சீரழிவுகளை ஏற்படுத்தின.

தமிழர்கள் வணங்கி வந்த தெய்வங்கள் ஆரிய தெய்வங்களுடன் இணைக்கப்பட்டன. கோயில்களில் சமஸ்கிருத வழிபாட்டு முறைகள் திணிக்கப்பட்டன. மன்னர்கள், கடவுள்கள், ஊர்கள் ஆகியவற்றின் பெயர்கள் வட மொழியில் மாற்றப்பட்டன. தமிழிசையும் பண்களும் வட மொழிப் பெயர் பெற்றன. தமிழர்களுக்கேயுரிய ஆடற்கலை பாரத நாட்டியமாயிற்று. சுருக்கமாகக் கூறினால் தமிழ் நாட்டில் வட மொழிப் பண்பாட்டின் தாக்கம் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்த இடைவிடாது முயன்றது. ஆனால் அதற்குத் தொடர்ந்து எதிர்ப்பையும் தமிழர் தெரிவித்தே வந்தனர்.

19 ஆம் நூற்றாண்டில் இராமலிங்க வள்ளலார், நீதிபதி வேதநாயகர், பேராசிரியர் சுந்தரனார், [illegible] கிருஷ்ண பாரதியார் [illegible] கள் தோன்றித் தமிழ் மறுமலர்ச்

வித்திட்டனர்.

20 ஆம் நூற்றாண்டில் டாக்டர் கால்டுவெல், ஜி.யு.போப் போன்ற மேனாட்டு அறிஞர்கள் தமிழின் தொன்மையையும் பெருமையையும் உலகம் உணரச் செய்தனர்.

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறைமலையடிகள், பரிதிமாற்கலைஞர் ஆகியோர் வட மொழியின் மரணப்பிடியிலிருந்து தமிழை மீட்டனர். அவர்களைத் தொடர்ந்து இலக்குவனார், தேவநேயப் பாவாணர் முதல் பெருஞ்சித்திரனார் வரை எண்ணற்ற

## தேசிய இனப் போராட்டங்கள்

தமிழறிஞர்கள் தனித் தமிழை வளர்த்தனர்.

சி.வை.தாமோதரனார், உ.வே. சாமிநாத அய்யர் போன்றோர் ஏட்டுச் சுவடிகளிலிருந்த பழம் தமிழ் நூற்களை அச்சு வடிவத்தில் கொண்டு வந்து உயிர்ப்பித்தனர்.

பாண்டித்துரைத் தேவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும் உமா மகேசுவரனார் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தையும் தோற்றுவித்துத் தமிழ்க் கல்விக்கும் தமிழ் ஆராய்ச்சிக்கும் மறுமலர்ச்சி ஏற்படுத்தினர்.

பாரதி முதல் பாரதிதாசன் வரை எண்ணற்ற கவிஞர்கள் தமிழின் சிறப்புக்குறித்தும்தமிழரின்மேன்மை குறித்தும் கவிதைகள் பாடி தமிழ்த் தேசியத்தை வளர்த்தார்கள்.

மேற்கண்ட அறிஞர் பெருமக்கள் எடுத்துக் கொண்ட அரிய முயற்சிகளின் விளைவாகத் தமிழ்த் தேசிய உணர்வுக்கு வலுவான அடித்தளம் இடப்பட்டது.

1937 ஆம் ஆண்டில் கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ் நாட்டில் பெரும் போராட்டம் வெடித்தது. தமிழறிஞர்களான கி.ஆ.பெ.விசுவநாதம், மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், கா.சுப்ரமணியபிள்ளை, தா.வே. உமா மகேசுவரனார் போன்ற தமிழறிஞர்களும் பெரியார், அறிஞர் அண்ணா, அண்ணல் தங்கோ, சி.டி. நாயகம் பட்டுக்கோட்டை அழகிரிசாமி போன்ற தமிழர் தலைவர்களும் ஒன்று கூடி இந்தி ஆதிக்கத்திலிருந்து தமிழைக்காக்கப் போராடினார்கள்.

இந்தப் போராட்டத்தில் தான் 'தமிழ்' நாடு தமிழருக்கே என்ற முழக்கம் பிறந்தது. இந்த முழக்கம் தமிழ்த் தேசிய உணர்வுக்கு வித்திட்டது.

தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகில் எந்த நாட்டு மக்களுக்கும் தேசிய இன உணர்வு என்பது தொன்று தொட்டு உருவாகி இருக்கவில்லை. கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் தான் முதன் முதலாக நவீன தேசிய இன உணர்வு என்பது தோன்றியது. எனவே தமிழர்கள் தேசிய இன உணர்வற்றவர்கள் என குற்றம் சாட்டுவது தவறானதாகும்.

தொல்காப்பியம் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரையிலும் மொழியுணர்வு மிக்கவர்களாகத் தமிழர்கள் விளங்கி வந்திருக்கிறார்கள். நூற்றாண்டு தோறும் பல்வேறு போராட்டங்கள்,மாற்றங்கள் ஆகியவற்றுக்கு நடுவே இலக்கியப் படைப்பாக்கம் என்பதும் அவற்றைப் பாதுகாப்பது என்பதும் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. சங்ககாலம், காப்பிய காலம், சமய இலக்கியகாலம், உரையாசிரியர் காலம், சிற்றிலக்கிய காலம் என அடையாளப் படுத்தப்பட்ட பல்வேறு காலகட்டங்களிலும் ஏராளனமான நூல்கள் உருவாக்கப்பட்டு மொழி அழியாமல் காக்கப்பட்டுள்ளது. புலவர்களுக்கும் பாணர்களுக்கும் மன்னர்களும் மக்களும், புரவலர்களாக விளங்கினார்கள். நமது மொழியை உயிரோட்டம் கொண்டதாக நிலை நிறுத்தும் முயற்சியில் அனைவருக்கும் பங்கிருந்தது. இந்த மொழியுணர்வுதான் நவீன தமிழ்த் தேசிய உணர்வாக வடிவம் கொண்டு வளர்ந்து வருகிறது.

**இலக்கியங்கள் அழிந்திருப்பின் மொழி அழிந்திருக்கும். தமிழ் இனத்தின் தனித் தன்மை அழிந்திருக்கும். நல்லவேளை யாக வட மொழியின் பண்பாட்டுப் படையெடுப்பிலிருந்து சில சேதாரங்களுடன் நாம் தப்பினோம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃப்ளோரென்ஸ் நைட்டிங்கேல்

## புள்ளியியல் பகுப்பாய்வின் முன்னோடி



பாஸ்கர் லட்சுமண்

ஃப்ளோரென்ஸ் நைட்டிங்கேல் என்றவுடன் பொதுவாக எல்லோர் நினைவிலும் வருவது விளக்குடன் ஒரு மங்கை மற்றும் செவிலியாக அவர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு. அவருடைய புள்ளியியல் துறைத் திறமை பற்றி நாம் எவரும் ஒருபோதும் அறிந்ததில்லை.

ஃப்ளோரென்ஸ் இத்தாலியிலுள்ள ப்ளோரென்ஸ் என்ற ஊரில் உயர்தர நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். அப்போது நிலவிய சமுதாயக் கருத்துக்களுக்கு மாறாக ஃப்ளோரென்ஸின் பெற்றோர்கள் பெண்கள் படிப்பதை ஆதரித்தனர். ஆசிரியரை வைத்து பிரெஞ்சு, தாவரவியல் மற்றும் பூகோளம் ஆகியவற்றை நைட்டிங்கேலுக்குக் கற்பித்தார்கள். ஃப்ளோரென்ஸ் மீது மிக்க பாசம் கொண்ட தந்தை, கல்லூரிப் பாடங்களை வீட்டில் வைத்து தாமே கற்றுக் கொடுத்தார். ஃப்ளோரென்ஸுக்குக் கணிதம் கற்பதில் அதிக ஆர்வம் இருந்தது. தந்தையின் உதவியுடன் கிரேக்க கணித மேதை யூக்ளிட் எழுதிய தீ எலிமெண்ட்ஸ் (The elements) என்ற வடிவ கணிதவியல் (Geometry) புத்தகத்தைக் கற்றார்.

ஃப்ளோரென்ஸ் இளமைப் பருவத்தை தன் அறிவுத் திறமையை முடிந்த அளவு வளர்த்துக் கொள்வதிலேயே கழித்தார். சிறு வயதிலேயே தோட்டத்தில் விளைந்த காய்கறிகள் மற்றும் பழங்கள் குறித்த தரவுகளை அட்டவணைப் படுத்தியது, ஃப்ளோரென்ஸிற்குப் புள்ளியியல் மீது ஆர்வத்தை ஏற்படுத்தியது.

ஃப்ளோரென்ஸின் தந்தை ஓர் உறவினரின் பெருஞ் செல்வத்திற்கு வாரிசான பிறகு, அவருக்கு இங்கிலாந்தில் இருந்த பணக்காரர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. அதன் மூலம் ஃப்ளோரென்ஸ், விக்டோரியன் காலத்து அறிவாளர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். அதனால் கணிதத்தின் மீது அவருக்கு ஆர்வம் அதிகரித்தது. அதன் பின்னர் தினமும் இரண்டு மணி நேரம், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்த ஒருவரிடம் கணிதம் கற்றார். இந்தக் கணித ஆர்வம் புள்ளியியல் மீது அவருடைய பாடுபாட்டை மேலும் தூண்டிவிட்டது. அவர் பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவ மனைகள் குறித்த தகவல்களைச் சேகரித்து, அவற்றைப் புள்ளியியல் விவரங்களாகத் தொகுத்தார். அத்தகவல்களை ஆராய்ந்தபோது அதிலிருந்த சில ஒழுங்குகளையும் கவனித்தார்.

இளமையில் இவருக்கு மருத்துவமனைகளில் பணியாற்ற வேண்டும், செவிலியாக வேண்டும் என்ற கனவு மேலோங்கியது. தான் செவிலியாவது கடவுளின் அழைப்பு என்றும் கருதினார். அதனால் அவர் மத்திய தரத்தினரின் பண்பாட்டு வழக்கமான திருமண வாழ்க்கை என்ற சுழலில் சிக்கவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏழையாக, படிப்பறிவு அதிகமில்லாத பெண்களே செவிலிகளாகப் பணியாற்றி வந்தனர். அதனால் ஃப்ளோரென்ஸின் விருப்பத்தை அவரின் பெற்றோர்கள் எதிர்த்தனர். ஃப்ளோரென்ஸின் விடாப்பிடியான எண்ணமும், ஆர்வ மிகுதியும் அவரின் கனவு நனவாகக் காரணமானது.

1853ஆம் ஆண்டு ரஷ்யாவிற்கும், சில ஐரோப்பிய கூட்டணி நாடுகளுக்கும் இடையே துருக்கிப் பகுதியில் இருக்கும் க்ரைமீயன் தீபகற்பம் என்ற இடத்தில் போர் நடைபெற்றது. போரில் பாதிக்கப்பட்ட வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதில் உதவ ஆர்வம் காட்டினார் ஃப்ளோரென்ஸ். க்ரைமீயன் போரில் இங்கிலாந்தின் படைகளுக்கு மருத்துவ சேவை செய்யும் பிரிவுக்குத் தலைமை ஏற்றவர் ஃப்ளோரென்ஸின் வாழ்நாள் நண்பர் சிட்னி ஹெர்பர்ட், ஃப்ளோரென்ஸைத் துருக்கியில் இருந்த இங்கிலாந்தின் பொது மருத்துவ மனைகளில் பெண் செவிலியர்கள் பிரிவின் கண்காணிப்பாளராக நியமித்தார். ஃப்ளோரென்ஸ் முப்பத்தெட்டு செவிலியர்களுடன் துருக்கிக்கு புறப்பட்டார்.

க்ரைமீயன் குடாப்பகுதிக்கு வந்த ஃப்ளோரென்ஸுக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு ஸ்கூட்டாரி (Scutari) என்ற இடத்தில் இருந்த மருத்துவமனையில் படுக்கைகளோ, போர்வைகளோ, உணவோ, சமைக்கும் பாத்திரங்களோ இல்லாத நிலைமையைக் கண்டு மிகவும் வருந்தினார். மேலும் எலிகள் நடமாட்டம் தாராளமாக இருந்தது. பொதுவான சுகாதார சூழல் மிகவும் மோசமாக இருந்தது. மருத்துவ ஆவணப்படுத்தல் ஓர் ஒழுங்கில்லாமல் செய்யப்பட்டதோடு, பொதுவான சிகிச்சை முறைகள் பின்பற்றப்படாததால் ஒரே வியாதியை வெவ்வேறு விதமாகப் பட்டியலிடுவதால் ஏற்படும் குழப்பங்கள் எனப் பல பிரச்சினைகள். போர் வீரர்களின் இறப்பு எண்ணிக்கையும் சரியாக கணக்கிடப்படவில்லை.

அக்காலத்தில் பெண் செவிலியர்கள் மருத்துவ மனைகளை சுத்தப்படுத்துவது, எடுபிடி வேலைகள் செய்வதற்கு மட்டும் பயன்படுத்தப் பட்டனர். நோயாளிகளைப் பராமரிப்பதில் ஈடுபடுத்தப்படவில்லை. ஃப்ளோரென்ஸ் போராடி இந்த நடைமுறையை மாற்றினார். மேலும் அவர் வியாதிகளை ஒரே முறையில் அட்டவணைப் படுத்துவது, மற்றும் இறப்பு எண்ணிக்கையைப் பதிவு செய்தல் போன்றவற்றை ஒழுங்குபடுத்தினார்.

போர் வீரர்களின் இறப்புக்கு மோசமான சுகாதாரமே காரணம் என்று கண்டறிந்தார். வியாதிகளை அல்லது போரில் ஏற்படும் காயங்களை விடவும் அது முக்கிய காரணி என்று கண்டறிந்தார். ஃப்ளோரென்ஸின் இந்தச் சீர்திருத்தங்களால் இங்கிலாந்திலிருக்கும் மருத்துவமனைகளில் நிகழும் இறப்பு விகிதத்தை விடவும் போரில் இறந்தவர்கள் விகிதம் குறைவான அளவிலேயே இருந்தது.

க்ரைமீயப் போர் முடிந்து இங்கிலாந்து திரும்பிய ஃப்ளோரென்ஸின் புகழ் நாடு முழுதும் கொண்டாடும் விதத்தில் உயர்ந்தது. அதனுடன் நின்று விடாமல் தொடர்ந்து செயலாற்றிய ஃப்ளோரென்ஸ், இங்கிலாந்தின் இராணுவ மருத்துவ முறைகளின் அடிப்படைகளை முழுவதையும் மாற்றி வருங்காலத்தில் போர்களில் மருத்துவ முகாம்களில் பெரிய அளவிலான உயிர் இழப்புகளைத் தடுக்க உதவினார். அதற்கு அவர் பயன்படுத்தியது தான் புள்ளியியல் பகுப்பாய்வு. அவர் முதல் ஏழு மாதங்களில் க்ரைமீயன் போரில் சேகரித்த புள்ளியியல் விவரங்களை இங்கிலாந்தில் அன்றைய காலகட்டத்தில் சிறந்த புள்ளியியலாளரும், இன்று தொற்றுநோயியலாளராக அறியப்பட்டவருமான (உ)வில்யம் ஃபார் (William Farr) உடன் சேர்ந்தியங்கி, புள்ளியியல் ஆய்வுக்கு உட்படுத்தினார். அதில் 60 சதவீதமான போர் வீரர்கள் இறப்பதற்கு காரணம் சுகாதாரம் இன்மையால் ஏற்படும் வியாதிகளே என்ற முடிவுக்கு இருவரும் வந்தனர். மேலும் போர் நடவாத சாதாரண காலங்களில் வீரர்களின் இறப்பு விகிதம் இங்கிலாந்திலும் மற்றும் வெளிநாட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக இருந்தது என நிறுவினார். இந்த மருத்துவப் புள்ளியியல் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஆய்வறிக்கையை இராணுவ மற்றும் மருத்துவ அலுவலகத்திற்கும் அனுப்பினார். இதன் விளைவாக மருத்துவப் புள்ளி யியல் என்ற புது ஆய்வுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

இதனுடன் நிற்காமல் ஃப்ளோரென்ஸ் லண்டனிலிருந்த மருத்துவ மனைகளைப் பற்றி புள்ளியியல் விவரங்களைத் தயாரித்தார். இதிலிருந்து மருத்துவத் தகவல்களை ஆவணப்படுத்துவதில் இருந்த பல குறைகளைக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். ஒரே மருத்துவப் படிவங்களை எல்லா மருத்துவமனைகளும் பயன்படுக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத் தார். புள்ளியியல் விவரங்களை முன் வைப்பது மற்றும் அதிலிருந்து கிடைக்கும் முடிவுகளை ஆவணப்படுத்துவதில் ஃப்ளோரென்ஸுக்கு இருந்த திறமையைப் பாராட்டி வில்லியம் ஃபார் அவரைப் புள்ளியியல் சொசைட்டியின் ஆய்வுக்கூட்டாளராக நியமித்தார். ஃப்ளோரென்ஸ்தான் இந்த பெருமைக்குரிய முதல் பெண்.

தன்னுடைய சீர்திருத்தங்களை விளக்கும் முகமாக, ஃப்ளோரென்ஸ் மருத்துவமனைக் குறிப்புகள், செவிலியரின் சிகிச்சைமுறை பற்றிய குறிப்புகள் (Notes on Hospital - 1859, Notes on Nursing-1859) என்ற இரண்டு புத்தகங்களை எழுதினார்.

### முனை பரப்பளவு வரைபடம் (Polar Area Graph)

ஃப்ளோரென்ஸ் புள்ளியியல் தரவுகளை வரைபடங்கள் (graphs) மூலம் வெளிப் படுத்தினால், அவற்றைப் பிறருக்கு புரிய வைப்பது எளிதாக இருக்கும் என நினைத்தார். தரவுகளின் உதவியால் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகளின் முடிவுகளை புரிந்து கொள்ள முனை பரப்பளவு வரைபடம் என்ற புதுமையான வரைபடத்தை அறிமுகப்படுத்தினார்.

ஃப்ளோரென்ஸின் இந்த வரை படத்தை வில்யம் ப்ளேய்ஃபேர் (William Playfair) என்பவர், 1801ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தினார். இன்றும் கற்றுத் தரப்படும் வட்டப் படம் (Pie chart) என்பதிலிருந்து சிறிது மாறுபட்டது. வட்டப்படத்தில் ஆரம் சமமாக இருக்கும். வட்டத் துண்டுகளின் (sector of a circle) கோணங்கள் மாறுபடும். ஆனால் முனை பரப்பளவு வரைபடத்தில் வட்டத் துண்டுகளின் கோணங்கள் முப்பது பாகை என மாறிலியாக இருக்கும். ஆனால் ஆரத்தின் அளவு மாறுபடும். இராணுவ முகாம்களில் நிகழும் வீரர்களின் இறப்புக்களை ஃப்ளோரென்ஸ் அதனுடைய காரணங்களுடன் அட்டவணைப்படுத்தியிருந்தார். அதில் வீரர்களின் இறப்பிற்கான காரணங்களை போரில் ஏற்படும் காயங்கள், இராணுவ முகாம்களில் இருந்த சுகாதாரமின்மை மற்றும் வேறு காரணிகள் என மூன்று விதமாக பிரித்திருந்தார்.

முப்பது பாகை கொண்ட ஒரு வட்டத்துண்டு ஒரு மாதத்தில் இறந்த வீரர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும். மேலும் அதே வட்டத்துண்டில் மூன்று காரணங்களுக்காக இறந்தவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் மூன்று வர்ணங்களில் வட்டத்துண்டின் பரப்பளவு வித்தியாசப்படுத்திக் காட்டப்படும். குறிப்பாக நீல நிறத்தில் இருப்பது சுகாதாரமின்மையால் ஏற்படும் இறப்பு, சிவப்பு நிறப் பகுதி போரில் ஏற்படும் காயங்களினால் உண்டாகும் சாவுகள் மற்றும் கருப்பு நிறப் பகுதி வேறு காரணிகளால் ஏற்படும் இழப்புக்கள் என வரைபடத்தில் சித்தரிக்கப்படுகிறது.

இதைக் கொண்டு வீரர்களின் இறப்பு எண்ணிக்கையையும், அதற்கான காரணத்தையும் மாதத்திற்கு மாதம் ஒப்பிட்டுப் பார்க்கவும் வசதியாக இருக்கும்.

இந்த வரைபடம் நைட்டிங்கேலின் ரோஜா (Nightingale rose) என்றும் அழைக்கப்படுகிறது. தரவுகளைச் சித்திரிக்க இந்த வரைபடம் சிறந்த முறை இல்லை என்றாலும், ஃப்ளோரென்ஸின் இந்த புதிய முயற்சி பாராட்டத்தக்கது.

செவிலியர் தொழிலுக்கு ஓர் மேன்மையைக் கொண்டு வந்ததோடு, அதன் பயன்களை உலகிற்கு வெளிப்படுத்திய ஃப்ளோரென்ஸ், புள்ளியியல் பகுப்பாய்வின் உதவியால் இராணுவ மருத்துவத்துறையிலும், மருத்துவ மனைகளிலும் ஏற்படுத்திய சீர்திருத்தங்கள் இன்றளவும் சமுதாய முன்னேற்றத்திற்கு பயன் படுகின்றன.

குறிப்பு:

எபிடெமீயாலஜி (Epidemiology) என்று இன்று அறியப்படும் தொற்று நோய் ஆய்வியல் துறைக்கு வித்திட்ட அறிஞர்களில் விலியம் ஃபார் முக்கியமானவர். இவரைப் பற்றி இன்றைய எபிடெமீயாலஜி துறை வல்லுநர்களில் பெரும்பாலாருக்கு அதிகம் தெரியாது என்றாலும் இவரது ஆரம்ப கால முயற்சிகள், கருத்துகள், தகவல் திரட்டல் மேலும் ஆய்வுகளின் உந்துதல் இன்றி இந்தத் துறையில் அதிக முன்னேற்றம் இரண்டு நூற்றாண்டுகளில் நிகழ்ந்திராது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நிலாமகன்

**வலிமைமிக்க, நீடித்து, நிலைக்கக் கூடிய வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகள்**

# 07 அனைவரையும் வசீகரிக்க

உங்களுடைய சுய விழிப்புணர்வை உயர்த்தும் பணியில் ஈடுபடுவது உங்களுக்கு இன்னமும் நிம்மதியில்லாமல் இருக்குமானால் கீழ் வருவனவற்றுள் ஏதேனும் ஒரு மனப்பாங்கு உங்களிடம் இருக்கக் கூடும்:

- பரிதாபத்துக்குரிய நான்
- குறை கூறுபவர்
- உன்னிப்பாகக் கவனிப்பவர்

இந்த மூன்று வகையினருமே முக்கியமாகப் பாதிக்கப்பட்டவர்களே, அவர்களுக்கென்றே சில விஷயங்கள் ஏற்படும். தானே சூழ்நிலையை ஆட்சி செய்பவராகவும், தேர்ந்தெடுப்பவராகவும் இல்லாமல் தொடர்ச்சியாக நிகழ்வுகளின் விளைவுகளைப் பெறுபவராகவே இருப்பார்கள்.

**'பரிதாபத்துக்குரிய நான்' ஆசாமி**

இந்தப் பாதிப்புக்குள்ளானவர்கள் சுய பச்சாதாபத்தில் ஆழ்ந்து கீழ்க்கண்டவாறு சொல்லிக் கொண்டிருப்பார்கள்:

- "என்னிடம் வலிமையான சிறப்பியல்புகள் இல்லை"
- "நான் மட்டும் சற்று அழகாக, பார்க்க நன்றாக, உயரமாக, குட்டையாக, புத்திசாலியாக இருந்திருந்தால்..."
- "அழுத்தமாக, சத்தமாகப் பேசும் குரல் என்னிடம் இல்லை"
- "நான் மேலாளராக இருக்கலாம். ஆனால் நான் சொல்வதை யாரும் கேட்பதில்லை" 'மற்றவர்களுடன் பேசும்-திறமை எனக்கில்லை"
- "சாதாரண பேச்சுகளை என்னால் கையாள முடியவில்லை"
- "என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள அடுத்தவர்களுக்கு நிறைய நேரம் ஆகிறது"
- "நான் ஒரு நல்ல மனிதன் என்று ஏன் மற்றவர்கள் கருதுவதில்லை?"
- "குழுவிலோ, அணியிலோ என்னால் சரியான முறையில் நடந்து கொள்ள முடிவதில்லை"
- "யாருக்குமே என்னைப் பிடிக்கவில்லை"

இந்தப் பாதிப்புக்குள்ளானவர்கள், வசீகர ஆற்றலை மேம்படுத்த முடியாது, அல்லது தனிப்பட்ட தாக்கத்தை வலிமையாக்க முடியாது என்பதை வெளிப்படையாகச் சொல்லவே மாட்டார்கள். பதிலாக அதற்கான வாய்ப்பு அளிக்கப்படும் போது அதைப் பயன்படுத்தமாட்டார்கள்.

உதாரணத்துக்கு, குற்றம் கூறும் விமர்சனப் பின்னூட்டத்தை ஏற்கத் தயக்கம் காட்டுவார்கள் அல்லது அவற்றைக் கேட்கவேமாட்டார்கள். மாறாகத் தாராளமான புகழை மட்டுமே கேட்பார்கள். "பரிதாபத்துக்குரிய நான்" பாதிப்புக்குள்ளானவர், தனிப்பட்ட சவாலாக அமையும் பின்னூட்டம் அமைதியை அதிகமாகவும் மோசமாகவும் குலைக்கிறது என்று கருதுவார்கள். அடுத்தவரின் கருத்துரை அல்லது பேச்சை சிறந்ததாக, முடிந்த வரை நல்லதாக எடுத்துக் கொள்ளாமல் மிக மோசமானதாகப் புரிந்து கொள்ளும் வழக்கமும் அவர்களிடம் உண்டு.

**குறை கூறுபவர்**

தங்களுடைய வசீகரிக்கும் திறமை குறைவுக்கு யாரையோ அல்லது எதையோ காரணம் காட்டி எப்போதும் விமர்சிப்பார்கள் இத்தகையோர். அவர்கள் இவ்வாறான விடயங்களைப் பேசுவார்கள்.

- "யாரும் என் கருத்தை ஏற்பதில்லை."
- "என் அலுவலகம் என்னைப் பாராட்டுவதில்லை."
- "சத்தமாகப் பேசுபவர்கள்தான் கவனிக்கப் படுகிறார்கள்."
- "என் பெற்றோர் / சகோதரர்கள்/சகோதரிகள் என்று யாருடனும் எனக்கு நல்ல உறவு இல்லை."
- "நான் படித்த பள்ளி மிக மோசமானது."
- "எப்படி என்று யாருமே எனக்குச் சொல்லித் தரவில்லை"
- "மற்றவர்களைச் சரியாகப் புரிந்துகொள்ள எப்போதும் எனக்குப் போதிய அளவு நேரம் கிடைப்பதில்லை."
- "நான் உச்சரிக்கும்/பேசும் விதத்தால் என்னை யாரும் கவனிப்பதில்லை"
- "எனக்குப் போதுமான அளவு வயது/முதுWç ¿ (Seniority) இல்லை"

வசீகர ஆற்றலை வளப்படுத்துவதற்கான நேரம் வரும்போது மாறுவதற்காக புதிய வாய்ப்புகளும், புதிய வழிகளும் எவ்வாறு வருகின்றன என்பதைக் குறை கூறுபவர்கள் வழக்கமாகக் காணத் தவறிவிடுகிறார்கள். இதை அவர்கள் மாற்றாத வரையில் அவர்களுக்கு வெற்றி இல்லை.

(தொடரும்)




# நாடுகளும் பெண்களுக்கான சட்டமும்

**இஸ்லாமிய பெண்களை எந்த ஆடவரும் பார்க்க முடியாது. அப்படி பார்ப்பது பாவமான காரியம் என்பதற் காக கறுப்பு துணியால் முக்காடு (பர்தா) போடுகின்றனர்.**

- இஸ்லாமிய பெண்களை எந்த ஆடவரும் பார்க்க முடியாது. அப்படி பார்ப்பது பாவமான காரியம் என்பதற்காக கறுப்பு துணியால் முக்காடு (பர்தா) போடுகின்றனர். எமது நாட்டு முஸ்லிம் பெண்களிலும் இதனைக் காணலாம். திருமணமான பெண்ணை இரு வீட்டு உறவுகளும் மட்டும் பார்க்கும் சட்டம் நடைமுறையில் உள்ளது.

- பெண்கள் இருபக்கமும் கால்போட்டு மோட்டார் சைக்கிளில் பயணிப்பது, தெருக்களில் பலமாக கதைப்பது, செல்போன் கதைப்பது, இறுக்கமான உடலை ஒட்டினால் போன்ற ஜீன்ஸ் போடுவது போன்றவற்றுக்கு இந்தோனேஷியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

- மாலைதீவில் 18 வயதுக்குட்பட்டவர்கள் யாராயினும் திருமணமாகாமல் யாரோடும் உடலுறவு கொண்டால் பகிரங்கமாக பிரம்படி கொடுக்கப்படும்.

- பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் பெற்றோர் அனுமதியின்றி கன்னிப் பெண்கள் கருக்கலைப்பு செய்ய உரிமையுண்டு. 18 [illegible] பெண் பிள்ளைகளுக்கு [illegible] கலைப்பு செய்யும் சட்டம் பிரான்ஸ் தேசிய அவையில் நிறைவேற்றப்பட் டுள்ளது.

- குஜராத்தில் பெண்கள் பெயரில் சொத்துக்களைப் பதிவு செய்யும் சட்டமும் பஞ்சாயத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கும் சட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- கிரேக்கத்தில் கலைநிகழ்ச்சிகளில் பெண்பிள்ளைகள் பார்வையாளர்களாக கூட அனுமதிக்கப்படுவதில்லை.

- பிரான்ஸில் எத்தனை முறையும் திருமணம் செய்து விவாகரத்து பெறும் சட்டம் உள்ளது. இதனால் அங்கு குடியுரிமை பெற்றவர்கள் வேற்று நாட்டவர்களை பதிவுத் திருமணம் செய்து குடியுரிமை பெற்றுக் கொடுக்கின்றனர்.

- கனடாவில் பாலியல் குற்றவாளி பெரிய குற்றவாளியாகக் கருதப்பட்டு, பல ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. பெண்களுக்கு பல சலுகைகள் வழங்கப்படுகிறது.

- சீனாவில் ஒரு குழந்தைக்கு மேல் [illegible] அபராதம் விதிக்கப்படுகிறது.





உடுவிலூர் கலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடை தெரியுமா ? 232

### உங்களுக்கும் பரிசுகள்

1. இயந்திர மனிதர்களின் தீவு என்று அழைக்கப்படும் நாடு எது?
2. உலகில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் நாடு எது?
3. சூரிய மண்டலத்தில் உள்ள மிகக் குளிர்ந்த கிரகம் எது?
4. யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் யார்?
5. வெற்றி ஆரம்பம் என்பதனை வெளிப்படுத்தும் சர்வதேச குறியீடு எது?

### விடைகள் 230

1. கறுப்பு
2. சிங்கம்
3. பக்றீரியா
4. மானம், வன்மை, குலம், அறிவுடைமை, கல்வி, தானம், தரம், முயற்சி, தாளாண்மை, காமம்
5. வெண்பா

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 19.10.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (229)


♥ ச.கஸ்தூரி, இந்து மகளிர் கல்லூரி.
♥ கு.ஸகிந்தவி, தரம்-2ஏ, ஆராலி சரஸ்வதி ம.வி.
♥ க.மகிளினி, தரம்-7, யாழ்ப்பாணக் கல்லூரி.




சு.ஸ்ரீகுருபிரசாத் , தரம்-7டி,
யா/ இந்துக் கல்லூரி



சு.அட்சயா , தரம்-1



பே.கவியரசி , தரம்-3,
யா/ உசன் இராமநாதன் ம.வி.



யோறன்ஸ் யோசப் , தரம்-9,
எழுவைதீவு

# அசிங்கமான வாத்து



ஓர் ஊரில் இரண்டு வாத்துக்கள் வசித்து வந்தன. இரண்டும் ஒன்றுக்கொன்று மிகவும் அன்பு பாராட்டி அன்னியோன்னியமாக வாழ்ந்து வந்தன.

சிறிது காலம் கழித்து பெண் வாத்து முட்டையிட்டு அடைகாக்க ஆரம்பித்தது. இரு வாத்துக்களும் பொரிக்கப் போகும் குஞ்சுகளை எண்ணி மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தன.

தக்க சமயத்தில் ஆறு குஞ்சுகள் பொரித்தன. ஆனால் ஒரே ஒரு முட்டை மட்டும் பொரிக்கவில்லை. கூட்டில் இருந்த முட்டைகளில் மற்ற முட்டைகளை விட பெரிய முட்டை அதுதான். இரு வாத்துக்களும் கவலையுடன் அந்த முட்டையைப் பார்த்து கொண்டிருந்தன. சிறிது நேரம் கழித்து முட்டையின் சிறு பகுதி உடைந்து உள்ளே இருந்த குஞ்சின் கால் மட்டும் வெளியே வந்தது.

இரு வாத்துக்களும் குழப்பத்துடன் பார்த்து கொண்டிருக்கும்போது அந்த குஞ்சு தடுமாறி முட்டை கோதுடன் நடக்க ஆரம்பித்தது. முழுதாக வெளியே வராமல் பாதி கோதுடன் தட்டு தடுமாறி நடந்த குஞ்சு அருகில் இருந்த ஒரு கல்லில் மோதி முழுக் கோதும் உடைந்து வெளியே வந்தது.

அந்தக் குஞ்சைப் பார்த்த இரு வாத்துகளும் அதிர்ந்து போயின. ஏனென்றால் அது மற்றக் குஞ்சுகளைப் போல் அல்லாமல் வெள்ளை நிறமாகக் காட்சியளித்தது. மற்ற குஞ்சுகள் மஞ்சள் நிறத்தில் காட்சியளித்தன.

பொரித்த குஞ்சுகளில் ஒரு குஞ்சு மட்டும் வித்யாசமாக இருப்பதை பார்த்த தந்தை வாத்துக்கு சந்தேகம் வந்து தாய் வாத்துடன் சண்டை போட ஆரம்பித்தது.

இதனால் கோபமுற்ற தாய் வாத்து கோபத்துடன் தந்தை வாத்தை கொத்தி விட்டு தன் குஞ்சுகளைக் கூட்டி கொண்டு தனியே நடக்கத் தொடங்கியது.

நடப்பது புரியாமல் முழித்த வெள்ளைக் குஞ்சு குழப்பத்துடன் தந்தை அருகில் சென்றது. அது கோபத்துடன் நீ எனக்கு பிறந்த குஞ்சே இல்லை என்று விரட்டியடிக்க, பயந்துகொண்டே மற்ற குஞ்சுகளுடன் தாயின் பின்னால் சென்றது.

தாய் வாத்து தன் குஞ்சுகளைக் கூட்டி கொண்டு தண்ணீரில் நீந்த இறங்கியது.



அதைத் தொடர்ந்து வெள்ளைக் குஞ்சும் இறங்கியது. சிறிது தூரம் சென்ற பின் மற்றக் குஞ்சுகள் தாயின் முதுகில் ஏறி பயணிக்க ஆரம்பித்தன. வெள்ளைக் குஞ்சும் அதன் முதுகில் ஏற முயன்றது. அதைக்கண்ட தாய் வாத்து தன் வாலை சுழற்றி அதை கீழே தள்ளி விட்டது. மீண்டும் வெள்ளைக் குஞ்சு தாய் வாத்தின் முதுகில் ஏறிப் பயணித்தது.

கரையை வந்தடைந்த தும் வெள்ளைக் குஞ்சு இன்னமும் தன்னைத் தொடர்ந்து வருவதை அறிந்த தாய் வாத்து கோபத்துடன் நீ எனக்கு பிறந்த குஞ்சே இல்லை.. இங்கே இருந்து சென்று விடு என்று விரட்டியடித்தது.

எங்கே போவது என்று தெரியாமல் குழப்பத்துடன் தவித்த வெள்ளைக் குஞ்சு மீண்டும் தாய் பின்னால் போக முயற்சிக்க உடனே மற்றக் குஞ்சுகள் நீ எங்களுடன் பிறந்தவன் அல்ல.உன் முகத்தை நீரில் தெரியும் பிம்பத்தில் பார்.நீ எங்கள் இனத்தைச் சேர்ந்தவன் அல்ல என்று கூறி விரட்டி அடித்தன.

தண்ணீரில் தன் முகத்தைப் பார்த்த வெள்ளைக் குஞ்சு மிகவும் கவலையுற்றது.தான் எந்த இனத்தை சேர்ந்தவன் என்பது புரியாமல் குழம்பியது. இந்த உலகத்திலேயே அது தான் மிகவும் அசிங்கமான பிறவி என்று நினைத்து அழ ஆரம்பித்தது.

இரவு நெருங்க எங்கே போவதென்று தெரியாமல் ஆற்றின் கரையில் இருந்த புதரில் தூங்கி பொழுதைக் கழித்தது.

மறுநாள் தனக்கு ஒரு புது வீடு தேடி காட்டினுள் நடக்க தொடங்கியது. அப்போது ஒரு புதரின் நடுவே இருந்த பறவையின் கூட்டுக்குள் இருந்த இரண்டு குஞ்சுகள் வெள்ளை குஞ்சை அழைத்தன. வெள்ளைக் குஞ்சும் தனக்கு ஒரு வீடு கிடைத்து விட்டதை எண்ணி மிகவும் மகிழ்ந்தது. பகல் நேரம் முழுவதும் அக்குஞ்சுகளுடன் விளையாடி மகிழ்ந்தது. மாலை நேரம் கூட்டுக்கு உணவுடன் வந்த அக்குஞ்சுகளின் தாய் குஞ்சுகளுக்கு உணவு ஊட்ட முயன்றபோது மிகவும் பசியுடன் இருந்த வெள்ளைக் குஞ்சு அதை வாங்க முயன்றது.

அப்போது தான் தன் கூட்டில் இருந்த வெள்ளைக் குஞ்சைக் கவனித்த தாய்ப் பறவை. உடனே கோபத்துடன் அதை தன் கூட்டில் இருந்து விரட்டி அடித்தது. பயந்து ஓடிய வெள்ளைக் குஞ்சு ஒரு புதரில் மறைந்து கொண்டு அழ ஆரம்பித்தது.

இப்படியே சில நாள்கள் அலைந்து திரிந்து எதிர்பட்ட பறவைகள் எல்லாம் வெள்ளைக் குஞ்சை தங்கள் இடத்தில் சேர்த்துக் கொள்ளாமல் விரட்டி அடிக்க,இறுதியாக ஓர் ஆற்றை வந்தடைந்து மிகவும் சோகத்துடன் உட்கார்ந்திருந்தது.

அது தன் நிலையை எண்ணி அழுது கொண்டிருந்தபோது தன்னைப் போலவே தோற்றம் உடைய மற்றொரு குஞ்சைப் பார்த்தது. முதலில் குழம்பிப் போய் பின்னர் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. சிறிது நேரத்தில் அந்தக் குஞ்சைத் தேடி மேலும் சில வெள்ளைக் குஞ்சுகள் வர வெள்ளைக் குஞ்சுக்கு சந்தோசம் தாழவில்லை. தண்ணீரில் குதித்து விளையாடி மகிழ்ந்தது. அக்குஞ்சுகளும் வெள்ளைக் குஞ்சுடன் சந்தோஷமாக விளையாடின.

அப்போது அங்கே வந்த அக்குஞ்சுகளின் தாய் குழந்தைகளே நேரம் ஆகிறது போகலாம் வாருங்கள் என்று அழைத்தது.உடனே எல்லாக் குஞ்சுகளும் தாயின் பின்னால் போக அந்தக் குஞ்சுகள் அன்னப்பறவை இனம் என்பதை கண்ட வெள்ளைக் குஞ்சு அவைகளுடன் போகாமல் மீண்டும் கரையில் சோகத்துடன் வந்தமர்ந்தது.

அப்போது வெள்ளைக் குஞ்சைக் கவனித்த தாய் அன்னப்பறவை தன் குஞ்சுகளை அனுப்பி வெள்ளைக் குஞ்சை அழைத்து வர வைத்தது.

தாய் அன்னம் வெள்ளைக் குஞ்சிடம், ஏன் நீ மிகவும் சோகமாக இருக்கிறாய்? உன் பெற்றோர் எங்கே? என்று கேட்டது.

வெள்ளைக் குஞ்சு தன் கதையைச் சொல்லி அழுதது. உடனே தாய் அன்னம் கவலைப் படாதே செல்லமே. இனிமேல் நீ எங்களுடனே இருக்க லாம். என்னை உன் அம்மாவாக நினைத்துக்கொள் என்று கூறி அரவணைத்தது.

அதற்கு வெள்ளைக் குஞ்சு.நான் எப்படி உங்களுடன் வர இயலும்? நான் உங்கள் இனத்தைச் சேர்ந்த வன் இல்லையே என்று மிகவும் சோகத்துடன் கூறியது.

இதைக்கேட்ட தாய் அன்னமும் அதன் குஞ்சுகளும் விழுந்து விழுந்து சிரித்தன.

பின்னர் தாய் அன்னம் வெள்ளைக் குஞ்சைப் பார்த்து இல்லை இல்லை என் செல்லமே நீ ஒரு அன்னப்பறவை தான்.என் குஞ்சுகளைப் பார்.வளர்ந்த பிறகு என்னைப் போல மிகவும் அழகான அன்னமாக நீ மாறுவாய்.இந்த உலகத்திலேயே மிகவும் அழகான பறவை நீ என்று கூறியது.

இதைக்கேட்ட வெள்ளைக் குஞ்சு சந்தோஷத்தில் குட்டி கரணம் போட்டது. நான் அசிங்கமான பிறவி இல்லை.நான் ஓர் அன்னம். நான் ஓர் அன்னம் என்று கூறி சந்தோஷத்தில் துள்ளி குதித்தது தாய் அன்னத்தைச் சுற்றி வட்டமிட்டது.பின்னர் தாய் அன்னத்தை முத்தமிட்டு கொஞ்சி மகிழ்ந்தது.தாய் அன்னமும் அதை அன்புடன் முத்தமிட்டு அரவணைத்தது. உடனே மற்றக் குஞ்சுகளும் வெள்ளைக் குஞ்சை முத்தமிட்டு இன்று முதல் நீ எங்கள் சகோதரன் என்று மகிழ்ச்சியுடன் கூறின.

இரவு நெருங்க அனைவரும் சேர்ந்து ஒன்றாக கிளம்பினர். வெள்ளைக் குஞ்சு பாடியபடியே தாய் அன்னத்தை பின் தொடர்ந்து சென்றது. அன்னமும் குஞ்சுகளும் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தன.

## பொது அறிவு



*ரஷ்யாவின் அயல் நாட்டு விமான போக்குவரத்து நிறுவனத்தின் பெயர் -ஏரோபிளாட்
*மிகக் குறைந்த நேரம் மலர்ந்திருக்கும் பூ - பார்லிப்பூ.
*கம்பியில்லா தந்தி முறையைக் கண்டு பிடித்தவர் - மார்க்கோனி
*மனிதன் பயணம் செய்த முதல் செயற்கைக் கோள் - வோஸ் டாக்(ரஷ்யா)
*விக்டோரியா நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்தவர் டேவிட் லிவிங்ஸ்டன்.
*வன விலங்கு தடுப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு - கி.பி.1890.
*[illegible] சிலையை உருவாக்கியவர்- டிபிராய்.

சி.சிந்து. சுதுமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகேசண்ணர்



நடராசா இராமநாதன்
அல்வாய்

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் அந்தப் பிரதான வீதியில் மிதி வண்டியில் ஓடி. குறிப்பிட்ட சந்தியைச் சென்றடைந்து அந்தச் சந்தியின் இடது கைப் பக்கமாகத் திரும்பி இரண்டு கிலோமீற்றர்கள் தூரம் சென்றதும்.. ஓமோம் ! பாலன் சொன்ன சங்கக்கடை தெரியுது. அதுக்குப் பக்கத்தில ஒரு கோயில் எண்டு சொன்னவன். ம்.. இடது கைப் பக்கம் ஒரு கோயில்.. சரி ! பக்கத்தில ஓர் ஒழுங்கை... ஓம் ! ஒழுங்கை...அதுக்கை இறங்கினால் மூன்றாவது வீடு. முதுமை நிலையை எட்டியுள்ள கார்த்திகேசண்ணரைக் காண வேண்டும் என்ற ஆவல் உந்த மிதிவண்டியில் ஓடிய படியே அந்த மூன்றாவது வீட்டைத் தேடுகின்றேன். மணல் ஒழுங்கைக்குள் மிதிவண்டி ஓட மறுக்கிறது. புதிய இடம் என்பதால் பராக்குப் பார்த்துப் பார்த்து மிதிவண்டியை உழக்குவதும் சிரமமாகவே இருந்தது. வேலிகளோ. வேறு அடைப்புகளோ இல்லாது காரைப் பற்றைகளும். சம்புப் புற்களும். நீர் வற்றிய துரவுகளும் என காணிகள் காணப்பட்டன. தென்னை மரங்கள் காற்றில் அசைந்தாடின. ஆங்காங்கே மாடுகள் மேய்ந்த வண்ணமாய் இருந்தன. வெயில் எரித்துக் கொண்டாலும் காற்று தடவிக் கொடுத்தது சற்று ஆறுதலாக இருந்தது. கையிலே பை ஒன்றைச் சுமந்தபடி எதிரே அம்மா ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

"அம்மா, கார்த்திகேசண்ணர் வீடு..எங்க.."

நான் வார்த்தையை முடிக்க முதலே "கார்த்திகேசண்ணர்..." அம்மா இழுத்தார். "இப்ப கிட்டடியிலதான் இங்க வந்தவர். மகளோட இருக்கிறார். நல்ல வயதாளி. முந்தி நல்லா கூத்து எல்லாம் ஆடினவர்..." நான் விவரங் கூறினேன். அந்த அம்மா சற்று யோசித்துவிட்டு கீழ் உதட்டைப் பிதுக்கியபடி தலையை இடம் வலமாக ஆட்டிவிட்டு கடந்துவிட்டார்.

கார்த்திகேசண்ணரின் மகளின் பெயரையோ. மருமகனின் பெயரையோ தெரிந்து கொள்ளாமல் வந்தது என் பிழைதானே என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டு முன்னோக்கி மிதி வண்டியை உருட்டினேன். மூன்றாவது வீடு.. இதுவாகத்தான் இருக்கும். கிழுவங் கதியால்கள் போடப்பட்ட வேலியால் எட்டிப் பார்த்தேன். யாரையுங் காணவில்லை. கோழிகள் சில மேய்ந்த வண்ணம் இருந்தன. முற்றம் அழகாக கூட்டப்பட்டிருந்தது. மிதி வண்டியின் மணியை அடித்தேன். குழந்தை ஒன்றை இடுப்பில் தூக்கியபடி இளம் பெண் ஒருத்தி எட்டிப் பார்த்து விட்டு கிட்டே வந்து.. "ஆரைத்தேடி .."என்பது போல் அவளின் கண்கள் வியப்பில் விரிகின்றன.

"நான் சிவராமன். கார்த்திகேசண்ணர்.. அவரைத் தேடித்தான் வந்தனான். இது தானோ வீடு? அவர் இருக்கிறாரோ..?"

" ஓ.! அவர் அப்பாதான்! இருக்கிறார். வாங்கோ..!"

வேலியோரமாக நின்ற மாமர நிழலில் மிதி வண்டியை நிறுத்தி விட்டு வீட்டுக்குள் நுழைந்தேன். விறாந்தையின் இடதுபுறத்தில் போடப்பட்ட கட்டிலில் அமர்ந்திருக்கிறார் கார்த்திகேசண்ணர். எண்பது வயதை எட்டிய தோற்றம். நெற்றியிலே ஒரு ரூபா நாணயக் குற்றி அகலத்துக்கு திருநீற்றைப் பூசியிருந்தார். தோல் சுருங்கியிருந்தது. தோய்த்துலர்ந்த தூய ஆடை அணிந்திருந்தார். யன்னல்கள் திறக்கப்பட்டு காற்று தடையின்றி உள்ளே வந்து சென்று கொண்டிருந்தது.

அவரால் நடமாட முடிவதில்லை என்பதையும் மகள் தான் அவரைப் பார்த்துப் பராமரித்து வருகிறார் என்பதையும் அந்தக் கணப் பொழுதில் விளங்கக் கூடியதாக இருந்தது. இலையான்களோ, துர்நாற்றமோ, அழுக் காடைகளோ அவரது இருப்பிடத்தில் காணப்படவில்லை.

"அப்பா ! உங்களைத் தேடி வந்திருக்கினம்" மகள் கூற, கார்த்திகேசண்ணர் வியப்பில் என்னை நோக்குகிறார். அவரைக் காண வேண்டும் என்ற என் ஆவல் நிறைவேறுகின்ற மகிழ்ச்சி எனக்குள்.

" நான் சிவராமன். அண்ணாவியார் பரம சிவத்தாற்றை மூன்றாவது மகன் .."

இந்த வயதிலும் செவிப்புலன் அவருக்கு நன்றாகவே இருந்தது. நான் சொன்னதை ஒரே முறையில் அவர் விளங்கிக் கொண்டார். என்னை முதலில் கண்ட வியப்பும், பின்னர் நான் யார் என்பதை அறிந்து கொண்ட விதமும், அண்ணாவியார் பரமசிவம் என்ற பெயரைக் கேட்டதும் வந்த துயரும், இந்த மூன்று விதமான பாவங்களும் அவர் முகத்தில் தோன்றி மறைந்தன. ஒரு கணத்தில் நவரச நாயகனாகி இயல்புக்கு வந்தார்.

"கதிரையில் இருங்கோ அண்ண.." அந்தப் பெண் கதிரையைக் காட்டி விட்டுக் குழந்தையுடன் அந்த இடத்தை விட்டு அகல்கின்றாள். தோளில் இருந்த துண்டை எடுத்து வாயைப் பொத்தியபடி கார்த்திகேசண்ணர் குலுங்குவது எனக்குத் தெரிகிறது. ஒரு சில நிமிடங்கள் அமைதியாக இருந்து அந்த இடத்தை நோட்டமிடுகின்றேன்.

இறந்து போன அம்மா ஒருவரின் நிழற்படம் மாலையிடப்பட்டுள்ளது. மூலைகள் அரிக்கப்பட்ட கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்ட கண்ணாடிக் கூட்டுக்குள் அறைப்பட்டிருந்தார். கடவுளர் படங்கள் சில பூக்கள் வைக்கப்பட்டு சுவரில் கொழுவப்பட்டிருந்தன. கண்களைத் துடைத்தபடி கார்த்திகேசண்ணர் என்னை நிமிர்ந்து பார்த்தார். அவர் கண்கள் இன்னும் ஈரமாகவேயிருந்தன. இறந்து போன எனது அப்பாவான அண்ணாவியார் பரமசிவத்துக்காய் அவர் கண்ணீர் உகுத்தார் என எண்ணும் போது எனக்கு அவர் மேல் மேலும் அன்பும் இரக்கமும் ஏற்பட்டது.

அண்ணாவியார் பரமசிவம் என்ர கலையுலக நண்பன் எண்டிறதைவிட அவர் என்ர குரு எண்டிறதுதான் மேல நிக்குது. அந்த நாளையில எவ்வளவு கூத்துக்களை மேடையில ஆடியிருப்பம். எவ்வளவு காலங்களை உந்தக் கூத்துக்களுக்காய் கழித்திருப்பம். ஆர்மோனியப் பெட்டியோட பரமசிவம் அண்ணா பாடினா ஆடாதவங்களுக்கும் ஆட்டம் வரும்.."

கலை பற்றிக் கதைக்கும் போது கார்த்திகேசண்ணரில இளைமை திரும்புவதையும் புதுத் தெம்பு ஏறுவதையும் காண முடிந்தது. அப்படியே எழுந்து ஓர் ஆட்டத்தை ஆடிக் காட்டினால் என்ன என்ற உணர்வில் அவர் கால்கள் உந்திக் கொண்டிருந்தன. நான் அவரது உணர்வுகளோடு கலந்து மெல்லிய புன்னகையை வீசிக் கொண்டிருந்தேன். "தேத்தண்ணி குடியுங்கோ.." கார்த்திகேசண்ணரின் மகள் சில்வர் தம்ளரில் தேநீர் கொண்டு வந்து தந்தாள்.

"குடியுங்கோ தம்பி" அன்பாய்க் கூறினார்.

கார்த்திகேசண்ணரின் நல்ல மனம் கொண்ட மனிசன் என்று, எனது அப்பா அடிக்கடி சொல்வார். கார்த்திகேசண்ணர் தன் கடும் உழைப்பால் காடுகளைக் களனியாக்கியவர். ஆழக்கிணறுகளைத் தோண்டி நீர் எடுத்து மண்ணை பசுமையாக்கியவர். பிள்ளைகளைப் பெற்று நல்ல நிலைகளுக்காளாக்கி அவர்களுக்கு வாழும் வழி காட்டியவர். ஒழுங்கான வாழ்வால் உன்னதம் பெற்றவர். கூத்துக்கள் ஆடி நல்ல கலைஞன் என்ற பெயரைப் பெற்றவர். இப்போ மூப்பு எய்திய நிலையில்...



"தம்பி ! சிவராமன்! என்ர பிள்ளையள் எனக்கு ஒரு குறையும் விடேல்ல. கவனிச்சிருப்பீர்தான. எல்லாப் பிள்ளையளும் அடிக்கடி வந்து பாக்குங்கள். தேவையான எல்லாந் தருவினம். குளிப்பு, முழுக்கு , சாப்பாடு . ஒரு குறையும் இல்லை.." சற்று நிமிர்ந்து மூச்சுவிட்டபடியே "தம்பி ! கடைசிக் காலம் எண்டு ஒண்டு எல்லாருக்கும் இருக்குதையா. மூப்பு , சாவு எல்லாம் தவிர்க்க ஏலாது. அப்பு, அப்பூன்ர அப்பு எல்லாரும் செத்துத் தானே போச்சினம். இனி என்ன நானும் போற ஆள்தான். இந்தக் கடைசிக் காலத்தில எங்களுக்கும் எங்களைப் போல ஆக்களுக்கும் , பிள்ளையளும், உறவுகளும் நம்பிக்கை தரவேணும். நாங்கள் இருக்கிறம் உங்களைப் பார்க்க எண்டு கைதரவேணும். நம்பிக்கை தர வேணும். அந்த நம்பிக்கையில எங்கட இறுதிக் காலங்கள் கழிய வேணும். அப்பதான் தம்பி எங்களுக்கு மன நிம்மதி ஏற்படும். நீ என்னைப் பார்க்கத் தேடி வந்தாய் பார் ! அதுதான் தம்பி எங்கள மாதிரிக் கிழடுகளுக்குத் தேவை. வேற என்ன இருக்குது சொல். "

கார்த்திகேசண்ணரின் அந்த வேண்டுகை அவரது தனிப்பட்ட வேண்டுகை அல்ல. முதியோர் நிலையில் உள்ள எல்லோரது வேண்டுகையாகவும் எனக்குத் தோன்றியது. ஓம் முதியோருக்கு நாங்கள் கை கொடுக்க வேண்டும். நம்பிக்கை கொடுக்க வேண்டும்.

# பாரதி எனும் விசித்திரன்

யார்கிட்டயும்
நிமிர்ந்து
பாத்துத்தான்
பேசுவாரு. அவரு
தெய்வத்தை
வேண்டுறபோது
எதிரே நிக்கற மாதிரி
தான் அம்மா.
சக்தினு உரக்க
சொல்வாரு.

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி )

அவர் அக்ரஹாரத்தில இருந்தாலும் அதோட வரம்பு களுக்கு கட்டுப்பட்டு நடக்கலை. பெரிய மீசை வச்சிருந் தார். அல்பெர்கா கோட்டு. விறைப்பா கையை வெச்சுக் கிட்டு நடப்பாரு. அவர் போகும்போது சில பேர் அவர் முன்னாடியே. பிரஷ்டன், பிரஷ்டன்னு சொல்லி விலகிப் போறதப் பாத்திருக்கேன். யாரும் அவருக்கு மதிப்புக் குடுக்கலை. கொஞ்சநாள் அவரை அக்ரஹாரத்துக்குள்ளவே சேத்துக்கலை. வெளியே ஒரு இடத்தில தனியா இருந்தாரு. வீட்ல இருந்து சாப்பாடு கொண்டு கொடுத்திட்டு வருவாங்க. ஒரு நாள் பாரதியார் [illegible] இருப்பது எப்படி என்று சொற்பொழிவு செய்யப் வீட்டு முன்னால கூட்டம் நடந்தது. பாரதியார் வந்தாரு. கூட்டத்தைப் பாத்துக்கிட்டே, ஜெயபேரிகை கொட்டடா பாட்டைப் பாடினாரு. கண்ணு அப்பிடி அம்பு மாதிரி கூர்மையா இருக்கு. கொட்டடா, கொட்டடான்னு அவர் சொல்ற வேகத்தைக் கேட்ட தண்டோரா போடுறவன் நம்மளைத்தான் சொல்றாரு போல இருக்குன்னு நினைச்சு நிஜமாவே தண்டோராவை அடிச்சான். அப்பிடி வீரமா பாடுவாரு.

அவருக்குப் பொய் பேசினா பிடிக்காது. திட்டுவாரு. கோபப்பட்டு எதாவது செய்துட்டாலும் பிறகு மன்னிப்புக் கேட்டுக்கிடுவாரு. வயது வித்தியாசம் பாக்காம மன்னிப்புக் கேட்டுக்கிடுவாரு. அவரோட மதிப்பு அன்னைக்கு எனக்குத் தெரியிலே. வீட்டுல திட்டுவாங் கன்னு பயந்துகிட்டே பழகுவோம்.

யார்கிட்டயும் நிமிர்ந்து பாத்துத்தான் பேசுவாரு. அவரு தெய்வத்தை வேண்டுறபோது எதிரே நிக்கற மாதிரி தான் அம்மா, சக்தினு உரக்க சொல்வாரு. எல்லாத்துலயும் அவருக்கு சக்தி இருக்கிற மாதிரிதான் சொல்வாரு. அவர்கிட்டே ரொம்ப நாளா யானையோட விளையாடுற பழக்கம் இருந்துச்சு. கோவில்ல இருந்த யானைகிட்டே போவார். பாகன் கிட்டே எட்டணா குடுத்து யானையைத் தொட்டுப் பாக்கட்டான்னு கேப்பாரு. அவன் "அதுக்கு என்ன! பாருங்க

கையைப் போட்டுக்கிட்டு முத்தம் குடுப்பாரு. சில சமயம் பல்லுல மெல்ல அதை கடிப்பாரு. அதுக்கு வலிக்கவா போகுது. விளையாடிகிட்டேயிருப்பார். அதுதான் பின்னாடி அவருக்கு வினையா வந்துச்சு. யானைன்னா ஆச்சரியமா பார்ப்பாரு. குழந்தை மாதிரி.

நான் குற்றாலக் குறவஞ்சி எழுதின திரிகூடராசப்பக் கவிராயர் வம்சாவழியில பிறந்தவன். மண உறவுகள் வழியா அது தொடர்ந்துச்சு. நான் நாடகம், கவிதை, கதையெல்லாம் எழுதியிருக்கிறேன். பாரதியார் மேல கூட கவிதைகள் பாடியிருக்கேன். இப்போ எனக்கு 92 வயசாகுது. கல்கியில அந்தக் காலத்துல கண்ணா மூச்சிங்கற என் கதை பரிசு வாங்கிச்சு. எஸ்.எஸ்.எல்.சி. படிச்சு அரச வேலைக்குப் போயிட்டேன். பாரதியோட பழகுற சந்தர்ப்பம் கிடைச்சது என் வாழ்க்கையில பெரிய பாக்கியம். யாருக்கு அது கிடைக்கும்? அவர் ஒரு சூப்பர்மேன். அவர்கூட கொஞ்ச காலம் பழகினதுக்கு எனக்கே இந்த மரியாதை கிடைக்குதுன்னா பாத்துக்கோங்க. எல்லாம் தெய்வ சித்தம்.

இப்படிச் சொல்லிக்கொண்ட கல்யாணசுந்தரம் இன்று இல்லை. ஆனால் அவர் வழியாக பாரதியை நெருங்கிப் பார்க்க ஒரு இன்பம் எமக்குக் கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா

வலிந்து சிரிப்பு மூட்டாமல் இயல்பாகவே நம்மையுமறியாமல் எப்படி சிரிக்கவைக்கவேண்டும் என்பதற்கு நல்ல உதாரணமாய் வந்திருக்கிறது இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா திரைப்படம்.

அநேக தமிழ்ப்படங்களில் அடிபட்டு நொந்து நூலான கதையை கையில் எடுத்துக்கொண்டு திரைக்கதையில் சிரிப்புத் தோரணம் கட்டும் அண்மைக் கால நகைச்சுவைப்படங்களிலிருந்து மிகவும் மாறுபட்டு, மூன்று வெவ்வேறு திசைகளில் பயணிக்கும் கதைகளை ஒரு நேர்கோட்டில் இணைக்க முயற்சித்திருக்கிறார் இயக்குநர் கோகுல் (ஜீவாவை வைத்து ரவுத்திரம் என்ற படம் எடுத்தவர்). அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்.

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை, இந்த ஓரளவு என்பதே பெரிய விஷயம்தான்! சுமார்மூஞ்சி குமார் என்கிற குமரவேலுக்கு (விஜய் சேதுபதி) முழுநேர வேலை சாரயக்கடையில் குடித்துக்கொண்டேயிருப்பதுதான். அவருக்கு எதிர்வீட்டு நந்திதா மீது ஒருதலைக் காதல்.




அவரது காதல் இம்சை தாங்காமல் தாதா பசுபதியிடம் போகிறார் நந்திதாவின் அப்பா. இன்னொரு பக்கம், விஜய் சேதுபதிக்கு சற்றும் சளைக்காத இன்னொரு குடிமகனான அஸ்வின்.

அலுவலகத்தில் முகாமையாளர் எம்.எஸ் பாஸ்கரின் இம்சையைத் தாங்க முடியாமல் தவிக்கும் இவருக்கும் ஒரு காதலி. அவர்தான் சுவாதி. காதலியிடம் வாயைத் திறந்தால் பொய்யாய்க் கொட்டுவார். குடிபோதையில் ஒரு பெண்ணை விபத்துக்குள்ளாக்கி, அவரது உயிரைக் காக்க அரிய வகை ரத்தம் தேட வேண்டிய கட்டாயத்தில் நிற்கிறரர். மூன்றாவது கதை கொஞ்சம் கிளு கிளுப்பானது. ஒரு ரவுடியின் மனைவிக்கு இரண்டு கள்ளக் காதலர்கள். அவர்களை வைத்தே கணவனை போட்டுத் தள்ளப் பார்க்கிறாள் மனைவி. இந்த மூன்று கதைகளும் ஒரே புள்ளியில் இணைகின்றன. படத்தில் இரண்டு நாயகர்கள். ஒருவர் விஜய் சேதுபதி. இன்னொருவர் அஸ்வின். சொல்லப் போனால் விஜய் சேதுபதி இரண்டாவதாகத்தான் வருகிறார். ஆனால் நடிப்பில் ஆச்சரியப்படுத்துகிறார் விஜய் சேதுபதி. ஒரு அரைப் போத்தல் சாரயத்துக்காக விஜய் சேதுபதி அலையும் காட்சிகள் சிரிப்பை அள்ளுகின்றன. அதிலும் அந்த ரத்த வங்கியில் எல்லோரும் பதைபதைத்துக் கொண்டிருக்கும் போது, நந்திதாவிடம் காதல் செய்யும் விஜய் சேதுபதியின் பாடி உடல்மொழி நிச்சயம் இன்றைய நாயகர்களில் இவர்தான் சிறந்த நடிகர் எனச் சொல்ல வைக்கிறது. இன்னொரு நாயகனாக வரும் அஸ்வினும் கலக்கியிருக்கிறார். அவரது நகைச்சுவை உணர்வு, வசன உச்சரிப்பு பாங்கு, என்பவற்றைப் பார்க்கும் போது இன்னொரு நம்பிக்கையான இளைஞர் தமிழ் சினிமாவுக்கு கிடைத்திருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகின்றது! நந்திதா, சுவாதி இருவருமே அவர்களின் முந்தைய படங்களை விட சிறப்பாக செய்திருக்கிறார்கள். படத்துக்கு முக்கிய பலம் கோகுல் - மதன் கார்க்கியின் சின்ன சின்ன வசனங்கள். ஆனால் அவை ஒவ்வொன்றுமே எல்லோரையும் சிரிப் பலையில் மூழ்க வைக்கின்றன. அவற்றை அத்தனை பாத்திரங்களும் உணர்ந்து உச்சரிப்பது, திரைய ரங்கை அடிக்கடி சிரிப்பால் குலுங்க வைக்கிறது.


நீண்டகாலத்துக்குப் பிறகு திரையில் தலை காட்டியிருக்கிறார் பசுபதி. நீரி ழிவு நோயுடைய கொண்ட ரவுடியாக வரும் அவர், விஜய் சேதுபதியின் காத லுக்கு பஞ்சாயத்து பண்ணும் இடங்களெல்லாம் அள்ளுகின்றன சிரிப்பை. பரோட்டா சூரி, எம்.எஸ் பாஸ்கர் இருவரும் பார்ப்பவர் வாய்களையும் வயிற்றையும் கூடுதலாக வலிக்க வைத்திருக்கிறார்கள். மகேஷ் முத்துசாமியின் ஒளிப்பதிவு, சித்தார்த் விபினின் இசை என்பன படத்தை உறுத்தலின்றி ரசிக்க உதவுகின்றன. காதலிக்காக வேண்டிக் கொள்ளும் அந்தப் பாட்டுதான் இனி இளைஞர்களின் விருப்பப் பாடலாக இருக்கும் போல! சாரயக்கடையின்றி அமையாது தமிழ் சினிமா என்றாகிவிட்டது. அதனால் இந்தப்படத்திலும் சாராயக்கடையில் பாடும் காதல்தோல்விப்பாடல் ஆட்டம் போட வைக்கிறது.

பொதுவாக புதிய இயக்குநர்கள் முதல் படத்தில் இமாலய வெற்றி பெற்று இரண்டாம் படத்தில் அந்த அழுத்தம் தாங்காமல் சறுக்குவார்கள்.

ஆனால் கோகுலின் யுக்தி இதற்கு மாறாகவே இருக்கிறது. முதல் படத்தை தோல்விப்படமாக கொடுத்தவர் இரண்டாவது படத்தை ஜனரஞ்சகமான நகைச்சு வைப்படமாக வெற்றிக் கொடி நாட்டவைத்திருக்கிறார்.

*படத்தில் இரண்டு நாயகர்கள். ஒருவர் விஜய் சேதுபதி. இன்னொருவர் அஸ்வின். சொல்லப் போனால் விஜய் சேதுபதி இரண்டாவதாகத்தான் வருகிறார். ஆனால் நடிப்பில் ஆச்சரியப்படுத்துகிறார் விஜய் சேதுபதி. ஒரு அரைப்போத்தல் சாரயத்துக்காக விஜய் சேதுபதி அலையும் காட்சிகள் சிரிப்பை அள்ளுகின்றன.*





## வீடுகள் மீது பிழை சுமத்தப்படுகிறது!

வெள்ளையடிக்க
கல்லறைகள்- சில
காவியமாவதும்
மாவீரர் துயிலும்
இல்லங்கள்
மண் மேடாவதும்....
இன்று நேற்றல்ல
காலம் காலமாக
இழி[illegible]

ஈனத்தனங்களின்
தடயம்....!
அழிவு மட்டுமே
சுத்த வீரனின்
மனம்
வெட்கித்துப் போகும்...!
மனிதாபிமானம் கருதி
துட்டகாமினியோடு
[illegible]மன்னன்

எல்லாளன் செய்த
யுத்தமும் வீரச்சாவும்
வரலாற்றுப்பதிவானது!
நினைவாலயம் கட்டி
எதிரியின் நினைவில்
உயர்ந்த காமினி மன்னன் எங்கே!
நீ எங்கே...!
நானும் எங்கோ?
குரூரமான மனக் கல்லறைகள்!

மண்டைதீவு மகிழ்நன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகையை வரிந்து கொள்வோம்

உடல் சிதறிஉயிர் துடிக்க உதவி செய்யா உலகநாடு
மடல் எடுத்து மனந்திறந்து மமதைவிட்ட மலர்வனமா
சிதறி இறந்தோர் விட்டுச் சின்னாபின்ன மாய்க் கலைந்து
கதறிக் கை காலிழந்து கண்ணிழந்தும் காணுகின்றோம்
அன்ன ஆகாரமின்றி அல்லலுற்று அலைபவர்க்கு
என்ன எவர் கொடுப்பார் என்பதனை எண்ண வேண்டும்
வீட்டுடன் வீதி, கடல், விளைநிலம், கல்விச் சாலை
நாட்டுடன் நாலு பேர்க்கும் நல்கலை நல்க வேண்டும்
மீள்குடியேற்றப் போர்வை மினுக்கமா அவர்க்கு வேண்டும்?
மீள்குடி யேற்ற வாழ்வின் மினுக்கமே அவர்க்கு வேண்டும்
இம்மியேனும் இராணுவத்தை இங்கசைக்க இசைந்தவர்கள்
இம்மியேனும் இராதின்னல் இங்கு என இசைந்தனரோ
எம்மக்கள் தேசமென்று எனத்திரிந்து சொல்லிக் கொண்டு
தம்மக்கள் தேசமென்று தனதினத்தை இருத்தல் நன்றோ
காணியதி காரமில்லை காவலரும் இல்லையிது
வீணிலிங்கு வீசும்பேச்சாம் வீசலாமோ வீறுகொண்டே
வெறுமையாய்ப் பேச்சும் போச்சோ வெறுப்பதாய் மூச்சும் ஆச்சோ
பொறுமைக்கும் எல்லையுண்டாம் பொறுங்கள் இது யாருக்கு
பொறுப்பது மக்கள்தானா பொறுப்புள்ள தலைமைதானா
புறுபுறுக் கின்றார் மக்கள் புரிந்து கொள் வோரும் யாரோ
அடிமை குடிமை நிலை அடக்கிவிட்ட பெண்ணுரிமை
முடிவைத் தருபவர் யார் முனைந்து இதைச் செய்பவர் யார்
புலம் இது பெயர்ந்தோர் புரிதலின்றிப் பிரிந்திடாது
நிலம் இது நோக்கியவர் நிற்கவைக்க நிமிர்வோர் யார்
நோய்நொடி நோக்கித் தந்த நோவினைப் போக்க நாங்கள்
ஆய்வுடன் ஆற்றியந்த ஆணியை ஆழ்ந்தெறிவோம்
ஆணியெது அதுவென்று ஆண்டிகளும் அறிந்தது தான்
ஆணியதை அடித்தஅந்த ஆண்டவர்க்கும் தெரிந்தது தான்
முறையான தாயகத்தில் முழுவாழ்வு நாம்வாழ
குறையாது புள்ளடிகள் குவித்திட்டோம் தேர்தலிலே
தெரிந்து விட்ட எமதுமக்கள் தேவையைத் தெரிந்துகொண்டு
வரிந்துகட்டி மாகாணத்தில் வாகையை வரிந்து கொள்வோம்.

*கலாபூஷணம் வ.கந்தசாமி*



என் கர்ப்பப்பை
பாலை நிலத்தின் முழு வ...
என் வயிறு
உருவமில்லாத காற்று
உட் சென்று இளைப்பா...

எனது தாய்மை...
சுடுகாட்டில் எரி...
எனது கர்ப்பப்பை
உயிர் முளைக்க முடியா...
உருண்டைக் கல்லா?

உன் குறிவிழுத்தும்
விந்தை விழுங்கும்
விஷப்பையா
என் கருப்பை

நான் வாங்கி வைத்த
தொட்டிலில் "மலடி" என்ற
பட்டம் நிரந்தரமாக
ஆடுகின்றது.

நான் தாலாட்டை
பாடத் தொடங்கியதும்
ஒப்பாரிச் சத்தம் தான்
என் குரலில் குடியேறுகிறது.

நான் தாய்மையடையா நிலை
உன் நிம்மதியைக் குலைத்திருக்கிறது
உனது அதிகாரத்தின் மீது
நான் விலங்கு பூட்டப்பட்ட
மலட்டு மனைவியானேன்

கலவிக்கு முன்னும்
கலவிக்குப் பின்னும்
எம்மில் யாராவது ஒருவர்
கொலையாளியாகும்
கோபத்துடன்

## சொற்சிலம்பம் - போட்டி இல: 287

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | ■ | 7 | | | ■ | |
| 8 | | 9 | | ■ | 10 | 11 | ■ |
| | ■ | | ■ | 12 | | | 13 |
| ■ | 14 | | 15 | | | ■ | |
| 16 | | | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. அமர்க்களமாக
4. தெருக்கள் கூடும் பகுதி
6. கையினால் அளவிடும் அலகு
7. தேர் இழுக்கும் கயிறு
8. மடல்
10. வகு
12. மாடு, ஆடுகளின் குதிக்கால் பகுதி
14. பிழையான நடவடிக்கை
16. அளவுக்கு மிஞ்சியதால் வருவது
17. மறைவில் தீட்டப்படுவது
18. ஓர் மண்வகை
19. எழுத்துக்களுக்கு முதல்
20. உறுதி
21. மனைவியின் சகோதரியின் கணவன்

### மேலிருந்து கீழ்

1. ஒரு நட்சத்திரம்
2. கிடங்கு
3. இந்து சமயத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று
4. வேதனம்
5. மேடையின் மறைப்பு
9. தற்பெருமை அடித்தல்
11. குத்து விழுவது இப்படி
12. பேச்சு ஓசை
13. புதல்வன்
14. பரந்து விரிந்த
15. குற்றம் சுமத்தல்
16. தினமும் இது மாறும்
17. அனைத்து
19. உள்

✱ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

✱ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 285 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பிரசவம் (4) வாகு (6) மலை (7) பாட்டு (8) மாதர் (10) வாகடம் (11) தலைக்கனம் (13) கடும் (14) நம் (15) சுளகு (16) மேடு (17) சவம் (18) முருங்கை (20) காடு (21) தாடி (22) குதி

**மேலிருந்து கீழ்**

(1) பிரமாதம் (2) சமர்க்களம் (3) வலை (4) வாட்ட (5) குடும்பம் (7) பாகம் (9) தலை (10) வானம் (12) கடுகு (14) நடுங்கு (15) சுவடு (16) மேரு (17) சகா (18) முடி (19) கைதி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல.287**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (23.10.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.287இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 27.10.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 285 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
எஸ்.யோகராசா,
முகமாலை, எழுதுமட்டுவாழ்.

**2 ஆம் பரிசு**
மா.சதாசிவம்,
முருகன் கோவிலடி, புலோலி வடமேற்கு, புலோலி.

**3 ஆம் பரிசு**
இ.தனபாலசிங்கம்,
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.

**4 ஆம் பரிசு**
ம.மரிஸ்ரெலா,
இல.140, சாவற்கட்டு, மன்னார்.

**5 ஆம் பரிசு**
சோ.நாகம்மா,
கல்லூரி வீதி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

யூலியஸ் ஆதர் டோசன்,
இல.57, அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

ஜெ.தினேஸ்குமார்,
ஆண்டு 10, விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், புதுமுறிப்பு, கிளிநொச்சி.

நகுலன் லக்ஷகி,
காளிகோவிலடி, துர்க்காபுரம், தெல்லிப்பழை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.10.2018 முதல் 19.10.2018 வரை

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி.....?



**மேடம்** - சாந்த குணத்துடன் இனிய வார்த்தை பேசி நண்பர் உறவினர்களிடம் சில நன்மை பெறுவீர்கள். எதிரி விலகும் நிலை உருவாகும். இல்லறத் துணையின் மனதில், உங்கள் மீதான நன்மதிப்பு வளரும். தொழில், வியாபாரத்தில் பெறுகிற அனுகூலத் தன்மைகளை அக்கறையுடன் பாதுகாத்துக் கொள்வீர்கள். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு, சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள் ஒரு முகத்தன்மையுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.



**இடபம்** - சமயோசித செயல்களால் தன் வாழ்வை வளமாக்கி தன்னைச் சார்ந்தவர்கள் நன்மை பெறவும் இயன்றளவில் உதவுவீர்கள். ஆன்மிகக் கருத்துக்களை அன்புக்கு உரியவர்களிடம் பேசுவீர்கள். மனம் செயலில் புத்துணர்வு ஏற்படும். அறிமுகம் இல்லாதவர் உங்களை புகழ்ந்து பேசுவதை நம்பி ஏமாறவேண்டாம். இல்லறத்துணையின் சுயகௌரவ எண்ணங்களால் சஞ்சலம் கொள்வீர்கள். பணியாளர்கள், குடும்ப செலவை தாராள மனதுடன் மேற்கொள்வர்.



**மிதுனம்** - அறிமுகம் இல்லாத பெண்களிடம் பேசுவது, உதவுவதில் நிதான அணுகுமுறை வேண்டும். பணவரவு கூடுதலாக பெற வருகிற வாய்ப்புக்களைத் தவறாமல் பயன்படுத்துவீர்கள். இல்லறத்துணை சாந்த குணத்துடன் பேசினாலும் உங்கள் மனதில் சிறியளவில் முரண்பாடு வரலாம். உத்தியோகத்தர் பணியாளர்களை ஊக்கப்படுத்தி பணி இலக்கு நிறைவேற்றுவர். மாணவர்கள் பெற்றோரின் அறிவுரை மதித்து நடப்பது நல்லது.



**கடகம்** - நற்செயல்களால் சமூகத்தில் நன்மதிப்பு பெறுவீர்கள். கூடுதல் பணவரவில் குடும்பத் தேவைகளை தாராள மனதுடன் பூர்த்தி செய்வீர்கள். வீடு, வாகன பயணத்தில் உரிய கவனம் வேண்டும். எதிரியால் வரும் தொந்தரவை சமயோசிதமாகச் சரி செய்வீர்கள். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம், மனம் நெகிழ வைக்கும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை சீரான பணவரவு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்த முன்னேற்றம் காண்பர்.



**சிங்கம்** - கடந்த தினங்களில் இடையூறு செய்தவர்களைக் கண்டித்து பேசும் மனப்பாங்கு ஏற்படும். பொறுமையைப் பின்பற்றுவதால், எதிர்கால நன்மைகளை எளிதில் பெறலாம். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து பணவரவு கிடைக்கும். மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சியில் அதிக கவனமுடன் ஈடுபட வேண்டும்.



**கன்னி** - உங்களுக்கு மதிப்பு, மரியாதை தருகிறவர்களிடம் மட்டுமே பொது விடயங்களைப் பற்றி பேசலாம். இல்லறத்துணை உங்களின் மனக்கவலை தீர நல்ல ஆலோசனை சொல்வார். தொழிலில் அபிவிருத்தி பணிகளை சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து மேற்கொள்வது நல்லது. பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டத்தை மதித்து நடப்பதால் அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். மாணவர்கள் கூடுதல் பயிற்சியால் திட்டமிட்ட தேர்ச்சியைப் பெறலாம்.



**துலாம்** - குடும்பத்தில் மங்கல நிகழ்வு, மகிழ்ச்சி ஏற்படும். பணச்செலவில் தாராள குணத்தைப் பின்பற்றுவீர்கள். நண்பர், உறவினர்களின் கூடுதல் அன்பு, பாசம் கிடைக்கும். எதிரியால் உருவாகும் தொல்லை பலமிழந்து போகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். தொழில் உபகரணம் கூடுதலாக வாங்க, அனுகூலம் உண்டு. மாணவர்கள், வெளயிடம் சுற்றுவதைக் குறைப்பதால் படிப்பில் கவனம் வளரும்.



**விருச்சிகம்** - எண்ணங்களில் புதுமையும் செயல்களில் நேர்த்தியும் அதிகரிக்கும். வாழ்வில் குறுக்கிடுகிற எதிர்ப்புகளை சமயோசித புத்தியால் சரி செய்வீர்கள். பணவரவு சீரான அளவில் கிடைக்கும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து உபரி பணவரவு கிடைக்கும். அரச பணியாளர் பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம் பெற அனுகூலம் உண்டு.



**தனுசு** - உங்களின் செயல்கள் எளிதாக நிறைவேறும். நற்பலன்களின் அளவு அதிகரிக்கும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். தொழில் அபிவிருத்திப் பணி தாராள பணச்செலவில் மேற்கொள்வீர்கள். அரசியல் வாதிகளுக்கு சமரசப் பேச்சில் சுமுகத் தீர்வு கிடைக்கும். மாணவர்களை ஞாபகத்திறன் வளர்ந்து அதிக சிறந்த தேர்ச்சி பெறுவர்.



**மகரம்** - எவரிடமும் அளவுடன் பேசுவது நேரம், மன அமைதியை பாதுகாக்கும். நிர்ப்பந்த பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் பணவரவு சீராகும். இயந்திர தொழிற்சாலைப் பணியாளர், பாதுகாப்பு முறையைத் தவறாமல் பின்பற்றவும். மாணவர்கள விளையாட்டுக்களில் சாகசத்தைத் தவிர்க்கவும்.



**கும்பம்** - மனதில் ஆன்மிக நற்சிந்தனை வளரும். சான்றோர்களின் ஆசி, உதவி கிடைக்கும். தொழிலில் சராசரி நிலையை அடைய கூடுதல் மூலதனம் உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள் புதிய யுக்தி பயன்படுத்துவதால் இலக்கை குறித்த காலத்தில் நிறைவேற்றலாம். மாணவர்கள் தேவை நிறைவேற தாமதம் ஆவதால் மனதில் சஞ்சலம் கொள்வர்.



**மீனம்** - குடும்பத்துக்குத் தேவையான பணவசதி சீரான அளவில் கிடைக்கும். எதிரியால் தொந்தரவு அணுகாத சுமுக வாழ்வு இருக்கும். நிலுவைப் பணம் சிறு முயற்சியால் வந்து சேரும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர் உங்களின் அருமை, பெருமை நிறைந்த குணத்தை பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் சில மாற்றம் பின்பற்றி வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். உத்தியோகத்தர் பணியாளர்களை ஊக்கப்படுத்தி திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவர்.

# அக்குளின் கருமை போக்க......



அழகுக் குறிப்புகள்

நாகரிகம் வளர வளர ஆடைகள் புதுவடிவம் எடுக்கின்றன. பெண்களில் பலர் இப்போது கையில்லாத மேலாடை அல்லது முழு ஆடை அணிவதையே விரும்புகின்றனர். அப்படி அணிய மேலும் பலருக்கு விருப்பம் இருந்தாலும் அக்குள் கருமையாக இருக்கிறதே என்று அவற்றை புறந் தள்ளுகிறார்கள். இந்த உலகில் இயற்கை வைத்தியத்திற்கு இருக்கும் சக்தி வேறு எந்த ஒரு பொருளுக்கும் கிடையாது. அந்த வகையில், அக்குள் கருமையை இயற்கை முறையில் போக்குவது மிகச் சுலபமானது. என்ன செய்ய வேண்டுமென்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**தேசிக்காய்**

அக்குளில் உள்ள கருமையைப் போக்குவதற்கு தேசிக்காய் ஒரு சிறந்த பொருள். அதில் வெளிறச் செய்யும் ('ப்ளீச்சிங்') தன்மை இருக்கிறது. எனவே தேசிக்காய் கொண்டு தினமும் அக்குளில் தேய்த்து, ஊற வைத்துக் கழுவினால், அக்குளில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, அக்குள் வெள்ளையாவதோடு, அக்குள் துர்நாற்றத்தில் இருந்தும் விடுபடலாம்.

**மஞ்சள், தயிர்**

மஞ்சள் மற்றும் தயிரில் இயற்கையாகவே வெளிற்றும் தன்மை நிறைந்துள்ளது. எனவே சருமத்தில் உள்ள கருமையைப் போக்க, மஞ்சளை தயிரில் கலந்து, அக்குளில் தேய்த்து ஊற வைத்து கழுவினால், அக்குள் கருமையை நிச்சயம் போக்கலாம்.

**உருளைக்கிழங்கு**

உருளைக் கிழங்கை அரைத்து, அதனை தினமும் காலையில் அக்குளில் தடவி காயவிட்டு தேய்த்துக் கொண்ட பின் குளித்தால், கருமையான அக்குளில் இருந்து விடுபடலாம்.

**தயிர், தேசிக்காய்**

தயிர் மற்றும் தேசிக்காய் சாற்றை ஒன்றாகக் கலந்து, அக்குளில் தடவி 10 நிமிடம் தேய்த்த பின் குளிர்ச்சியான நீரில் கழுவ வேண்டும். இந்த முறையை தொடர்ந்து வாரத்திற்கு ஒருமுறை செய்து வந்தால், நல்ல பயன் கிடைக்கும்.

**கடலைமா, பால், மஞ்சள்**

கடலைமா, பால், மஞ்சள் ஆகியவற்றை கலந்து பேஸ்ட் போல் செய்து, குளிக்கும் முன் அக்குளில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் குளித்தால், அக்குள் கருமை நீங்கிவிடும்.

# அரிசி மா தோசை

**தேவையான பொருள்கள்:**

புழுங்கல் அரிசி - 2 சுண்டு
பச்சரிசி - 2 சுண்டு
முழு உளுத்தம் பருப்பு - 1 சுண்டு (தோல் நீக்கியது)
வெந்தயம் - 2, 3 மேசைக் கரண்டி
மிளகு, சீரகம் - 1 தேக் கரண்டி (தூள்)
மஞ்சள் தூள் - கொஞ்சம்
உப்பு -தேவையான அளவு
தாளிதப் பொருள்கள்: (கடுகு, பெருஞ்சீரகம், கறிவேப்பிலை, நறுக்கிய வெங்காயம், 3 செத்தல் மிளகாய் - சிறிதாக நறுக்கியவை)
எண்ணெய் தேவையான அளவு
(அரிசிகளின் அளவை தேவைக் கேற்ப கூட்டியும் குறைத்தும் செய்யும்போது மற்றைய பொருள்களின் அளவையும் கூட்டியும் குறைத்தும் தயாரிக்கவும்-இவை பொதுவான அளவுகள்)
தோசை வகைகளின் மாக்கலவை எல்லாவற்றிக்கும் பொதுவானவை. ஆனால் அவற்றின் மேல் சேர்க்கப் பெறும் பொருள்களைப் பொறுத்து அவற்றிக்கு பெயர் சூட்டப்பெறுகின்றது.



செய்முறை:

புழுங்கல் அரிசி, பச்சை அரிசி, வெந்தயம், உளுத்தம் பருப்பு இவை யாவற்றையும் ஒன்றாக சேர்த்து 3 – 4 மணி நேரம் வரை தண்ணீரில் ஊற வைக்கவும். அதன் பின்; கிரைண்டரில் அல்லது ஆட்டுக் கல்லில் அவ்வப்போது தண்ணீர் சேர்த்து நன்றாக பசை போல் அரைத்துக் கொள்ளவும். மிக மெதுமையாக, மாவில் கொப்புளங்கள் வரும்வரை அரைக்க வேண்டும். மாவை எவ்வளவு மெதுமையாக அரத்து எடுக்கின்றோமோ அவ்வளவுக்கு தோசையும் மெது மெது என இருக்கும்.

அரைத்த மாவை கொஞ்சம் பெரிய பாத்திரத்தில் வழித்தெடுத்து 6, 7 மணித்தியாலங்களுக்கு புறம்பாக மூடிவைத்து [புளிக்க] பொங்க விடவும். சிலர் கணக்கான உப்பையும் போட்டு வைப்பார்கள். ஆனால் உப்புப் போட்டால் பொங்குவதற்கு நேரம் எடுக்கும். எனவேதான் பலர் தோசை சுடும்போது போடுகிறார்கள். மா பொங்கியதும் அதற்குள் மிளகு – சீரகத்தூள், மஞ்சள் தூள் சேர்த்து நன்றாக கலக்கவும். அத்துடன் தாளிதம் செய்து அதனையும் இட்டு நன்றாக கலக்கவும். இப்போது தோசை மா றெடி.

தோசைக் கல்லை சூடாக்கி, மாவை நடுவில்வார்த்து அகப்பையால் மெல்லிய வட்டமாகப் பரப்ப வேண்டும். அடுப்பை நிதானமாக எரிய விடவும். தோசையின் மேல் சுற்றிலும் ஒரு தேக் கரண்டி நல்லெண்ணெய் விட்டு, சிவந்ததும் தட்டகப்பையால் திருப்பிப் போட வேண்டும். எண்ணெய் விட்டதனால் சுலபமாகத் திருப்ப முடியும்.

அடுத்த பக்கம் அதிக நேரம் வேகத் தேவை இல்லை. இதற்கு எண்ணெய் தோசை என்று பெயர். கொஞ்சம் [illegible] யின் பச்சரிசியை கூட்டி புழுங்கல் அரிசியை குறைத்தும் அல்லது கொஞ்ச கோதுமை மாவைக் கலந்தும் செய்யலாம். அல்லது அரிசிக்குப் பதிலாகச் சாதத்தையும் [சோறு] சேர்த்து அரைக்கலாம். அல்லது உழுந்தை மாத்திரம் அரைத்தெடுத்து அத்துடன் கோதுமை மாவைக் கலந்தும் தோசை செய்யலாம்.

எண்ணெய்க்குப் பதிலாக பட்டர், நெய் விட்டும் சுடலாம். இவை யாவும் வித்தியாசமான வாசனையுடன் ருசியாகவும் இருக்கும். இவற்றை பட்டர்தோசை, நெய்த்தோசை எனவும் அழைப்பர்.

தோசைமீது எண்ணெய் விடாது, தோசைக் கல்லில் மாக்கலவையை வார்ப்பதற்கு முன் ஒரு சிறிய துணியைப் பொட்டலமாகக் கட்டி அதனை எண்ணெய்யில் தோய்த்து அதன் மூலம் மெல்லிதாக தோசைக் கல்லில் எண்ணெய் பூசியும் சுடலாம். இந்தியாவில் இதை கல்லுத் தோசை என்பார்கள்.

கல்லுத் தோசையின் மீது ஒன்றோ அல்லது இரண்டோ முட்டைகளை அடித்து ஊற்றி செய்யப்பெறும்தோசை முட்டைத்தோசை எனப் பெறும்.

இத் தோசை மாக் கலவையை சிறிது இளக்கமாக கரைத்து நீள்வட்டமாகவும், பெரிதாகவும், கல்லில் ஒட்டியது போல் மெல்லியதாகவும் சுடும் தோசை பேப்பர் தோசை எனப்பெறும். இது இந்தியாவில் மிகவும் பிரபலம்.

கல்லுத் தோசை சுடும்போது உருளைக் கிழங்குப் பிரட்டலை அதன் மேல் பரவி தோசை வெந்ததும் அதனை சுருட்டி, அல்லது மடித்தெடுத்தால் மசாலாத் தோசை ஆகிவிடும். இதற்கு கறி தேவையில்லை றோல்ஸ், போல் பாடசாலைக்கு, அல்லது வேலைத் தலங்களுக்கு எடுத்துச்செல்லலாம்.

அரைத்தெடுத்த மாக் கலவையில் அடுத்த அரைமணி நேரத்திலும் தோசை சுடலாம். ஆனால் புளிப்படையாத காரணத்தினால் றொட்டி போன்று இருக்கும். சிறு சிறு ஓட்டை விழாது. பொங்க வைத்த மாவை குளிர் சாதனப் பெட்டியில் வைத்து கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து 2 – 3 நாள்களுக்கும் வைத்தும் தோசை செய்யலாம்.

பொங்கிய மாவில் சுட்ட தோசை ருசியாகவும் மிருதுவாகவும் இருக்கும். இதனை பொரித்து இடித்த மிளகாய்ச் சம்பலுடன் அல்லது மீன், இறைச்சி கறியுடன் அல்லது உறுளைக்கிழங்கு பிரட்டலுடன் சாப்பிட மிகவும் ருசியாக இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 13 10 2013 ஞாயிற்றுக்கிழமை



# விட்டுப்போன தனித்துவங்கள்

உமாசுதன்



நாகரிகம் நாகரிகம் என அலைந்து தமிழன் இழந்து போனவைகள் ஏராளம். நாடு, உரிமை, பண்பாடு மட்டுமல்ல பலவற்றை இழந்திருக்கிறோம். குறிப்பாக சூழலுடன் ஒத்து, ஆச்சரியப்படத்தக்க வகையில் விவசாயிகள் விவசாய நுட்பங்களைப் பயன்படுத்தியுள்ளனர். பல வகை மண்ணையும் நிலத்தடி நீரையும் கொண்டு அவர்கள் வயல் நிலம், மேட்டு நிலம் ஆகிய இரு பகுதிகளிலும் வருடம் பூராகவும் பயிர்ச் செய்கையினை மேற்கொண்டு தாங்களது வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தி இருக்கின்றனர்; பூமித் தாயை நாசமாக்காமல். கிராமத்தின் பழைமை விவசாயமுறை, தொலைந்துபோன செழிப்புக்களைப் பற்றியும் தன் ஞாபக அலைகளை மீட்டுகிறார் ரங்கண்ணை என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் அளவையூர் பொ. ரங்கநாதன்.

அந்த நாளையில கிணறுகளில் இருந்து நீர் பாச்சிறதுக்கு துலாவும் பட்டையும்தான் பயன்படுத்தினம். 4 பேர் வேணும். 2 பேர் துலா மிதிக்க ஒரு ஆள் தண்ணி கட்ட ஒரு ஆள் தண்ணி அள்ளி ஊத்த வேலை முடியும். இதில செலவு சுருக்கம். கிணத்து ஆழத்தைப் பொறுத்து துலாவின்ர நீளம் இருக்கும். 15 அடி 16 அடி எண்டு வேறுபடும். துலாவின்ர சமனிலையையும் தீர்மானிப்பம். இந்த முறையில தண்ணி வேகமாய் போகாது; ஆனால் அளவாய் போகும்.

இந்த இறைப்பு பயிரிற்கு நல்லம். தண்ணி ஆறுதலாய் போகும். வாய்க்கால்ல மண் ணரிக்காது. ஈரம் சுவறிக் கொண்டே இருக்கும். பாத்தி கட்டுறவையும் பண்பாகத் தண்ணி கட்டுவினம்.

துலாவுக்குப் பிறகு சூத்திரவாளி முறை வந்தது. கிணத்துக்கு நடுவில பெரிய தீராந்தியில பல்லுப்போட்ட சக்கரம் பொருத்தி அதில நெம்பு கோலை பொருத்துவம். பல்லுப்போட்ட சக்கரத்தில இருந்து கிணத்தின்ர ஆழப் பகுதிக்கு சங்கிலியில வாளியளை பொருத்துவம். பிறகு நெம்பு கோல்ல நுகம் வைச்சு 2 மாடுகளை விட்டுச் சுத்த தொடராய் இருக்கிற வாளியள் கீழ போய் தண்ணிய கோலிக் கொண்டு மேல வரும்.

சூத்திரவாளி செய்யிறத்துக்கு அந்த நாளையிலயே 50 ஆயிரம் ரூபா தேவை. இதில இறைப்புக்கு ரெண்டு மாடு மற்றது இரண்டு பேர் வேணும். இந்த இறைப்பு முறை வேகமானது. கிணறு சுத்தமாக இருக்கும்.

இப்ப இருக்கிற நீர் இறைக்கும் இயந் திரத்தைவிடக் கூடுதலான நீரை இறைக்கும். எண்பதுகளின்ர நடுப்பகுதியில இதைப் பயன்படுத்தினவ. ஆழத்தப் பொறுத்து வாளி எண்ணிக்கை அமையும். ஒரு வாளி 4 லீற்றர் நீரைக் கொள்ளக் கூடியது. நாகரிகம் முன்னேற முன்னேற எல்லாம் மாறிப்போச்சுது.

இரண்டு வாளிச் சூத்திரமும் உண்டு. அதற்கு பெரிய இடம் வேணும். மண்எண்ணெய் கான் போல ஒடுக்கமான சின்ன வாளி. ஆனா அதுக்கு மாடுகளை வேகமாக கலைக்க வேணும். கொஞ்சம் கஸ்ரம். இடம் தூர வேணும்.

அந்தக் காலத்தில சில்லுச் சுத்திறத்துக்கும் கமஞ் செய்யவும் எண்டு இந்தியாவில இருந்து வடக்கன் மாடுகளக் கொண்டு வருவினம். குறிப்பிட்ட ஒரு நாளில - விளக்கீடு அல்லது தீபாவளி தினம் என்று நினைக்கிறன் - ஏல விற்பனை நடக்கும். அந்தக் காலத்தில இப்படிக் கட்டுப்பாடுகள் இல்லைத்தானே.

முந்தி எங்க பாத்தாலும் வில்லு வண்டில், ஒற்றை வண்டில், கூடார வண்டில், பார வண்டில் எண்டு பல வண்டில்கள் இருந்தது. இப்ப மோட்டார் சைக்கிள் வீட்டுக்கு ஒண்டு, ரெண்டு நிக்கிற மாதிரி ஒவ்வொரு வீட்டிலயும் வண்டில் நிக்கும். வண்டிலை கோயிலுக்கு போறது அங்க சமைச்சு சாப்பிடுறது எல்லாம் ஒரு சந்தோசம்தான்.



அந்த நாளையில வண்டில்ல போகேக்க புகையாய் போகாது. இப்ப எல்லாம் ஒரே புகை மயம்தானே எந்த ரோட்டிலயும் எந்த பெரிய மரமும் நிக்கும் என்றபடி ரங்கண்ணை தனது மலரும் நினைவுகளைத் தொடர்கின்றார்.

# இங்கிருந்து, இவர்களை, இடம்நகர்த்துங்கள்.

வாந்தியத்தேவன்

படையினரை வடக்கில் இருந்து அகற்றுகிறார்களோ இல்லையோ, முதலில் தீவுப் பகுதிகளில் இருந்து அகற்றுங்கள் என்று கெஞ்ச ஆரம்பித்திருக்கிறார்கள் அந்தப் பகுதி மக்கள்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குள் யாழ்ப்பாணம் வீழ்ந்துவிட்ட பிறகும்கூட நீண்டகாலம் சுதந்திரமாக இருந்த மண் தீவகம், படையினர் என்று அங்கு காலடி எடுத்து வைத்தனரோ அன்று அந்தச் சுதந்திரம் அனைத்தும் பறிபோய்விட்டது.

வேறு வழியின்றி தீவக மக்கள் படையினரின் கட்டளைகளுக்கு எல்லாம் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதாகிவிட்டது. போதாததற்கு ஒட்டுக் குழுக்களும்வேறு சேர்ந்து கொண்டு மக்களை வதைத்தன. தீவகத்தில் நடக்கும் எந்தவொரு நிகழ்விலும் படை அதிபினர் அவசியம் பங்கேற்றாக வேண்டும் என்பது அங்கு எழுதப்படாத விதியாகியது. அதிலும் தீவக மக்கள் படகுத் துறைகளில் அனுபவிக்கும் துன்பங்கள் சொல்லிமாளாதவை.

குடாக்கடலைக் கடந்து நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவை தீவு போன்ற பகுதிகளுக்குச் செல்வதற்கு படகுப் பயணங்கள் தவிர்க்க முடியாதவை. போருக்கு முன்னர் சுதந்திரமாக இங்கெல்லாம் பயணம் செய்து வந்த மக்கள் இன்று படையினர் முன் அடிமைகள் போன்று கூனிக்குறுகியே பயணப்பட வேண்டியவர்களாகி இருக்கிறார்கள். அதிலும் நயினாதீவு, நெடுந்தீவு மக்கள்தான் மிக மோசமான துன்பங்களைத் தினம் தினம் அனுபவிக்கிறார்கள்.

எழுவைதீவு, அனலைதீவு படகுப் பயணங்களில் கடற்படையினரின் தலையீடுகள் இல்லாவிடினும் துறைமுகங்களில் இறங்கி தீவுக்குள் நுழைவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றார்கள்.

துறைமுகங்களை அண்மித்துள்ள செய்துகொண்டுதான் உள்ளே செல்ல வேண்டும் என்ற நடைமுறை இன்னும் இங்கெல்லாம் பின்பற்றப்பட்டு வருகின்றது. புதிதாகத் தீவுக்கு வருபவர்களும் படையினரைக் காணவில்லை என்றுவிட்டு பதியாமல் செல்பவர்களும் பதிவு இன்றித் திரும்புகையில் எதிர்கொள்ளும் அவலங்கள் சொல்லிமாளாதவை. இத்தகையவர்கள் படகு ஏறவிடாது படையினரால் தடுத்து வைக்கப்படுகிறார்கள். துருவித் துருவி கேட்கப்படும் கேள்விகள் மக்களைத் துளைத்தெடுக்கின்றன.

ஒரு உறவினர், நண்பர்கள் தம்மைத் தேடி வரவோ விசேசங்களில் கலந்து கொள்ளவோ முடியாத நிலைமை இதனால் ஏற்படுகின்றது என்று அனலை தீவு, எழுவை தீவு மக்கள் புலம்புகிறார்கள். அடையாள அட்டைகளைப் பார்வையிட்ட பின்னர்தான் ஆள்களை தீவின் உள்ளே நுழைய அனுமதிக்கும் நடைமுறையும் இந்த இரு தீவுகளிலும் இன்னமும் இருக்கின்றது. படையினர் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான சந்தர்ப்பத்தை இது ஏற்படுத்திக் கொடுக்கிறது.

இதேநேரம் குறிகாட்டுவான் துறையில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள் இன்னும் மோசமானவை. அங்கு தமிழ் மக்களுக்குப் பெரும் கஷ்டங்களைக் கொடுக்கும் படையினர் தெற்கில் இருந்துவரும் சிங்களப் பயணிகளை மட்டும் அன்புடன் அரவணைத்து இலகுவான பயணத்துக்கு ஏற்பாடு செய்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் உரிய கௌரவம் தமக்குத் தரப்படுவதில்லை என்று குறைப்படுகிறார்கள் தமிழ் மக்கள்.

நெடுந்தீவுக்கான காலைப் படகு 9 மணிக்கு குறிகாட்டுவானைவிட்டுப் புறப்படவேண்டும். ஆனால் அனேக நாள்களில் அது நடப்பதில்லை. படையினர் அனுமதிக்கும் நேரத்திலேயே படகுகள் புறப்படுகின்றன. அப்போது கூட நெடுந்தீவு மண்ணின் மைந்தர்களுக்கு முன்னுரிமை கிடைக்காது. சுற்றுலாப் பயணிகளை ஏற்றிய பின்னர்தான் சொந்த மண்காரர்கள் படகில் ஏறப் படையினர் அனுமதிப்பார்கள்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் கட்டுப்பாட்டில்தான் நெடுந்தீவுக்கான படகுச் சேவை இருக்கிறது என்று கூறப்பட்டாலும் நாளாந்தம் அதனைக் கட்டுப்படுத்துபவர்களாகப் படையினரே உள்ளனர். இதுவே தமக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக மக்கள் கொதிக்கிறார்கள். தீவக மக்கள் தமது சொந்தத் தீவுகளுக்குச் சுதந்திரமாகச் சென்று வரத் தக்க வகையில் படகுத் துறைகளில் இருந்து படையினர் உடனடியாக விலக்கப்படவேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற வாக்களித்தீர்களானால் படையினரை வடக்கில் இருந்து வெளியேற்றுவோம் என்று வடக்கு மாகாண சபை முதலமைச்சர் வழங்கிய உறுதிமொழியை நம்பி வாக்களித்த மக்கள் உடனடியாகத் தங்கள் துறைகளில் இருந்தாவது படையினரை அகற்ற மாகாண சபை நடவடிக்கை எடுக்குமா என்று காத்துக்கிடக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியை நோயாளி ஆக்காதீர்...



புவிக்கோளம் சூடாவதற்கு காபனீரொட் சைட்டை விட ஏனைய வளிமண்டல வாயுக்களும் காரணிகளாக அமை கின்றன. கால்நடை களும், உக்கிப் போகும் தாவரங்களும் ஏனைய வாயுக்களின் அளவை அதிகரிக்கச் செய்து புவியை சூடாக்கு கின்றன.

சி.நற்குணலிங்கம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், இலத்திரனியல் என்பவற்றின் அபரீத வளர்ச்சி காரணமாக மக்கள் சுகபோக வாழ்வில் மூழ்கியுள்ளனர். இவர்களது பேராசையின் விளைவாகப் புவிக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்குப் பதிலாக அச்சுறுத்தலை வழங்கியவர்களும் உள்ளனர். மனித வாழ்க்கைக்கு மிகவும் ஏற்ற கோளான புவியை வெப்பமடையச் செய்வதும் புவியை நோயாளியாக்கும் அச்சுறுத்தலில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. உலகில் உள்ள வளர்ச்சியடைந்த, வளர்முக நாடுகளில் சூழலை அழிக்கும் மானிடச் செயற்பாடுகள், அளப்பரிய வளங்களை திட்டமிடப்படாத வகையில் பயன்படுத்தல், எதிர் விளைவு களை சிந்திக்காமை, கைத்தொழில் நடவடிக்கைகளால் என்பன புவிக் கோளத்தின் வெப்ப நிலையை அதிகரிக்கச் செய்தல் என்பன புவியை நோயாளியாக்குகின்றன.

இயற்கைச் சூழலை அவதானித்து இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டிய தேவை எல்லோருக்கும் உள்ளது. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டினதும் ஓசோன், மீதேன் போன்ற ஏனைய வாயுக்களினதும் அளவு, மிதமிஞ்சி அதிகரித்து வருவத னால் புவி சூடாகி வருகின்றது. 20 வருடங்களில் ஏறக்குறைய ஒரு பாகை செல்சியஸ் வெப்பநிலை அதிகரித்துள் ளது. வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும், அவை வெளியிடு கின்ற காபனீரொட்சைட்டின் அளவு அதிகமாகக் காணப்படுவதும், காடுகளை அழித்து எரிப்பதனாலும், காடுகள் தாமாக எரிவதனாலும், உயிர்ச்சுவட்டு எரிபொருள்களை எரிப்பதனாலும் வளிமண்டலத்தில் உள்ள இயற்கையான வாயுக்களின் வீதம் மாற்றியமைக்கப்படுகின்றது. காபனீரொட்சைட்டை வளிமண்டலத்தில் சேர்த்து விடும் நடவடிக்கைதான் புவி விரைவாக சூடாக காரணமாகிறது.

ஜப்பான், ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், கனடா, ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் போன்ற கைத்தொழிலில் ஆக்கம் பெற்ற நாடுகள் வளிமண்ட லத்தில் காபனீரொட்சைட்டின் அளவை அதிகரித்துள்ளன. தற்போதும் அதிகரித்து வருகின்றன. வளர்முக நாடுகளில் உள்ள மக்களும் வருடா வருடம் குறிப்பிட்ட அளவு காபனீரொட்சைட்டை வளிமண்டலத்தில் சேர்த்து வருகின்றனர்.

புவிக்கோளம் சூடாவதற்கு காபனீரொட்சைட்டை விட ஏனைய வளிமண்டல வாயுக்களும் காரணிகளாக அமைகின்றன. கால்நடைகளும், உக்கிப் போகும் தாவரங்களும் ஏனைய வாயுக்களின் அளவை அதிகரிக்கச் செய்து புவியை சூடாக்குகின்றன. விவசாயத்துக்குப் பயன்படுத்தும் நைதரசன் உரப்பசளைகளும் மீதேன் வாயுவை தோற்றுவிக்கின்றது. குளிரூட்டிகளுக்கும், குளிர்சாதனங்களுக்கும் குளோறோ புளோறோகாபன் (CFC) வாயுவை கணிசமான அளவை வளிமண்டலத்தில் சேர்த்து விடுகின்றன. வருடா வருடம் ஏறக்குறைய 7 இலட்சம் தொன் குளோறோ புளோறோ காபன் வளிமண்டலத்துக்கு அனுப்பப்படுகின்றது. குளோறோ புளோறோ காபன் வாயுக்களில் F11, F12 என இருவகைப்பட்ட வாயுக்கள் உள்ளன. F11 வகை வாயுவானது ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கும், F12 வகை வாயு ஏறக்குறைய 110 ஆண்டுகளுக்கும் அழியாதிருந்து பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.

புவி சூடாகுவதனால் பல வகையான அனர்த்தங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. காலநிலை மாற்றம், இயற்கைச் சமநிலைச் சிதைவு, உயிர்ப்பல்லினத்தன்மை அழிவு, சுகாதார அச்சுறுத்தல், ஓசோன் படைச் சிதைவு, கோடைத் தன்மையின் காலம் நீடித்தல், வேகக் காற்று வீசும் வாய்ப்புக்கள் அதிகரித்தல், நீரியல் வட்டம் பாதிப்புக்கு உட்படுதல், சில தீவுகள் நீரில் மூழ்குதல், வானிலை அடிக்கடி மாற்றமடைதல் சிறுவர் முதல் முதியோர் வரை சோர்வுத்தன்மை, வெப்பநோய்கள் மற்றும் தலைவலியால் பாதிப்புறல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றது. எதிர்கால சந்ததியினரின் சுபீட்ச நிலை பாதிக்கப்படுதல், நாட்டின் நிலையான அபிவிருத்தி பாதிக்கப்படுதல் என்னும் விளைவுகள் ஏற்படும். இந்த அனர்த்தங்கள் மொத்தத்தில் உலகையே ஸ்தம்பிதம் அடையச் செய்துவிடும்.

எனவே பூமி மரணமடைவதற்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது. இருப்பதும் நல்லதல்ல. புவி உயிர்த் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். எமது ஒவ்வொரு செயற்பாடுகளும், எண்ணங்களும் புவியை வெப்பமடையச் செய்கின்றதோ என எண்ணி செயற்படுவது நலம். தொழில்நுட்பத்தின் வளர்ச்சி ஆக்கத்திற்கேயன்றி அழிவுக்கு அல்ல என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். முறையான, ஒழுங்கான முகாமைத்துவத்தின் மூலமும் சூழல் சமநிலை பாதிக்காவண்ணம் நேர்த்தியான வாழ்க்கை முறையை பின்பற்றுவதன் மூலமும் புவி வெப்பமடைவதை தடுக்க, குறைக்க முடியும். அத்துடன் சூழல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமும் இவ்வாறான விடயங்களை மாணவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். மாணவர்கள் மத்தியில் வருடா வருடம் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான சுவரொட்டி, சித்திரம், பேச்சு, கட்டுரை போன்ற போட்டிகளை நடத்துவதன் மூலம் மாணவர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும். ஜப்பான் நாடு காபனீரொட்சைட்டை குறைவாக வெளிப்படுத்தக்கூடிய எரிபொருளை பயன்படுத்தும் முயற்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளது. இந்த நிலை ஏனைய நாடுகளுக்கும் பரவ வேண்டும். அபிவிருத்தியை மேற்கொள்ளும் போது, திட்டமிடும் போதும் சுற்றுப்புறச் சூழலை கவனத்தில் எடுக்கும் பழக்கம் சிறு விடயங்கள் முதல் எல்லோருக்கும் ஏற்பட வேண்டும். வளர்ச்சியடைந்த வளர்முக நாடுகள் எல்லோரும் ஒருமித்த எண்ணத்துடன் புவியை நோயாளியாக்காதிருக்க வழிசமைக்க வேண்டும்.

புவி சூடாகி வருவது உலகுக்கு பெரும் அச்சுறுத்தலாகும். வாழப்பிறந்த நாம் இதன் மூலம் உலகின் அழிவுக்கான காலத்தை சுருக்கிக் கொள்கின்றோம் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே சூழலை அழிக்கும் மானிடச் செயற்பாடுகளையும் அதன் வழிவரும் அவல நிலைகளையும் உள்வாங்கி விழிப்புணர்வுடன் செயற்பட்டு புவியை நோயாளியாக்காது, உயிர் வாழ விட்டு நாமும் மகிழ்வாக வாழ்வோமாக.



## நிமிர்ந்தெழுவோம்......

நாங்கள் நிமிர்ந்த போதெல்லாம்
நெருஞ்சிக் காடுகள்– எம்
தலைக்கு மேல்....
சிப்பி முத்தை
மூடிக் கொண்டதால்
முத்து சப்பியாகவா மாறிவிடுகிறது...?
கடந்த போனவற்றைக்
கசக்கிப் பிழிந்து– என்ன
கருப்பஞ்சாறா கிடைக்கப் போகிறது?
இழப்புச் சாக்கடைக்குள்
இழந்த காபனீர்கள் – இனி
ஒரு ஒருமைப்பாட்டுடன்
ஒட்சிசன் தேடட்டும்
எங்கள் உழைப்பின் வியர்வையில்
இன்னொரு கோளுக்கு
மின்சாரம் அனுப்புவோம்...!
நாம்– இனி புதியதோர்
நாசாவுக்குத் தலைமை தாங்குவோம்
மற்றொரு பில்கேட்சை
மடியில் சுமப்போம்
பிறக்கட்டும் உலகொன்று
பூபாளம் பாடி
இனியிங்கு வேண்டாம்
முனகல்களின் முகாரி

– மானியூட் ரட்ணேஸ்–



## ஜம்புவின் தடாலடிகள்



செய்தித் தாளில் ஒரு செய்தி வந்திருந்தது. "ஓடும் ரயில் முன் குதித்து, இளைஞன் தற்கொலை. காதல் தோல்வி காரணமாம்" செய்தித் தாளை வாசித்தவர் ஜம்புலிங்கத்திடம்,

" ஏன்தான் காதலில் தோல்வியுற்றவர்கள் இப்படி ஓடும் ரயிலுக்கு முன்னால சாகிறார்களோ தெரியவில்லை" என்று அலுத்துக் கொண்டார். அதற்கு ஜம்புலிங்கம்,


" அட இது கூடத் தெரியாதா? நிற்கின்ற றெயின் முன் பாய்ந்தால் தற்கொலை செய்ய முடியாது . அது தான் ஓடுற ரயிலுக்குப் பாய்ந்து தற்கொலை செய்து கொள்கின்றனர்" என்று சொல்லி விட்டு தன்னடக்கத்துடன், நடந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 13.10.2013 ஞாயிற்றுக்கிழமை

# சிரியாவில் தற்காலிக போர் ஓய்வு ஏற்படும் சாத்தியம்?

ரெங்கன்



**தற்காலிக போர் ஓய்வு ஏற்பட்டால் மட்டுமே ஆயுத ஒழிப்பை தீவிரப்படுத்தலாம்.**

**இரசாயன ஆயுதங்களை அழிக்க சிரியா தரும் ஒத்துழைப்புக்கு பாராட்டு.**

**மாலைதீவில் மீண்டும் அதிபர் தேர்தல்- நீதிமன்றம் கட்டளை.**

உலகின் இரசாயன ஆயுதத் தடைக்கான கண்காணிப்பு அமைப்பானது சிரியாவில் உடனடியாக தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டும். அதன் மூலமே சிரியாவில் இரசாயன ஆயுத அழிப்பை செயற்படுத்தக் கூடியதாய் இருக்கும் என்று தெரிவித்துள்ளது. இரசாயன ஆயுதத் தடைக்கான நிறுவனத்தின் தலைவர் அகமத் உசும்கு ஹேக் நகரில் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் ஓரளவு போர் ஓய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே இரசாயன அழிப்புக்கான கால அவகாசத்துக்குள் அதனைச் செய்துமுடிப்பது சாத்தியமாகும் என்று கூறினார். ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் பிரகாரம் சிரியாவில் இரசாயன ஆயுதங்களை அழித்தொழிக்கும் பொறுப்பு இந்த ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இரசாயன ஆயுத ஒழிப்புக்கான கால அவகாசம் மிகவும் குறுகிய அளவிலானதாக உள்ளது. 20 இரசாயன ஆயுதக் கிடங்குகளை நாங்கள் சென்று அவதானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்றார் அவர். இரசாயன ஆயுத உற்பத்திக்கான இடங்கள் யாவும் நவம்பர் முதலாம் திகதிக்கு முன் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பது மிகவும் இறுக்கமானதொரு காலக்கெடு என்று உசும்கு தெரிவித்தார். இதற்கிடையில் சிரியாவிலுள்ள அந்த நாட்டின் அரசுக்குச் சொந்தமான இரசாயன ஆயுதங்களை அழித்தொழிப்பதற்கு அதிபர் பெஷார் அல் அசாத் நிர்வாகம் முன்வந்திருப்பதை அமெரிக்காவும் ரஷ்யாவும் பாராட்டியுள்ளன. சிரியாவின் இரசாயன ஆயுதங்களை அழிப்பதற்கு அந்த நாடு முன்வர வேண்டும் என்ற வகையில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் கடந்த மாதம் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்து இடப்பட்டிருந்த நிலையில் அசாத் அரசு நேர்மையாக நடந்து கொள்ளும் என்ற நம்பிக்கை அமெரிக்கத் தரப்பிடம்



இருக்கவில்லை. குறித்த நாள்களுக்குப் பின் இரசாயன ஆயுத இருப்புப் பற்றிய விவரங்களைத் தந்துவிடவேண்டும். அத்துடன் அவைகளை அழிப்பதற்கும் ஒத்துழைக்க முன்வர வேண்டும். இல்லையெனில் சிரிய நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்ற வகையில் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தது. அதே சமயம் சிரியா எந்த வகையிலாவது பொய் கூறி ஏமாற்ற முயலுமானால் ரஷ்யா தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள நேரும் என்று ரஷ்யாவும் மறைமுகமாக எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையில்தான் அசாத் அரசு இரசாயன ஆயுதங்களை களைவதில் விரைந்து செயற்படத் தொடங்கியிருப்பதாகவும் இது குறித்து அசாத் அரசு பெருமைப்பட்டுக்கொள்ளலாம் என்றும் அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது:

சிரியாவிலுள்ள இரசாயன ஆயுதங்களை அழித்தொழிப்பதற்கென்று அங்கு சென்றுள்ள நிபுணர் குழு வொன்று அந்த நாடு தமது பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக அறிவித்ததையடுத்து அமெரிக்காவின் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. ஐ.நா.பாதுகாப்புச் சபை அண்மையில் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு இணங்க இரசாயன ஆயுதங்களை அழிப்பதற்கான செயற்பாட்டை ஆரம்பித்திருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி பாராட்டியுள்ளார். இந்தச் செயற்பாடானது குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறித்தும் இதில் ரஷ்யா வழங்கிய ஒத்துழைப்பு குறித்தும் நாம் பாராட்ட விரும்புகிறோம். இதில் சிரியா இணங்கிச் செயற்படுவதும் பாராட்டுக்குரியது என்றார் ஜோன் கெரி.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் கேர்கே லாவ்ரோவுடன் ஆலோசனை கலந்த பின்பு ஜோன் கெரி இந்தோனேஷியாவில் பத்திரிகையாளர்களிடம் பேசினார்.

பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றி ஒரு வாரத்துக்குள் சில இரசாயன ஆயுதங்கள் அழிக்கப்பட்டிருப்பது மிகவும் முக்கியத்துவமான விடயம் என்றார் அமெரிக்க அமைச்சர்.

## அடுத்த மாதம் சர்வதேச மாநாடு

இது ஒரு நல்ல ஆரம்பமாகும் என்று குறிப்பிட்ட ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சிரியா தொடர்பாக சர்வதேச மாநாடொன்றை அடுத்த மாதம் நடத்துவதற்கு அமெரிக்காவும் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த மாதம் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி சிரியா தனது இரசாயன ஆயுத உற்பத்தி சாதனங்கள் அனைத்தையும் நவம்பர் 1 ஆம் திகதிக்கு முன் அழித்துவிடவேண்டும். இந்த நடவடிக்கைகளை இரசாயன ஒழிப்பு ஸ்தாபனம் மற்றும் ஐ.நா.நிபுணர்களால் கண்காணிப்பு செய்யப்படும். இந்தக் குழு கடந்த வாரத்துக்கு முந்திய செவ்வாய்க்கிழமை டமாஸ்கர் நகருக்கு வந்து சேர்ந்தது. சிரிய வேலையாள்கள் இரசாயன ஆயுதங்களான ஏவுகணைகளில் உள்ள குண்டு முனைகள் விண்ணில் பாயும் குண்டுகள் இரசாயனங்களைக் கலக்கும். மற்றும் நிரப்பும் கருவிகளை அழிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள் என்று கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மாலைதீவு அதிபர் தேர்தலை மீண்டும் நடத்த பணிப்பு

மாலைதீவில் கடந்த மாதம் நடைபெற்று முடிந்த அதிபர் தேர்தல் செல்லுபடியாகாது என அந்த நாட்டின் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமையால் வரும் 20 ஆம் திகதிக்கு முன் புதிதாக தேர்தல் ஒன்றை மீண்டும் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. செப்ரெம்பர் 7 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் ஊழல்கள் இடம் பெற்றதாகவும் அதனால் தேர்தல் முடிவை நிராகரிக்கும்படியும் கோரி அதிபர் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரான காசி இப்றாகிம் என்ற வர்த்தகர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அதன்மீது விசாரணை நடத்திய நீதிமன்றம் இடைக்காலதேர்தல்ஒன்றை நிறுத்திவைத்ததுடன் முதலில் நடந்த தேர்தல் -முடிவை இரத்துச் செய்தது. செப்ரெம்பர் 7 ஆம் திகதி நடந்து முடிந்த தேர்தலில் முன்னாள் அதிபர் மொகமது நஸ்த் வெற்றி பெற்றிருந்தார். அதனை ரத்துச் செய்த நீதிமன்றம் வரும் 13 நாள்களுக்குள் மறுதேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் தீர்ப்பளித்தது.

மாலைதீவுகளில் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டிருந்த அதிபர் நஸுத் வன்முறைகளையடுத்து பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். அதன் பின் ஒன்றரை ஆண்டுகள் கழித்து நடந்த தேர்தலில் முதல் கட்ட [illegible] அவரே அதிகப்படியான வாக்குகளைப் பெற்று தெரிவாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

**உலக நடப்புகள் ஒரு பார்வை**

இதில் மாலைதீவு ஜனநாயக கட்சியின் வேட்பாளர் முதல் கட்ட வாக்கெடுப்பில் 45:45 விகித வாக்குகளைப் பெற்றிருந்தார். ஆனால் அதிபராக வெற்றி பெறுவதற்கான குறைந்தபட்சம் 50வீத வாக்குகளை அவர் பெறத் தவறிவிட்டார். எனவே இரண்டாவது வாக்களிப்பு ஒன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருந்தாலும் தேர்தலில் ஊழல் இடம்பெற்றதாக வழக்குத் தாக்கலானதாலும் அதனை விசாரிக்க உயர் நீதிமன்றம் எடுத்துக் கொண்டதாலும் இரண்டாம் கட்ட வாக்களிப்பு இடம்பெறவில்லை. இப்போது உயர் நீதிமன்றம் முதல் கட்ட வாக்களிப்பின் முடிவுகளை இரத்துச் செய்து புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின்படி இனிவரும் முதல் கட்ட வாக்கெடுப்பில் எந்த ஒரு வேட்பாளரும் அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறுவாராயின் இரண்டாம் கட்ட வாக்கெடுப்புபொன்று நடத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்கெடுப்பு நவம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் நடந்தாக வேண்டும். 1978 ஆம் ஆண்டு அரசமைப்பின் பிரகாரம் நவம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னர் புதிய அதிபர் ஒருவர் பதவியில் அமர வேண்டும். குறித்த அரசமைப்பு 30 வருடகாலமாக இருந்து வந்த மவுமூன் அப்துல்கயூமின் 30 ஆண்டுகால ஒரு கட்சி எதேச்சதிகார ஆட்சிக்கு முடிவு கட்டியிருந்தது.

## திபெத்தில் விடுதலை போராட்டம்

திபெத்தியர்களின் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

மிக அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது சீன பொலிஸார் துப்பாக்கியால் சுட்டும் அடித்தும் 60 பேருக்கு மேற்பட்ட திபெத்தியர்களை காயப்படுத்தியிருக்கிறார்கள் என்று வெளிநாடுகளில் வாழும் திபெத்தியர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

சீன தேசியக் கொடியை ஏற்றுவதற்கு மறுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட திபெத்தியர் ஒருவரை விடுவிக்கும்படி கோரி திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் அவர்கள் மீது சீன பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திபெத்தியர்களை சீன பொலிஸ்காரர்கள் தாக்க ஆரம்பித்தார்கள் என்றும் அதனால் பலர் கடுமையாக காயமடைந்திருந்த போதிலும் கூட்டத்தினர் மீது கண்ணீர்ப் புகைக் கைக்குண்டுகளை வீசியதோடு கூட்டத்தினர்மீது கண்மூடித்தனமாக சுட்டார்கள் என்றும் பிரிட்டனில் இயங்கும் திபெத்தை விடுதலை செய் என்று இயக்கம் அறிவித்தது.

பிரு என்ற நகர்ப் பகுதியில் சீன பொலிஸார் சுட்டபோது இருவர் கடுமையாக பாதிக்கப்பட்டனர் என்று அந்த நிறுவனம் அறிவித்தது. அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் எலினோர் பிர்னே றொசெவ்ரன் என்பவர் கூறுகையில் சமீப காலமாக சீன பொலிஸார் திபெத்தியர்கள் மீது நடத்தி வரும் தாக்குதல்கள் அதிகரித்து வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஒக்ரோபர் முதலாம் திகதி சீன தேசிய தினத்தையொட்டி சீன தேசியக் கொடிகளை பறக்கவிடும்படி ஏற்கனவே பொலிஸார் திபெத்தியர்களுக்கு அறிவித்திருந்ததாக மனித உரிமை இயக்கங்கள் தெரிவித்துள்ளன. அவ்வாறு செய்யாதவர்களே தாக்கப்பட்டதாக அவர்களின் குற்றச்சாட்டு. அருகாமையிலுள்ள சிசுவான் மாகாணத்திலும் திபெத்தியர்கள் நாடு கடத்தப்பட்டுள்ள தங்கள் தலைவர் தலாய் லாமாவின் 78 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியமைக்காகவே அவர்கள் மீது சீன பொலிஸார் துப்பாக்கி குண்டுகளினால் சுட்டுள்ளார்கள் என்று மனித உரிமை சபைகள் தெரிவித்துள்ளன.

சீன ஆதிக்கத்திலுள்ள திபெத்தின் பல பகுதிகளிலும் 2009 ஆம் ஆண்டில் இருந்து சீன ஆட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் தங்களை தீயிட்டுக் கொளுத்திக் கொள்ளும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாக வெளிநாடுகளிலுள்ள திபெத்தியர்களுக்கான அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிவயோகரின் முதல் அற்புதம்'

இயேசு கிறிஸ்து தனது முதலாவது அற்புதத்தைக் கல்[illegible]லில் உள்ள ஒரு திருமண வீட்டிலிருந்துதான் ஆரம்பித்தார். எமது ஈழத்து சித்தர் யோகர் சுவாமிகள் தனது முதல் அற்புதத்தை தெருவிலே இருந்து ஆரம்பித்தார். இது எத்தனை பேருக்குத் தான் தெரியும்?

ஒரு நாள் யோகர் சுவாமிகள் கால் நடையாக கீரிமலைக்கு நடந்து போய்க் கொண்டிருந்தார். மருதனார் மடத்தடியில் அவருடைய பழைய சகாக்களில் சிலரைக் கண்டுவிட்டு "எட மச்சான்! கண்டு கனநாள். இப்ப எங்கடா இருக்கிறாய்? என்ன செய்கிறாய்?" என்று வினவினார். அவர்களும் யோகர் சுவாமியிடம் குசலம் விசாரித்த பின்னர், "கீரிமலைக்கு போகலாம்" என்றார்கள். "சரி வருகிறேன் நீங்கள் முன்னே போங்கள்" என்று சொல்லி மெல்ல அவர்களைக் கடத்திவிட்டார் யோகர் சுவாமி. புறப்பட்ட நண்பர்கள் சுன்னாகத்தில் மாட்டு வண்டியை நிறுத்தி சற்று இளைப்பாறிய பொழுது சுவாமிகள் ஒரு தேநீர்க் கடையில் இருப்பதைக் கண்டு திகைத்துப் போனார்கள். "எப்படி எங்களிலும் பார்க்க விரைவாய் வந்தாய்" என்று கேட்டார்கள். அதற்கு அவர் மௌனமாகவே இருந்தார். பின்பும் வண்டிலில் வரும்படி வேண்டினார்கள். ஆனால் அவர் தான் நடந்து வருவதாகச் சொல்லி விட்டு நடந்தார். அவர்கள் வண்டிலில் வேகமாகவே போனார்கள். கீரி மலைக்குச் சென்றவர்கள்.. வண்டில் மாடுகளை அவிழ்த்து கட்டிவிட்டு கேணி யடிக்குப் போன போது சுவாமிகள் குளித்துக் கொண்டிருந்தார். அதனைக் கண்ணுற்றவர்கள் அதிர்ந்து போயினர். சுவாமிகள் குளிப்பை முடித்து வெளி யேறி உடல் துடைத்தவர், உரத்த குரலில் "கம் டவுண்" (கீழே வா) என்று ஆங்கிலத்தில் சத்தமிட்டுக் கத்தினார். உடனே ஒரு பெரும் மழை கொட்டியது. இதைப் பார்த்த சுவாமியின் சகபாடிகளான தோழர்கள் அன்று தொட்டு இவருடன் நெருங்கி கூடுவதில்லையாம்.

திருமூலரால் சிவபூமியெனப் போற்றப் பட்ட எமது ஈழத்தில் வாழ்ந்த கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், குடையிற் சுவாமிகள் போன்றவர்கள் எமது வரலாற்றுச் சுவடுகளில் என்றுமே மறக்கப்படாத மாபெரும் மகான்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் இன்றும் சூக்கும ரூபத்தில் எம்முடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.



இந்த சித்தர்களை எம் இளம் சந்ததியினருக்கு தெரியப் படுத்தி அவர்களை சன்மார்க்க வழியில் பயணிக்க வைப்பதே நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

சா.ரமேஸ்குமார்
மருதனார்மடம்

# சிரிக்க சிந்திக்க சில வரிகள்

- முத்துமணி



குடாநாட்டில் உள்ள கோயில்களில் பூசை பண்ண பூசகர் இல்லாவிட்டாலும், கும்பிட ஆக்கள் இல்லா விடங்காலும் மணியடிக்க மறந்து போனாலும், நேரம் தப்பாமல் ஊரில் உள்ள மக்களின் நித்திரையைக்குழப்பஒருவர்இருப்பார்பாருங்கோ. அவர்தான் ஒலிபெருக்கி 'ஒப்பறேற்ரர்' இவரின் சேவை அதிகாலையில் அற்புதமாக இருக்கும். கிழடுகட்டையளையும், நோயாளிகளை யும், O/L, A/L படிக்கும் பொடி பெட்டையளையும் குறிவைத்து தாக்குவதில் வல்லவராய் இருப்பார். அவர் விஞ்ஞானம் படித்தாரோ தெரியாது ஆனால் ஒலி பெருக்குவதில் விண்ணர். 60 தொடக்கம் 90 டெசி பெல்லுக்கு குறையாமல் பெருக்கிவிடுவார்- ஒலியை சரி! அந்த ஒலியைத் தான் தாங்கி கொண்டிருக்க இவருக்குப் போட்டியாக அடுத்த கோயில் 'ஒப்பறேற்ரர்' தனது கைவரிசையைக் காண்பிக்கத் தொடங்கி விடுவார். தொடர்ந்து சுற்றியுள்ள கோயில்களிலும் இதே பல்லவிதான். வில்லன் வீரப்பா சொன்னது போல் "சபாஷ்! சரியான போட்டிதான்"

உப்பிடித்தான் பக்கத்திலை உள்ள பத்திரகாளி அம்மன் கோயிலிலை ஒருநாள் 'ஸ்பிக்கர் சவுண்ட்' குறைவாய் கேட்குது. எனக்கெண்டால் வலு புளுகம். ஒப்பறேற்ரருக்கு நன்றி சொல்லுவம் எண்டு கோயிலுக்குப் போய் "தம்பி இப்பதான் சவுண்ட் கணக்காய் இருக்கு" எண்டன். அவர் சொன்னார் "உமக்கென்ன விசரே? அண்ணாந்து பாரும் அரைப்பனை உயரத்திலை அரியாலைப் பக்கம் அவிட்டுக் கட்டியிருக்கிறன் குளாயை" எண்டார். "ஏன் எண்டன் நான், அவர் சொன்னார்" ஐயர் சொன்னவர் அரியாலைச் சனம் அரிச்சனைக்கு வாறது குறைஞ்சு போச்சாம் எண்டு. அதுதான் அரியாலை வரை கேக்க உயரமாகக் கட்டியிருக்கிறன் இது எப்படியிருக்கு?

எசட்லைன்

உடனடி மற்றும் வசதியான

திரீவீல் லீசிங்

உடன் பல கொடுப்பனவுகள்!



ஒரு வருடத்திற்கான முழுமையான காப்புறுதி இலவசம்!

முற்கட்டணம் ரூ. 49,500/- மட்டுமே

குறைவான தவணைக்கட்டணம்!

முச்சக்கர வண்டி லீசிங்கிற்கு மட்டும் வழங்கப்படும் இவ் வெகுமதிகளை பெற்றுக்கொள்ள இன்றே எசட்லைன் லீசிங் கிளையொன்றுக்கு வாருங்கள்

6 வருடங்கள் வரையிலான தவணைக் கட்டண காலம்.

இவ் விசேட லீசிங் இலாபம் குறித்த காலத்திற்கு மட்டுமே!

எசட்லைன்

எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்

இல.120 - 120 A பன்னிபிடிய வீதி, பத்தரமுல்லை. பெ[illegible]

இப்போதே அழையுங்கள்:
011 4700100

www.assetline.lk

கம்பனி பதிவிலக்கம்: இலங்கை மத்திய வங்கியில் PB 82 FLA/055 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்

## பதவியேற்புச் சுவாரஸியங்கள்


தி.அமுதன்

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வரும் அரசியல் நடவடிக்கைகளில் சுவா ரஸ்யமான நிகழ்வுகள் பல இடம் பெற்று வருகின்றன. கூட்டமைப்பின் மாகாண சபை உறுப் பினர்களில் பெரும்பான்மையினர் வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் அரங்கத்திலே பதவி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது. அங்கும் வேடிக்கை வினோதங்களுக்குக் குறை வில்லை.

- நினைவுதினத்தில்கூட அஞ்சலிசெலுத்த ஆளில்லாமல் அவிந்து கிடக்கும் தந்தை செல்வா சமாதி என்றுமில்லாதவாறு அன்று சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.
- கூட்டமைப்பு நடத்திய கண்டனப் பேரணிகளில் கலந்துகொண்டிராத நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.
- இதுவரைக்கும் கூட்டமைப்பினருடன் முரண்பட்டு வந்தவரான யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேராவும், தந்தை செல்வா சமாதியிலிருந்து ஊர்வலமாக வந்தார்.
- மாகாண சபை உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தினர் உறவினர்கள் என்று பலரை அழைத்து வந்திருந்தனர். அதனால் வீரசிங்கம் மண்டபம் நிரம்பி வழிந்தது. கூட்டமைப்பு அண்மையில் ஒழுங்கு செய்த ஆர்ப்பாட்டம் ஒன்றில்கூட இவ்வளவு கூட்டம் கூடியதில்லை.
- பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா போன்று நிகழ்வு கலகலப்பாக இருந்தது. ஏராளமான பெண்கள் வண்ண வண்ண ஆடைகளில் காணப்பட்டனர். கூட்டமைப்பில் இவ்வளவு பேர் பெண்களா என்ற வியப்பு மேலோங்கியது.
- வழக்கமாக கூட்டமைப்பின் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களில் முன்னின்று கற்பூரம் கொழுத்தி ஆசீர்வாதம் வழங்கும் நபர் இந்த நிகழ்வில் 'மிஸ்ஸிங்.'
- நிகழ்வு ஏற்பாடுகள் படு மோசமாக இருந்தன. பங்கெடுக்க வந்திருந்த அரச அதிகாரிகளுக்கு ஆசனங்கள் இருக்கவில்லை. அதேபோன்று பத்திரிகையாளர்களுக்கும் இட ஒதுக்கீடு இருக்கவில்லை.
- இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் மண்டபத்துக்கு வந்தபோது அவரை வரவேற்க யாருமே இருக்கவில்லை.
- பதவியேற்க வந்த மாகாண சபை உறுப்பினர்களில் பலர் கையோடு புகைப்படப் பிடிப்பாளர்களையும் அழைத்து வந்திருந்தனர். அவர்களின் கெடுபிடிகளால் மண்டபம் அல்லோலகல்லோலப்பட்டது.
- பத்திரிகையாளர்களுக்கு உரிய ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால் கட்சியின் ஏற்பாட்டாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. "எலக்சன் என்றால் குனிஞ்சு வருவியள். இப்ப ஏறி இருந்து திமிர் காட்டிறியளோ" என்று மூத்த பத்திரிகையாளர் ஒருவர் சீறினார்.
- களமாடி உயிர்நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர்தான் நிகழ்வு ஆரம்பமானது.
- நிகழ்வை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் புறக்கணித்தனர். செல்வம் அடைக்கலநாதன் மட்டும் வந்திருந்தார்.
- "தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களித்திருந்தனர். ஆனால் நாம் ஒற்றுமையாக இருக்கவில்லை" என்று செல்வம் சொன்னபோது அரங்கு அதிர கைதட்டல் கிடைத்தது.
- "தமிழ் மக்களை இனி கடவுள்தான் காற்றபாற்றவேண்டும் என்று தந்தை செல்வா தெரிவித்திருந்தார். ஆனால், கூட்டமைப்பைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று நான் இன்று சொல்கிறேன்" என்று மேலும் தெரிவித்தார் செல்வம்.
- இவ்வளவு காலமாக அரசியல் பற்றி வாய் திறக்காத மதத் தலைவர்கள்கூட கூட்டமைப்பு மேடையில் மடைதிறந்த வெள்ளமாகத் தமது கருத்துக்களைக் கொட்டினார்கள்.
- நிகழ்வு ஆரம்பித்ததும் அழகு ராணிகளுக்குச் சூட்டுவது போன்று கிரிடங்கள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் ஆதரவாளர்களால் சூட்டப்பட்டன. கூடுதலாக வேல் ஒன்றும் விக்னேஸ்வரனுக்குக் கொடுக்கப்பட்டது.
- முதலமைச்சர் உரையாற்றும் போது, பொது வாழ்வில் இருப்பவர்கள் சுயநலமாக முடிவெடுக்கக்கூடாது எனத் தெரிவித்தார். தமக்கோ தமது குடும்பத்துக்கோ தமது நண்பர்களுக்கோ தனது தம்பிக்கோ என்று பாராமல் நடந்து கொள்ள வேண்டும்என்றார். பதவியேற்புக்கு மட்டும் குடும்பத்தை அழைத்துச் செல்லலாமா என்று அருகில் இருந்தவர் அதற்கு முணுமுணுத்தார்.
- வலி. வடக்குத் தவிசாளர் நன்றியுரை கூறி முடிக்க முன்னர் ஆசனங்களைவிட்டு எழுந்த எல்லோரும் தங்கள் வேலையைப் பார்க்கத் தொடங்கிவிட்டனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் சொன்னது...!



"இந்திய அணிக்காக விளையாடுவது தான் என் வாழ்வின் ஒரே கனவாக இருந்தது. கடந்த 24 ஆண்டுகளாக ஒவ்வொரு நாளும் இந்தக் கனவுடனேயே நான் வாழ்ந்து வந்தேன்."

1989ஆம் ஆண்டு தனது 16 வயதில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக களம் புகுந்த சச்சின் தனது 40 வயதில் கிரிக்கெட் ஆட்டங்களுக்கு விடைகொடுக்கவுள்ளார். 24 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் அவர் சாதித்த சாதனைகளுக்கு அளவே இல்லை. எத்தனை முறை புகழின் உச்சிக்கு சென்றாரோ அதுபோல் அவர் எதிர்கொள்ளாத விமர்சனங்களும் இல்லை. காய்க்கும் மரம் கல்லடி படத்தான் செய்யும் என்பதற்கு இணங்க விமர்சனங்களுக்கு சச்சின் வாய் வார்த்தைகளால் பதில் கூறுவது கிடையாது. தனது துடுப்பாட்டத்தால் மட்டுமே அவர் பதில் அளித்தார்.

பாலகனாக அறிமுகமான சச்சின் இன்று உலகம் போற்றும் நாயகனாக நம்மை விட்டு விடை பெற உள்ளார். மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக நவம்பர் 6ஆம் திகதி தொடங்கும் டெஸ்ட் தொடர்தான் சச்சின் ஆடும் கடைசி ஆட்டம். 198 போட்டிகளில் ஆடியுள்ள சச்சின் 15, 837 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

### சச்சின் தவறவிட்டவை

டெஸ்ட் ஆட்டத்தில் லாராவின் 400 ஓட்டங்கள்.

300 ஓட்டங்கள். சச்சினின் அதிகபட்ச ஓட்டம் 248.

ஒரு தொடரில் அதிகபட்சம் 493 ஓட்டங்கள் குவித்துள்ளார். இந்த வகையில் பிராட்மேன் 974 ஓட்டங்கள் விளாசினார்.

இரண்டு இன்னிங்ஸிலும் சச்சின் சதம் விளாசியது இல்லை. பொன்டிங், கவாஸ்கர் ஆகியோர் தலா 3 முறை இந்த சாதனையை நிகழ்த்தி உள்ளனர்.

அதிகபட்சமாக சச்சின் ஒரே ஆண்டில் 1562 ஓட்டங்கள் குவித்துள்ளார். பாகிஸ்தானின் முகமது யூசுப் 1788 ஓட்டங்கள் விளாசியுள்ளார்.



"இந்த ஓய்வு முடிவு எனது உடல் தகுதியை கொண்டோ அல்லது செயற்பாட்டைக் கொண்டோ எடுக்கப்பட்டது அல்ல. எனது இதயத்தில் இருந்து எடுக்கப்பட்ட முடிவு. சொந்த மண்ணில் 200வது டெஸ்ட் போட்டியை விளையாடும் வாய்ப்புக்காக காத்திருக்கிறேன்." – சச்சின்

# ஓய்வு பெறும் டில்ஷான்: அதிர்ச்சியில் இரசிகர்கள்



கிரிக்கெட் இரசிகர்களுக்கு கடந்த வாரம் ஒரு அதிர்ச்சி வாரமாகவே அமைந்திருக்கும் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை. கிரிக்கெட்டின் சகாப்தம் என்று அழைக்கப்படும் இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர் தனது ஓய்வை அறிவித்திருந்த ஓரிரு நாளில் இலங்கை அணியின் அதிரடி ஆட்டக்காரர் திலகரட்ண டில்ஷான் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை இலங்கை இரசிகர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

கிரிக்கெட்டைப் பொறுத்தவரை டில்ஷான் எடுத்திருக்கும் முடிவு சரியானது என்றே கருத வேண்டும். டெஸ்ட் ஆட்டத்தைப் பொறுத்தவரையில் உடற்தகுதி என்பது மிக முக்கியம். 36 வயதாகும் டில்ஷான் தொடர்ந்தும் டெஸ்ட் தொடர்களில் பங்கேற்பராக இருந்தால் அவர் ஒருநாள் ஆட்டங்களில் சோபிக்க முடியாத நிலை ஏற்படும் என்பது தெளிவு.

குறிப்பிட்ட வயதுக்குப் பின்னர் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதன் மூலம் ஒரு நாள் ஆட்டங்கள் மற்றும் '20/20' ஆட்டங்களில் திறமையாகச் செயற்படுவதற்குரிய உடற்தகையைமைப் பேண முடியும். அந்த வகையில் டில்ஷான் சிறப்பான சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்துள்ளார் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இரசிகர்களைப் பொறுத்தவரையில் இலங்கை அணியில் அதிரடியாக ஆடக்கூடியவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது என்பது மிகப் பெரிய கவலை. இலங்கை அணியில் தற்போது உள்வாங்கப்பட்டுள்ள இளம் வீரர்களில் டில்ஷான், சங்ககாரா, மஹேல போன்று பொறுப்புடனும் அதிரடியுடனும் விளையாடும் தன்மையைக் காண முடியாதுள்ள நிலையில் மூத்த வீரர்களின் ஓய்வு இலங்கை கிரிக்கெட் இரசிகர்ளுக்கு அதிர்ச்சியையே ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

# கிரிக்கெட் நேசிக்கும் வீரனின் போராட்டம்



காலம் முடிந்து விட்டது. ஆட்டத் திறன் குறைந்து விட்டது. கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதுதான் சிறந்த வழி என்று கிளம்பிய அறிக்கைகள் அனைத்துக்கும் தனது துடுப்பு மட்டையால் ஓங்கி அடித்துள்ளார் யுவராஜ் சிங்.

யுவராஜ் சிங் - இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் - சகலதுறை வீரர் - நம்பிக்கை நட்சத்திரம். எத்தனையோ ஆட்டங்களில் இந்திய அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்ற வீரன். கிரிக்கெட் அரங்கில் அதிரடியால் கலக்கிக் கொண்டிருந்த அந்த வீரனுக்கு புற்றுநோய் னும் வடிவில் வந்தது சோதனை. அனைவரும் கூறினார்கள் யுவராஜின் கிரிக்கெட் அத்தியாயம் முடிந்துவிட்டது என்று. இனிமேல் மீள முடியாது என்று. எனினும் தளர வில்லை யுவராஜ். கிரிக்கெட் மைதானத்தில் காட்டும் அதே ஆக்ரோஷத்துடன் நோயையும் எதிர்த்துப் போராடினான். வெற்றியும் கண்டான்.

அந்த வெற்றியுடன் நின்று விடவில்லை. கிரிக்கெட் துடுப்பை மீண்டும் எடுத்துக் கொண்டான். நோயுடனான போராட்டம் - குறைவான பயிற்சி யுவராஜின் திறமைகளை மழுங்கடித்திருந்தன.

தொடர்ந்து வந்த ஆட்டங்களில் தடுமாற்றம். யுவராஜை அணியில் இருந்து தூக்கி யது இந்திய கட்டுப்பாட்டுச் சபை. சுமார் ஒரு வருடம் எந்த அணித் தெரிவிலும் யுவராஜ் இடம்பெறவில்லை.

மீண்டும் அறிக்கைகள் கிளம்பின. யுவராஜ் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு எடுப்பதுதான் சிறந்தது. இளைய வீரர்களின் திறமைகளுடன் அவரால் போராட முடியாது என்று.

ஆனால் அவர்களுக்கெல் லாம் யுவராஜ் சொன்ன பதில் - நான் மீண்டும் இந்திய அணியில் இடம்பிடித்துச் சாதிப்பேன். வயது திறமைக்குத் தடையல்ல என்பதே. கூறியவாறு காரியத்தில் இறங்கினார் யுவராஜ் சிங். பிரான்ஸ் சென்று பிரபல பயிற்சியாளரிடம் பயிற்சிகள். தென்னாபிரிக்கா சென்று பயிற்சிகள் என்று இடை விடாத பயிற்சிகள். பயிற்சிகளின் பின்னர் உள்ளூர் ஆட்டங்கள்.

உள்ளூர் ஆட்டங்களில் யுவராஜின் துடுப்பு மட்டை ஆடத் தொடங்கியது. இமாலய சிக்ஸர்கள் பறக்கத் தொடங்கின. இரசிகர்கள் யுவராஜின் விஸ்வரூபத்தை மீண்டும் கண்டு ரசித்தனர். இந்தியக் கிரிக்கெட் சபை யின் பார்வையும் யுவராஜின் மீது வீழ்ந்தது.

நீண்ட இடைவேளையின் பின்னர் ஆஸ்திரேலிய அணிக்கெதிரான இந்திய அணியில் இடம்பிடித்தார் யுவராஜ். சாதிப்பாரா? என்பதை விட சாதிக்க வேண்டும் என்பது யுவராஜின் கட்டாயம். இல்லையென்றால் மீண்டும் அறிக்கைகள் கிளம்பி விடும் என்பதும் அவருக்குத் தெரியும்.

நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலிய அணிக்கெதிரான '20/20' ஆட்டம் யுவராஜுக்கு சோதனைக் களம். முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்தி ரேலிய அணி 201 என்ற இமாலய இலக்கை நிர்ணயித்தது. தடுமாறிய இந்திய அணிக்கு நான் இருக்கின்றேன் என்று கைகொடுத்தார் யுவராஜ். பறக்கத் தொடங் கின சிக்ஸர்கள் ஒன்றல்ல.. இரண்டல்ல.. ஐந்து. எட்டு பவுண்டரிகள் 35 பந்துகளில் ஆட்டமிழக்காது 77 ஓட்டங்கள். இந்திய அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார் யுவராஜ். அறிக்கை மேல் அறிக்கை விட்டவர்கள் வாயடைத்துப் போனார்கள்.

"திறமையை வயதைக் கொண்டு எடைபோடாதீர்கள். நான் கிரிக்கெட்டை மிகவும் நேசிப்பவன். நான் அதில் சாதிப்பேன். நான் எனது திறமையை வளர்த்துக் கொள்ள பயிற்சிகளைத் தொடர்ந்து செய்கின்றேன். அதற்காக கட்டாயம் இந்திய அணியில் என்னைச் சேர்க்க வேண்டும் என்று கோரப் போவதில்லை. ஆனால் ஒரு நாள் இந்திய அணியில் சேர்க்கப்படும்போது எனது திறமையைக் காட்டுவேன்" என்று தாம் கூறிய வார்த்தைகளை நிரூபித்துக் காட்டியிருக்கின்றார் யுவராஜ்.

இனி வரும் ஆட்டங்களில் அந்த கிரிக்கெட் வீரனின் அதிரடி ஆட்டங்களால் அரங்கம் அதிரும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இது கிரிக்கெட்டை நேசிக்கும் ஒருவனின் போராட்டம்.

நான் கிரிக்கெட்டை மிகவும் நேசிப் பவன். நான் அதில் சாதிப்பேன். நான் எனது திறமையை வளர்த்துக் கொள்ள பயிற்சிகளைத் தொடர்ந்து செய்கின்றேன். அதற்காக கட்டாயம் இந்திய அணியில் என்னைச் சேர்க்க வேண்டும் என்று கோரப் போவதில்லை. ஆனால் ஒரு நாள் இந்திய அணியில் சேர்க் கப்படும்போது எனது திறமை யைக் காட்டுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதங்கன்

# தொப்பிகளும் நல்லிணக்க அரசியலும்




ஒரு நாள் தொப்பி வியாபாரி ஒருவர் விற்பனைக்காக வண்ணமயமான நிறையத் தொப்பிகளுடன் பக்கத்து ஊருக்குச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு காடு குறுக்கிட்டது. நீண்ட தூரம் நடந்ததால் களைப்புற்ற வியாபாரி சிறிது நேரம் இளைப்பாற எண்ணி தொப்பி மூடையை கீழே வைத்துவிட்டு ஒரு மரத்தினடியில் உறங்கிப் போனான். அவன் கண்விழித்த போது மூடையிலிருந்த தொப்பிகள் எல்லாம் காணாமல் போயிருந்தன. திடுக்கிட்டுப் போன வியாபாரி சுற்றும் முற்றும் தேடிவிட்டு நிமிர்ந்தபோதுதான் உண்மை புரிந்தது. குரங்குக் கூட்டம் ஒன்று அவனுடைய தொப்பிகளை தங்களுடைய தலையில் அணிந்தவாறு மரக்கிளையில் ஒய்யாரமாக உட்கார்ந்திருந்தன. வியாபாரிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அந்தக் கோபத்தோடு கையில் அகப்பட்ட கற்களை எடுத்து குரங்குகளை நோக்கி ஆவேசமாக எறிந்தான். பதிலுக்கு அந்தக் குரங்குகளும் மரக்கிளைகளைப் பிடுங்கி அவனை நோக்கி எறிந்து கொண்டு இருந்தனவே தவிர தொப்பியைக் கீழே போடுவதாக இல்லை. குரங்குகளோடு முரண்பிடித்தால் அவையும் தன்னோடு முரண்படவே செய்யும் என உணர்ந்து கொண்ட வியாபாரி தன்னுடைய உத்தியை மாற்றிக் கொண்டான்.

குரங்குகளை நோக்கி கற்களை எறிவதற்குப் பதிலாக, தன்னுடைய தலையை சொறிந்துகொண்டான். குரங்குகளும் தலையைச் சொறிந்தன. பின்னர் அப்படியே தன்னுடைய தலையிலிருந்த தொப்பியை கழற்றி நிலத்தில் போட்டான். அவன் செய்ததைப் போலவே குரங்குகளும் தங்கள் தலைகளிலிருந்த தொப்பியை கீழே போட அவ்வளவற்றையும் எடுத்துக் கொண்டு தன்னைத்தானே மெச்சிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான் வியாபாரி.

சின்ன வயதில் எல்லோரும் படித்த கதைதான். ஆனால் அதனுள் பொதிந்திருக்கும் அர்த்தமே இப்போது இணக்க அரசியல் என்று அடையாளப்படுத்தப் படுகிறது. எப்போதும் எதிர்ப்பரசியலே கூட்டமைப்புக்கு செய்யத் தெரியும் என்பதுதான் இதுநாள்வரை அரச தரப்பிலிருந்து எறியப்பட்ட வார்த்தைகள். ஏனெனில் தமிழர் தரப்புக்கு ஒவ்வாத செயல்களையே அரசு முன்னெடுத்து வந்ததால் அவற்றுக்கு எதிராக கூட்டமைப்பே ஜனநாயக ரீதியில் குரல் கொடுத்து வந்தது. இந்த எதிர்ப்புக் குரல் வெளியிலிருந்து பார்க்கும்போது வீம்புக்காக கொடுக்கப்படும் குரல் போலவே தென்படும் .

இதனையே கெட்டியாகப் பிடித்துக் கொண்ட அரசு "புலிகளைப் போலவே கூட்டமைப்பும் பிடிவாதம் பிடிக்கிறதே தவிர இணக்கப்பாட்டுக்கு வருவதாக இல்லை" என்று தன்னுடைய பரப்புரையை உலகெங்கும் விரித்தது. சில நாடுகள் இலங்கை சொல்வதை நம்பவும் செய்தன.

இந்த நிலையில்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கென் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை இலங்கை அரசு அமைத்தது. ஆனால் இந்தத் தெரிவுக்குழு போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து தப்பிப்பதற்காக இலங்கை அரசு ஆடுகின்ற நாடகம் என்பதை நன்கு புரிந்துகொண்ட கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்குள் பங்கெடுக்க மறுத்துவிட்டது. ஆனால் தெரிவுக்குழுவுக்கு வந்தால் மட்டுமே இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் பேச முடியும் என்று அரசும் உடும்புப்பிடியாக நின்றது.

அத்தோடு "பார்த்தீர்களா நாங்கள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வளவு தூரம் இறங்கிவந்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்திருக்கிறோம். ஆனால் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறையில்லாததால்தான் தெரிவுக்குழுவுக்குள் வர கூட்டமைப்பு மறுதலிக்கிறது. அவர்களுக்கு பிரச்சினையை வைத்துத்தான் அரசியல் செய்யத் தெரியும். இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டால் தங்களுடைய அரசியல் எதிர்காலம் இருண்டுபோய்விடும் என்ற அச்சத்தில்தான் தெரிவுக்குழுவுக்கு வர பின்னடிக்கிறார்கள்" என்று மீண் டும் ஒருமுறை உலகச் சந்தியில் ஒப்பாரி வைத்தது அரசு.

இதனால் சில நாடுகள் தெரிவுக்-குழுவுக்கு போகச் சொல்லி கூட்டமைப்புக்கு மறைமுக அழுத்தங்களையும் கொடுத்திருந்தன. ஆனாலும் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தது.

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் சொல்லப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்கும் சர்வதேச நாடுகள் தொடர்ச்சியாக நெருக்குதல் கொடுத்தன. அந்த நெருக்குதலைத் தாங்க முடியாத கட்டத்தில்தான் வடமாகாண சபைத் தேர்தலை செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடத்த நாள் குறித்தது அரசு. தனக்குச் சாதகமற்ற களத்தில் பாதகமான முடிவு வரும் என்பதை உணர்ந்துகொண்டதாலேயே இதுநாள் வரை வடமாகாணத்துக்கு மட்டும் தேர்தலை நடத்தாமல் ஆட்சி யாளர் கள் இழுத்தடித்துக் கொண்டிருந் தார்கள். இனிமேல் இழுத்தடிப்பதற்கு இடமேயில்லை என்று நிலை வந்த போது வேண்டாவெறுப்பாக இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. எல்லோரும் எதிர் பார்த்ததைப் போலவே - அதற் கும் மேலாக - கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியது. புலிகள் மக்களிடம் எந்தக் கருத்தை முன்வைத்து விடு தலைக் காகப் போராடினார்களோ அதே கருத்துக்களை மீள்பிரசவம் செய்து வடமாகாணத் தேர்தலைக் கூட்டமைப்பு எதிர்கொண்டது. இந்த முறை மக்கள்வாக்களித்தது கூட்டமைப் புக்காக அல்ல கூட்டமைப்பு முன் வைத்த கொள்கைக்காகவே. இதுவே கடைசியும் முதலுமான எங்களின் ஆயுதம் என்ற ரீதியில்தான் தேர்தல் நாளன்று தங்கள் இயலாமைகளைக் [illegible] வாக்களிப்பில் அக்கறை [illegible] காலையிலிருந்தே எழுச்சி யோடு வந்து வாக்குப் பதிவில் ஈடுபட் டார்கள்.

என்றைக்கும் இல்லாத திருநாளாக செப்ரெம்பர் 21இல் வடக் கில் ஒரு மக்கள் புரட்சியைக் காண முடிந்தது. இந்த வாக்களிப்புப் புரட்சி யால் மூன்றிலிரண்டை விடவும் அதிகரித்த பெரும்பான்மையோடு வடமாகாணத் தேர்தலில் வாகை சூடியது கூட்டமைப்பு.

வடமாகாணத் தேர்தல் பரப்புரையின் இறுதிநாள்களில் வடக்குக்கு வந்த ராஜபக்ஷ சகோதரர்கள் "அரச கட்சியை ஆட்சியில் அமர்த்தினால் மாத்திரமே தமிழ் மக்கள் அபிவிருத்தியை அனுபவிக்க முடியும். மாறாக கூட்டமைப்பைத் தெரிவு செய்தால் இப்போது கிடைக்கும் அபிவிருத்திகள் கூடக் கிடைக்காமல் போய்விடும்" என்று மறைமுகமாக மிரட்டியிருந் தார்கள். ஏனெனில் கூட்டமைப்பு ஆட்சிக்குவந்தால் வழமைபோல எதிர்ப்பரசியலே செய்யும் என்பது அவர்களுக்குத் தெரியும். தம்மிடம் இன்னமும் வாலாட்டிக் கொண்டிருக்கும் இணக்க அரசியல் காரர் களைப் போல கூட்டமைப்பை யும் தனது வீட்டுக் கோடியில் கட்டி வைக்க முடியும் என்று அரசு நம்ப வில்லை. எனவே தம்மை எதிர்த்து ஒரு மாகாண ஆட்சியை சரிவர நடத்துவதற்கு கூட்டமைப்பை விடப் போவதில்லை என்றே அரச தரப்பு கங்கணம் கட்டியிருந்தது.

விடு தலைப் புலிகள் கைகளில் ஆயுதங்களோடு எப்படி அதிகாரத்தை எதிர்த்தார்களோ அதே போன்று ஜனநாயகப் போரில் தங்களை கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கும் என்று அரசு கணக்குப் போட்டிருந்தது. அவ்வாறு நிகழும் பட்சத்தில் எடுக்க வேண்டிய பதிலடிகள் குறித்தும் திட்டமிடப் பட்டிருந்தது.

கூட்டமைப்பு வழமைபோன்று எதிர்ப்பரசியல் [illegible] என்பதை தேர்தல் முடிவுகள் வெளி வந்த தினம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனும் தெரிவித்திருந்த கருத்துக்கள் உறுதிப்படுத்தின.

"மக்களின் ஆணைக்கு மாறாக எதையும் செய்ய மாட்டோம்" என்று அவர்கள் உறுதியளித்தார்கள்.

ஆனால் எவரும் எதிர்பாராத திருப்பமாக, வடக்கின் முதல்வராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார் விக்னேஸ்வரன். இது வடக்கில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியிருந்தது. "இப்படி முதல் நாள் சொன்னதை மறந்துவிட்டு அடுத்தநாளே அதிகாரத் தலைவருடன் கொஞ்சிக் குலவுவதற்காக கூட்டமைப்புக்கு வாக்களித்தோம்" என்று தம்மைத் தாமே நொந்து கொள்ளும் நிலைக்கு வடக்கு மக்கள் தள்ளப்பட்டனர். ஆனால் மக்களின் கருத்தோ, பங்காளிக் கட்சிகளின் கருத்தோ கவனத்தில் கொள்ளப்படாமல் உற்றமும் சுற்றமும், இணக்க அரசியல் முன்னோடிகளும் சூழ்ந்து நிற்க முதல்வரின் பதவிப் பிரமாணம் மஹிந்த முன்னிலையில் இனிதே நிறைவேறியது.

பதவியேற்பின் பின்னர் தன் னிலை விளக்கமாக வடக்கு முதல்வர் பின்வருமாறு கூறினார். "நாங்கள் எப்போதும் தீர்வையே விரும்பு கிறோம் என்று சிங்கள மக்கள் நம்ப வேண்டும். அதற்கான நல்லிணக் கமாகவே ஜனாதிபதிக்கு முன்னால் பதவியேற்று ஒரு சமிக்ஞையை வழங்கியுள்ளோம். இதன் மூலம் தமிழ் மக்கள் போரை அல்ல தீர்வையே விரும்புகிறார்கள் என்று சிங்கள மக்களுக்குப் புரியும் நிலை உருவாகும்".

முதல்வரின் இந்தக் கூற்று கூட்டமைப்பு தன்னுடைய பாதையை நல்லிணக்க அரசியல் என்ற தடத்துக்கு மாற்றியிருப்பதை உணர்த்தியது.

ஆடுகிற மாட்டை ஆடியும் பாடுகிற மாட்டைப் பாடியுமே கறக்க வேண்டும் என்ற ராஜதந்திரமே தனது பதவியேற்புக்குப் பின்னால் ஒளிந்திருப்பதாக தமிழ் மக்களுக்கு வடக்கு முதல்வர் உணர்த்தினார். ஆனால் சிங்கள மக்களோ அல்லது பேரின அதிகாரப் பீடமோ இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருந்த கதையில் வருவது போன்று செய்ததைத் திருப்பிச் செய்யும் குரங்குக் கூட்டமல்ல. அவர்கள் மிக நன்கு திட்டமிட்டு தங்களுடைய இருப்பைப் பலப்படுத்தி, சிறுபான்மையின் இருப்பை விழுங்கி வருபவர்கள்.

அவர்களுக்கு முன்னால் இந் தத் தந்திரங்கள் எல்லாம் எடுபடப் போவதில்லை என்பதை அடுத்தடுத்த நாள்களில் வந்த அரசின் அறிவிப்பு வெளிப்படுத்தியது.

வடக்கு முதல்வராக விக்னேஸ்வரன் பதவியேற்ற நாளில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடினார். அப்போது "முழு அதிகாரங்களுடன் கூடிய 13 ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதோடு, கூட்டமைப்போடு கதைத்துப் பேசி இனப் பிரச்சினையைத் தீர்க்கப் பாருங்கள்" என்று இந்தியாவின் நிலைப்பாட்டை உணர்த்தினார்.

தொப்பி களவாடிய குரங்குகளாக அரசு இருந்தால் விக்னேஸ்வரன் காட்டிய நல்லிணக்கத்துக்கு பதில் நல்லிணக்கத்தை அல்லவா காட்டியிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்ய அவர்கள் முட்டாள்கள் அல்லர். வடக்கு மாகாண தேர்தல் முடிவுகள் அடித்த அடி இன்னமும் அரசின் கன்னத்தில் உறைத்துக் கொண்டிருந்ததால் "அதெல்லாம் முடியாது. நாங்கள் முன்னரே சொன்னபடி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு வந்தால் மாத்திரமே அரசு பற்றி யோசிக்க முடியும்" என்று முகத்தில் அடித்தாற் போல் சொல்லிவிட்டார் மஹிந்த.

தாங்கள் நல்லிணக்கத்தை காட்டினால் அவர்களும் நல்லிணக்கத்தையே காட்டுவார்கள் என்ற கூட்டமைப்பின் நம்பிக்கைக்கு விழுந்திருக்கிறது சாவு அடி. பேரினவாதம் எப்போதும் முகம் காட்டும் நிலைக்கண்ணாடி யல்ல, நாங்கள் காட்டுவதை அப்படியே திருப்பிக் காட்டுவதற்கு.

கூட்டமைப்பு இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட 50 வருடங் களுக்கு மேலாகத் திட்டமிட்ட இனஅழிப்பில் ஈடுபடும் பேரினவாதம் மிக நுண்ணிய அரசியல் சித்து விளையாட்டுக்களில் கைதேர்ந்தது. அதனை நன்கு உணர்ந்த பின்புதான், அரசியல் பாதை தோற்றுப் போன பின்புதான் இளைஞர்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்தார்கள். ஏனெனில் பேரினம் நாங்கள் அஹிம்சையோடு சொல்வது எதனையும் அக்கறை யோடு காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஆகவேதான் அடித்தாவது சொல்வோம் என்று இளைஞர்கள் புறப்பட்டிருந்தார் கள். அதற்குப் பலனும் கிடைத்திருந் தது. ஆனால் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்களின் மௌனிப்போடு எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது.

இந்த நிலையில் கடந்த பாடங்களையும், பேரினம் எமக்கு அளித்த ஏமாற்றப் பரிசுகளையும் உணர்ந்து கொள்ளாமல் "நம்புங்கள் நாங்களும் நல்லபிள் ளைகள்தான்" என்று காட்டுவதற் காக நல்லிணக்கத்தை வெளிப்படுத்து கிறோம் என்று கூறுவது உண்மையில் பயன் தருமா என்பது மிகப் பெரிய கேள்வி. மாறாக மக்களின் நம்பிக்கையை கூட்டமைப்பு இழப்பதற்கே வழிவகுத்துவிடலாம். மாகாண ஆட்சியை முழுதாக ஏற்றுள்ள கூட்டமைப்பு இனியாவது மக்களுக் கான அரசியல் செய்ய வேண்டுமே தவிர அரசை 'கூலாக்குவதற்கான' பணிகளைத் தவிர்க்க வேண்டும் என்பதே மக்களின் இப்போதுள்ள எதிர்பார்ப்பு. மக்களுக்கான அரசியல் செய்ய கூட்டமைப்பு விரும்புகிறதா என்பது இன்னும் சில மாதங்களில் தெரிந்துவிடும்.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுயநிர்ணயம், உரிமை, தேசியம் என்ப வற்றை அடிப்படையாக வைத்தே மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கியிருந்தார்கள்.

# மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து செயற்படுக

அதிரன்

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பெருவெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 30 ஆசனங்களைக் கைப்பற்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தனதாக்கிக் கொண்டது. மிகப் பெரும் எதிர்பார்ப்புடன் நடைபெற்ற தேர்தலின் மூலம் வடக்கு மாகாண சபை இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாக ஆளுகைக்குள் வந்துள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக சரியான ஒரு நிர்வாக ஆளுகை இன்றி வடக்கு மாகாண சபை கால் போன போக்கில் பயணித்து செயற்பட்டு வந்தது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஆளுநரின் கட்டளைகளை சிரமேற் கொண்டு வடக்கு மாகாண சபை அதிகாரிகள் பணியாற்றி வந்தனர். அந்தச் செயற்பாடுகள் சரி, பிழை என்பவற்றுக்கு அப்பால் ஆளுநரின் கட்டளை என்பதே மேலோங்கியிருந்தது. மக்கள் நலன்களோ, சேவை நோக்கிலான செயற்பாடுகளோ எதுவும் இதுவரை கவனத்தில் கொள்ளப்படவில்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஆளுநர்கள் எதை சொல்கிறார்களோ அதற்குச் செயல் வடிவம் கொடுப்பதிலேயே வடக்கு மாகாண சபை அரச அதிகாரிகள் அதிக அக்கறையுடனும் சிரத்தையுடனும் செயற்பட்டு வந்தனர் என்பது தெட்டத் தெளிவு.

அரசுக்கு சாதகமான - அவசியமான செயற்பாடுகளை மட்டுமே வடக்கில் மேற்கொள்வதற்கான அனுமதியை ஆளுநர் அரச அதிகாரிகளுக்கு வழங்கியிருந்தார். அதனால் அவர்களும் ஆளுநர் சொன்னதையே செய்தார்கள். அதற்கப்பால் சென்று போரினால் பாதிப்படைந்த வடக்கு மக்களுக்கு அர்ப்பணிப்பான - தன்னலமற்ற சேவைகளை வழங்க முடியவில்லை. ஆளுநரின் அதிகாரம் அவர்களின் கைகளை கட்டிப் போட்டது. வடக்குக்கு நியமிக்கப்பட்ட ஆளுநரும் முன்னர் படை அதிகாரியாக இருந்தமையால் சிவில் நிர்வாகத்தில் அவர் இராணுவ ரீதியான அணுகுமுறைகளையே அதிகம் திணித்து வந்தார். இதனால் அரச அதிகாரிகளினால் நீதியாகச் செயற்பட முடியாமல் போய்விட்டது.

ஆயினும் தற்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. வடக்குத் தேர்தலுடன் அந்த மாகாணத்தின் நிர்வாக ஆளுகையை மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கையளித்திருக்கிறார்கள். இதன் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் இப்போது அதிகாரம் போய்சேர்ந்திருக்கிறது.

இதுவரை காலமும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமையால் வடக்கு மாகாண

**ஒட்டுமொத்தத் தமிழர்களும் கூட்டமைப்புக்கு வாக்களித்து அவர்களை இந்தத் தேர்தலில் வெற்றி பெற வைத்த தன் நோக்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் ஒரு நிலையான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே.**

சபை பல்வேறு செயற்பாடுகள் தொடர்பாகவும் அரச அதிகாரிகள் மீதே குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டியிருந்தது. ஆயினும் இப்போது நிலைமை அப்படியில்லை. அந்த அரச அதிகாரிகளை சிறப்பாக வழிநடத்துவதற்காக, - மக்களுக்காக சிறந்த சேவையை வழங்குவதற்காக மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு பொறுப்பேற்றிருக்கிறார்கள். வடக்கு மாகாண அமைச்சுப் பதவிகளும் புதிதாகத் தெரிவான உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அவர்களும் அதனைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஒட்டுமொத்தத் தமிழர்களும் கூட்டமைப்புக்கு வாக்களித்து அவர்களை இந்தத் தேர்தலில் வெற்றி பெற வைத்த தன் நோக்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் ஒரு நிலையான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே. இதனைப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மனதில் கொண்டு செயற்பட வேண்டிய தேவையும் கடப்பாடும் உள்ளது.

எனினும் மாகாண சபை பதவியேற்று செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னரே அதற்குள் முரண்பாடுகளும் கருத்து மோதல்களும் பதவி ஆசைகளும் தோன்றியிருக்கின்றன. அமைச்சுப் பதவிகளுக்காக அடிபடுகின்றனர் கட்சித் தலைவர்கள். தேர்தலின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை தூக்கியெறிந்துவிட்டு தமது நலனே முக்கியம் என்று கருதிக்கொண்டு வேண்டத்தகாத கருத்துக்களை வெளியிட்டு ஒற்றுமையைக் குலைப்பதற்கு சிலர் முயற்சிக்கிறார்கள். தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு ஒற்றுமை யாக வாக்களித்தே வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். அந்த ஒற்றுமையைக் குலைப்பதற்கு சிலர் சிறுபிள்ளைத்தனமாகச் செயற்படுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

சுயநிர்ணயம், உரிமை, தேசியம் என்பவற்றை அடிப்படையாக வைத்தே மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கியிருந்தார்கள். அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டிய தலையாய கடமை புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுக்கும் உண்டு என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம்.

பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய [illegible] தலைவர்களும் [illegible] தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிடம் இதைத்தான் கேட்டுள்ளார்கள். மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்றுமாறு இந்த நிகழ்வில் அவர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்தனர்.

"நாங்கள் விட்டுக்கொடுக்க முடியாத இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று சுயநிர்ணய உரிமை. மற்றையது தேசியம்.

இவற்றை அடிப்படையாக வைத்தே மக்கள் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். வரலாற்று திருப்புமுனையான தருணத்தில் நாங்கள் இருக்கிறோம் என்பதை உணர்ந்து எங்களுக்குள் இருக்கின்ற கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் என்பவற்றை மறந்து செயற்பட வேண்டும்" என்று பதவியேற்பு நிகழ்வில் உரையாற்றிய தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா தெரிவித்திருக்கிறார். அவர் கூறுவதைப் போன்று எமக்கு வழங்கப்பட்ட ஆணையிலிருந்து நாம் ஒருபோதும் விலகிவிட முடியாது, தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்கள், பதவி ஆசைகள் என்பவற்றுக்காக மக்கள் வழங்கிய ஆணையை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது.

இந்தப் பதவியேற்பு நிகழ்வில் கூட 21 மாகாண சபை உறுப்பினர்களே கலந்துகொண்டார்கள். அமைச்சர் பதவிகளை வழங்குவதில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக 9 உறுப்பினர்கள் இதில் பங்கேற்கவில்லை. எமக்குள் எவ்வளவோ பிரச்சினைகள் இருந்தாலும் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையின் பதவியேற்பை பகிஷ்கரிப்பது பொறுப்புள்ள ஒரு மக்கள் பிரதிநிதிக்கு ஏற்புடையதல்ல. வாக்குறுதிகளை வழங்கி மக்களிடம் வாக்குக் கேட்டு வெற்றிபெற்றுவிட்டு சுயநலனுக்காக தாம் நினைத்தவாறு செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிர்காலத்தில் மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள் என்பது கடந்த கால உண்மை. இந்த உறுப்பினர்களில் சிலர் நீண்ட - முதிர்ந்த அரசியல் அனுபவங்களைக் கொண்டுள்ளவர்களாக

யங்களுக்காக பதவியேற்பை பகிஷ்கரித்தமை வெட்கக்கேடான விடயம்.

முதல் கோணல் முற்றும் கோணல் என்பதைப் போன்று பதவியேற்பிலேயே ஒற்றுமையின்றி அடிபடும் இந்தக் கட்சித் தலைவர்கள் மாகாண சபையின் நிர்வாகத்தை எதிர்காலத்தில் எவ்வாறு கொண்டிழுக்கப் போகிறார்கள் என்று மக்கள் இப்போது தமக்குள் பேசிக் கொள்கிறார்கள். எதிர்காலத்தில் தொடரப் போகும் மாகாண சபையின் செயற்பாடுகளிலும் இவர்கள் இவ்வாறு தான் தோன்றித்தனமாகத்தான் செயற்படப் போகிறார்களோ என்ற அச்சம் அனைவர் மனதிலும் குடிகொண்டுள்ளது.

வடக்கு மாகாண சபையை வைத்துக் கொண்டு தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்கொண்டு செல்ல முடியும் என்று கருதியவர்களுக்கு இந்தக் குத்துவெட்டுக்கள் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளன. சர்வதேச சமூகமும் இந்தியாவும் வடக்குத் தேர்தலை அதிக அக்கறையுடன் அவதானித்திருந்தன. வடக்கு மக்கள் உரிமைக்கா சலுகைக்கா வாக்களிக்கப் போகிறார்கள் என்ற பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் உரிமைக்கு வாக்களித்து தமது தன்மானத்தை அவர்கள் நிரூபித்தார்கள். அதனை பேணிப் பாதுகாத்து அவர்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளில் வழங்கப்பட்டுள்ளது. அதனை அவர்கள் சரியாகச் செய்ய வேண்டும்.

இதனை நன்கு உணர்ந்து வடக்கு மாகாண சபையில் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக செயற்பட்டு இலங்கையிலுள்ள அனைத்து மாகாணங்களுக்கும் முன்னுதாரணமான ஒரு சபையாக வடக்கை மாற்ற வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

தமது தனிப்பட்ட சுயலாபங்களை மறந்து எமது உரிமைக்காக தமது இன்னுயிர்களை தியாகம் செய்த மைந்தர்களை நினைவில் கொண்டு புதிதாக தெரிவு செய்யப்பட்ட 30 உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்பதே தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைனோசரை வேட்டையாடிய அனகொண்டா



பூமியில் இருந்து பின்னர் அழிந்து போய்விட்ட மிகப்பெரிய விலங்குகளில் ஒன்று டைனோசர். அவற்றின் படிமங்கள் உலகின் பல நாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் காலநிலை மாற்றம் அல்லது புவியியல் மாற்றம் டைனோசர்களின் அழிவிற்குக் காரணம் என்று நம்பப்பட்டது. ஆனால் விண்கல் போன்ற வான்பொருள் ஒன்று பூமியில் மோதியதால் அவை அழிந்துவிட்டதாக தந்தையும் மகனுமாகிய விஞ்ஞானிகள் லூயிஸ் மற்றும் வோல்ட்டர் அல்வாஸ் ஆகியோர் கண்டறிந்தனர்.

டைனோசர்களின் காலத்தில் உலகில் இருந்த எல்லாப் பிராணிகளையும் வேட்டையாடும் திறனை அவை கொண்டிருந்தன. ஆனால் அந்த டைனோசர்களின் குட்டிகளை அனகொண்டா பாம்புகள் வேட்டையாடி உள்ளன என்று இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். அதற்கான தடயங்கள் இந்தியாவில் கிடைத்திருக்கின்றன.

தொல்லியல் நிபுணர் தனஞ்செய் மொகாபே 1980 முதல் இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டு வருகின்றார். பல்வேறு புதை படிவங்களைச் சேகரித்து அவற்றில் ஆய்வு செய்து வந்தார் அவர். 1987இல் இவருக்குக் கிடைத்த ஒரு படிவம் அவரது ஆர்வத்தைப் பெரிதும் தூண்டுவதாக இருந்தது. முட்டை ஓடுகளும் சில எலும்புத் துண்டுகளுமாக அந்தப் படிமம் இருந்தது.



நீண்ட கால ஆய்வுகளுக்குப் பின்னர் அதன் மர்மம் சற்று விலகியது. பல்வேறு நாட்டு அறிஞர்களும் இந்தப் படிவத்தை ஆய்வு செய்தனர். அதன் பின்னர் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அது அண்மையில் அறிவிக்கப்பட்டது.

மேற்கு இந்திய மாநிலமான குஜராத்தில் கிடைத்த இந்தப் படிமம் அனகொண்டா பாம்பால் வேட்டையாடப்பட்ட டைனோசர் குட்டியுடையது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். இதுவரை உலகில் கிடைத்தவற்றிலேயே மிக அரிய படிமம் இது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

டைனோசர்களை வேட்டையாடும் அனகொண்டா பாம்பு இனங்களுக்கு சனாஜே இன்டிகஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது. இவை சாரோபாட் இன டைனோசர் குட்டிகளை வேட்டையாடி உணவாக்கி இருக்கின்றன. குறிப்பாக முட்டையில் இருந்து வெளிவரும் டைனோசர் குட்டிகளை வேட்டையாடுவதில் கடும் ஆர்வமாக இருந்துள்ளன. இதற்காகச் சில நேரங்களில் டைனோசர் முட்டைகளையே கடத்திச் சென்றுவிடும் போக்கையும் இவை வைத்திருந்திருக்கின்றனவாம்.

டைனோசர்களின் வாழ்விடங்களுக்கு அருகில் உள்ள குகைகளில் அல்லது நீர் நிலைகளில் இந்த வகைப் பாம்புகள் பதுங்கி வாழ்ந்திருக்கின்றன. அரை மீற்றர் வரை வளர்ந்த டைனோசர் குட்டிகளைக்கூட இந்தப் பாம்புகள் சுற்றி வளைத்துப் பிடித்து நொருக்கி தமது உணவாக்கி இருக்கின்றனவாம்.

இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள இந்தப் புதைப்படிமம் சுமார் 6.7 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org